
www.padippakam.com

AUGUST - OCTOBER 1999



08

EXIL

படிப்பகம்

www.padippakam.com

ஓவியம்:மோனிகா






படிப்பகம்

www.padippakam.com

## கவிதை


இளைய அப்துல்லாஹ் (லண்டன்) ....................9
வனஜா- (பிரான்ஸ்) ....................9
சித்தார்த்த 'சே' க்வார(U.S.A) ....................13
அ.முத்துலிங்கம் (கென்யா) ....................21
நஷ்மி (இலங்கை) ....................36
சோலைக்கிளி (இலங்கை) ....................50
பி.ரவிவர்மன் (இலங்கை) ....................56
கற்சுறா (பிரான்ஸ்) ....................63
ஜிப்ரான் (இலங்கை) ....................67
மேகவண்ணன் (இந்தியா) ....................83
கைலாஷ்சிவன் (இந்தியா) ....................89
ஒட்டமாவடி அறபாத் (இலங்கை) ....................92
ஜெபா (பிரான்ஸ்) ....................100


## கட்டுரை


புகலிடம்-பெண்கள்-எழுத்துக்கள் விஜி (பிரான்ஸ்) ............28
யூக்கோசிலாவியா தமிழரசன் (பேர்லின்) ............37
கேசவனின் நினைவில் எம்.ஆர்.ஸ்ராலின் (பிரான்ஸ்) .........58
பின்நவீனத்துவ நிலை (தொடர்) வின்சன்ந்.சு. (பிரான்ஸ்) ......84
உடலரசியல் ஜமாலன் (ரியாத்) ............93


## சிறுகதை


நானுமாகி ஜீவாத்மா (இலங்கை) ....................22
யுத்தமும்...... சக்கரவர்த்தி (கனடா) ....................70

ஓவிய எழுத்துக்கள் கருணா (கனடா)
ஓவியம் (உள்அட்டை) மோனிகா (இந்தியா) ............1

கவனி ....................3
பெண்கள் சந்திப்பு ....................10
நூல் விமர்சனம் ....................14
கணகாணிப்பிற்கு அப்பாற்பட்ட வலையம்............26
விளிம்பு ....................34
கனவுச்சிறை ஓர் அறிமுகம் ....................51
நிஷ்டை ....................62
Note BY MYTHYLA ....................64
ஓவியக் கண்காட்சி ....................68
ஜெயந்தீசனின் "தமிழ்" ....................90



VOL: II - No:08
AUG - OCT-1999


அன்பளிப்பு:
பிரதிஒன்று -20 பிராங்குகள்
வருடம் -100 பிராங்குகள்
(தபாற்செலவு உட்பட)

காசோலைகள் அனுப்பவேண்டிய
வங்கியும் இலக்கமும்

B.N.P
ASSOCIATION EXIL
00345/100241-65


தொடர்புகட்கு:

EXIL
B.P-204
92604 ASNIERES CEDEX
FRANCE

E-MAIL: exil-inba@infonie.fr



No d'enreg: 13022670




படிப்பகம்

www.padippakam.com

அன்பிற்கினியீர் வணக்கம்.

எக்ஸில் 6வது இதழ் கிடைக்கப் பெற்றேன். நன்றி. எல்லா பொருள்களிலும் எதார்த்தமாயுள்ள பன்மைத்துவம். புலம்பெயர் வாழ்விலும் உள்ளமை எக்ஸில் மீதான வாசிப்பில் உணரமுடிந்தது. ஓரளவு அந்நியப் பண்பாட்டு வெளிப்பாடுகளுக்கே எங்களோடு எம் சகோதரிகளும் எதிர்கொள்ளும் வசவுகள் சொல்லி மாளாது. அய்ரோப்பிய சூழலில் தம் பண்பாட்டு உறுதிப்பாடுகளிலேயே தமது இன அடையாளங்களை தக்கவைக்க முடியுமென்ற சூழலில் உங்கள் அவஸ்தைகளை கடந்த இதழ்கள் மீதான எதிர்வினைகள் பற்றிய பதிவுகளின் வழி அறிகிறேன்.

மேலும், அறிவுப்புலத்துக்குள் உங்களை விடவும் தாமதமாகவே போராடி பிரவேசித்த நாங்கள்- தமிழக தலித்துகள் அதன் காரணமாகவே அறிவுத்துறையில் பின் தங்கியுள்ளோம். தலித்துகள் மார்க்ஸிய மற்றும் திராவிட இயக்கங்களின் சாதி நீக்கம் செய்யப்படாத தலைமைகளின் நயவஞ்சகத்தால் - அம்பேத்கர் நூற்றாண்டு வெளிச்சத்தில் தங்களுக்கான தனித்த அரசியல், கலாச்சார தளங்களை அமைத்துக்கொள்ளும் முயற்சிகளை எதிர்த்தும் ஏளனம் செய்தும், ஒடுக்கியும் வாய்ப்புகளுக்கு ஏற்ப எதிர்வினை புரிகின்றனர். குறிப்பாக அறிவுத்துறை வன்முறைகள் மிகக்கேவலமானவை. சாதிய ரீதியில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டை தன்னை ஒரு கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற்சங்க உறுப்பினராகவும் CPI (M) இன் 'பெருந்' தலைவர். P.ராமமூர்த்தியை மாமா முறை கொண்டு விளித்து தன்னை முன்னிருத்தி "மெர்க்குரிப் பூக்கள்" பூக்கும் பாலகுமாரன்கள் தான் தமிழ் 'நாவல் கலாச்சாரத்தின்' பீஷ்மர். (முள்படுக்கை நாம் தான் செய்ய வேண்டும்)

நவீன இலக்கியத் தளத்தின் பார்ப் பனியத்தின் வலிமை நீங்களும் அறியாதல்ல. காலச்சுவடுகள் தான் நவீன இலக்கியம் மேலும், வர்க்க விடுதலை என்ற பெருங்கதையாடல், தமிழ்தேச தன்னுரிமை என்னும் பெருங் கதையாடல்கள் தலித், பெண்கள் சுற்றுச்சூழல் போன்றவற்றை புறக்கணிப்பதும் அதற்கான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைகளாக இருப்பதும் எமது அபிலாஷைகளை எழுத்துருவாக்குவதில் பெருந்தடை. நிறையப் பேச ஆவல். தொடர்ந்து உரையாடுவோம்.சாதியமும் மக்கள் போராட்டமும், மற்றும் பின்நவீனத்துவம் குறித்த கட்டுரைகளின் தொடர்ச்சியை விளங்கிக்கொள்ள வசதியாக வாய்ப்பிருப்பின் பழைய எக்ஸில் இதழ்களையும் அனுப்பினால் பேருதவி.



தய். கந்தசாமி.
திருக்குவளை

அன்பு நிறைந்த 'எக்ஸில்' நண்பர்களுக்கு.

தமிழ் இலக்கிய சூழலை இன்னும் கவனத்தோடும் நுட்பத்தோடும் நுண்அரசியல் உள்வாங்கலோடும் நகர்த்துவதற்கு எக்ஸில் பங்களிக்கிறது. லியோதர்த் நூலின் மொழி பெயர்ப்பு பெர்முடாயிசம் பற்றிய குறிப்புகள் இதனை சாட்சிப்படுத்துகிறது. கடல், வான்வெளி எல்லைகளை கடந்து ஒன்றிணையும் தமிழ் சிந்தனை விடுதலையை, ஆக்கிரமிப்புக்கும், எல்லாவகை அதிகாரத்திற்கும் எதிரான தெறிப்புகளாகவும், தொகுப்புகளாகவும் உருவாகும் என நம்புகிறேன்.

-ஹெச். ஜி. ரசூல்-
தக்கலை

அன்புடன் எக்ஸில் ஆசிரியர் குழுவினருக்கு,

எக்ஸில் குழுவிற்குள் ஏதோ பிரச்சனை என்பதை தெரிந்து கொள்ள முடிந்தது. நான் அதன் நுட்பங்களுக்குள் செல்ல விரும்பவில்லை. பொதுவாக, குழுக்களுக்குள் பிரச்சனைகளும், பிரிவுகளும்.. பத்திரிகைகளும், விவாதங்களும் தவிர்க்க முடியாதவை. சிறு இலக்கியச் சூழல்களில், ஆயினும் கூடுமானவரை விவாதங்கள் ஜனநாயக வழிகளில் தீர்க்க முயல்வதே சிறந்தது. இதன் பொருள் தாங்கள் எப்படி தீர்த்துக் கொண்டீர்கள் என்பதோ, என்ன பிரச்சனைகள் என்பதோ எனக்கு முழுமையாக தெரியாது. என்றாலும் சிறு இலக்கியச் சூழல்கள் கருத்தியல் அளவிலாவது ஒன்றுபடுவது பற்றிய புரிதலுடன் செயல்படுவது அவசியம். மற்றப்படி இப்பிரச்சனை குறித்து காரமான தனிமனித பிரச்சனைப்பாடுகள் குறை நிறைகள் அதிகமாக சுட்டப்படுவதாகப் படுகிறது. பிரச்சனைகள் கோட்பாட்டு அடிப்படையில்



படிப்பகம்

www.padippakam.com

அனுகப்படும் பட்சத்தில் அது ஆழமான புரிதலுக்கு இட்டுச்செல்லும்.

எக்ஸிலின் வெளிப்பாடு அதன் நோக்கை அல்லது அதன் கோட்பாட்டு அடிப்படைகளை புரிந்து கொள்ளும் வகையில் அல்லது என்னால் புரிந்துகொள்ளும் நிலையில் இல்லை எனலாம். ஒரு குறிப்பிட்ட நோக்குடன் செயல்பட வேண்டும் என்பதில்லை. என்றாலும் செயல்பாடு தனக்கான நோக்கை கொண்டே நடைபெறும். அவ்வகையில் உங்களது அரசியல் நோக்கு தெளிவாக வெளிப்படும் வண்ணம் அமைய வேண்டும் என்றே நினைக்கிறேன். எனது புரிந்துணர்வு சரியெனில் 'கூட்டுக்கலவி' பற்றி அதிகமாக பேசப்படுவதாக தோன்றுகிறது. இது ஆச்சர்யமாக இருந்தது. தமிழில் முதல் முயற்சி என்கிற அளவில்.ஆனால் பாலியல் அரசியல் என்பது பாலியலை விடுவிப்பது மட்டுமல்ல ஒருவகையில் பாலியலை மீறிச் செல்வதும் ஆகும். அவ்வகையில் போஸ்ட் மார்டனிசம் கூட ஒருவகை தூய அறம் பேசும் ஒன்றாக வெளிப்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. கூட்டுக்கலவிபற்றிய சிந்தனை, எழுத்துக்கள், படைப்புகள் எச்சரிக்கையர்க அணுகப்பட வேண்டியவை. கூட்டுக் கலவியின் 'Political sense' முக்கியம், சிலவேளை அது "porno sense" ஆக மாறிவிடும் அபாயம் இருக்கிறது. மற்றப்படி நவீன சிந்தனைகளுடன் தன்னை அடையாளப் படுத்திக் கொள்வதற்காக எக்ஸிலின் முயற்சி வரவேற்கத்தக்கது.

-ஜமாலன்-
ரியாத்

---

தங்களின் அழகான அட்டைப்படம் கொண்ட மே- யூலை 99 இதழ் கிடைத்தது. நன்றி. வைரமுத்துவின் ஜோக்குகள் அதிகரித்து விட்டனதான். என்ன செய்வது.கோமாளிகளுக்குள் நாம் வாழ்ந்து வருவது தொல்லைதான். தாங்கிக்கொள்ளுங்கள். அவர் அண்மையில் இங்கு வந்தபோது (இலங்கை) அடித்த ஜோக்... "80களுக்குப் பிறகு வந்த கவிதைத்தொகுதிகள் (ஈழத்தில்) எல்லாம் என் பார்வைக்குக் கிட்டவில்லை. தயவு செய்து ஒன்று திரட்டித்தாருங்கள். எனது அபிப்பிராயத்தைச் சொல்கிறேன்." தமிழின் சிறந்த சேரன் ஜெயபாலன் போன்ற தரமான ஆத்மாக்கள் நஞ்சருந்தவேண்டிய வார்த்தையல்லவா இது?

-சோலைக்கிளி-
கல்முனை

---

அன்பின் எக்ஸில் ஆசிரியர் குழுவிற்கு,

புலம் பெயர் சூழலின் அழுத்தமான பாதிப்புக்களுடனும், ஆழமான சிந்தனைகளுடனும் வெளிவரும் எக்ஸில் தொடர்ந்து வர வாழ்த்துகிறேன். எக்ஸில் கிடைக்கப்பெறுவதால் நண்பர்கள் வட்டத்திலும் புலம் பெயர் இலக்கியம் குறித்த பார்வையையும் பாதிப்பையும் ஏற்படுத்துகிறது எனலாம். எக்ஸில் வெளியீடாக வந்திருக்கும் மூத்த எழுத்தாளர் கலாமோகன் அவர்களுடைய சிறுகதைத்தொகுதி வெளி வந்திருப்பதும் மகிழ்ச்சி தருகிறது.

சிறுகதைகளும், கட்டுரைகளும் (விதண்டாவாத கூச்சல்கள் தவிர்ந்த ஏனையவை) தரும் பாதிப்பை கவிதைகள் தருவதில்லையே இது ஏன்? கவனியுங்கள்

வி. கௌரிபாலன்.
திருகோணமலை

---

இலக்கிய சர்ச்சைக்கு இடங்கொடுத்து காத்திரமான விடயங்களை தங்கள் இதழ் மேலும் தாங்கி வரவேண்டும் என்று வேண்டுகிறேன்.

கவிதைப்பகுதிக்கு Michel khalilkelayal போன்றவர்களுடைய கவிதைகளையும் பிரசுரிப்பதன் மூலம் புகலிட வாழ்வை அனுபவித்துக்கொண்டிருக்கும் எம்மவர்களுடைய மன உணர்வுகளையும் ஏனைய நாட்டவர்களின் மன உணர்வுகளையும் புரிந்துகொள்ள முடிகிறது.

-சு. குணேஸ்வரன்-
தொண்டமானாறு

---

ஆசிரியர் "எக்ஸில்"

வித்தியாமான முறையில் துணிவுடன் அது பச்சையாகச் சில வார்த்தைகளைச் சொன்னாலும் பல விடயங்களைச் சொல்ல முன்வருவது கண்டு மகிழ்ச்சி. ஆயினும் முரண்பாடுகளின் சங்கமமாகிய உலகில் ஒரு சில தனிநபர்களின் கருத்துக்கள் முழுமையான சமூகக் கருத்துக்களாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று நான் எண்ணவில்லை. என்றாலும் புலம் பெயர்ந்த நிலையில் விளம்பரங்களின் தொகுப்பாக இல்லாமல் சிறந்த



படிப்பகம்

உயர்ந்த சொல் ஆட்சியில் 'எக்ஸில்' வெளிவருவது அதன் சிறப்பாகும்.

-ச. கெங்காதரன்-
யாழ்பல்கலைக்கழகம்.

---

ஈழமண்ணில் விடுதலைப் போராட்டமென்பது பல்வேறு பரிணாமங்களைப் பெற்று இன்று மிக முக்கியமானதொரு கட்டத்தை அடைந்திருக்கும் இன்றைய நிலையில்...

விடுதலைப் போராட்டமென்பது ஆயுதமேந்தி களத்தில் சென்றுசமர் செய்வது மாத்திரமல்ல அதற்கான பின்புலங்களை உறுதிப்படுத்திக்கொள்வது, கருத்தியல், சிந்தனைப் போராட்டமொன்றில் வெற்றியடைவது என்பன இன்றியமையாதனவாகும்.

இந்தவகையில் புலம் பெயர் இலக்கியங்கள் இந்தப்பங்களிப்பை செவ்வனே நிறைவேற்றிவரும் அதேவேளை எக்ஸில் இத்துறையில் தனக்கென வித்தியாசமானதொரு பாதையைத் தெரிந்து ஆரவாரமற்ற அமைதியானதொரு கருத்தியற் சாத்தியமொன்றை நோக்கிச் சென்று கொண்டிருப்பதை தெளிவாகக் காணமுடிகிறது

கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டபீடத்தில் பயிலும் நான் எக்ஸிலின் 4 பிரதிகளை தொடர்ந்து வாசித்தேன்.எக்ஸிலின் ஆய்வுநோக்கு தரமான படைப்புகளைக் கண்ணுற்ற நான் அவற்றை சேகரித்து வருவதற்கு எண்ணினேன். எனினும் அவை கிடைக்கவில்லை. தயவுசெய்து முழுவதையும் அனுப்பவும்.

-M.H.N. FAZLYR RAHMAN -
புத்தளம்

---

எக்ஸிலின் எல்லா ஆக்கங்களும் மிகவும் தரமானதாக வளர்ந்து வருவதுடன் இதன் புதிய பரிமாணம் புதிய சிந்தனைப் பாரம்பரியம் ஒன்றை கட்டியெழுப்ப முயற்சிக்கின்றது என நோக்கலாம் போல உள்ளது. இருப்பினும் பெண்ணியம் தொடர்பான சிந்தனைகள் ஒரு சிலரின் 'உயர் நிலை சிந்தனையாக' அதாவது அடிமட்ட மக்களின் இயல்பு நிலை வாழ்வில் உட்புக முடியாத மொழியமைப்பைக் கொண்டிருப்பதாக நான் நினைக்கிறேன். நாம் எழுதும் எழுத்துக்கள் நாட்டுப்புறத்திற்கும் சேரவேண்டும். அப்போதுதான் காத்திரமான ஒரு மாற்றத்தை எதிர்பார்க்க முடியும். உங்கள் இலக்கியம் புலம் பெயர்ந்த இலக்கியமானாலும் வாசிக்கும் தமிழ் நெஞ்சங்கள் இலகு தமிழையே எதிர்பார்ப்பார்கள் என்பது என் எதிர்பார்ப்பு.

-தயாளினி-
கொழும்பு.

---

கடைசியாக வந்த எக்ஸில்-7இல் சேனனின் எழுத்துகள் மிகு தீவிரமிக்கது. ஒருவருக்கு ஒருவர் சேற்றை வாரி அடிப்பதில் யாருக்கும் லாபமில்லை. கற்சுறாவின் கவிதை? குமட்டலாயிருந்தது. சுந்தரராமசாமியைப்பார்த்து அண்ணாந்து துப்பியிருக்கிறார். எல்லாவிதமான கருத்துக்களுக்கும் எக்ஸில் களம் அமைத்துத் தருவது ஆரோக்கியமாயிருக்காது. எந்தக் கருத்தும் ஏதோ ஒரு தருணத்தில் மனிதனுக்கும் அவன் சார்ந்த வாழ்முறைகளுக்கும் உதவ வேண்டுமல்லவா? அதற்கப்பாலும் அது மனிதம் கொண்டு மிளிரவேண்டும் என நினைப்பவன் நான். என்னைப்போல எத்தனையோ பேர் இரிக்கலாம்.

தேசம் விட்டு தேசம் போனாலும் உங்களின் தேடல்கள் சங்கையானது. உங்கள் பணி தொடரவேண்டும். இருந்தாலும் ஒரு பயமும் உண்டு. குழுக்களாகப்பிரிந்து போய்பிய்த்தெறிந்த எமது மக்களின் வாழ்வு போல- எமது கலை இலக்கிய முயற்சிகளும் ஆகக்கூடாது. ஆக்கக்கூடாது.

சக்கரவர்த்தியின் 'எண்டே அல்லாவே' கதை அற்புதமானது. அவரின் மற்றக் கதைகளையும் படிக்கவேண்டும் போல உள்ளது. தமிழர்-முஸ்லிம்களின் பேச்சு வழக்கை வலு கலாதியாகக் கொண்டுவரும் அவரின் நுட்பம் அலாதியானது.என்னுடைய அன்பையும் மரியாதையையும் அவருக்கு எத்திவையுங்கள். ஜீவனோபாயத்திற்கான தேடலில் இலக்கியம் விலகிப் போய்க்கொண்டிருக்கிறது. மனிதர்களெல்லாம் பற்றி எரிகிறார்கள். எம்மைச்சுற்றி இருப்பவர்களெல்லாம் பணம் சம்பாதிப்பதற்காகவே இவ்வுலக வாழ்வு என்பது போல தான்.

S.L.M. HANIFA
ஓட்டமாவடி

---

அன்புத் தோழியர்க்கு,

தாங்கள் அனுப்பிய எக்ஸில் 4,5,6,7 கிடைத்தன. மிகவும் நன்றி.

www.padippakam.com

கலைக்கும் ஆபாசத்துக்கும் இடையே ஓடும் மிக மெல்லிய கோடு பற்றிய விவாதம்தான் பெரிதாகத் தெரிந்தது. கலைக்கும் ஆபாசத் துக்கும் இடையே அப்படியொன்றும் மெல்லிய கோடோ தடிமனான கோடோ இருப்பதாகத் தெரியவில்லை. இன்னமும் என் கண்ணெதிரே மனிதர்கள் பாதாள சாக்கடைகளில் மூழ்கி சுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள், சாக்கடையினுள் விஷவாயு தாக்கி சாகிறார்கள், மனித மலத்தைச் சுத்தம் செய்கிறார்கள், போரில் செத்து மடிகிறார்கள், குழந்தைகளின் கைகளில் துப்பாக்கிகள் திணிக்கப்படுகின்றன, பெண்கள் வன்பாலுறவில் சிதைக்கப்படுகிறார்கள், இவற்றையெல்லாம் விட பெரிய ஆபாசம் என்ன இருக்கமுடியும்?

ஆபாசம் என்றால் என்ன? கெட்ட வார்த்தையா? வார்த்தையில் நல்லது கெட்டது உண்டா? குண்டி என்று எழுதினால் அது கெட்ட வார்த்தையா? மனிதர்களுக்கு குண்டி கிடையாதா? உடல் உறுப்பைக் குறிக்கும் ஒரு வார்த்தை எப்படி கெட்ட வார்த்தையாக இருக்கமுடியும்? அகராதியில் இந்த வார்த்தைகள் கிடையாதா? என்னைப் பொறுத்தவரை ஏராளமான எழுத்து வகைகள் உள்ளன. அரசியல் எழுத்து, அலுவலக எழுத்து, விஞ்ஞான எழுத்து, சுவடி எழுத்து, மருத்துவ எழுத்து, பத்திரிகை எழுத்து, இலக்கிய எழுத்து, அன்றாட லௌகீக எழுத்து (வண்ணார் கணக்கு, மளிகைக் கடை லிஸ்ட், பால்கணக்கு, மாத விலக்கு கணக்கு, இத்யாதி), இலக்கியம் அல்லாத வியாபாரப் பொழுது போக்கு எழுத்து, செக்ஸ் எழுத்து என்று ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. இவற்றில் செக்ஸ் எழுத்துக்களுக்கான தேவை இன்றைய சமூக அமைப்பில் மிகுதியும் இருப்பதாகவே தெரிகிறது. இதில் ஆபாசம் எங்கே இருக்கிறதென்றே எனக்குத் தெரியவில்லை. இப்படிப் பல தரப்பட்ட எழுத்துக்களுக்கு இடையே இலக்கிய எழுத்துக்கு மட்டும் ஒரு விஷேசம் உண்டு. ஒரு டெலிபோன் டைரக்டரியில் இலக்கிய எழுத்தை நாம் காண முடியாது. (இந்த டெலிபோன் டைரக்டரியில் சில அழகான பெண்களின் பெயர்கள் இருந்தால் - அதில் என் காதலியின் பெயரும் இருக்கநேர்ந்தால் - அதனால் அடையும் மனக்கிளர்ச்சி இலக்கிய இன்பத்துக்கு நிகரானது என்றாலும் அதற்கு டைரக்டரியை காரணமாக்க முடியாது) ஆனால் இலக்கிய எழுத்துக்குள் நாம் சகல விதமான எழுத்து மாதிரிகளையும் பார்க்க முடியும். மாத விலக்கு கணக்கு வரலாம், சலவைக்கணக்கு வரலாம், விஞ்ஞானம் வரலாம், மெய்ஞானம் வரலாம், அஞ்ஞானம் வரலாம், இன்னும் உந்நதம், சந்நதம், கடவுள், அற்புதம், சண்டை, அம்மன், குருதி, விபூதி, சாபம், செக்ஸ், ஆத்மா எல்லாமும் வரலாம். அதே போல் ஆபாசமும் வரலாம். பாவம், அது மட்டும் என்ன பண்ணுது?

புனிதங்களிலேயே மகா புனிதமாகிய கடவுளையே குண்டியடித்து விட்ட பிறகு இனி வேறென்ன புனிதம் கிடைக்கிறது? இலக்கியம் ஒன்றும் அவ்வளவு பெரும் புனிதப் பொருளாகத் தெரியவில்லை. இலக்கியத்தின் மூலமாக ஒருத்தி ஒருவித மனக்கிளர்ச்சியை அடைகிறாள், இதே போன்றதொரு மனக்கிளர்ச்சியை அவள் தியானத்தின் மூலம், கலவியின் மூலம், மற்றும் சுய மைதுனம், வேட்டை, விலங்குகளுடன் பழகுதல், விளையாட்டு, பயணம், மலையேற்றம், ஆராட்சி, தொண்டு, துறவு, இசை, புரட்சி, மனிதவெடிகுண்டு, பல்வேறு விதமான சுய வதைகள் என்று எத்தனையோ நூறு வழிகளின் மூலம் அடைய முடியும்.

இதில் இலக்கியத்திற்கு மட்டுமென்ன கொம்பு முளைத்திருக்கிறதா? 'இல்லை, இலக்கியம் மட்டும்தான் மானுட குலத்தை விடுதலை செய்யும்' என்றால் அப்படியும் தெரியவில்லை, இவ்வளவு இலக்கிய உற்பத்திக்குப் பிறகும் மானுட குலம் விடுதலையை நோக்கி ஒரு 'இஞ்ச்' கூட நகர்ந்ததாகத் தெரியவில்லை. இதனால் நான் இலக்கியத்திற்கு எதிரானவன் என்று அர்த்தமல்ல, எனக்கு இலக்கியம் தான் உயிர் மூச்சு. ஆனால் என் உயிர் மூச்சை நான் வழிபடுவதில்லை. கக்கூஸ் போவதைப் போல்தான் உயிர்மூச்சும், எண்ணிக்கை தான் வித்தியாசம்.

* * *

யார் அந்த புல்ஷிட் றயாகரன்? அவருக்காகவே ஒவ்வொரு இதழிலும் நான்கைந்து பக்கங்களை ஒதுக்கி விடுகிறீர்களே.. ஸ்டாலினிஸ்டுகளுடன் நாம் எதை விவாதிக்க முடியும்? பாவம், அவர்களுக்கு என்ன புரியும்? இலக்கியத்துக்கும் அவர்களுக்கும் என்ன சம்பந்தம்?

இதற்கிடையில் இந்த மத்தியஸ்த மயிர்புடுங்கிகளின் 'லொள்ளு' வேறு. சும்மா இருக்கும் ஒருவரை மற்றொருவர் குண்டாந்தடியால் தாக்கினால், தாக்கப்பட்ட நபர் தற்காப்புக்காக ஆயுதத்தை எடுக்கக்கூடாது என்று சொல்வது தான் இந்த மத்தியஸ்தர்களின் வேலை. தாக்கினவர் - தாக்குதலுக்கு உள்ளானவர் இருவரையுமே சமமாக பாவித்து அறிவுரைகள் வழங்குவதே இவர்களின் பணி இதைத்தான் பேர்லின் கண்ணனும் செய்திருக்கிறார். (எக்ஸில்



படிப்பகம்

www.padippakam.com

6) எழுத்தின் மூலமாக மிகக் கொடூரமான வன்முறையை முன்வைக்கும் றயாகரனுக்கு கல்வெட்டு எழுதாமல் வேறு என்ன எழுதுவது? றயாகரனின் நேரடி வன்முறையை விட கண்ணனின் மறைமுக வன்முறை அதிக ஆபத்தானது.

* * *

லட்சக் கணக்கான மக்களைக் கொன்று குவித்த பிறகும் - எத்தனையோ எழுத்தாளர்களை நாடுகடத்திய பிறகும் - வதைமுகாம்களில் அடைத்த பிறகும் - ஸ்டாலினிசம் றயாகரனைப் போல் பல்வேறு மனித ரூபங்கள் எடுத்து மனித குலத்தின் சுதந்திரச் சிந்தனையை அழித்தே தீரும் போல் இருக்கிறது.

* * *

எக்ஸிலைப் படித்தபோது 'உலகத்தில் நாம் தனி ஆள் இல்ல, ஏதோ ஒரு இடத்தில் நம்மைப் போன்ற ஆட்களும் உலவுகிறார்கள், சிந்திக்கிறார்கள்' என்ற எண்ணமும் மகிழ்ச்சியும் ஏற்பட்டது. மேலும் இங்கு நான் எதிர்கொண்ட பிரச்சனைகளையே நீங்களும் எதிர்கொண்டிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. வர்த்தகப் பத்திரிகைகளும், சில இலக்கிய வாதிகளும் ஸீரோ டிகிரி நாவலை தடைசெய்ய வேண்டும் என்று தமிழக அரசுக்கு வேண்டுகோள் விட்டார்கள். குப்பை என்றார்கள், மலம் என்றார்கள், மேலும் ஒரு படி சென்று போலீஸ் ஸ்டேஷனிலிருந்து பேசுவதாகச் சொல்லி போலீஸ் ஸ்டேஷனுக்கு என்னை அலைய விட்டார்கள். அச்சுறுத்தினார்கள், டெலிபோன் மிரட்டல், மொட்டைக்கடதாசி என்று என்னென்னவோ செய்து பார்த்தார்கள். இப்போது நான் இதையெல்லாம் பொருட்படுத்துவதை நிறுத்தி விட்டேன். நீங்களும் யோசியுங்கள் றயாகரன் போன்ற முட்டாள்களுடன் விவாதித்து என்ன பயன் என்பதை.

* * *

கலாமோகனைப் பற்றி நான் எழுதிய போது அவரைப் பற்றி தெரியாமல் 'நிஷ்டை' தொகுப்பை மட்டுமே படித்து விட்டுத்தான் எழுதினேன். இப்போது 'வெளிச்சம்' கதையைப் படிக்கிறபோது தெரிகிறது - அவர் தமிழில் மிக நிச்சயமாக ஒரு சாதனையாளர் என்பது. எந்த தமிழ் எழுத்தாளரைப் படித்தபோதும் நான் இவ்வளவு ஒரு மனக்கிளர்ச்சியை அடைந்ததில்லை. (கொர்த்தஸார், யுவான் ருல்ஃபோ, மரியோ வார்காஸ் யோசா போன்ற லத்தீன் அமெரிக்க எழுத்தாளர்களையும், சில ஃப்ரெஞ்ச் எழுத்தாளர்களையும் படித்தபோது தான் இந்த உணர்வை நான் அடைந்திருக்கிறேன்.) தமிழ் இலக்கியத்தை உலகத் தரத்திற்கு நகர்த்தியிருக்கிறார் கலாமோகன் என்று சொல்வது கொஞ்சம் குரூரமானது, ஏனென்றால், அவர் எழுத்து இந்த இலக்கிய லவ்டாவையெல்லாம் தாண்டி மனித வாழ்வின் அவலத்தை பற்றி கண்ணீர் சிந்துகிறது - தனியாக மிக மிகத் தனியாக. இதை இதுவரை தமிழில் பார்த்ததில்லை என்பதால் தான் இலக்கியம், உலகத்தரம் என்ற அசட்டு வார்த்தைகளையெல்லாம் உபயோகிக்க வேண்டியிருக்கிறது.

* * *

வைரமுத்து அங்கே வந்து போன தகவலைத் தரும் கட்டுரை (ஒரு கவிதையும் சில ஈசல்களும்) தமிழ்ச் சமூகத்தைப் பற்றியதொரு போஸ்ட் மாடர்ன் சிறுகதையைப் போல் இருக்கிறது. தமிழ் வாழ்க்கையை பகடியே (Parody) செய்ய முடியாதுபோல் தோன்றுகிறது. ஏனென்றால் வாழ்க்கையே பகடியாக இருக்கிறது. பிரபுக்களும் வியாபாரிகளும் அரசவைக் கவிஞர்களுமே விதூஷகர்களாக இருந்தால் விதூஷக போஸ்ட் மாடர்ன் எழுத்தாளி என்ன செய்வாள்? கட்டுரை கதையாகி விடும். ஈழத்து தேசிய கீதத்தை எழுத ஈழத்துக் கவி வேந்தர்களும் தமிழகக் கவிப் பேரரசுகளும் போட்டி போட்டு முண்டியடித்து வேட்டியைக் கிழித்துக் கொள்ளும் காட்சியை இப்போதே என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. இதே உலகத்தில் தான் 'எங்கள் மொழியில் தேசிய கீதத்தைப் பாடுவேன்' என்று பாடி அல்ஜீரிய அரசுப்படையால் கொல்லப்பட்ட கபில் இனப் பாடகன் லூயிஸ் மாத்தூப்-உம் வாழ்ந்திருக்கிறான் என்று எண்ணும் போது இப்படியும் ஒரு கலாச்சார சூழலில் வாழ்கிறோமே என்ற கழிவிரக்கமே ஏற்படுகிறது.

* * *

'தங்கச் சேற்றில் புதைந்து கிடக்கிறேன். வெளியே வந்துதான் தமிழ்த் தொண்டு செய்ய வேண்டும்' என்றரீதியில் ஒருமுறை வைரமுத்து சொன்னதாக தினசரியில் படித்தேன். ஒருபக்கம் இப்படி 'தங்கச்சேறு' லொள்ளு என்றால் இன்னொரு பக்கம் நல்ல வேட்டியில்லை, நல்ல சட்டை இல்லை, நல்ல குடும்பம் இல்லை, நல்ல மனைவி இல்லை என்று தரித்திரப் புலம்பல்! இப்படிப்பட்ட தரித்திரக் கவிஞர்கள் தமிழகத்தில் கிட்டத்தட்ட 200 பேர் இருப்பார்கள். இப்போது விக்ரமாதித்யன் கவிதையை எக்ஸிலில் பார்த்து



படிப்பகம்

www.padippakam.com

விட்டு அந்த 200 பேரும் உங்கள் மீது கவிதைகளைத் தொடுத்தால் நீங்கள் என்ன கதி ஆவீர்கள்? புகலிடம் சென்றும் உங்களை இந்த வேட்டி சட்டைக் கவிஞர்கள் விட மாட்டார்கள் போலிருக்கிறதே!

நான் பல காலமாய் சொல்லி வருகிறேன், தமிழகக் கவிஞர்களுக்கு நல்ல வேட்டியும், நல்ல சட்டையும், நல்ல மனைவியும், நல்ல குடும்பமும் கிடைத்து விட்டால் அவன் கவிதைக்கே கும்பிடு போட்டு விடுவான். ஆனால் இந்த தரித்திர பூமியில் இதெல்லாம் கிடைக்காததால் இந்தியாவின் மக்கள் தொகையைப் போல் இம்மாதிரிக் கவிதைகளும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போகிறது. இந்த விஷயம் மிகுந்த கவலையைத் தருகிறது.

(விக்ரமாதித்யன் சில நல்ல கவிதைகளும் எழுதியிருக்கிறார். 'கப்பலின் பின் விளக்கு' என்ற இந்தக் குறிப்பிட்ட கவிதையிலும் கூட சில கவித்துவமான வரிகள் உண்டு. ஆனால் எத்தனைக் காலத்திற்குத்தான் வேட்டி சட்டை இல்லாத கோறாமையை கவிதையாய் எழுதி கவிதையாய்ப் படித்துக் கொண்டிருப்பது!?)

சாரு நிவேதிதா.
சென்னை

அன்புடன் எக்ஸில் நண்பர்களுக்கு வணக்கம்.

தங்கள் 6வது இதழ் கிடைத்தது மிகவும் நன்றி. அட்டையில் பிரமிள் களிமண் சிற்பத்தை வெளியிட்டதிற்கும் 'பிரமிள் கவிதைகள்' பற்றிய ஒருபக்க குறிப்புகள் வெளியிட்டதற்கும் மகிழ்ச்சி. பழைய 'எக்ஸில்' இதழ்களையும் சிவா (விடியல்)விடம் பார்த்திருக்கிறேன். விஷயம் கனம் மிகுந்ததாயும் விவாதங்களை முன்னெடுத்துச் செல்வதாயும் 'எக்ஸில்' அமைந்திருக்கிறது. தற்போது எக்ஸிலில் இருந்து பிரிந்து வேறொரு பத்திரிகை வெளிவருவதையும் கண்டேன்.

**LYOTARD**ன் நூல் மொழிபெயர்ப்பாகித் தொடர்ந்து வருவது இன்றைய நிலையில் மூலநூல்கள் அப்படியே வாசகருக்குப் போய்ச் சேரவேண்டிய தேவையை நிறைவுசெய்வதாய் உள்ளது. இப்படிச் சில மூலநூல்கள் தமிழில் கிடைக்காமல்தான், இங்குள்ள சிறுபத்திரிகைகளில் சிலர் 'பின்நவீனத்துவ விமர்சகர்' களாக உலாவரமுடிகிறது. அமரந்தாவின் மொழி பெயர்ப்புகள் எப்போதுமே எனக்கு உகப்பானதாக இருந்ததில்லை.சத்தற்ற தமிழாக்கம்- புலம் பெயர்ந்தோர் கதைகள் கவிதைகளில் இன்னும் மனம் ஈடுபடவில்லை- இன்னும் எதிர்பார்க்க வைக்கின்றன. 'நீட்ஷே' கவிதை நன்றாக வந்திருக்கிறது. தொடர்ந்து எக்ஸிலை கொண்டுவாருங்கள்.தமிழகத்தில் வரும் பத்திரிகைகளை விட இது கனம் கொண்டதாக விளங்குகின்றது.

-காலசுப்பிரமணியம்-
ஊட்டி

**கவனி:**

எக்ஸிலின் முகவரி EXIL, B-P 204, 92604 ASNIERES CEDEX, FRANCE ஆக மாற்றப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன் இதுவரை நடைமுறையில் இருந்த EXIL, chez R.Inbavalli, 94, rue de la chapelle. 75018 Paris. France. எனும் முகவரியும் குறிப்பிட்ட சில காலம் வரை பாவனையில் இருக்கும் என்பதையும் எக்ஸில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கின்றது.

-எக்ஸில்-



படிப்பகம்

www.padippakam.com




என்னைக் கலைக்காதே நண்பனே!
நினைவுக்கு வந்த நாட்களில் இருந்தே
நான் வித்தியாசம்.
எனக்குள் சில இறுக்கங்கள்,
யாரும் நெருங்கவொண்ணாத படிக்கு..
நினைவு முகிழாவொரு நாளில்
ஒருவன் ஒண்டுக்கிருக்கச் சொல்லி
பார்த்து இச்சித்தான்.
ஞாபகமிருக்கிறது.
பருவவயதில் ஒருமுறை என்னையடித்து
மயக்கத்தில் வல்லுறவு புரிந்தானாம்.
புத்தி சுவாதீனம் தெளிந்த
ஒன்றரை வருடமுடிவில் என்கையில் ஒரு குழந்தை.

ஒரு குளிரான பகலில்
அக்காவின் புருஷன் என்னை வல்லுக்கழைத்தான்
மறுக்க முடிந்ததெனக்கு.

தனியனாய் வாழுவது இலேசாகி விட்டது.
பலபேர் வந்து உறவு வைக்கக் கேட்டார்கள்.
அழகு, அறிவு, பருவம் என்ற என்னது
வர்ணனைகளுடனேயே..

கலியாணம், குடும்பத்தை பலமாய் மறுத்தார்கள்.
என்னோடு இச்சிக்க வேண்டுமாம்
ஆசையாய் இருக்கிறதாம்.
ஆனாலும் நியமா?



04.08.1999
4.03 அதிகாலை

## முதலாவது தினம்

வெள்ளைப் போர்வைகள் ஓர் அலுமாரிக்குள்
சிவப்புப் போர்வைகள் ஓர் கட்டிலில்
தாயின் மடியிற்குள் ஓர் பிள்ளை
தாயோ வேதனைகளோடு
தந்தை ஓடைக்குள்
ஓடையோ வீட்டிற்குள்
வீடோ ஓர் நகரத்துக்குள்
நகரமோ இரவிற்குள்
சாவு ஓர் சத்தத்திற்குள்
குழந்தையோ வாழ்விற்குள்

தமிழில ; -வனஜா
பிரஞ்சு மூலம் -ஜாக் பிறேவர்



படிப்பகம்

www.padippakam.com

# 9வது ஆண்டின் காலச்சுவட்டில் "பெண்கள் சந்திப்பு":

— தேவா —

இந்த நூற்றாண்டின் கடைசி பெண்கள் சந்திப்பின் 8வது தொடர் 10.07.1999ல் சுவிஸின் சூரிச் நகரில் மௌன அஞ்சலி, சுய அறிமுகத்துடன் தொடங்கியது. அய்ரோப்பாவின் பல பாகங்களிலிருந்தும் இலங்கை, அவுஸ்திரேலியா, நோர்வே, பிரான்ஸ், ஜேர்மன் போன்ற நாடுகளில் இருந்து சுமார் 20 பெண்கள் இன் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

சுவிஸ் ரஞ்சியின் தலைமை யுரையில்:

சுவிசில் 2வது தடவையாய் நடைபெறும் இப் பெண்கள் சந்திப்பு 1990ல் ஜெர்மனியில் ஆரம்பிக்கப்பட்டது. பெண்களி டையே விழிப்புணர்ச்சியை பரப்பல்,





அனுபவங் களைப் பகிர்ந்து கொள்ளல், எதிர்காலத் திட்டங்களை பற்றி ஆராய்தல், பெண்களுக்கான சஞ்சிகை, மலர், தொகுப்பு வெளியிடுதல் இவைகள் மூலம் பெண் எழுத்துக்களை ஊக்குவித்தல், செயல் திட்டங்களை உருவாக்குதலே இச்சந்திப்பு களின் நோக்கம். இச்சந்திப்பு ஆர்வமுள்ள பெண்களின் பலத்த முயற்சியினால் அய்ரோப்பாவின் பலவிடங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றது.

முதல் நிகழ்வு அவுஸ்ரேலியாவிலிருந்து இப்பெண்கள் சந்திப்புக்கு வருகை தந்திருந்த பாமதியினுடையது அவரின் சிலகருத்துக்கள்:

கனடாவில் விழிப்பில் நான் வேலை செய்தபோது கற்றுக்கொண்ட அனுபவங்கள் பல, எம் செயல்திட்டங்களைப் பெண்களிடம் எடுத்துச் செல்லும்போது நாம் அவர்களுக்குரிய தளத்தில் நின்று அணுகவேண்டும். பெண் அடக்கு முறையை தனியாய்ப் பார்க்காமல் அது எவ்வாறு மற்ற ஒடுக்கு முறைகளோடு பின்னிக் கிடக்கிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அதனை எவ்வாறு நாம் பெண்களுக்கு விளக்கம் தரப்போகிறோம் என்பதில் கவனமாய் இருக்கவேண்டும். தொடர்ந்து வேலை செய்தல், மற்றக் குழுக்களோடு இணைந்து செயலாற்றல், வேலைத்திட்டங்களை, செயற்பாடுகளை ஒரு அமைப்பு மூலம் செயல்படுத்தல் தேவை. பின்னல் வலைபோன்ற தொடர்பு இக்கால கட்டத்தில் அவசியமானது. இதனால் பல்வேறு தரப்பட்ட குழுக்களின் அனுபவங்களை பகிர்ந்துகொள்ள வாய்ப்பும் கருத்துக் களைப் பரிமாறிக் கொள்ளவும் முடிகிறது. உலகின் பல திசைகளிலும் இருந்து கணனி மூலம் தொடர்புகள் பேண தற்சமயம் முடிவதால் இந்தக் கதவுகளை நாம் பயன்படுத்திக் கொண்டு நிறைய வேலைகளைச் செய்யலாம். என்று தனது கருத்துக்களை வைத்தார். இது மிகவும் வரவேற்கத் தக்க ஆலோசனையாக இருந்ததோடு, இது தொடர்பான அபிப்பிராயங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டதோடு, அமைப்பாக வேண்டியதன் அவசியத்தைப் பற்றி பெரும் பான்மையோர் வரவேற்றனர்.

பெண்ணியமும் புலம் பெயர் பெண் எழுத்தாளர்களும் தலைப்பில் பேசிய விஜி:



படிப்பகம்

www.padippakam.com

எந்தவித மாற்றமுமின்றி அப்படியப்படியே புலம்பெயர்ந்து தொடர்ந்து வாழ்ந்துகொண்டிருக்கும் எமது ஆணாதிக்க சமூகமுறைக் கட்டமைப்பினுள் பெண்கள் எழுதுவது என்பது பெரியவிடயமே. அதிலும் பெண்ணியக் கருத்துக்களுடன் ஆதிக்க சிந்தனைகளை கேள்விக்குட்படுத்தும் விதத்தில் எழுதுவது என்பது தொடர்ந்த பெண்களது போராட்டதினால் நாம் பெற்றவையே எனலாம். இந்த வகையில் பெண்களுக்கு எழுதுவதில் இருக்கும் தடைகளை , தயக்கங்களை ஆராய்ந்ததோடு புகலிடப் பெண்ணெழுத்தாளர்களை அவர்களுடைய எழுத்துக்களின் நோக்கங்களை வைத்து வகைப்படுத்தி பேசினார். ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் எழுத்துக்கள் பெண்களுடைய பிரச்சனைகளை மேலோட்டமாக தொட்டுச் செல்பவை என்பதனால் அவைகள் வெறும் சீர்திருத்தக் கருத்துகளாகவே காணப்படுகிறது என்றும் உதாரணங்களுடன் விளக்கினார். மற்றும் இன்றைய ஆணாதிக்கச் சிந்தனையின் மீதான அடிப்படைமீது கேள்வி கேட்கும் எழுத்துக்களாக ரஞ்சினி (பிராங்போட்), தேவா, நிருபா, உமா, றஞ்சி, தயாநிதி, பாமதி, மல்லிகா, நந்தினி போன்றோரின்



படைப்புகளைக் குறிப்பிட்டு, மேலும் இவர்களது வெளிவந்த ஆக்கங்கள் சிலவற்றை உதாரணத்திற்கு எடுத்து விமர்சனம் செய்தார். புலம்பெயர் சூழலில் மொழி பெயர்ப்பின் முக்கியம், அதனது தெரிவு என்பவை பற்றியும் அந்த வகையில் லக்ஷ்மி, தயாநிதி, றஞ்சினி போன்றவர்களினது மொழி பெயர்ப்பின் அவசியம் பற்றியும் ஆராயப்பட்டது. இறுதியாக புதிதாக பெண்கள் இன்னும் எழுத முன்வரவேண்டும் என்றும், வெளிவரும் பத்திரிகைகளை பெண்கள் ஆக்கிரமிக்க வேண்டும் எனவும் கூறி, சக்தி போன்ற பெண்கள் சஞ்சிகையில் பெண்களின் எழுத்துக்களால் நிரப்பப்படுதல் விரும்பத் தக்கது எனவும் வேண்டிக் கொண்டார்.

இவரது உரையைத் தொடர்ந்து இது குறித்த கலந்துரையாடலில் பலதரப்பட்ட விமர்சனங்கள் வைக்கப்பட்டன. ஆரோக்கியமான விவாதங்களாகவும் இருந்தன.

இலங்கையில் இருந்து வந்திருந்த ரூவாந்தி (இலங்கைப் பெண்கள் அமைப்பில் தீவிர ஈடுபாடுள்ளவர்) தன் உரையில்:

சிங்கள குடும்பங்களின் வன்முறை, பெண்களின் மீதான இறுக்கமான கட்டுப்பாடுகள், கட்டுநாயக்கா வர்த்தக வலயத்தில் பணிபுரியும் பெண்களின் மேல் நிகழும் பாலியல் வன்முறைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. கிராமப் புறங்களிலே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் இன்றைய பெண்கள் அமைப்புக்களின் முக்கிய



தேவையாய் இருக்கிறது. நகர்ப்புறங்களில் இவ்வமைப்புக்கள் ஓரளவு செயற்பட முடிகிறது.

சிங்கள, தமிழ், முஸ்லிம் பெண்களின் பிரச்சனைகள் அடிப்படையில் ஒன்றுதான். வடகிழக்கில் நடைபெறும் யுத்தம் மீதான கவனக் குவிப்பு எங்கள் பெண்களிடம் இன்னும் ஏற்படவில்லை. யுத்தத்தினால் எல்லாச் சமூகத்தைச் சேர்ந்த பெண்களுமே பாதிக்கப்படுகிறார்கள். கணவனை, மகளை, மகனை, இழந்த எம்தாயகத்தின் பெண்கள் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர் கள். இவைகள் குடும்ப பொருளாதார சுமையை தாங்கியிருக்கும் பெண்களின் மேல் மேலும் சமூகக் கட்டுப்பாடு, குடும்ப சுமை என்பவற்றின் அழுத்தங்களை ஆழமாக்கியுள்ளன. என்றுகூறி மேலும் அவர் சிங்கள பெண்கள் மீதான கலாச்சாரக் கட்டுமானங்கள் பற்றி கூறும் போது இன்னும் கிராமப் புறங்களில் "திருமணத்தின் முன்பு மணப்பெண்ணுக்கு ஆணுடன் உடல்ரீதியான தொடர்பு இருந்திருக்கிறதா என பரிசோதித்துப் பார்த்தல்" போன்ற வழக்கங்கள் நடைமுறையில் இருக்கிறது. இம்முறைமையை கேள்விக்குள்ளாக்குவது என்பது கிராமப்புற மக்களிடம் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒரு விடயமாக இருக்கிறது. ஆணின் இருப்பை, அந்த அதிகாரத்தை கையில் வைத்திருக்க இந்த வழக்கம் தொடர்ந்து வழிகோலுகிறது. இந்த நிலையில் எம்மால்



படிப்பகம்

www.padippakam.com

அவர்களோடு வேலை செய்தல் எவ்வளவு கடினமாக இருக்கும் என்பதை நினைத்துப் பாருங்கள். எனினும் அங்குதான் எமது வேலைத்திட்டங்களை செய்யவேண்டியிருக்கும் அவசியத்தை எடுத்துக் கூறினார்.

ரூவாந்தியிடம் பல கேள்விகள் எழுப்பப் பட்டன. சிறிதும் தயக்கமின்றி அவரிடமிருந்து கிடைத்த பதில்கள் கலந்துரையாடலில் கலந்து கொண்டோருக்கு ஆர்வமூட்டுவதாக அமைந்தது.

தொடர்ந்த நிகழ்வில் புலம்பெயர் தொடர்பு சாதனங்களும் பெண்களும் என்ற தலைப்பில் ஜெயந்திமாலா பேசியபோது: வானொலியில், பத்திரிகையில், தொலைக் காட்சியில் பெண்களுக்காக ஒதுக்கப்படும் காலம் மிகமிகக் குறைவானது. ஒவ்வொரு நிகழ்விலும் பெண்ணியத்துக்கு எதிரான கருத்துக்கள் இங்கு விதைக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. முழுக்க முழுக்க ஆணாதிக்கக் கருத்தில் இயங்கும் இத்தொடர்பு சாதனங்கள் புலம்பெயர் தமிழரிடையே நல்ல வரவேற்பைப் பெற்றிருப்பதால், இதனைப் பயன்படுத்தி திட்டமிட்ட கருத்துத் திணிப்பை செய்ய வசதியாய் அமைந் திருக்கிறது. "பெண்ணின் குரல்" வானொலி நிகழ்ச்சியில் கூட ஆண்களின் ஆதிக்கமே இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. தாம் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களையே அந்நிகழ்வில் பங்கு பெறுமாறு செய்வதும் பெண்ணியக் கருத்துக்களை ஆதரிப்பவரை அசட்டைசெய்து, எதிர்க்கருத்துச் சொல்வோரை அளவுக்கதிகமாக அனுமதிப்பதும் நடக்கிறது. விவாதத்துக்கு எடுக்கப்படும் தலைப்புகள் - பெண்களை எப்படியெல்லாம் கேலி செய்ய அறிவுரை சொல்ல வாய்ப்பிருக்கிறது? என தேடி எடுக்கப்பட்டு பின்னர் விடயம் குத்திக் கிளறப்படுகிறது. இவ்வாறு தலைப்புகளை தேர்ந்தெடுக்கப்படும் ஆண் ஆதிக்க நிறுவனங்கள் பெண்ணியக்கருத்துக்களுக்கு இடமளிக்க மறுப்பதில் அதிசயம் ஒன்றும் இல்லைதான். மற்றும் பிரான்சில் இருந்து வெளிவரும் "ஈழநாடு" பத்திரிகையிலோ சுத்தமாக பெண்கள் பக்கம் என்றே கிடையாது. "ஈழமுரசு" இல் பெண்களுக் கெனதரப்படும் ஒருபக்கம் "மங்கையர் மங்கையராய் இருக்கவேண்டிய" அறிவுரைகளும், பொதுவான விடயங்களும் நிலைபெற்றிருக்கின்றன. இதன் மூலம் இப்பத்திரிகைகள்: ஆண்கள் எல்லா வற்றிலும் சரியாகத்தான் இயங்கிக் கொண்டிருக் கின்றார்கள், பெண்களாகிய நீங்கள் ஆண்மீதான பிழையான விமர்சனத்தை வைக்க வேண்டிய தில்லை என்பது மறைமுகமாக சொல்லப்படுகிறது. மேலும் இதுதான் பெண்கள் விவகாரம் என்று சொல்லிக் கொண்டு பெண்ணை இழிவு படுத்தும் நகைச்சுவைகளை வெளியிடுகின்றன. என்று கூறி இதற்கெதிராகக் குரல் கொடுப்பதற்கு அங்குள்ள பெண்ணியக் கருத்துள்ள பெண்களின் தொகை குறைவாக இருப்பதும் ஒருமுக்கிய காரணம் என்றார்.

இது தொடர்பான கலந்துரையாடலில் பலரும் தங்களுடைய அனுபவங்களை பகிர்ந்து கொண்டதுடன் இத் தொடர்பு சாதனங்களில் பெண்கள் அதிகமாக ஈடுபடுவதன் மூலமே இத்தகைய தொடர்பு சாதனங்கள் வழியாக பெண்ணியக் கருத்துக்களை கொண்டு செல்ல முடியும் எனவும் அலசப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, புகலிட பெண் எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்பு வெளியிடப்பட்டது. நோர்வேயில் இருந்து வெளியாகும் பெண்ணியச் சஞ்சிகையான சக்தியின் வெளியீடு இது. புகலிடத்தில் இருந்து வெளிவந்த பல்வேறு இலக்கியத் தொகுப்புக்களிலிருந்து வெளிவந்த பெண் எழுத்தாளர்களின் படைப்புகளை தெரிவு செய்து "புது உலகம் எமை நோக்கி" சிறுகதைத் தொகுப்பாக ஆக்கப்பட்டுள்ளது. சக்தியின் சார்பாக இத்தொகுப்புப் பற்றிக் கூறிய ரஞ்சினி "பெண் எழுத்தாளர்களை ஊக்குவிக்க இந்த தொகுப்பு உதவும் எனவும், இதனை வெளியிட ஏற்பட்ட சிரமங்கள் பற்றியும்" விளக்கினார். இக்கால கட்டத்தின் பெண்களின் எழுத்துக்கள் போராட்டத்தின் அவசியத்தை வெளிப்படுத்துவன. இது எமது முதல் முயற்சி என்றார்.

இதனை அடுத்து, லக்ஷ்மி இடம் இருந்து மல்லிகா முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து இத்தொகுப்பு மீதான விமர்சனத்தை லக்ஷ்மி செய்தார். இத்தொகுப்பில் இருந்து தேர்ந்தெடுத்த , தன்னைக் கவர்ந்த சில கதைகளை மட்டும் விமர்சனத்துக்கு எடுத்துக் கொண்டார். குறிப்பாக காவேரியின் "நீயும் ஒரு சீமோந் தீ போவோ போல", நிருபா வின் "தஞ்சம் தாருங்கோ" போன்ற கதைகளை விமர்சித்தார். பொதுவாகவே இத்தொகுப்பில் உள்ளவை பெண்விழிப்புக் கொண்டவை, ஆணாதிக்கத்தை வெளிப்படுத்தும் கருத்துக்களாக உள்ளடக்கி யவை என்றார்.

அன்றைய நிகழ்வில் உரையாற்றிய அனைவருமே தாம் எடுத்துக் கொண்ட விடயங் களை அந்தந்தத் தளத்தில் நின்று செயல்பட்டது பெண்கள் சந்திப்பினை பயனுள்ளதாக்கியது.

இறுதியாக "சுபா" விவரணப்படம் காண்பிக்கப்பட்டது. அடுத்த பெண்கள் சந்திப்பு ஜெர்மனியில் Stuttgart நகரில் நடாத்துவதாக தீர்மானிக்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

நெருக்கமானவை
பிரிய எண்ண,
தவிர்க்க நினைக்க,
துன்பம் நிறைந்தவை;
துயர் தருபவை.

பழகிப் போனவை,
செயற்திறத்தைக்
கட்டிப்போடும்.

எனக்குப் பழகிப் போன
நெருக்கமானவற்றுள்
சில தமிழ்ச்சொற்களும்
அடக்கம்.

அவற்றை விட்டு
என் உணர்வுகளை
எழுத்தமைக்க
இயலா;

ஏற்கனவே என்றோ
சொல்லப்பட்ட சொற்கட்டில்
மீண்டும்
அடித்துத் தூக்கிய
சொற்கட்டுகளாய்
என் உணர்வுகள்.

ஆழப்புதைத்த
மரமுளையிற் கட்டிய
மூர்க்க மாட்டினைப்போல்,
திமிறியோடத் துடித்தும்
பழகிய தடத்தில்,
குறுகிய எல்லையுள்
ஒரு நிலை பற்றிச் சுழலும்
என் எழுத்து.

பழகிய தமிழ்ச்சொற்களைப்
பிரிதல் அரிது;
துயர் கொடிது.
உணர்வுகள் மாறினும்
வெளிப்படு உருவினைக்
கொழுவிச் செல்லும்
ஒரே தொகுதித் தமிழ்ச்சொற்கள்.
பழமைப்பட்ட பழகிய சொற்கள்

அறியா தம்சுர்மை தேய்ந்த செய்தி;
தம்முட் தோய்ந்த உணர்வு,
தாம் கொல்லும் செய்தியும் கூடவே.
ஆயினும்,
கை, நா, மனம்
இலாவகமாய் விசிறப்
பழகிய பால்ய தோழமைத்
தமிழ்ச் சொற்களைப்
பிரிதல் அரிது
துயர் கொடிது
-வயோதித்த
வளர்ப்புநாயை
விஷம் வைத்துக் கொல்லுதல் போல.

பிரிதற் துயர் எதிர்தாங்க முடியா
நொய் மனத்து மானுடன் நான்;
என் எழுத்து மொட்டைப்படும்.
உட்போட்ட உணர்வு வீரியம்
காலித்துத் தொலைந்திருக்கும்.

எழுத்துத் தடத்தில்,
ஒரு நிலைப்பட்ட முளைப்பட்டு
குறுகச்சுற்றும்
வகை செக்கு மாடு
நான்.

99/03/04
சித்தார்த்த 'சே' க்வாரா

www.padippakam.com



-எம்.ஆர்.ஸ்ராலின்-

ஒரு மனிதன் கொல்லப்படுவதைவிட கொடுமையானது-கேவலமானது, கொன்றுவிட்டு மோசமான காரணங்களைக் காட்டி நியாயப்படுத்தும் அல்லது கொச்சைப்படுத்தும் பிரச்சாரங்களை கட்டவிழ்த்து விடுதலாகும். பிரச்சனைக்கான தீர்வு கொலையல்ல. தவறுகளை சுட்டிக்காட்டுபவர்களையும், நியாயமாக விமர்சிப்பவர்களையும் கொலை செய்வதன்மூலம் பிரச்சனை ஒழிந்தது என பெருமூச்சு விட்டுக்கொள்ள முடியாதென்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

(முன்னுரையிலிருந்து)

தமிழ் பேசும் மக்கள் ஒன்றும் பிச்சை கேட்க வில்லை. தமது சொந்த நாட்டில் தமது சொந்த மண்ணில் சுதந்திரமான வாழ்வைத்தான் கேட்கி றார்கள். அது அவர்களது உரிமை. அது அங்கீகரிக் கப்படாவிட்டால் நாடு இன்னும் மோசமாய்த் தான் போய்த்துலையும். மக்கள் இனமத வேறுபாடின்றி மன- உள சித்திரவதை களுக்கு ஆளாகத்தான் போகிறார்கள் இதை உணர்வது உடன் செயற்படு வது திடமான முடிவை எடுத்து தியாக மனப்பான் மையுடன் அதை நிறை வேற்ற முற்படுவது அதி காரத்தைக் கையில் வைத் திருக்கும் இன்றைய பௌத்த சிங்களப் பேரின வாதிகளின் கடமையாகும்.




விடுதலைப் புலிகளை பொறுத் தவரையில் உலகிலேயே சிறந்த கெரில்லா போராளி கள். இரண்டு பெரும் இராணு வத்துடன் போரிட்டவர்கள். கட்டுக்கோப்பான சிறந்த அமைப்பு. வீரமும் விவேகமும் கொண்ட தலைவர் என மார் தட்டிக் கொள்ளலாம். இதன் மூலம் பிரச்சனை தீரப்போவ தில்லை. ஜனநாயகம், மனித நேயம், சகிப்புத் தன்மை இவைகளை புலிகள் மறுதலிக் கும்வரை பிரச்சனைகளிலிரு ந்து அவர்கள் மீளமுடியாது. இயன்றவரை இயக்கங்களை அழித்து விட்டு மிஞ்சியவர் களில் சிலரை அரசுடன் காவு கொடுத்துவிட்டு மிகுதியான வர்களை மௌனிகளாக்கி விட்டு நாங்கள் மட்டும் போராடுகிறோம் என்று சொல் வதில் பெருமையொன்றும் இல்லை.

# தோற்றுத்தான் போவோமா... அராஜக மறுப்புக் குரல்கள்



படிப்பகம்

www.padippakam.com

என்றவாறாக போரில் ஈடுபட்டுள்ள இருதரப்பாருக்கும் தங்கள் கருத்துக்களை யுத்த சூழலில் மௌனிகளாக்கப்பட்ட மக்களின் குரலாக முன்வைத்து விட்டு தொகுக்கப்பட்டுள்ள சபாலிங்கம் நண்பர்கள் வட்டத்தினரின் இத்தொகுப்பானது "இனியும் சூல்கொள்", "இருள்வெளி" என்ற அராஜகங்களுக்கெதிரான புகலிடத் தொகுப்புகளின் வரிசையில் தன்னை இனம் காட்டிக்கொள்கிறது

ஒரு கவிதை, ஒருகடிதம், மறுத்தோடி வாழ்வு என்ற வரலாற்று பதிவுகளையும் இன்றைய புகலிட சூழலின் எழுத்தியக்கங்கள் பற்றி சொல்லும் சேரன்:

"1979 யூலை மாதம் வடக்கில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டபோதிலிருந்து, வெளிப் படையான இனப்படுகொலையே இலங்கை அரசுகள் புரிய ஆரம்பித்தன என்று கொண்டால், ஒரு இருபது வருடகால பயங்கரமான வாழ்வு அனுபவங்கள் எங்களுக்கு உள்ளன.இந்த அனுபவங்கள் இரண்டு வகைப்பட்டவை.ஒன்று அரசும் அதனுடைய இராணுவ இயந்திரங்களும் எம்மீது கட்டவிழ்த்துவிட்ட பயங்கரம்.மற்றது, இந்தப்பயங்கரத்தின் உபவிளைவாக எமக்குள்ளே இருந்து வெளிக்கிளம்பிய ஒரு பயங்கரம். இயக்க மோதல்கள், படு கொலைகள் மறுத்தோடிகளின் ஒழிப்பு என்று இந்தப்பயங்கரத்திற்கு பல வடிவங்கள் உள்ளன."

எனக் குறிப்பிட்டு நிகழ்கால சூழ்நிலை பற்றி இப்படித் தெரிவிக்கின்றார்.

"நாமோ நமது எல்லா மூலவளங்களையும்/ மூளைவளங்களையும் தமிழ் ராணுவத்தில் முதலிட்டுவிட்டு பொற்காலக் கனவுகளில் ஆழ்ந்து போயிருக்கிறோம். நாம் விழித்தெழும்போது என்ன எஞ்சியிருக்கும் என்பதனை நினைக்க சித்தம் கலங்குகிறது."

எம்போராட்ட வாழ்வின் துப்பாக்கியின் திசைகள் மாறிப்போனது பற்றி

"எந்த ஜனநாயக மறுப்புகளுக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் சகல ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக ஆயுதம் ஏந்திப் போராட முன்வந்தார்களோ அவர்கள் எல்லோரும் அதே ஆயுதத்தினால் அதே மறுப்புகளையும் மீறல்களையும் ஒடுக்குதல் களையும் செய்யத்துணிந்தபோது போராட்டத்தின் இலக்கு கேள்விக்குறியானது."

எனும் அழகு குணசீலன் "புலம் பெயர்ந்தது தமிழர்கள் மட்டுமல்ல வன்முறைகளும்தான்" என்று புகலிட இலக்கிய வரலாற்றில் சிறு சஞ்சிகைகளும், எழுத்தாளர்களும், பத்திரிகை களும் இதுவரை எதிர்கொண்ட வன்முறை வடிவங்களை தொகுத்திருப்பது அவசியமான தொரு ஆவண முயற்சியாகும். ஆனாலும் கிட்டத்தட்ட ஆறு வருட காலமாக (90-96) பத்திரிகையாகவும் சஞ்சிகையாகவும் அராஜ கங்களுக்கு எதிராக வெளிவந்து கொண்டிருந்த கனடா 'தாயகம்' இதழ் எதிர்கொண்ட வன்முறைகளும் அதன் ஆசிரியர் ஜோர்ஜ் குருசேவ் மீதான வன்முறைகளும், பரிஸ்நகர வீதிகளில் 'தொழிலாளர் பாதை' பத்திரிகைகள் விற்றுக் கொண்டிருந்த புரட்சிக் கொம்யுனிஸ்ட் கழகத்தினர் ஒருவருட இடைவெளிக்குள் இருமுறை தாக்கப்பட்டதும் பதிவில் இல்லாமல் போனதும் கவலைக்குரியது.

"இந்த சமூகத்தில் தியாகமும் துரோகமும் வெகு இலகுவான வரை விலக்கணங்களில் அடங்கிவிட்ட நிலையில் மாற்றுக் கருத்துக்கள் துரோகங் களாக்கப்படுவது இலகுவாகிவிடுகிறது. துரோகங் களுக்கு மரணமே பதில் என்ற விதிமுறைகள் அமுலாக இருக்கும்போது மாற்றுக் கருத்துகளுக்கு 'தட்டுதல்' உகந்த தீர்வாக அமைந்துவிடுகிறது."

இது எம்சமூகத்திற்கே உரித்தாகிப்போன கருத்துச் சுதந்திர மறுப்புப் பற்றி கனடாவிலிருந்து ஜோர்ஜ் குருஷ்சேவ் எழுதியுள்ள கட்டுரை.

இவ்வாறான அராஜகத்தின் சூழலில் சிக்கித் தவிக்கும் எம்மக்களை மீட்க ஓர் மாற்றுத் தலைமையின் அவசியம் வேண்டி துடைப்பான்....

"ஒடுக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகளில் தேசியவாத உணர்வை மையப்படுத்தி உணர்ச்சி ஊட்டி கொதிக்கவைக்க முயலும் பிற்போக்குவாத அரசியல் தலைமைத்துவம் தொடர்பாய் விழிப்பாய் இருப்பதும், தேசிய இனப்பிரச்சனைகளை மார்க்சிய வழிப்பட்ட அணுகுமுறையில் இருந்து ஆராய்வதும், தலைமை கொடுப்பதும், முன்னெடுப்பதுமே இத்தேசியவாத பெரும் சேற்றிலிருந்து நாம் விடுபட ஏதுவாக இருக்கும் என்பதே என் கருத்தாகின்றது."

மு.நித்தியானந்தனின் சிந்தனை- அக்கினிக்குஞ்சு எனும் கட்டுரை ஒரு மனிதனின் சிந்தனையானது மற்றொருவனின் பார்வையில் சந்தேகிக்கப்பட்டு தன்னிலையிலிருந்து அவை எவ்வாறு கண்காணிக்கப்படுகின்றன, என்பதையும் தங்களின் அதிகாரத்தையும் ஆதிக்கத்தையும் சுற்றி கட்டியெழுப்பப்பட்டுள்ள சொப்பன கனவுகளும், புகழ் கோபுரங்களும், பெருமித பதாகைகளும் மாற்று சிந்தனைகளினால் சிதைக்கப்பட்டுவிடும் என்று அஞ்சப்படுவதனால் மாற்றுக் கருத்துக்கள் எப்போதுமே சந்தேகத் தோடுதான் பார்க்கப்படுகின்றன என்று கருத்து சுதந்திர மறுப்பின் காரணத்தை விரிவாக ஆராய்கின்றது.

"சரியும் சர்வாதிகாரிகளின் சாம்ராஜ்யங் கள்" பற்றி உமாகாந்தன் பல விளக்கமான தகவல்களை தந்துள்ளார். இருபதாம் நூற்



படிப்பகம்

www.padippakam.com

றாண்டின் சர்வதேச நாடுகள் பலவும் சர்வாதிகாரிகளின் இடும்புப் பிடிக்குள் சிக்கித் தவித்த போதும் பல சர்வாதிகாரிகளினது மூச்சுக்கள் நின்றுபோயிற்று. பலரும் மக்கள் முன் பதில் சொல்லியே ஆக வேண்டியிருந்தது. இது போன்றவர்களின் அழிவுகள் இந்நூற்றாண்டில் நடந்து முடிந்திருப்பது அடுத்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் காலடி எடுத்து வைக்க துடிக்கும் உலகிற்கு ஓர் நல்ல சகுனமாகும். என்றவாறாக நீண்ட கட்டுரை முடிகின்றது.

அடுத்து இத்தொகுப்பின் முக்கிய கட்டுரையாக குறிப்பிடக்கூடியது தமிழரசனின் "மார்க்சியத்தினூடு இலக்கியம்" மார்க்ஸியத்தின் பெயரால் ஸ்ராலின் காலத்தில் இலக்கியத்தின் மீது நடந்த பலகொடுமைகளை விளக்கும் தமிழரசன் லெனினோ ஸ்ரொக்கியோ இலக்கியத்தைப் பார்த்தவிதம் வேறுபாடானது என விளக்கி "கலை ஒரு வர்க்கக் கண்ணோட்டத்தோடு மட்டுமே இயங்குகிறது, பிரச்சாரம் செய்கிறது. சார்பு நிலையோடு இயங்குகிறது என்ற நேர்கோட்டு தத்துவங்கள் ஸ்ராலின் காலம் உற்பத்தி செய்த கொச்சை மார்க்ஸிசப் போக்காகும்" எனக் குறிப்பிட்டு இன்றும் மீண்டும் நிமிரத்துடிக்கும் சில ஸ்ராலினிஸ்டுகளின் பதில் கூறிவிட்டு தான் கடந்து செல்லவேண்டிய பல கருத்துக்களை இக்கட்டுரையில் முன்வைக்கிறார்.

மற்றும் வாணிதாசன், ஸ்பாட்டகஸ் தாஸன், ப.வி.சிறிரங்கன் போன்றவர்களின் கட்டுரைகளும் வ.அழகலிங்கம், செ.கணேசலிங்கன், றஞ்சி போன்றோரது மிக தகவல்கள் நிறைந்த கட்டுரைகளும் அடங்கியுள்ளன.

நாதன் எழுதியுள்ள ஒரு பரிமாணமும் மூன்று பரிமாணங்களும் என்ற கட்டுரை விவாதத்தை தூண்டும் வகையில் அமைந்துள்ள வித்தியாசமானதொன்று.

படைப்பிலக்கியங்களுக்கூடாகவும் குறித்த சில அராஜக எதிர்ப்பு, போருக்கெதிரான வெளிப்பாடுகள் போன்றவற்றை காணக் கிடைக்கிறது.

ரவீந்திரனின் "தொற்ற வைப்பது" தமயந்தியின் "வேர்கொண்டெழும் பாறை" போன்ற சிறுகதைகள் குறிப்பிடத்தக்கன.

யுத்தத்தால் சீரழிந்து போய்க்கொண்டிருக்கும் தமிழ் சமூகத்தினை இப்படி அடையாளம் காண்கின்றார் அருந்ததி.

காற்று
சாம்பலை அள்ளி வீசிற்று
தேசாந்திரம் எங்கும்
சிலுவை யுத்தமும்
யூதப் படுகொலைகளும்
மறைந்து போக
நாங்கள் தோன்றினோம்.

மட்டக்களப்பின் படுவான்கரை மண்ணில் அடிக்கடி போரட்டத்தை காட்டிக் கொடுப்போர் என்ற போர்வையில் கண்ணைக் கட்டி சந்திகளில் வைத்து சுட்டுக் கொல்லப்படும். விவசாயிகளின் கொலைகள் பற்றி புஸ்பராஜா தனது கவிதையில் பதிவுசெய்கையில்

கைகட்டி கூட்டமாய் நின்று
வேடிக்கை பார்த்தது மனிதர் கூட்டம்
தட்டிக் கேட்க, பணிந்து கேட்க யாரும்
இல்லை
வெட்கி நின்றது கிழக்கு மண்.

சிலபெண்ணியப் படைப்புக்களும் தொகுப்பிற்கு மேலும் வலுச்சேர்க்கிறது. அவ்வகையில் குறிப்பிடத்தக்கதாக நிருபாவின் தஞ்சம் தாருங்கோ, உமாவின் நெருடல் போன்ற கதைகளுடன் பானுபாரதி, றஞ்சினி போன்றவர்களின் கவிதைகளும் முக்கியமானவை.

இத்தனைக்கும் அப்பால் தற்போதைய புகலிடச்சூழலில் பேசப்பட்டுக்கொண்டிருக்கும் தீவிர யுத்தமறுப்பு, எதிர்கலாச்சார, தலித்திய, கலக குரல்களுக்குரிய பலரது படைப்புகள் இல்லாமல்போனது தோற்றுத்தான் போவோமாவை தரமான ஒரு இலக்கியத் தொகுப்பு என்ற இடத்தில் இருந்து இறக்கி வெறும் நினைவுமலராக்கி விட்டதனை கூறாமலிருக்க முடியவில்லை.

ஐந்து ஆண்டுகளுக்கு முன் பரிஸில் ஆயுத அராஜகத்துக்கு பலியாகிப் போன திரு.சபாலிங்கத்துக்கு சமர்ப்பணமாக சபாலிங்கம் நண்பர்கள் வட்டத்தினரால் வெளியிடப்பட்டுள்ள இத்தொகுப்பினைப் பெற்றுக்கொள்ள:

S.PUSHPARAJAH
7, RUE RACINE
95140 GARGES LES GONESSE
FRANCE.



படிப்பகம்

www.padippakam.com

புகலிட எழுத்தியக்கம் கிட்டத்தட்ட இருதசாப்த கால வரலாற்றைக் கொண்டது. இதனது கிளைகள் பல. குறிப்பாகக் கவிதை இயக்கத்துள் நுழைந்தோரே பலர். ஆரோக்கியமில்லாத கவிதைகளை எழுதித்தள்ள ஒருகூட்டம் இருந்ததெனில்- இதற்குச் சவால் விடுவதைப் போல ஆரோக்கியமான கவிதைப் படைப்புகள் பல தோன்றியுள்ளன. இந்த இரண்டாமவரின் கரிசனை தேசத்தையும் புகலிடத்தையும் கருப்பொருள் களாகக் கொண்டது. இந்தக் கவிதைப் பாரம் பரியத்தில் நாம் இன்னமும் மூவரைச் சேர்க்க வேண்டும் என்பதை கனடாவில் வெளியிடப்பட்ட "யுத்தத்தைத் தின்போம்" கவிதைத் தொகுப்பு எமக்கு ஞாபகப்படுத்துகின்றது. சக்கரவர்த்தி, திருமாவளவன், பிரதீபா தில்லைநாதன் ஆகியோரே இந்த மூன்று கவிஞர்களுமாவார். இந்தத் தொகுப்பின் சிறப்பம்சம் எதுவெனில் மூவரும் தமது எழுதுகோல்களை போருக்கு எதிராக உயர்த்தியிருக்கின்றனர் என்பதே.

எமது புகலிடச் சூழலில் இந்தத் தொகுப்பின் வரவு குறிக்கத்தக்கது. இங்கே அராஜகம் செத்துவிட்டதா? போர் வெறி அடங்கிவிட்டதா? போர் என்ற சொல்லைப் பாவிப்பது கூட தண்டனைக்குரிய விஷயமாகக் கருதப்படும் ஓர் நிலையுள்ளது என்பதை யாவரும் அறிவர். ஏனெனில் அராஜகம் தூங்கவில்லை, அது தூங்குவதாக நடிக்கின்றது. அதனது கண்ணீர் முதலைக் கண்ணீர், பின்னே லபக்கெனப் பிடித்து விழுங்கி விடுவதற்கான கண்ணீர். கவிஞனின் கண்ணீரோ, மனப்பாரமோ அதற்குத் தெரிவதில்லை, தெரியவும் அது விரும்புவதில்லை. அதனது இலக்குத் தேடல் அல்ல, அழித்தல். போரைத் தாக்கி எழுதுவோரை அது நோட்டம் விட்டுக்கொண்டேயுள்ளது. ஏனெனில் போரின் மரணத்திலேதான் அராஜகத்தின் அந்திமகாலம் உள்ளது.



ஆகவே போரை எதிர்த்து எழுதிய இந்த மூன்று கவிஞர்களும் தங்களை அராஜக எதிர்ப்புக் கவிஞர்களாகப் பிரகடனம் செய்துள்ளனர். இந்தப் பிரகடனத்தின் மறு அர்த்தம் - ஆம்! நாம் இங்கே வந்தது அகதிகளாக, இது புகலிடம் மட்டுமே, ஆனால் எமக்கு எமது தேசம் தேவை, நாம் அதனை மறந்து விடவில்லை என்பதேயாகும்.

பிரதீபா தில்லைநாதனிற்கு 15 வயது மட்டுமே. இந்த வயதிலேயே இவருக்குள் கவிதை ஆர்வமும், போருக்கு எதிராக எழுதவேண்டும் என்கின்ற தெளிவும் நாளைய கவிதை உலகில் இவர் நிமிர்ந்து நிற்பார் என்பதைக் காட்டுகின்றது கவிதை ஒன்றில் போர்ச்சூழலில் அகப்பட்டிருந்த தனது பால்ய கால சூழல்கள் எவ்வளவு கொடுமைமிக்கதாய் ஆக்கப்பட்டிருந்தது என்ற நினைவுகளை இப்படி மீட்டுத்தருகிறார்.

"அம்மம்மா வீட்டு
தேசி மரமும்
கருவேப்பிலை மரமும்
பூத்து காய்த்து
செழித்து இருக்கையில்
விமானச் சத்தமோ பீதி தரும்."

திருமாவளவன் நிறையக் கவிதைகளை எழுதியவர். புகலிட இலக்கிய சூழலில் தனது ஆற்றலைக் காட்டிக் கொண்டிருப்பவர்.

"முடிவாய்
என் மண்ணை சபித்து
யுத்தத்தைத் துப்பிய
முனிவன் யார்?"

என இவர் கேட்கும் கேள்வி எமது தேசத்தின் தற்போதைய சூழலை விளங்க உதவுகிறது.

யுத்தத்தின் பிடியினுள் சிக்கித்தவிக்கும்

# யுத்தத்தைத் தின்போம்: அராஜக மறுப்புக் கவிதைகள்



படிப்பகம்

www.padippakam.com

மக்கள், அவர்களையிட்டு அக்கறைப்படா யுத்தவெறிகொண்டலைவோர், மௌனத்தின் பிடியில் சூழ்நிலைக் கைதிகளான மக்கள், அன்றாடம் எதிர்கொள்ளும் கொலைச்சூழல் என்பதாக யுத்த நிலையினை இலாவகமாக எடுத்துவைக்கிறார்.

"ஒருத்தி
பள்ளிக்கு போனாள்
இன்னொருத்தி
பார்த்துவரப் போனாள்
வேறொருவன்
சந்தைக்குப் போனான்
போனவர் போனவர்தான்
இவர்களின் உடுக்களை
எங்ஙனம் வரைவேன்?"

சக்கரவர்த்தி புகலிட இலக்கியத்துள் பரவலாக அறியப்பட்டவர், இவரது சிறுகதைகளும் கவிதைகளும் யுத்தஎதிர்ப்பு, புகலிடம் போன்றவை களைக் கருப்பொருள்களாகக் கொண்டுள்ளவை. "யுத்த சந்நியாசம்" என்ற கவிதைத் தொகுப்பை வெளியிட்டுள்ளார். இரண்டு துறைகளிலும் இவரது எழுதுகோல் சோடைபோகாதது. சமகால புகலிடச் சூழலில் இவரது கதைகள் மனித உரிமைக்காகக் குரல்கொடுப்பதில் முக்கிய பங்கினை வகிக்கின்றன. இவரது எழுதுகோல் துணிச்சலானது, மொழி தெளிவானது.
"எங்க மெனேய் போய் இரிக்காய்" எனும் இவரது கவிதை எமது தேசத்தின் கொடூரமான சூழலை இரக்கமான மொழிகளால் படம் பிடித்துள்ளது. யுத்தவாதிகளைப் பார்த்து சிலவரிகள்;

"உசிரும் மசிரும் உங்களுக்கு
ஒண்டுதான்டா
எண்ட புள்ளதாண்டா பாதகனுகளே
எனக்கு உசிரு"

இந்தத்தொகுப்பில்இடம்பெறுகின்ற சக்கரவர்த்தி யினுடைஅனைத்துக் கவிதைகளும் அராஜகத் துக்கு எதிரான விமர்சனமாகத் தம்மை இனம் காட்டுகின்றன.

"துப்பாக்கிகள் எப்போது துருப்பிடிப்பது
நாம் எப்போது
நம் தேசம் மீள்வது?
நான்கு புறமும் அலைகள்
நடப்பதென்னவோ கொலைகள்."

என "யுத்தத்தைத் தின்போம்" எனும் கவிதையில் எழுதிய வரிகள் தேச சிந்தனையும் மனித சிந்தனையும் அடித்தளமாகக் கொண்டவை.

"ராவணன் இறந்துவிட்டான்
அவன் வில்லனும் இறந்துவிட்டான்
இன்னமும் ஏன் எரிகின்றது
இலங்காபுரி?"

நோக்கம் கெட்டு நொய்ந்து போன போராட்டம் இன்று பச்சைப் பாலகர்களை பறித்து துப்பாக்கியைத் திணித்து போர்முனையில் நிறுத்தும் கொடூரத்தின் திசைகெட்ட நோக்கத்தை இப்படிச் சந்தேகிக்கிறார்...

"பாலகனின் ரத்தத்தில்
தாகம் தணிக்கும் என் தமிழ் அன்னையே
நீ தாய் என்பதில்
எனக்கு சந்தேகம் தட்டிவிட்டது"

அகதிகளாய் அல்லலுற்று வெளியேறிய தமிழர் கூட்டம் இன்று அதன் காரணத்தை மறந்து சொந்த மண்ணில் எஞ்சியுள்ளோரையும் அகதியாகவும் அநாதைகளாகவும் ஆக்கிக் கொண்டிருக்கும் கொடியபோரை வளர்த்து விடுவதன் ஊடாக தங்கள் புகலிட இருப்புகளை நிலையாக்கத் துடிக்கும் கொடுமை கொடுமையிலும் கொடுமை. இவர்கள் எல்லாம் தங்கள் மகனையோ, மகளையோ போராட விட்டுவிட்டு வந்தனரா? இல்லை. தன்பிள்ளை தன்னோடு பத்திரமாக, எவன் பிள்ளையோ இறந்து போகிறான் அதில் மகிழ்ச்சி கொள்வது மட்டுமல்ல மரணத்தைப் புனிதமாக்கி நடுகல்லை வழிபடும் அந்த புறநானூற்று காலம் போகத்துடிக்கும் இந்த இருபதாம் நூற்றாண்டுத் தமிழனின் சின்னத்தனம் மீது சீறிவிழுகிறார் சக்கரவர்த்தி இப்படி

"உயிர் மூச்சை நெரிக்கும்
போரின் பொத்திய கையுள் இருந்து
தப்பி வந்த நம்மையும்
போரின் பகைப்புலம் அறியாது
போர்ப் பரணிபாடும் பாட்டுக் காரர்களையும் தவிர
எந்த அம்மாவும்
தன் குழந்தையின் மரணத்தை
வீரம் என்று கொண்டாடிக் கொள்வதில்லை"

ஆம் அங்கே இன்னமும் துப்பாக்கிகளின் அரசாங்கம்தான் நடக்கின்றது. எமது புகலிட வாழ்வுக்கு 20 வயதுக்கு மேல் ஆகிவிட்டது. இதனால் தேசத்தை மறந்தோர் பலர், தேசம் தெரியாதோர் பலர்.

நாம் எங்கு சென்றாலும் எப்படி வாழ்ந்தாலும் எம் தேச மக்களுக்காக குரல்



படிப்பகம்


www.padippakam.com

கொடுப்போம். அவர்கள் வாழ்வு சின்னாபின்னமாகும்போது அவர்களுக்காக எங்கள் சிந்தனைகளை அங்கு திருப்புவோம். நாம் பேசுவதோ எழுதுவதோ அவையும் எம்மக்களின் வாழ்வின் மீது கொண்ட அக்கறையினாலேயே என்பதை உரத்து சொல்லிக்கொண்டு வெளி வந்துள்ளது. யுத்தத்தை தின்போம் கவிதைத் தொகுப்பு.

தொடர்புகட்கு:
Aruvi Publications
75 Brimley Road
Scarborough, ON
M1M 3H7
CANADA.

**சக்கரவர்த்தியின் மற்றுமொரு கவிதைத் தொகுப்பான "யுத்த சன்யாசம்" ஐரோப்பாவில் கிடைக்குமிடம்:**


"EXIL"
B.P-204
92604 ASNIERES CEDEX
FRANCE



**— அரவிந் அப்பாதுரை —**

தற்காலத் தமிழனின் உளவியல் வரலாற்றை பிரக்ஞையின் அசைவுகளை பதிவு செய்யும் ஊடகமாக இலக்கியத்தை பயன் படுத்துபவர் சாருநிவேதிதா. 0° இவ்வாசிரியரின் படைப்பு. இதற்கு முன்வெளியான "எக்ஸிடென் ஷியலிசமும் ஃபான்சி பனியனும்" என்ற பெயர் சூட்டப்பட்ட இவருடைய நாவலுக்கும் ஊடுறவு பிரதியுறவு நிறைய இருக்கின்றது. சாரு நிவேதிதாவின் ஒவ்வொரு படைப்பும், அவர் எழுப்பிவரும் இலக்கியக் கோட்டையின் ஒரு அங்கம் எனலாம். அந்த வரிசையில் 239 பக்கங்களைக் கொண்ட 0° யும் கிரணம் நிலையத்தினரால் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது.

சமகால சிந்தனையில் எவ்வாறான எழுத்தை படைப்பிலக்கியம் என்று கருதலாம் என்ற கேள்வி தொடர்ச்சியாக எழுப்பப்பட்டு வருவது எல்லோரும் அறிந்ததே. சமூக விழுமியங்களை கேள்விக்குள்ளாக்குதல், காலத்தை அணுகும் முறை, மொழியைக்கையாளும் பதம், கதை சொல்லும் விதம் இவ்வாறான கூறுகளில் தனித்துவம் தெரிந்தால் அது அசலான படைப்பிலக்கியம் என்ற முடிவுக்கு வருகின்றோம். இல்லையெனில் அது வாசகர்களை சுடலைக்கு அழைத்துச் செல்லும் பாடை- பூ இலக்கியமாக ஜெனித்து மறைந்து விடுகிறது. 0° தனக்கே உரித்தான அமைப்பையும், விதிகளையும் உள்ளடக்கி இயங்கிவரும் கலைப்பொருள் கலாச்சாரத்தின் கடமை, சமூகத்தில் வாழும் மக்களின் வாழ்வினை செம்மையாக்குவதாக இருக்க வேண்டும். கலாச்சாரம் இக்கடமையைச் செய்ய தவறினால் அதனை விமர்சனத்துக் குள்ளாக்குவது கலைஞனின் கடமை. தமிழ் சமூதாயத்தில் பாலியல் ரீதியில் நடந்து வரும் கபட நாடகத்தை 0° வாயிலாக கேள்விக் குள்ளாக்குகிறார் சாரு





படிப்பகம்

www.padippakam.com

நிவேதிதா.

உரைநடைக்கும், கவிதைக்கும் உள்ள தேசத்தில் படரும் கொடியைப் போன்றது ் யில் பயன்படுத்தப்படும் மொழி. இந்நாவலைப் படிக்கும் போது இது இலக்கியமா அல்லது இசையா என்றகேள்வி மனதில் எழுகிறது. ் யின் வாக்கியங்கள் அவற்றின் அர்த்தங்களுக்காக மட்டுமல்லாமல் அவற்றின் இசைத்தன்மையை வெளிக்கொணரும் நோக்குடனும் படைக்கப் பட்டவை போலத் தோன்றுகிறது. இந்திய வேர்களில் இருந்து பிறக்கும் இசையைக் கேட்கும் திருப்தி ஏற்படுகிறது.

செத்தமூளை, முனியாண்டி, சூர்யா, அவந்திகா மற்றும் எல்லாப் பாத்திரங்களும் வாழ்க்கைத் திட்டங்கள் இன்றி இயங்குபவை. இன்றைய சமூதாயம் மனிதனை தன்னம்பிக்கை யோடு எதிர்காலத்தை அணுக தடைவிதிப்பதை இப்பாத்திரங்கள் பிரதிபலிக்கின்றன.

மனிதனின் மேலோட்ட அபிலாசைகளை அளவிற்கு அதிகமாகவே பூர்த்தி செய்யும் டீ.வி, சினிமா போன்ற நுகர்வுக்கலாச்சாரத்தின் ஆதிக்கச் சக்தியின் தாக்கத்தில் சமூகம் தூங்கிக் கொண்டிருக்கும் காலத்தில் நம் ஆசாபாசங்களை நம்மையறியாமலேயே கட்டமைக்கும் சமூக விழுமியங்களைப் பற்றி சிறிது சிந்திப்போம் வாருங்கள் என்று பாடி எழுப்பும் துயிலெழுப்பும் பாடலாக உள்ளது ் .

1950களில் பீட் ஜெனரெஷன் எழுத்தாளர் களும், பின் 1970களில் நூவோரொமான் (புது நாவல்) என்ற இயக்கமும் நாவல் என்ற இலக்கிய வடிவத்தைப் பற்றிய சிந்தனையை வளர்த்தது மட்டுமல்லாமல், சாதனையும் புரிந்தன. ் இச் சிந்தனைக் களஞ்சியங்களின் பரிணாமத்தில் தரித்த படைப்பு, சாதனை. நம் கதைகளை, நம் சரித்திரத்தை நம் வார்த்தைகளால், நம் வடிவங்களால் எப்படிச் சொல்லமுடியும் என்ற கேள்விக்கு கொடுக்கப் பட்ட ஒரு பதில்.

இந்தி சினிமா இயக்குனர் குமார் ஷஹானி, இந்தோமானியா என்ற இந்திய சினிமா பட விழாவில் பங்கேற்க பாரிஸ் வந்திருந்த போது அளித்த பேட்டியில்: ஆங்கிலேயரின் ஆட்சிக் காலம் முடிந்து ஐம்பது வருடங்கள் ஆகிவிட்ட பின்னரும், நம் சரித்திரத்தை அவர்கள் கண்ணோட்டத்திலேயே இருந்து பார்க்க வேண்டிய நிலை இன்னும் நீடிக்கின்றது என்று சொன்னார். இக்கருத்தை இலக்கியத்திலும் ஒப்பிட்டு ஆராயலாம். நாவலின் "மரபு வடிவத்தை" மேற்கில் இருந்து பெற்று 1876 ஆம் ஆண்டு வேதநாயகம் பிள்ளை தமிழுக்கு அளித்தார். இவ்வடிவம் தமிழ் இலக்கியத்துக்கு தொண்டு செய்தது என்பதில் ஐயம் இல்லை. ஆனால் சங்ககாலத்திலிருந்து தமிழ் இலக்கியத்துக்கே உரித்தான வடிவங்கள் தோன்றி திகழ்ந்தன. நாவலின் தோற்றத்துக்குப் பிறகு தமிழ் எழுத்தாளர்களின் வடிவு ரீதியான ஆராய்ச்சி தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. ் வடிவு ரீதியிலான ஆராய்ச்சியை மீண்டும் உயிர்பெறச் செய்திருக்கின்றது. இக்கண் ணோட்டத்தில் ் க்கு மற்றும் பொதுவாக சாருநிவேதிதாவின் படைப்பிலக்கியத்துக்கு தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு கணிசமான இடம் உண்டு.

தொடர்புகட்கு:

கிரணம்,
63,பி.திரு.வி.க.தெரு,
போஸ்டல் ஆடிட் காலணி,
சின்மயா நகர்,
சாலி கிராமம்,
சென்னை - 600093

---

வாசகர்கட்கு,

கடந்த எக்ஸில்-7 இதழில் வெளிவந்த அறிமுகவுரைப் பகுதியில் "எரிசரங்கள்" சிறுகதைத் தொகுப்புக்கான கீழ்வரும் தொடர்பு முகவரி தவறுதலாக பிரசுரமாகவில்லை என்பதனை அறியத்தருகிறோம்.

எக்ஸில்

"ரஜனி பதிப்பகம்"
51, Rue de la Parabole,
95800 Cergy St. Christophe,
FRANCE



படிப்பகம்

www.padippakam.com

என் கோப்புகள் வேகமாக
வளருகின்றன,
ஒரு ராட்சச செடியைப்போல.
பக்கவாட்டில் நிற்கும் செல்புகள்
பருத்துவிட்டன.
நேர்வாக்கில் ஓர் உயர்ந்த செல்பு
அதுவும் நிறைந்துவிட்டது.
பின் பகுதி செல்புகளும்
பெருகிவிட்டன.
நடைபாதை, ஜன்னலோரம்
வாசறபடி, மேசை விளிம்பு
எங்கும் கோப்புகள்.
நான் சுவாசிக்கும் காற்று கூட
இந்தக் கோப்புகளின் இடைவெளியில் இருந்துதான்
கிடைக்கிறது.

ஒரு கோப்பு சும்மா கிடக்கும்
முதலில் ஓர் ஒற்றை வந்து உட்காரும்.
அதற்கு துணையாக இன்னொன்று,
இப்படி அது வளரும்.
வளர்ந்து வளர்ந்து பிரியும்
பிரிந்து பிரிந்து பரவும்.
என் அறை முழுக்க இப்படித்தான்
கோப்புகளின் ஆக்கிரமிப்பு.

ஒற்றைகள், ஓலைகள்
ஒன்பது வருடத்து பேப்பர் வெட்டுகள்
காகிதங்கள், கடிதங்கள்
காணக் கிடைக்காத ஆவணங்கள்
எல்லாம் கோப்புகளில்
இடைவிடாமல் ஏறுகின்றது,
இரவு பகலாக அங்கே ஆறுகின்றன.

எந்தக் கோப்பில்
எது இருக்கிறது என்று
அடிக்கடி கேட்டு மிரட்டுகிறான், மனேஜர்.
ஏறிய ஆவணத்தில்
ஒன்றையாவது எடுத்து தர
எனக்கு தெரியவில்லை.
தலையைச் சொறிந்து, யோசிக்கும் வேளையில்
என் கோப்புகள் இன்னும் ஓர் இஞ்ச்
வளர்ந்துவிடுகின்றன.




அ.முத்துலிங்கம்



படிப்பகம்

www.padippakam.com



மழைக்கால இருட்டானாலும் மந்தி கொப்பிழந்துதான் கூட்டத்திற்கு வந்து சேர்ந்தது. காடு தன் வனப்பை இழந்து விரிந்து மிகவிரிந்து கிடந்தது. மனிதனைத் தவிர்ந்த அத்தனை ஜீவராசிகளும் பிரசன்னமாயிருந்தன. காகத்தின் கண்கள் குயிலின் கண்கள் போல் செஞ்சிவப்பாய். அது நினைத்து நினைத்து கர்விக்கொண்டிருந்தது.


"மவனே நீ மட்டும் தனியா கிடைச்சிருந்தியேயெண்டால் உன் கண்ணயும் பொரிச்சுச் சாப்பிட்டிருப்பன்" குயில் தன்பிறப்புரிமையை நொந்து கொண்டது. தன் தாய் காகமில்லை என்பதை அது அறிந்ததிலிருந்து, சொந்தத் தாய் மீது அளவுகடந்த ஆத்திரம் பீறிட்டெழுந்தது. அது இன்னொரு கலவிக்காக கூவிக் கொண்டிருக்கக் கூடும். அல்லது காகத்தின் முட்டையைக் குடித்து விட்டு தன் முட்டையை இடுவதற்காக முக்கிக்கொண்டிருக்கக்கூடும்.

யாரை? யார்? குற்றம் சுமத்துவது. எல்லாம் நியதியின்பால் பட்டது. அழிவும் ஆக்கமும் ஒரேபுள்ளியின் தொடக்கம். ஒன்று அழிந்து போகிறது., இன்னொன்று ஆக்கம் பெறுகிறது. ஒன்று ஆக்கம்பெற இன்னொன்று அழிந்துபோகிறது. இதில் நியாயம் எங்கிருக்கிறதோ? என்ன மனிதன் அழிந்ததுபோல் நியாயமும் தன் சுயம்பனைத் தையும் தொலைத்துவிட்டு ஆத்தலைகியதோ. ஆனால் பாம்பு வேர்த்து விறுவிறுத்து பறந்து கொண்டி ருந்தது.இறுமாப்பு சொட்டுச் சொட்டாய் ஒழுக பாம்பின் பாதை நெளிந்து நெளிந்து நீண்டு கொண்டே.

குரங்கு தொப்பையாக நனைந் திருந்தது. வனம் மழையில் லாமல் காத்துக்கிடந்தது, நாட்களாய் அல்ல, வருடங்களாய். குரங்கு நனைந்திருந்ததைக் கண்ட பறவைகள் தாம் போகாத பிர தேசத்திற்கு எவ்வாறு குரங்கு போயிருக்கும் என்று தங்கள் தங்கள் மண்டையை தாங்களா கவே கிளறிக்கொண்டன. ஆனால் குரங்குக்கு குளிரெடுத்து இப்பொழுது உதறல் எடுத்தது.

மனிதன் செய்த புண்ணியத் தில், இயற்கை அழிந்து, வளங்கள் அழிந்து, காடழிந்து, மிகப்பலம் கொண்ட மிருகங் கள் அழிந்து, இந்த நூற்றாண் டின் இராஜா வந்து கொண்டிருக்கின்றார். அவருக்குக்கூட உதறல் எடுத்தாலும் சாவகமாக வந்து கொண்டிருக்கின்றார். பராக் சொல்லுற குயில்தான் இந்த நூற்றாண்டின் குற்றவாளி. இது ஜனநாயக காடு. எனவே குயில் குற்றவாளியல்ல, குற்றம் சுமத்தப்பட்டவர்.

குற்றம் சுமத்தியவர் காகம். நூற்றாண்டுகளின் ஒற்றுமையின் சின்னம், தோழர். குற்றம் அல்லது குற்றமாகக் கருதப்பட்டது என்னவாக இருக்கும். அது எல்லோரும் அறிந்ததுதான். ஆனால் அறியாததுபோல் பேந்தப்பேந்த முழித்துக் கொண்டன இந்த நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த மனிதர்களைப்போல. அவன் அழிந்து போகிற பொழுது, அவனுக்குள் உதித்த மகத்தான சிந்தனை தனக்கு போட்டியாக இருக்கக்கூடிய அனைத்தையும் மட்டுமல்ல மற்றவைகளையும் அழித்து விட்டானே.
அதுதான் அவன் வாழ்ந்த நூற்றாண்டுகளில் அவன் செய்த மகத்தான தியாகம், விடுதலை.
இது இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில்தான் உருவானது. இராஜா காட்டிலிருந்து வெளியேறுகின்ற சௌந்தரியங் களையும் காட்டிற்குள்



www.padippakam.com

வருகின்ற தலையிடிகளையும் ''திறந்த மனம்'' என்ற நூற்றாண்டுத் திட்டத்துக்குள் போட்டு வைத்து விட்டார். அத்தோடு அவருக்கேற்பட்ட நாட்டுடனான நெருக்கங்களும் உறவுகளின் காரணமாகவும் நாட்டு ஜனநாயகம் காட்டுக்குள் தழைத்தோங்க தொடங்கிய போதே காட்டு ஜீவராசிகள் கதிகலங்கிப் போயிருந்தன.

அப்போது, அவ்வப்போது காணமல் போகும் பறவைகள், மிருகங்கள் இப்பொழுது எப்பொழுதும் காணமல் போய்க்கொண்டிருந்தன. அதைத்தட்டியில்லை அறிந்து கொள்ளக்கூட யாருக்கும் திராணியில்லை. பச்சை நிறம்கொண்ட தோகைமயில்கள் அறிந்துகொள்ள துடித்த பொழுதுதான் ஒரு மாலைப் பொழுதில் அவை காட்டை விட்டு வெளியேற்றப்பட்டன. இதன் பிறகு காட்டில் பிறந்த எந்தப் பிறவிக்கும் நாக்கு இருப்பதாக எண்ணிக்கொள்ள வில்லை, ஒன்றைத் தவிர. அது எந்நேரமும் நாக்கை வெளியில் நீட்டி நீட்டி ஞாபகப் படுத்தும், ''உங்கள் உங்கள் நாக்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்''
சோவென்று காற்று பேயாட்டம் போட்டதில், மரங்களெல்லாம் தலைகீழாய் நின்றன. குரங்கு மழைக்கால இருட்டில் கொப் பிழந்து பாய்ந்து இந்த நூற் றாண்டில் அவமானப்பட்டது போதாதென்று. மயிரடந்த தேகக்காடு ஊறிஊறி தொப் பையாக நனைந்தது.கொப்பைத் தான் நழுவவிட்டது போகட்டும். குட்டியையாவது விட்டுவிடக் கூடாதே. அல்லாட்டி பரம்பரைக்கு எங்கபோறது? சூரியனோடு பட்டது போது மென்று குந்தி நினைத்திருக்கக்கூடும் இல் லையா?

காகத்தின் சீற்றம் கூடிக்கொண்டே போகிறதே தவிர, குறைவதாகத் தெரிய வில்லை. அது கனவில் மட்டும்தான் அப்பிடியில்லை பகலிலேயே கிளறிக் கொண்டி ருந்தது. எதை பீயை.? குயிலின் இறக்கைகள் சங்கிலியால் பிணைக்கப் பட்டிருந்தது. சொண்டு ஆணி வைத்து தைக்கப்பட்டிருந்தது. மனிதனோடு சிலுவையும் போனதால், தலையில் பனங்காய் வைக்கப்பட்டிருந்தது.

குயில் தன்னோடு பிறந்த குயிலை வஞ்சித்துக்கொண்டது. பிறப்பின் உறவால்தான் தன்னைக் காப்பாற்ற அந்தக் குயில் தன்னை தியாகம் செய்ததாக அப்பொழுது அது எண்ணியது. ஆனால் அதற்கு முதலே எல்லாம் விளங்கியிருக்கும் போல. இல்லாட்டி இந்த சித்திரவதை யிலிருந்து தப்பிக்கத்தான் அது தியாகித்ததோ. இருக்கலாம். அல்லாட்டி ஊர்க்குருவி இந்தக் குயிலை இப்படி மடக்கிப் பிடிக்கும் என்று அந்தக் குயிலுக்கு எப்படித் தெரியும்?

இதற்குப் பின்னால்என்னென்ன மெல்லாமோ இயங்குவதாகவே குரங்கு எண்ணிக்கொண்டது. அது யாரையும் நம்புவதாக இல்லை. குயில் இறகொன்று காற்றில் அசைந்தாடி ஒப்பாரி வைக்க, விசிலடித்துக் கொண்டு பறந்த கிளியின் பின்னால் ஊர்க் குருவியும் பறந்தபொழுதே குரங்குக்கு உதறல் எடுத்தது.

ஒருவாறாக பாம்பு பறந்து கூட்டத்தின் மத்தியில் வாலைச் சுருட்டி எழுந்து நின்று தலையை இங்குமங்குமாட்டி நாக்கை அடிக்கடி வெளியில் நீட்டிக் கொண்டது. ''உங்கள் உங்கள் நாக்கு களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்''

அனைத்து காட்டு ஜீவராசிகளும் தங்கள் சுயமிழந்து ஏதோவொரு மயக்கத்துக்குள் கட்டுண்டு கிடந்தன. குரங்கு தன் மனசைத் தொலைத்துவிட்டு அலைந்ததில் தன் வாலை மறந்து இங்குமங்கும் ஆட்டியது. கழுகு தன் உருண்ட பெரிய கண்களால் குரங்கின் வாலைச் சுரண்டியது. உடனே வாலைச் சுருட்டிக் கொண்ட குரங்கு நன்றி சொல்ல ஒருதரம் கண்ணை மூடித்திறந்தது.

சட்டத்தை அவமதித்ததற்காக குரங்கிற்கு தண்டனை விதிப் பதாக சீறியது இராஜா. ஏற்க னவே கதிக்கலக்கம், இந்தக் கதிக்கலக்கத்தில் பின்பக்கமாக வால் பூத்துக்குள்ளால் பூந்து குரங்கின் தொண்டைக் குழிக்குள் சிக்கிக்கொண்டது. குட்டிக் குரங்கு தாயின் முலைசூப்பி ஏமாந்து போய் கழுகிடம் சென்றது.

இதைக்கண்ட ஊர்க்குருவி மாடப்புறாவைப்பார்த்து கண் சிமிட்டியது. மாடப்புறா பாம்பின் காலை மெதுவாக தொட்டது. அப்பொழுதே
''கழுகைத் தூக்க''
பாம்பு மறைமுகமாக கட்டளை யைப் பிறப்பித்தது.
''பாம்பின்கால் பாம்பறியும்''
எனக் காலைத்தூக்கி தலையில் வைத்தாடியது ஊர்க்குருவி. மாடப்புறா எக்காளமிட்டுச் சிரித்தது.
''தத்தித்தத்தி நடந்துவரும் தங்கப் பாப்பா நீ இத்தனை நாள் எங்கிருந்தாய் சொல்லுபாப்பா'' என்று பாடியது கிளி.
பதினாறாம் நூற்றாண்டுப் பகை. கழுகுக்கு நிலமை புரிந்தது.

www.padippakam.com

அது தப்ப ஒரே வழி விண் வெளியிக்குப் பறக்கவேண்டும். ஆனால் விண் வெளியில் அதன் சீவியப்பாடு செல்லாது. அது பூமிக்கு வரவேண்டும். வரத்தான் வேண்டும். அதற்கிடையில் இந்த பாம்பின் இராஜதானியம்?

கனவுதான் காணவேண்டும். அதற்குக்கூட மறுக்கப்பட்ட இப் புவியில் என்ன ஜீவிதம் வேண் டியிருக்கிறது. விண்வெளிப் பயணத்தை அத்தோடு குழிதோண்டிப் புதைத்துவிட்டு நடப்பது நடக்கட்டுமென்று கழுகு சும்மா இருந்தது. குரங்கு பிரிவின் துயரறியாது கழன்று கொண்டிருந்த குட்டியை கட்டியணைத்துக் கொண்டது. பாம்பு காகத்தின் பக்கம் திரும்பியது. காகம் இறக்கையை இறுக்கிக் கொண்டு பழைய நினைவு நெஞ்சைவிட்டுக் கழன்று விடாதபடி இறுக்கிக் கொண்டு போராடியது. பதினாறாம் நூற்றாண்டில் காகத்தின் பொந்துக்குள் முட்டை திருட வந்த பாம்பை மன்னனைக் கொண்டே கொன்றது ஞாபகம் வந்தது. அந்தச் சூழ்ச்சியை பாம்பு அறிந்திருக்க நியாயமில்லை என்ற நினைப்பும் காகத்திற்கு. சிலவேளை வரலாற்றின் ஆய்வுகள் காகத்தின் பொந்துக் குள் எவ்வாறு அரசியின் மாணிக்க மாலை வந்தது? என்ற வரலாற்றின் திரிபால் காகத்தின் குலம் பழிவாங்கப் படுமோ யாரறிவார். ஆனால் காகம் எல்லாத்தையும் மனதில் கொண்டுதான் ஒரு குயிலை நட்டநடு வெளியில் எல்லார் முன்னிலையிலும் குதறி யெறிந்தது. அவ்வழியால் போன மாடப்புறாவும் ஊர்க்குருவியும் கிளியும் சேர்ந்து குயிலின் செட்டை களை கோதிக்கொண்டு பறந்துபோனபோதே தான் பிடித்தவால் வெற்றியென்று காகத்திற்கு புரிந்துபோனது.

குயிலின் தலையில் பனங்காய் அழுத்த தலை வறண்டு மண்ணுக்குள் புரண்டு புதைந்து கொண்டிருந்தது. பாம்பு பொந்துக்குள் முட்டைகளைக் களவாகக் குடித்து வாழ்ந்த காலத்தில் அது காகத்தின் முட்டையா? குயிலின் முட்டையா? என்பதெல்லாம் அதுக்கு அக்கறையில்லை. இன்று அதிகாரத்தில் இருப்பதால் "தப்பினோம்" என மனம் சொல்லிக்கொண்டது. அல்லாட்டி இப்பொழுது அதுவும் விசாரணைக்கு உட்பட்டிருக்கும். விசாரணை யாளனாக இப்பொழுது பிரசன்னமாயிருப்பது எவ்வளவு சுகத்தையும் இன்பத்தையும் தருகிறது. அந்தச் சுகமும் இன்பமும் அனுபவித்தால்தான் புரியும். எழுதியோ சொல்லியோ புரியப்போவதில்லை. அதன் இன்பத்தையும் சுகத்தையும் மற்றவைகள் அறிந்து கொள்ளாதபடி பார்த்துக் கொள்ள வேண்டியதுதான் பெருத்த வேலையாக பெரும்பாடாக போய்விட்டது.

ஆட்சிக் கட்டிலைப் பிடித்த பொழுது இருந்த ஆனந்தம் மெல்ல மெல்ல காலவோட்டத் தில் கரைந்து போய்விட்டது. ஒவ்வொரு முறை செட்டை கழட்டும் போது தன் வாரிசு பற்றி ஏங்கிக்கொள்ளும். கடுமையாக கடைப்பிடிக்கும் சட்டங்களை தளர்த்தி பன்னிரண்டு முறை செட்டை கழட்டிய பாம்புகள் துணையைத் தேடிக்கொள்ள லாம் என்ற போதும் பாம்பு தனக்கேற்ற சோடியைக் கண்டுபிடிக்க முடியாமல் தவிர் த்தது. பலவற்றைக் கண்டு சலனப்பட்டு தன் பொறுப் புணர்ந்து எல்லாவற்றையும் மூட்டை கட்டி ஒரு மூலையில் வைத்துவிட்டது. ஆனால் இப்பொழுது தன் அதிகார வாரிசை உருவாக்கவேண்டிய கட்டாயத்தில் பாம்பு தின வெடுத்த தோளும்,வெறி கக்கும் கண்களுடனும் அலைந்து கொண்டிருக்கையில்தான் காகத்தின் முறைப்பாட்டுக்கு காதுகொடுக்க வேண்டியேற்பட்டது.

பொந்துக்குள்ளேயே இராஜ தானியத்தை நடத்திக் கொண்டிருந்த பாம்புக்கு, வெளியில் உலாவர நாலுபேர் நடுங்க நாலுபேர் தலைதெறிக்க ஓட பார்க்க வேணும்போல் ஆசை பிறந்தது. "ஒற்றுமைக்கு காகம்" என்று பாம்பு நாட்டுக்கு போயிருந்த போதே அறிந்துகொண்டதுடன் காட்டுக்குள் ஜனநாயகம் மறுக்கப்படுவதாக "காடுகளின் பாம்பின் கூட்டமைப்பு" குறைப்பட்டிருந்ததை, பாம்பின் காதுக்குள் ஊர்க்குருவிகள் சொன்னபோதே "வெல்பிளா"னோடுதான் காட்டுக்குத் திரும்பியது பாம்பு.

முதலாம் நூற்றாண்டுப் பகைவனை இந்த நூற்றாண் டோடு துடைத்துவிடவேண்டும். ஒவ்வொரு நூற்றாண்டும் லாவகமாய் என்னினத்தைத் தூக்கி சாப்பிட்ட கழுகாருக்கு இந்த நூற்றாண்டோடு ஒரு முடிவுகட்ட வேண்டும். என் இனத்தைக் காப்பாற்ற ஒரே ஒரு தலைமுறை அதுவும் இந்தத் தலைமுறையின் நாயகன், யான் என்பதில் பாம்புக்கு மயிரளவும் சந்தேகமிருக்கவில்லை.

எதிர்காலத்தில் பகைவனே இல்லாதொழிக்க வேண்டும்.



படிப்பகம்

அப்படி இல்லாதொழிக்க வேண்டுமென்றால் முதலில் கழுகாரை இந்த சந்தர்ப்பத்தில் ஒரு இறகின் ஒரு தும்பு மயிர்கூட இல்லாமல் அழித் தொழிக்கப்பட வேண்டும். இப்படியொரு சந்தர்ப்பத்தில் இவ்வளவு இலகுவாக கழுகார் மாட்டிக் கொள்ளுவார் என்று பாம்பு எதிர்பார்க்கவில்லை.

பகைவனை மட்டுமல்ல. நண்பனையும்தான். நம்பக் கூடாது. ஆனால் சிலவற்றை கண்டும் காணாதபடி இருக்க வேண்டும். அல்லாட்டி உயிர்வாழ்தலுக்கு ஒன்றுமே இல்லாதுபோய்விடும். பாம்பு என்ன தாவரபட்சியா? உயிர்ப்பட்சிதானே.

காகத்தை, மன்றாடி முறைப் படுமாறு ஊர்க்குருவி பணித்தது. மாடப்புறா பொசிசனில் நின்றது.

கிளிக்கு ஒரே பாட்டுதான் "சசல்லோ பிப்பில்லாவிலிருந்து பாம்பு கேட்டது கருடா சௌக்கியமா?"

"எம் தேசத்தின் முதற்பொருளே, நான் தொடர்ந்து ஏமாற்றப்பட்டுக் கொண்டேயிருக்கிறேன். இந்த நூற்றாண்டில் மலர்ந்த தங்களுடைய ஆட்சியிலும் நான் வஞ்சிக்கப்படுகிறேன் என்னும் பொழுது எனது இனத்திற்கே விடிவே பிறக்காதா என்ற ஆதங்கம் என்னை நிறைத்திருக்கிறது" பொறுமை இழந்த பாம்பு ஓங்கி ஒரு கொத்துவிட சுருண்டு விழுந்தது தேவாங்கு. மாடப்புறா பொசிசனைத் தவற விட்டுவிட்டு வாய்குழறியது,

"உனது முறைப்பாட்டைச் சொல். தேவையில்லாத கதைக்கு இங்கே இடமில்லை. நீ விதிகளை மறந்துபோனாய் போலும் இங்கே போதனைகள் ஏற்புடையதல்ல. நீ உனது முறைப்பாட்டை சீக்கரமாகச் சொல்"
காகம் வால் பிடிக்க வெளிக்கிட்டு, நூலையும் தவறவிட்டதை அப்பொழுது தான் உணர்ந்தது. நாக்கை கடித்துக்கொண்டது. இதைக்கண்ட பாம்புக்கு தாங்க முடியாத ஆத்திரம் தலைக்கேற நுனி வாலில் எழுந்து கிளையி லிருந்த கழுகை ஒரு அடியில் நிலத்தில் வீழ்த்தியது.

கழுகு துடிதுடித்துக் கொண்டி ருந்தது. துணையின் பிரிவு குரங்கின் மனதுக்குள் புகுந்து ஆட்டிப்படைத்தது. பாம்புக்கு பேய் அறைந்த் அதிர்சியிலிருந்து விடுபடுவதற்கிடையில், கழுகாரை ஊர்க்குருவிகள் தூக்கிக்கொண்டு பறந்து போயின.
"எம் தேசத்தின் முதற் பொருளே, இதோ இருக்கிறதே இந்தக் குயிலின் தாயார் ஒரு வேசி. தந்தையும் ஒரு வேசையின் மகன்தான். இவர்கள் தாங்கள் போகிற போக்கில் போற இடங்களில் கலவிவிட்டு எனது கூட்டுக்குள் தமது இனத்தை விருத்தி செய்கின்றனர். இதனால் எனது இனம் அழிந்துபோகிறது. எனது இனத்துக்கு கிடைக்க வேண்டிய உரிமைகள் மறுக்கப்படுகின்றன. இது இந்த நூற்றாண்டோடு, என்னோடு முடிவடைய வேண்டும். ஐயா, எனது கூண்டில் இரண்டு குஞ்சுகளைப் பொரித்து சீராட்டி, தாலாட்டி, பாராட்டி வளர்த்தேன். வளர்ந்த பிறகுதான் கண்டேன் அவை கூவுவதை. அந்த ஆ..... ஆத்திரத்தில் உணவூட்டுவது போல் ஒரு குயிலை பிடித்துக் குதறிவிட்டேன் இந்தத் தரித்திரியம் அக்கொலையைக் கண்டு கதறி அடித்துக்கொண்டு ஓடும்பொழுது ஊர்.."
சடுதியாக நிலமையை உணர்ந்த ஊர்க்குருவி, "நிப்பாட்டு காணும்."
"அதற்காக நன்றிக்கடன் பட்டிருக்கிறேன் உங்களுக்கு." என்று பௌவ்வியமாக காகம் கண்ணீர்விட்டது. பாம்பு எழுந்துநின்று ஆடிய களைப்பில் சுருண்டு படுத்துக் கொண்டது. மாடப்புறாவின் கட்டளையின் பெயரில் பறவைகள் சுற்றி நின்று கைகளால் சாமரம் வீசின. அதிலிருந்த கருக்குருவியை கண்ட பாம்பு தன்னை மறந்து எழுந்து நின்று நாட்டியமாடியது.

எல்லாவற்றையும் உணர்ந்த சுற்றிநின்ற அனைத்து காட்டு ஜீவராசிகளும் கண்களை இறுகமுடின. இருண்டுபோனது அண்டம். பாம்புக்குக் கொண் டாட்டம். எல்லையற்ற மகிழ்சியில் அது துள்ளிக் குதித்தது. குதித்து முடிந்து பாம்பு மீண்டும் விசாரணை யாளனாக வாலைச் சுருட்டிக் கொண்டு தலையைத் தூக்கி நாக்கை நீட்டி நீட்டி ஆடி ஆடி ஆட்டி ஆட்டி இப்பொழுது குயிலின் முறைப் பாட்டைக் கேட்பதற்காக பாம்பு செவிகளைத் திருப்பியது.
மாடப்புறா பொசிசனில் நின்று கூவியது.
ஊர்க்குருவி கட்டளை பிறப்பித்தது.
கிளி - பூங்கதவே
தாழ்திறவாய், - பூவாய்!
என்றது
நாக்குகள் கவனம்
"தண்ணி"
என்று குயில் கண்ணீர்விட்டது.
வறண்ட நிலத்தில் கண்ணீர் ஒட்டிக்கொள்ளவில்லை.
துரோகத்தின் கண்ணீர்.

●



படிப்பகம்

www.padippakam.com





# கண்காணிப்புக்கு அப்பாற்பட்ட வலையம்



கடந்த 29 மே 1999 அன்று பாரீஸின் மத்திய பகுதியான PLACE DE LA BOURSE பகுதியில் உள்ள 2.Rue 4 - septempre எனும் கட்டடத்தொகுதியில் நுழைந்த 50 பேர் கொண்ட Le collectif Yabon'Art எனும் ஓவியக்குழு அதனை ஏறத்தாழ 3மாத காலம் தங்களுடைய ஓவியப்பட்டறையாக நடத்தி வந்தது. இது பிரஞ்சு நாட்டின் சட்ட ஒழுங்குகளிற்கு அத்துமீறிய செயலாகவே இது கருதப்பட்டது.ஓவியர்கள் கைப்பற்றிய இக்கட்டிடம் பாவனையற்று பலகாலமாகப் பூட்டப்பட்டிருந்தது. பாரிஸ் சமூகத்தின்விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட இவ்ஓவியர்களைக் கொண்ட பலகுழுக்கள் தங்களுக்கு மிகக்குறைந்த விலையில் ஓவியப் பட்டறைகள் ஒன்று வேண்டும் என்ற கோரிக் கையை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். இவ்வாறு பாவனையில் இல்லாத கட்டடங்களை தங்கள் ஓவியப்பட்டறையாக பாவித்தும் வருகிறார்கள். மேற்குறிப்பிட்ட பட்டறையின் வாசலில் "கண்காணிப்பு வலையம் இத்துடன் முடிவடைந்தது." என்ற வாசகம் பதிக்கப்பட்டிருந்து. இது வெளியில் /தங்களுக்கெதிராக இருக்கின்ற ஒழுங்குகளை- நெருக்கடிகளைப் புறக்கணிக்கும் செயற்பாடே. உள்ளே பல வகை ஓவியங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு இருந்தது.தங்களுக்கு இலகுவாய் கிடைத்த பொருட்களைக் கொண்டே(தகரம்,உடைந்த பலகைகள்,யன்னல் கதவுகள், சுவர்கள், சிகரட், பியர் வெற்றுடப்பாக்கள், கம்பித்துண்டுகள்,...)
அவை வரையப்பட்டிருந்தது.அக்கட்டடத்தின் சுவர்கள் ஓவியங்களாலும் கிராபிக்ஸ் எழுத்துக் களாலும் நிரம்பியிருந்தது.

"Van- Go விற்கு இறக்கும் வரை எந்த வசதியோ புகழோ இருக்கவில்லை" என்ற வாசகமும் "புகலிட







படிப்பகம்

www.padippakam.com



வதிவிட பத்திரம் அற்றவர்களை நாட்டை விட்டு வெளியேற்றுவது கொலை செய்வதற்கு சமம்" என்னும் வாசகமும் பல இடங்களில் ஒட்டப் பட்டிருந்தது. அடுத்த எமது செயற்பாடு முன்னால் இருக்கும் மிகப்பெரிய கட்டடமான அரச நாணய வைப்பகத்தினை கைப்பற்றுவது எனவும் அதற்காக சுரங்கம் தோண்ட இருப்பதாகவும் அதற்கு உதவி செய்யவிரும்பு பவர்கள் தொடர்பு கொள்ளும் படியும் விளம்பர முறையில் அறிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வகை ஒழுங்கு மீறிய செயற்பாடுகளைக் கண்டு பிரஞ்சு அரசினதும் அதிகார வர்க்கத்தினதும் நன்நெறி களைப்பாதுகாக்கும் பிரஞ்சு கனவான்களும் சீமாட்டிகளும் ஒதுங்கிக் கொண்டாலும் தினமும் கிட்டத்தட்ட 200/300 பொதுமக்கள் வரை சென்று பார்வையிட்டார்கள். இவ் ஓவி யர்களை குறித்த காலத் தில் வெளியேறும்படி நக ராட்சி காலக்கெடு விதித்து பின்னர் பொலீசாரின் பலாத்காரத்தினால் அவர்கள் வெளியே துரத்தப்பட்டனர் நாம் அங்குள்ள ஒரு ஓவியரை அணுகி உங்களின் ஓவியங்களில் காணும் ஸ்தூலமான பண்புகள் குறித்து பேசலாமா எனக்கேட்ட போது "அதற்கு முன்பதாக நான் ஏன் இங்கே வந்து ஓவியம் வரைந்து கொண்டிருக்கிறேன் அதற்கான அரசியல் பின்னணி என்ன? என்பது பற்றிப் பேசலாமே" என்று பதிலளித்தார். நகராட்சியின் காலக்கெடு முடிந்த பின்பும் நீங்கள் இருப்பதாக உத்தேசித்துள்ளீர்களா? எனக் கேட்டதற்கு அதற்குப் பின்பும் இருப்போம் ஆனால் இங்கே இல்லை, அடுத்து எம்மால் மீட்கப்படும் இன்னுமொரு கட்டிடத் தொகுதியில். வெளியே விளம்பரம் பார்க்கவில்லையா? என அருகில் இருந்த ஓவியை கேட்டாள்.



-எக்ஸில் -

## VANAKKAM

"வணக்கம்" என்ற தலைப்பில் ஒரு புகைப்படக் கண்காட்சி நவம்பர் 2ம் திகதி பாரிசின் வெளிநாட்டோர் அதிகமாக வாழும் பகுதியான 18ம் வட்டாரத்தில் நடாத்தப்பட்டது. இது "பிரஞ்சு நாட்டில் இலங்கைத் தமிழர்கள்" எனும் பொருளடங்க பல புகைப்படங்களை உள்ளடக்கிய ஓர் கண்காட்சியாகும். JEAN-MICHEL DELAGE எனும் ஓர் பிரஞ்சு நாட்டவரால் சுமார் மூன்று ஆண்டுகள் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இலங்கைத் தமிழர் பிரச்சனை சம்பந்தமான சில வரலாற்றுக் குறிப்புகளும் அறிமுகத்துக்காக அங்கே இடம்பெற்றிருந்தது. கண்காட்சியின் முதல்நாள் அன்று சுமார் 50 பிரஞ்சு நாட்டவரும், மற்றும் சில தமிழர்களும் சமூகம் அளித்திருந்தனர். இது போன்ற நிகழ்வுகளில் வெளிநாட்டவர் மீதான புரிந்துணர்வும் அக்கறையும் கொண்ட பிரஞ்சுக்காரர்கள் மட்டுமே கலந்து கொள்வது குறிப்பிடத்தக்கது.

கண்காட்சி 9, Rue de la Guadeloupe, Paris - 18.
எனுமிடத்தில் 02.11.99 - 30.11.99 வரை நடைபெறும்.



படிப்பகம்

www.padippakam.com

## புகலிடம்

# பெண்கள் எழுத்துக்கள்...

— விஜி —

புகலிடத்தில் எழுதிக்கொண்டிருக்கும் பெண்களின் எழுத்துக்கள் எனும் போது இவர்கள் அனைவரும் எம்சமூகத்தின் உறுப்பினர்களே. அதாவது எச்சமூகத்தின் கட்டுமானங்களை உடைத்து வெளிவரவேண்டும் என்று நினைக்கின்றோமோ அச் சமூகத்தினுள் காணப்படும் இறுக்கமான மத, மொழி, கலாச்சார, பண்பாட்டுக் கூறுகள் அனைத்திலும் பரவிக் கிடக்கும் ஆணாதிக்கக் கருத்துகளினால் கட்டி வளர்க்கப்பட்டவர்களேயாகும். எமது சொந்த நாடுகளில் எவ்வாறு வாழ்ந்தோமோ அதே சமூகக் கட்டமைப்பையே இங்கும் ஏற்படுத்திக் கொண்டு அதனுள் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். மேலும் புலம் பெயர்ந்த எமது சமூகமானது மேற்கத்திய கலாச்சார சூழல் நெருக்கடிகளுக்கிடையே தனது இருப்பையும் சுய அடையாளத்தையும் காத்துக்கொள்வதற்காக மீண்டும், மீண்டும் எமது மதத்தையும், அதுசார்ந்த கலாச்சார பண்பாட்டு அம்சங்களையும் கட்டிக்காக்க வேண்டிய நிலையில் உள்ளது. இந்த நிலையானது மேலும் பெண்கள் மீதே அவ்வகை பொறுப்புகளை சுமத்தியிருப்பதை இங்கு காணக்கூடியதாய் இருக்கின்றது. எதற்கெதிராகப் போராட வேண்டிய தேவை பெண்களுக்கிருக்கின்றதோ அவ்வெதிர் அம்சங்களையே புகலிட சமூகத்தில் பேணி வளர்க்க வேண்டிய நிலையில் பெண்கள் உள்ளனர். இதனால் புகலிடத்தில் பெண்ணிலை வாத எழுத்துக்களின் தேவை இன்னும் அதிகரிப்பதுடன் புகலிட ஆணாதிக்க சிந்தனைகளுக்கு எதிராகவும் போராட வேண்டிய தேவையும் எமக்கிருக்கின்றது.

இவ்வளவு பெரிய பொறுப்பு எம்முன் விரிந்திருக்கின்ற போதும் ஆணாதிக்க சிந்தனையால் கட்டிவளர்க்கப்பட்ட எம்மால் பெண்ணிலைவாதம் பற்றி எவ்வளவு தூரம் சொல்லமுடியும்? என்ற கேள்வி எம்முன் எழுகிறது. பெண்ணிலைவாதத்தின் முழுமையான கோரிக்கைகளை முற்று முழுதாக எம்மால் வெளிக்கொண்டுவர முடியாத நிலையிலேயே நாம் உள்ளோம். நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் சமூக, குடும்ப அமைப்பு முறைகள் நம்மை நாமாக உணரமுடியாமல் ஆதிக்க கருத்தியல்கள் வடிவமைத்த பெண்ணாக எம்மை ஆக்கியிருப்பதுமே காரணமாகும்.

இந்த வகையில் புகலிடப் பெண் எழுத்தாளர்கள் என்று பார்க்கும் போது மிகச் சிறிதளவே காணப்படுகின்றனர். ஆண்களின் அளவுக்கோ, அவர்களின் எழுத்துக்கு நிகராகவோ பெண்களால் எழுதமுடியவில்லை என்பதற்கு: எமது சமூக-கலாச்சார-குடும்ப அமைப்பு முறைகளே காரணமான போதிலும் அவற்றிலிருந்து வெளிப்பட்டு எழுதவரும் பெண்களையும் இவ்ஆதிக்க சமூகம் சும்மா விடுவதில்லை. பெண்களுடைய எழுத்துக்களை ஆண்களுடைய எழுத்துக்களுடன் ஒப்பு நோக்குதல், விமர்சனம் என்ற போர்வையில் எமது சமூகத்திற்குள் பெண்ணுக்கு வழங்கப்பட்டுள்ள இடம், அவள் மீது சுமத்தப்பட்டுள்ள சுமைகள் என்பவற்றைச் சிந்தியாது அவ்வெழுத்துக்களில் மார்க்ஸியம் எங்கே? கோட்பாடு எங்கே? இலக்கிய நயம் எங்கே? என்று அப்படியே அடித்து அமர்த்தும் போக்கே காணப்படுகிறது. இதன் கருத்து பெண்களின் எழுத்துக்கள் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவை என்பதல்ல மாறாக விமர்சனங்கள் புரிந்துணர்வுடன் அமையவேண்டும் என்பதாகும். எனினும் இவற்றையெல்லாம் தாண்டி புகலிடத்தில் எழுதிக் கொண்டிருக்கும் பெண்களில் அதிலும் பெண்களினுடைய பிரச்சனைகளை பெண்ணியப் பார்வையில் தொட்டுச் செல்லும் பெண்களைப் பற்றி பேசியாக வேண்டியுள்ளது.

90களின் முற்கூற்றில் வெளிவந்த பத்திரிகைகள்,சஞ்சிகைகள், தொகுப்புகள் போன்றவற்றில் பெண்ணிய விடயங்கள் பற்றி குறைந்த பட்சமாவது எழுதிய பெண்களில் அனேகம் பேர் காணாமல் போய்விட்டனர், அல்லது முன்னர் எழுதிய அளவு இப்பொழுது எழுதுவதில்லை எனலாம். இதற்கான காரணங்களை ஆராய்வோமானால் குடும்ப வாழ்க்கைச் சூழலில்



படிப்பகம்

www.padippakam.com

கணவன், குழந்தைகள் என்று சுமைகள் அதிகரிக்கும் போது அவை பெண்களின் பொது வாழ்க்கையே பெரிதும் பாதிக்கின்றது. இதனால் எழுதுவதற்கோ வாசிப்பதற்கோ நேரமும், நாட்டமும் இல்லாமல் போய்விடுகின்றதை முக்கியகாரணமாகக் கொள்ளலாம். அடுத்து புகலிடத்தில் வெளிவந்த சில பத்திரிகைகள், சஞ்சிகைகள் சந்தித்த அரசியல் அச்சுறுத் தல்கள், உட்பிரச்சனைகள் காரணமாக அவை நின்று போனதும் ஒரு காரணமாகலாம். இந்த இடத்தில் ஒரு உண்மையை பார்த்தால் குடும்பத்திலுள்ள ஆணை மையப்படுத்திய அரசியல் அச்சுறுத்தல்கள் அக்குடும்பத்திலுள்ள பெண்களின் தனித்துவ செயற்பாடுகளையும் ஓரங்கட்டுகின்றது. ஆகவே ஆண்களுடைய செயற்பாடுகள் நின்று போகும் போது இயல்பாகவே பெண்களுடைய செயற்பாடுகளும் நின்று போனது அல்லது மிகவும் குறைவடைந்தது பெண்களால் தனித்து நின்று செயற்பட முடியாமற் போனதே காரணம் எனலாம். ஆனால் தொடர்ந்தும் சில பத்திரிகைகள் வந்துகொண்டிருப்பதையும், சில பெண்கள் எழுதிக் கொண்டிருப்பதையும் காணலாம்.

இந்தவகையில் இன்றைய புகலிடப் பெண்களின் எழுத்துக்களை நோக்குமிடத்து, இவ் எழுத்துக்களைப் பலவகையாகப் பிரிக்கலாம்.

1) காதல், காதல் தோல்வி, கடவுள், நீதி, நேர்மை, ஒழுங்கு என்ற வகையான ஜனரஞ்சக எழுத்துக்கள்

2) நாட்டை, குடும்பத்தை விட்டுவந்த ஏக்க, சுயகழிவிரக்க எழுத்துக்கள்.

3) பெண், குடும்ப, சமூக பிரச்சனைகளை மேல்வாரியாக தொட்டுச் செல்வதாகவும் குடும்ப சமூக உறவுகளில் ஏற்படும் அன்றாட சிக்கல் களை விளக்குவதாகவும் கொண்ட எழுத்துக்கள்.

4) பெண்களின் அடிப்படைப் பிரச்சனைகளின் மீது கேள்வி எழுப்புகின்ற, பெண்களை விழிப்படையச் செய்கின்ற எழுத்துக்கள்.

ஆகவே மேற்கூறிய முன்னைய இரண்டையும் இங்கே தவிர்த்து மூன்றாவதைப் பார்ப்போமானால் முக்கியமாக இன்று புகலிடத் தில் அதிகளவு எழுதிக் கொண்டிருக்கும் ராஜேஸ்வரி பாலசுப்ரமணியத்தின் எழுத்துக் களைக் கூறலாம். இவரின் கதைகள் புகலிட வாழ்வில் பெண்களுக்குரிய பிரச்சனைகளை அதிகம் வெளிக்கொண்டுவருகின்ற போதிலும் பிரச்சனைகளின் மூலங்கள் மேலோட்டமாகவே தொட்டுச் செல்லப்படுகின்றன. இவரது படைப்புகள் வேலை, வீடு, குழந்தைகள், அன்னிய மொழி என்று பெண்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை காட்டுவதோடு இவற்றில் இருந்து விடுபடவேண்டிய அவசியத்தையும் எடுத்துச் சொல்கின்றன. ஆனால் இவ்வகைச் சிக்கல் களுக்கான காரணங்களையும் அதாவது இவ்வகையில் பெண்கள்மீது பழுக்களைச் சுமத்தி அவற்றை விதியாகக் காண்பிக்கும் ஆணாதிக்கக் கருத்தியல்களை இனங்காட்டத் தவறுகிறார். பெண்களின் இன்னிலை தொடர்ந்து பேணும் பண்பாட்டுக் கூறுகளை நோக்கி தனது கேள்விகளை தொடுக்காத இவர் இவற்றை யெல்லாம் பேணிக்கொண்டே இச்சமூக அமைப்புக்குள்ளேயே வெறும் சீர்திருத்தக் கருத்துக்கள் மூலம் பெண்களின் பிரச்சனை களுக்கு தீர்வுகாண முனைகிறார் எனலாம். எனினும் ஒரு ஆண் பெண்களுடைய பிரச்சனை களைக் புரிந்து கொள்வதற்கும் ஒரு பெண்ணால் உணர்வுபூர்வமாக புரிந்துகொள்வதற்கான வேறுபாட்டை இவரது கதைகளில் இடையி டையே தெறிப்பதையும் காணலாம். மேலும் ஒரு சில கதைகளில் எம் மரபுத் தனங்களில் இருந்து வெளியேறும் பெண்கள் பற்றிய பாத்திரப் படைப்புகளும் இவரால் படைக்கப்பட்டுள்ளன. அண்மையில் வெளிவந்த "இப்படியும் கப்பங்கள்" எனும் இவரது சிறுகதை சமூகத்துள் ஒருபெண் பாலியற் பலாத்காரத்துக்குட்படும் போது பொதுவாக தற்கொலைக்கும் அல்லது அதை யாருக்கும் தெரியாமல் மறைக்கவுமே எமது சமூகத்துள் அனுமதியுண்டு. மாறாக இப்பெண் பலமனப் போராட்டத்தின் பின் பொலிஸிற்கு அறிவித்து நியாயம் தேட புறப்படுகின்றாள். மற்றும் இவரது "யாத்திரை", "நாளைக்கு இன்னொருத்தன்" போன்ற பல சிறுகதைகளைக் கூறலாம்.

இதை விட கொஞ்சம் மாறுபட்ட விதத்தில் பெண்களுடைய பிரச்சனைகளைச் சிந்திக்கும் போக்கில் எழுதும் பெண்களை விரல் விட்டு எண்ணிவிட முடியும். இந்த வகையில் ஜேர்மனில் வாழும் ரஞ்சினியினுடைய கவிதைகள் குறிப்பிடத்தக்கவை.

பெண்களின் சமூக வாழ்க்கையானது அவர்களது சொந்த உணர்வுகளின், விருப்பங் களின், நலங்களின் அடிப்படையில் அமைவதற்கு பதிலாக ஆண்களின் விருப்பு, வெறுப்பு, நலன்களைக் கொண்டே பெண்ணும், பெண்மையும் கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதையும், எமது ஆணாதிக்க சமூகத்தினால் உருவாக்கி பேணப்படும் "பெண்மை" எங்களுக்குரிய அடையாளமில்லை என்பதைக் கூறுவதாக "இனியும் சூல்கொள்" தொகுப்பில் வெளிவந்த "இருப்பு" எனும் கவிதை நான் உணர்கிறேன்.



படிப்பகம்

www.padippakam.com

"...
நீங்கள் உருவாக்கிய பெண்மை
எனது அடையாளமல்ல
நான் பெண்
பிறக்கும் போதே....
..."

எனும் போது பெண்மையின் இலட்சணங்களாக சொல்லப்பட்டு வந்த அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற வேண்டாத குணாம்சங்கள் பெண்களுக்குரியவையல்ல என்று அறுதியிட்டுக் கூறுகிறார். குறைந்தளவிலேயே எழுதிக் கொண்டிருந்தாலும் இவரது கவிதைகள் மிகவும் ஆழமானவை. மேலும் இவர் ஜேர்மன் மொழியில் இருந்து கவிதைகளை மொழிபெயர்ப்பும் செய்து வருகிறார். இக்கவிதைகளும் பெண்களின் இருப்பு பற்றிய கேள்வியும் உள்ளுணர்வுடன் பேசுவதாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. "நான் பெண்" என்ற மொழிபெயர்ப்புக் கவிதையில்

"...
ஆம்! நான் அறிவானவள்
ஆனால் இந்த அறிவு வலிகளில் இருந்து
பிறந்தது:
ஆம், நான் விலை கொடுத்தேன்:
ஆனால் பார்: எவ்வளவை
வென்றுவிட்டேன் என்பதை
நான் பலம் கொண்டுள்ளேன்,
என்னை வெற்றி கொள்ள முடியாது:
நான் பெண்..."

என்கிறார். ஆம் பெண்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் எவ்வளவு அடியும், பழியும் வாங்க வேண்டியுள்ளது.ஆனால் பின்னால் திரும்புகையில் நாம் வென்றுவிட்டவை இன்னும் துணிவையும் சந்தோசத்தையும் தருகின்ற அதே வேளை இப்படி எல்லா பெண்களும் சொல்லும் காலத்தை நோக்கி நாம் முன்னேற வேண்டும்.

ஜேர்மனியில் வாழும் மற்றுமொருவரான "நிருபா" சிறுகதைகள், கவிதைகள் என்று நிறையவே எழுதியிருக்கிறார். இவருடைய எழுத்துக்களும் பெண்களை விழிப்புறச் செய்பவையாகவும், சமூகத்தை நோக்கி கேள்வி கேட்பவையாகவும், பெண்களுடைய கஸ்ரங்களை வெளிக்கொண்டு வருபவையாகவும் இருப்பதைக் காணலாம். இவரது "உரிமையை மீட்டெடுப் போம்" எனும் தலைப்பில் "நமது குரல்" இல் வெளிவந்த கவிதையில்

"...
பூட்டுக்களை உடைத்து விட்டே
புறப்பட்டு வருகிறோம்
இழக்கப்பட்ட உரிமைகள்
எங்களாலேயே
மீட்கப்பட வேண்டும்"

என்கிறார், எமது பெண்கள் இன்னும் நாம் பெண்களினுடைய உரிமைகளை பெண்களேதான் போராடிப் பெறவேண்டும் என்று அறைகூவல் விடுகின்றார். ஆண்நிலை செயற்பாடுகளின் தொடர்ச்சியான ஆதிக்கத்துக்கு எமது மௌனமே உரமூட்டுகிறது என்று

"...
மௌனங்களையே
வாழ்க்கையாக்கிக் கொண்டோம்
பாதிப்பை உணராமலேயே - நீ
பாவிக்கப்பட்டாய்."

இவரது மற்றுமோர் கவிதையில் குறிப்பிடுகின்றார். மேலும் இவரது சிறுகதைகளில் அண்மையில் "தோற்றுத்தான் போவோமா" இல் வெளிவந்த "தஞ்சம் தாருங்கோ" எனும் சிறுகதை குறிப்பிடக்கூடியது. இக்கதையில் வெளிநாட்டுக்கு வரும் ஒரு பெண் பயணத்தின் இடையிலும், வந்தடைந்த பின்னரும் ஏஜென்சிகாரர்களாலும், கூடவரும் ஆண்களாலும், இங்கு அவர்கள் நம்பி வரும் மாப்பிள்ளைமாராலும், எமது உற வினர்களாலும் படும் துன்பங்கள் கொஞ்சமல்ல. பெண்களை வெறும் பாலியல் பண்டமாகப் பார்க்கும், பயன்படுத்தும் எமது சமூகமானது இவ்வாறு பாதிக்கப்படும் பெண்களை மீண்டும்

> "புலம் பெண் எழுத்தாளர்களாகிய நாங்கள், எச்சமூகத்தின்
> கட்டுமானங்களை உடைத்து வெளிவர வேண்டும் என்று
> நினைக்கிறோமோ அச்சமூகத்தினுள் காணப்படும்
> மத, மொழி, கலாச்சார, பண்பாட்டுக் கூறுகள் அனைத்திலும்
> பரவிக் கிடக்கும் ஆணாதிக்கக் கருத்துக்களால் கட்டி வளர்க்கப்பட்டவர்களே."



படிப்பகம்

www.padippakam.com

மீண்டும் உணர்வு ரீதியில் கொல்கின்றது. இச்சிறுகதையின் இன்னுமொரு சிறப்பு இதன் மொழிநடையாகும். இறுதியில் இவர் மெழுகு வர்த்தி கொழுத்தச்சொல்வதும் ரசிக்கச் சொல்வதும் இந்த ஒடுக்குமுறை சமூகத்தின் மேல் சீறும் வெறுப்பின் உச்சக்கட்டமாகும். இதுகதைக்கு மேலும் மெருகூட்டுவதாக அமை கிறது. நிருபாவினது "அம்மா" சஞ்சிகையில் வெளிவந்த கவிதையும் இப்பெண்களினது உள்ளக்குமுறல்களையே கூறுகின்றது. தற் போது கொஞ்சகாலமாக இவரிடமிருந்து வரும் எழுத்துக்கள் குறைந்துவிட்டது என்பது கவலைக்குரியதாகும்.

மற்றும் ஜேர்மனியில் வாழும் "தேவா" வின் எழுத்துக்களை ஆராயவேண்டியது மிகவும் அவசியமாகும் இவர் மிக நீண்ட காலத்தில் இருந்தே எழுதிக்கொண்டுவருபவர். கட்டுரைகள், கதைகள், மொழிபெயர்ப்புகள் என்று பலதுறைகளில் தன்னுடைய பெண்ணியச் சிந்தனைகளை வெளிக் கொண்டுவந்துள்ளார். குறிப்பாக "எக்ஸில்" இல் வெளிவந்த "சுரண்டலின் கொடுக்குகள்" எனும் சிறுகதை ஓர் தலித்- பாட்டாளிவர்க்க பெண்ணின் பிரச்சனையைச் சுட்டி நிற்கிறது. ஒரு பெண் என்பதனால் எமது சமூகத்துள் படும் அவஸ்தை அதுவும் அது தலித் பாட்டாளிவர்க்கப் பெண்ணாக இருக்கும் போது பலவகையான அடக்கு முறைக்கு உட்படுகிறாள். தலித் என்பதனால் மேட்டுக்குடி ஆண், பெண் இருபாலாரினாலும், பாட்டாளிவர்க்கப் பெண் என்பதனால் முதலாளிய பெண், ஆண் இருவரினாலும் அடக்கப்படுவதோடு, அத்தோடு பெண் என்பதனால் ஆணாதிக்கச் சிந்தனையுள்ள தலித்துகளாலும் அடக்கப் படுகிறாள் என்பதை ஓரளவு இக்கதையில் வரும் பெண்பாத்திரத்தினால் சித்தரிக்கிறார். மேலும் "இனியும் சூல்கொள்" இல் வெளிவந்த "நிஜங்கள் என்பன" எனும் சிறுகதையில் பெண்களின் விருப்பு, வெறுப்பு பற்றிக் கவலைப்படாத ஆண்களால் தங்களுடைய தேவைக்கு பெண்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறார்கள் என்பதையும் அதை மீறும்போது குடும்பத்தில் ஏற்படும் குழப்பங்களையும் விளக்கமுற்படுகிறது. "சிலம்புச்சிலை" கண்ணகியை கேள்வி கேட்கும் பாணியில் அமைந்த இச்சிறுகதை பலவகையான கேள்விகளை முன்வைக்கிறது. கண்ணகியைப் படைக்க வேண்டிய இளங்கோவடிகளின் அவசியத்தின் மீது, கணவனையே கண்கண்ட தெய்வமாக மதிக்கும், ஒரு அரசன் செய்த குற்றத்திற்காக மதுரையையே எரித்த கண்ணகிமீது என்று கேள்விகளை தேடி எடுத்தாலும், இக் கதையின் மொழி நடையோ என்னவோ எடுத்துக் கொண்ட விடயம் தெளிவாக சொல்லப்படவில்லை என்றே கூறலாம். இவ்வாறான சரித்திர நாயகிகளின் கதைகளை மறுவாசிப்புச் செய்யும் போது மிகவும் அவதானமாக இருக்கவேண்டியது அவசியமாகும். ஏனெனில் நாம் மீண்டும் இந்நாயகிகளையே மறு உருவாக்கம் செய்வதாக இருக்கக்கூடாது.

மேலும் இவரது மொழி பெயர்ப்புக்களும் வரவேற்கத்தக்கன. "சக்தி" சஞ்சிகையில் வெளிவந்த "சர்வதேசப் பெண்ணியத்தை நோக்கி", வன்முறைக்கு ஆதரவு அளிக்கும் நீதியின் கரங்கள்" என்னும் கட்டுரைகள் பெண்களின் பிரச்சனைகள் பற்றி கூறுகின்றன.

சுவிஸில் வசிக்கும் றஞ்சியின் எழுத்துக்களை எடுத்துக் கொண்டால் இவரும் கட்டுரைகள், கதை, விமர்சனம் என பல வடிவங்களில் எழுதுபவர் என்பது குறிப் பிடத்தக்கது. "இன்னுமொரு காலடி" யில் வெளிவந்த "தாய்க்குலப் பெருமை பேசி" எனும் கட்டுரையானது: ஒவ்வொரு குடும்பப் பெண்களும் கணவனால், குடும்பத்தினரால் செய்யப்படுகின்ற எல்லாவிதமான கொடுமைகளையும் தாங்கிக் கொண்டு, இந்த ஆணாதிக்க சமூகத்துக்கு பயந்து வெளியில் சொல்ல முடியாதவாறும், குடும்பத்தை விட்டு வெளியேறமுடியாதவாறும் உள்ளமைக்கு பெண்களை சுற்றி எழுப்பப் பட்டுள்ள புனிதங்களே காரணம் என்றும் குறிப்பாக பெண்கள் இரக்கம், சகிப்புத்தன்மை, தியாகம், தன்னடக்கம் கொண்டவர்கள் என்று பெண் பெருமை பேசிப் பேசியே பெண்களை உளவியல் ரீதியாக அப்படியே ஆக்கி வைத்துள்ளார்கள். என்பதையும் விளக்குவதாக உள்ளது. மேலும் இதே விடயத்தை "பெண்கள் தொடர்பான கருத்தியல் மீறல்கள்" என்ற இவரது கட்டுரையும் உள்ளடக்கியுள்ளது.

பெண்களை இரண்டாம் பட்சமாக்கல் என்பது பெண்களின் பிறப்பில் இருந்தே தொடர்கிறது. பெண்களை இழிவுப்பண்டமாக வெறும் பாலியல் சொத்துக்களாகவே எமது சமூகத்தின் பெண்கள் மீதான ஒவ்வொரு நடவடிக்கையையும் காணமுடிகிறது. பெண் இழிவுப்பண்டம் என்பதின் உச்சநிலையே இன்று சமூகத்துள் நடக்கும் பெண் சிசுக்கொலையாகும் என்பதை றஞ்சியினது "பெண் சிசுக் கொலை" என்ற கட்டுரையில் காணலாம். இக்கட்டுரையில் பெண்சிசுக் கொலையின் மூலவேரின் ஆழத்தை இன்னும் தேடியிருக்கலாம். இதனது ஆரம்பத்தை தெளிவாகக் காணும்போதுதான் இதனை நாம் வேரோடு பிடுங்கியெறிய முயற்சிக்கலாம்.

அடுத்து ஜேர்மனியில் வாழும் உமா வின் படைப்புகளில் இவரது சிறுகதைகள் குறிப்



படிப்பகம்

www.padippakam.com

பிடத்தக்கவை. "தோற்றுத்தான் போவோமா" வில் வெளிவந்த "நெருடல்" சிறுகதை ஒரு கணவனை இழந்த பெண்ணும், எதிர்காலத்தையே சூனியமாகவே எண்ணும் அவளது பலவீனமும் இங்கே எதிர் கொள்ளப்படுவதுடன் அவளால் பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வாழமுடியும் என்பதையும், வாழவேண்டும் என்பதையும் இவர் இக்கதை மூலம் அழகாகச் சொல்கிறார். இவரது "அம்மா நான் விளையாட மாட்டேன்" எனும் சிறுகதை இங்கு புகலிடத்தில் நிலவும் (குறிப்பாக ஜேர்மன்) இனவாதத்தை படம் பிடித்துக் காட்டுவதாக உள்ளது.மேலும் இவரது கட்டுரைகள் "சக்தி", "பெண்கள் சந்திப்பு மலர்" போன்றவற்றில் வெளிவந்துள்ளன. "பெண்ணை இழிவுபடுத்தும் சொற்பதங்கள், பழமொழிகள்" என்ற கட்டுரையில் பழமொழிகளில் எவ்வாறு பெண்களை இழிவுபடுத்தும் கருத்துக்கள் புகுத்தப்பட்டுள்ளன என்பதை விளக்கியுள்ளார்.

புகலிட எழுத்தாளர்களுள் நோர்வேயில் வாழும் தயாநிதியின் எழுத்துக்களும் நிச்சயம் குறிப்பிடவேண்டியவை. இவர் சிறுகதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு என்று பலவழிகளிலும் பெண் சார்ந்த விடயங்களைத் தந்துள்ளார். "பெண்கள் சந்திப்பு மலரில்" வெளிவந்த "குழந்தை வளர்ப்பில் பால்வேறுபாடு" எனும் கட்டுரை: பெண்குழந்தையின் பிறப்பில் இருந்தே இன்றைய பெண் எவ்வாறு உருவாக்கப்படுகிறாள். இதன் ஆரம்ப கட்டமாக குழந்தைகளை வளர்ப்பதில் சமூகம் காட்டும் பாரபட்சம் எவ்வாறு ஓர் ஆளுமையற்றவர்களாக எப்போதும் மற்றவர்களுக்காக தன்னை உருக்குபவர்களாக ஆக்கப்படுகிறாள் என்பதை இக்கட்டுரை கூறுகிறது. மற்றும் "சக்தி" யில் வெளிவந்த "பார்பி பொம்மை" என்ற கட்டுரையில் பார்பியின் தோற்றம், வரலாறு என்பவை விளக்கப்பட்ட போதும், இப்பார்பிக்கும் பெண்குழந்தைகளுக்கும் இடையேயான உறவு, அதன் உளவியல் தாக்கம் என்பவை பெண்ணிச் சிந்தனை நோக்கில் ஆழமாக ஆராயப்பட்டிருந்தால் இதனது தேவை நீண்டிருக்கும். பார்பியின் உடல் அமைப்பு, நிறம் என்பன ஆண்களின் விருப்பிற்கேற்ற பாலியல் தேவையின் ஒரு வடிவமாகவே அமைக்கப் படுவதும் குறிப்பிடத்தக்கது.

மற்றும் இவரது மொழிபெயர்ப்புச் சிறுகதையான "அந்தப் பச்சைக் காறுறைகள்" இன் தெரிவு வரவேற்கத்தக்கது. இக்கதை மேற்குலக, ஐரோப்பிய குடும்பம் ஒன்றில் நடைபெற்றாலும் எமது இலக்கிய சூழலுக்கு நன்றாகவே பொருந்துகிறது. அதாவது தன்னை ஒரு நல்ல புரிந்துணர்வுள்ள, அன்பான கணவன் எனக் காட்டிக்கொள்ளும் ஒருவன் வீட்டினுள் தனது மனைவி, குழந்தைகள் மீதான ஒவ்வொரு செய்கையும் தனது ஆதிக்கத்தை நிறுவமுயல்வதாகவே காணப்படுவதையும், இதனால் பாதிக்கப்படும் பெண்களின் உளவியலை நரம்புத்தளர்ச்சி என மறைத்து விடும் பொதுவான சமூக சித்திரவதையையும் சித்தரிக்கிறது இக்கதை.

புகலிடத்தில் வாழும் நாம் இங்குள்ள இச் சமூகங்களின் ஆணாதிக்கக் கூறுகளை இனம் காண்பதும், மற்றும் அதற்கெதிரான போராட்டங்கள், பெண்ணியக் கருத்துக்களை அறிவதும் எமக்கு மிகவும் இன்றியமையாதது. இந்த வகையில் பிரான்ஸில் வாழும் "லக்ஷ்மி" இன் மொழி பெயர்ப்புகள் குறிப்பிடவேண்டியன. "எக்ஸில்" இல் வெளிவந்த "பாலியல் கண்காணிப்பும் ஒடுக்குமுறையும்: பெண்களின் கட்டுப்பாட்டு மீதான ஒப்பீட்டு நோக்கு" என்ற கட்டுரையானது பெண்கள் மீதான பாலியல் அடக்குமுறை சமூகத்தினால் திணிக்கப்படுகிறது என்பதையும், இது வர்க்கம் கடந்து உளவியல் ரீதியாக ஒவ்வொருவரினுள்ளும் ஆழப்பதிந்துள்ளது என்பதையும் நன்றாக விளக்குகிறது. மற்றும் "உயிர்நிழல்" இல் வந்த "சிமோன் தி போவுவா" பற்றிய முன்வரைவுடன், அவரது "இரண்டாவது பால்" எனும் நூலையும் (இன்நூல் பற்றிய அறிமுகம் சக்தி 3:1 / 1993 ல் கிருபாவினால் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.) இன்நூல் எழுதியவுடன் இதற்கிருந்த எதிர்ப்பும், இப்போது இதற்கிருக்கும் வரவேற்பிற்கான காரணங்களையும் இரு பெண்ணிலைவாதிகளினுடைய நேர்காணல் மூலம் தந்திருப்பது அவசியமானதொன்றே.

இன்னும், இங்கு அவுஸ்ரேலியாவில் வாழும் பாமதி, ஜேர்மனியில் வாழும் மல்லிகா

"அனேகமான எழுத்துக்கள் யதார்த்தத்தைப் படம் பிடிப்பவையாகவேயுள்ளன. யதார்த்தத்தை மீறும் எழுத்துக்கள் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. இதற்கு எமது இலக்கிய செயற்பாடுகளும், இலக்கிய தேடலுமே காரணம்."



படிப்பகம்

www.padippakam.com

போன்றவர்களின் எழுத்து பெண்களை விழிப் பூட்டுபவையாகவும், பெண்களின் ஆழ்மன கூக்குரல்களையும் கொண்டுவருபவையாகவும் தென்படுகின்றது. மேலும் ஜேர்மனியில் வாழும் நந்தினியின் "மூளைக்குள் ஒரு சமையலறை" எனும் சிறுகதை குறிப்பிடவேண்டியதொன்று. மற்றும் மைத்ரேயி, சுமதி றூபன், 'நளாயினி தாமரைச்செல்வன், சுதர்சனா போன்றோரும் பெண்களுடைய பிரச்சனைகளை எழுதிக் கொண்டிருப்பதைக் குறிப்பிடலாம்.

எமது புகலிடப் பெண்களின் செயற்பாடுகளை நோக்குகையில் பொதுவாக ஏனைய அனேகமான பெண் எழுத்தாளிகளைப் போலல்லாது அதாவது பெயருக்கும், புகழுக்கும், பதவிக்கும் (பல்கலைக்கழக ஆய்வு, பத்திரிகை ஆசிரியர் பதவிக்கான போட்டி) எழுதுவது என்றில்லாமல் உண்மையான பெண்களினுடைய பிரச்சனைகளை வெளிக்கொண்டுவரும் நோக்கிலும், பெண்களின் விடிவை நோக்கியும் எழுதுபவர்களாக இருப்பது மிகவும் பெருமைக்குரிய விடயமே. ஆனால் இன்னும் அனேகமான எழுத்துக்கள் எல்லாம் யதார்த்தத்தை படம் பிடிப்பவையாகவே உள்ளன. யதார்த்தத்தை மீறும் எழுத்துக்கள் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. இதற்கு எமது குறுகிய செயற்பாடுகளும், குறுகிய தேடலுமே காரணம் எனலாம். செயற்பாடுகளை எடுக்கும்போது புகலிடப் பெண்கள் இங்குள்ள குறுங்குழு செயற்பாடுகளில் தவிர்க்க முடியாத படி பங்கு கொள்கின்றோம். ஏனெனில் எமது திறன்களை வெளிப்படுத்துவதற்கு வேறு இடங்களின்றிய நிலையில் குறைந்த பட்ச இடமாக அது அமைவதனால். இதன் மூலம் அக்குழுக்களுக்குள் உள்ள ஆணாதிக்கச் சிந்தனைக்குள் எம்மை அறியாமலேயே சிக்கிக் கொள்ள நேர்கிறது. ஏனெனில் அக்கூட்டுகளில் இருந்து கொண்டு அதைவிடுத்து பெண்களுக்குரிய பிரச்சனைகளுக்காக பெண்களின் ஒரு வலிமை மிக்க கூட்டு என்பது நடைமுறையில் இன்னும் சாத்தியமற்றிருக்கின்றது. இதிலிருந்து நாங்கள் இன்னும் எங்களிடமிருக்கும் ஆணாதிக்கச் சிந்தனைகளை, அதனது கூறுகளை அகற்றமுடியாது இருக்கிறோமா? என எண்ணத்தோன்றுகிறது. சில வேளைகளில் அவ்வாறு விடுபடநினைக்கும் பெண்களையும் இனம்காணத் தவறிவிடுகிறோமா எனவும் கேள்வி எழுகிறது.

எனினும் புகலிடத்தில் பெண்களினால் பெண்களுக்காக வெளிவந்த "நமது குரல்", "கண்", "ஊதா", "சக்தி" போன்ற பத்திரிகைகளின் சேவை இன்றியமையாததே. இவற்றில் ஏனையவை நின்றுபோக "சக்தி" தொடர்ந்து வெளிவந்துகொண்டிருப்பது ஊக்கமளிக்கவேண்டிய விடயமே. இதற்குப் பொறுப்பாளர்களான தயாநிதி, றஞ்சி இருவரும் பாராட்டுக்குரியவர்களே. இடையிடையே "பெண்கள் சந்திப்பு மலர்" வெளிவருவதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் "சக்தி" போன்ற சஞ்சிகைகளிலாவது ஆண்களுடைய எழுத்துக்களை தவிர்த்து முழுதாக பெண்களுடைய எழுத்துக்களுக்கு அவ்விடத்தை பயன்படுத்த முயற்சிப்பது இன்னும் அதிகளவான பெண் எழுத்தாளர்களை இது உருவாக்கும் என்பதை கருத்தில் எடுத்தல் நல்லது.

மேலும் பெண்ணிய எழுத்தாளர்கள் மிகவும் கவனமாக இருக்கவேண்டிய விடயம் என்னவெனில், ஆணாதிக்கம் என்பது சாதி, மதம், வர்க்கம்,இனம் என்பவற்றால் செயற்படுத்தப்படுவதால், இவற்றை விடுத்து தனியாக பெண்களின் பிரச்சனை என்று (உளவியல் ரீதியான அடிப்படை மாற்றம்) மட்டும் பார்த்தல் முற்றுமுழுதான பெண்களின் விடுதலைக்கு சாத்தியமற்றதே. எனவே தலித்திய, வர்க்க சிந்தனையில் நாம் தெளிவுபெறுவதுடன் எம்முடைய எழுத்துக்கள் தலித்திய, வர்க்க சிந்தனையை உட்படுத்தியதாக இருக்க வேண்டும் என்பதும் எனது கருத்தாகும்.

* 10.07.99இல் சுவிஸின் சூரிச் நகரில் நடைபெற்ற பெண்கள் சந்திப்பில் வாசிக்கப்பட்ட இக்கட்டுரை சில மாற்றங்களுடன்.

முகப்போவியம்: கொன்ஸ்ரன்ரைன்
"செம்மணிப்புதைகுழி"



படிப்பகம்

www.padippakam.com

# பண்பாட்டுப் புரிதலுக்கான தளம்

## 'விளிம்பு'

**"விளிம்பு"** என்ற அமைப்பானது தமிழ்நாட்டின் திருநெல்வேலியில் நண்பர்கள் சிலரால் சேர்ந்து நடத்தப்பெறுகின்றது. தற்போது, மாதம் ஒருமுறை கூடிப்பேசுவது இதன் அடிப்படைச் செயல்பாடாக உள்ளது. நாங்கள் பேசுவதில் விளிம்புநிலை மக்கள் சார்ந்து/ பற்றி பேசியாக வேண்டும் என்ற நினைவூட்டலுக்காக விளிம்பு என்ற அடையாளம் இட்டுள்ளோம்.

விளிம்பின் முதல் கூடுதலானது 11.04.99 அன்று நடைபெற்றது. இதில் "எழுத்துக்களின் வன்முறை" என்பது குறித்து அறிவழகன் கட்டுரை வாசித்தார். வாய்மொழிச் சமூகத்தைச் சார்ந்த காணிக்காரன் என்ற பழங்குடிமக்களை, வனத்தில் இருந்து இடம்பெயர வைத்துசமவெளிப் பகுதியில் குடியமர்த்த எழுத்துச் சமூகங்களின் அரசு அவர்களுக்கு கொடுத்து வருகின்ற இன்னல் களையும், அவ்வின்னல்களினால் அம்மக்களின் வாழ்வியற்கூறுகள் சிதைக்கப்பட்டிருப்பதையும் குறித்துப் பேசினார். மேலும் இம்மக்களை காணிக்காரர்கள் இல்லையென்றும், காணிக் காரர்கள் என்றால் இன்ன இன்ன உடற்கூறுகள் கொண்டிருப்பார்கள் என்று பழைய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன, அப்படிக் குறிப்பிடப்பட்ட உடற்கூறுகள் இல்லாதபடியால் நீங்கள் காணிக்காரர்கள் கிடையாது என அதிகாரிகள் கூறுவதினையும் குறித்துப் பேசினார். மேலும் வனத்தில் அணைகள் கட்டவும், வனத்தைப் பாதுகாத்தல் என்ற பெயரில் அம்மக்களை இடம்பெயர வைக்கவும் இவ்வரசுகள் இம்மக்களின் உணவுமுறைகள், மருத்துவம், சமூக அமைப்பு போன்றவற்றை சிதைத்துவிட்டதினை "எழுத்துக் களின் வன்முறை" என்று குறித்துப் பேசினார்.

இதனைத் தொடர்ந்து, "சு.சமுத்திரம் நாவல்கள் ஓர் பார்வை" என்பது குறித்து மனோகரன் கட்டுரை வாசித்தார். அவர் பேசும் போது; சு.சமுத்திரன் அவர்கள் பொதுவாக பேசும் போது தலித்துகளுக்கு ஆதரவாகப் பேசும் போக்கு காணப்பட்டாலும், அவருடன் நேர்காணலின் போதும், அவருடைய படைப்புகளிலும் தலித் துக்கு எதிரான குரல்களே, சனாதனப் பார்வைகளே வெளிப்படுகின்றன என்பது குறித்துப்பேசினார். இக்கட்டுரை குறித்து ஆழமான விவாதங்களும் நடைபெற்றன.

இதன் பின்னர், மு. இராமசாமியின் "தமிழ் நாடகம் நேற்று இன்று நாளை" என்ற நூலை சுப்பையா அறிமுகம் செய்து வைத்துப் பேசினார். இந்நூல் தமிழ் நாடகம் குறித்து பல அரிய தகவல்களைக் கொண்ட நூலாக உள்ளது என்றார். முதல் கூடுதல் முனைவர் மு.இராம சாமியின் தலைமையில் நடந்தது. இதன் ஒருங்கிணைப்பாளராக முனைவர் ஆ.செல்ல பெருமாள் இருந்தார்.

விளிம்பின் இரண்டாவது கூடுதல் 6.5.99 அன்று நடைபெற்றது. இதில் தமிழ் மாந்தன், "மக்கள் போராட்டங்கள்- சில படிப்பினைகள்" என்பது குறித்துப் பேசினார். தூத்துக்குடியில் செயல்பட்டுவரும் "ஸ்டெர்லைட்" என்ற தொழிற்சாலையானது சுற்றுச் சூழலை மாசுபடுத்திவரும் பன்னாட்டு தரகு முதலாளிகளின் கம்பெனி. இத்தொழிற்சாலை ஆரம்பித்ததில் இருந்து பல்வேறு அரசியற்கட்சிகள் - சாதி அமைப்புக்கள் போன்றவை ஆரம்பத்தில் எதிர்த்து வந்தன. தற்போது அத்தொழிற்சாலையிடம் இருந்து கணிசமான அளவு பணங்களைப் பெற்றுக் கொண்டு அவை எதிர்ப்பினைக் கைவிட்டு விட்டன. அதன் பின்பு, தொண்டு நிறுவனங்கள் இவைகளைக் கையில் எடுத்தன. அவையும் ஒரு கட்டத்திற்கு மேல் எடுத்துச் செல்லாது விட்டுவிட்டது. மார்க்சிய -லெனினிய கட்சியிடம் நான் கேட்டபோது; இப்போது போராடும் காலம் அல்ல தோழரே, தத்துவார்த்தப் பார்வைகளைத் தெளிவாக்கிக் கொண்டு அதன் பின்புதான் களத்தில் இறங்க வேண்டும் என்று கூறி இப்போராட்டத்தினை கையில் எடுக்க மறுத்து விட்டதினையும் பேசினார். அதன் பின்பு இவரும் சில நண்பர்களும் பலருடன் இணைந்து ஜனநாயக முறைப்படி உண்ணாவிரதம், மனிதச்சங்கிலி, கடையடைப்பு இப்படி போராட்டம் நடத்தியும் ஏதும் செய்யமுடியாமல் போய்விட்ட தினையும் குறித்துப் பேசினார். இரண்டு முறை இக்கம்பனிக்கு தாமிரத்தாது ஏற்றிவந்த கப்பலை நடுக்கடலில் மீனவர்களின் துணையுடன் நடாத்தியதினையும், அதன் பின்பு முழு வீச்சுடன் இருந்த ஸ்டெர்லைட் எதிர்ப்பு தூத்துக்குடியில் நாடார்களுக்கும் - மீனவர்களுக்கும் சாதிய மோதலை ஏற்படுத்தியவுடன் அவை தேக்கமடைந்ததினையும் குறித்துப் பேசினார்.



படிப்பகம்

www.padippakam.com

தற்போது, மீண்டும் ஸ்டெர்லைட் எதிர்ப்புப் போராட்டத்தினை முன்னெடுப்பதில் பெரும் தடையாக முன்பு, அரசியற் கட்சிகள், தொண்டு நிறுவனங்கள் செயல்பட்டு பாதியில் விட்டுச் சென்று விட்டபடியால் மக்கள் இது பற்றி பேசுகின்றவர்களின் பின்னால் செல்லத் தயங்குகின்றனர். இதனால் அடுத்த கட்டமாக போராட்டம் நடத்திச் செல்வதில் பெரும் தடையுள்ளதினை விளக்கிப்பேசினர். இப்படியாக போராட்டங்கள் நடத்தியும் அரசு தரப்பில் இருந்து எந்தவிதமான பரிசீலனையும் செய்யப்படவில்லை. போராட்டத்தின் அடுத்தகட்டம் வன்முறையாக - கம்பனியை அடித்து நொறுக்குவதாகத்தானே இருக்கமுடியும் என்று பேசினார்.

இதனைத் தொடர்ந்து "வரைமொழிக் கதைகள்" என்பது குறித்து புருஷோத்தம் பேசினார். சிறுவர்கள் படம் வரைந்தவாறே கதை சொல்வதனைக் குறித்தும், அதில் எப்படி லெவிஸ்ட்ராசின் ஃப்ரிக்கோலர் மனநிலைச் செயல் படுகின்றது என்பது குறித்துப் பேசினார். மேலும், இப்படி படம் வரைந்து கதை சொல்வதில் மூன்று தளங்கள் செயல்படுவதனைக் குறிப்பிட்டார் அதாவது படம் வரைதல் என்ற செயற்பாடும், கதை சொல்லல் என்ற செயற்பாடும் அத்துடன் பார்வையாளரின் தளம் என்ற மூன்று தளங்கள் செயற்படுவது குறித்துப் பேசினார். இரண்டாவது கூட்டத்திற்கு முனைவர். அ.ராமசாமி ஒருங்கிணைப்பாளராக இருந்தார்.

விளிம்பின் மூன்றாவது கூடுதல் 6.6.99 அன்று நடைபெற்றது. இதில், எக்ஸில் வெளியீடான, கலாமோகனின் சிறுகதைத் தொகுப்பான "நிஷ்டை" குறித்து குமாரசெல்வா பேசினார். நிஷ்டைத் தொகுப்பானது புகலிட மக்களின் அனுபவங்களை வரலாற்றுக் குறிப்புகளாக பதிவு செய்துள்ளது. மேலும், ஆயுதம் தாங்கியுள் ளவர்களின் செயல்பாடுகள் மீதான விமர்சனங்கள், தமிழ் சமுதாயங்கள் கட்டமைத்துள்ள குடும்ப மதிப்பீடுகள், பாலியல் செயல்பாடுகள் ஆகியனவற்றைப் புரட்டிப் போடுகின்ற கனமான உள்ளடக்கங்களைக் கொண்ட கதைகளாகவும், குறிப்பாக வயதான பெண்ணின் பாலியல் உணர்வுகள் குறித்த கதைகளும் இடம்பெற்றுள் ளது குறித்துப் பேசினார்.

இதனைத் தொடர்ந்து, காசிமாரியப்பன் "கால-வெளியற்ற உடல்கள்" என்ற தலைப்பில் தலித்துகள்-பெயர்கள் குறித்துப் பேசினார். எப்படி ஊர் என்ற கட்டமைப்பும், வீடுகள் என்ற கட்டமைப்பிலும், விளையாட்டிலும் தலித்துகள், பெயர்கள் இவர்களுக்கான காலம் / வெளி வரையறுக்கப்பட்டிருப்பதினையும், இந்த வரையறைகள் மீறப்படும் போது அவர்கள் வன்முறைக்குள்ளாக்கப்படுவதனையும் குறித்துப் பேசினார். இக்கூடுதலுக்கு முனைவர். தொ.பரமசிவன் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

-விளிம்பு-


## நன்றி

- வாலி + வைரமுத்து = ஆபாசம்
- பசுமைகள் பவனி வரட்டும்
- வாழ்க - வளர்க (ஆண்டு மலர்)
- சிறுவெளியீட்டுப்பிரசுரங்கள்





தொடர்புகட்கு:

Gonsumers Association of penang
87 Cantonment Road
10250 Penang - Malaysia




படிப்பகம்

www.padippakam.com



எங்களில் ஒவ்வொருத்தரிடமும்
தலா ஆயிரம் கதைகள் உள்ளன.
தீய சாவுகள் பற்றியதான ஆயிரம் ஆயிரம் கதைகள்.


அவற்றை ஒருக்கால்
எங்கள் குழந்தைகளுக்குச் சொல்ல நேரும்
அவர்களோ, அவைகள் தொட்டும்
சலிப்புறக் கூடும்.
அகல விரித்த விழிகளுள் நீர் திரளப்
பாரத்தில் இமை கவிழ, நாங்கள் வாழ்ந்த கதைகளைக் கேட்க
அவர்கள் தயாராக இருக்கப் போவதில்லை.

உணர்ச்சி வயப்பட்டவர்களாக எங்கள் மூத்தோர் தம்
காலச் சாவுகள் பற்றிச் சொல்கையில்
நமட்டுச் சிரிப்போடு நாங்கள்
உறங்கப் போனது போல
எங்கள் கதையும் அவர்களுக்குக் கொட்டாவியையே வருவிக்கும்.

முள்குண்டு, நாங்கள் தத்தளித்த
இரத்தத்தின் ஆற்றோட்டம்
அவர்களின் காற் கெண்டைக்கும் கீழாகியே
கசியும்.

அனேகமாக–
கூடப்புற்று
இரத்தம் உறைந்தவர்களாயும், கூச்செறிந்த உரோமங்களுடனுமே
பிறக்க இருக்கும்
அந்தச் சந்ததியின் ஒவ்வொரு தனியனும்
இன்னும் புதிய புதிய கோணங்களில் சாவைச் சந்திக்கும்–

ஆக,
அவர்களுக்குச் சுவாரசியமான கதைகளென்று
எங்களிடம் எதுவும் இருக்கப் போவதில்லை.
எங்கள் முன்னோர்களிடமும் எங்களுக்காக இல்லாதது போலவே,
எங்கள் குழந்தைகளிடமும்
அவர்களின் குழந்தைகளுக்குக் கூறவொன்றும்
ஆச்சரியமிக்க கதைகள் இருக்கப் போவதில்லை
சாவுகள் பற்றியதான.



**றஷ்மி**
990415 இரவு 12.30 மணி



படிப்பகம்

www.padippakam.com

# யூகோஸ்லாவியா

-தமிழரசன் -

## பல்லின மக்களுக்கு இடையேயான அறுவைச் சிகிச்சை

1900 ஆண்டுகளில் உலகில் 46 நாடுகள் இருந்தன. இன்று தனி நாட்டுக்காகப் போராடும் நாடுகளையும் சேர்த்தால் அவற்றின் தொகை 195ஐ எட்டுகின்றது. 6500 மொழிகள் 4,000க்கு மேற்பட்ட இனங்கள், இனக்குழுக்கள், மக்கள் கூட்டங்கள் உலகை நிரப்பிய போதிலும் இதில் 185 மொழி சார்ந்த தேசங்களே ஐ.நா. சபையில் பிரதிநிதித்துவம் வகிக்கின்றன. சோவியத் யூனியன் 101 இனங்கள் கொண்ட மக்கள் கூட்டத்தின் தொகுதியாய் இருந்த போது யூகோஸ்லாவியா 26க்கு மேற்பட்ட பல்லினங்களினது மாறுபட்ட கலாச்சாரம் பழக்கவழக்கங்களது நாடாய் இருந்தது. அதன் பல்லினக்கலாச்சார வாழ்வு அதன் அரை நூற்றாண்டை எட்டும் “டிட்டோயிச வாழ்வு” இன்று முடிவுக்கு வந்துவிட்டது. இன, மத, மோதல்கள் படுகொலைகளின் தேசமாய் ஏகாதிபத்தியங்களின் பொருளாதார இராணுவ நலங்களுக்கான பிரதேசமாக ஆகிவிட்டது. ஸ்லாவிய மக்களும் பால்கன் பிரதேச மக்களும் சேர்ந்து வாழ்ந்த வரலாற்றுக் காட்சி நேற்றைய வாழ்வுக்குரியதாகிவிட்டது. தேசிய இயக்கங்கள் மூர்க்கமான பிரிவினைவாதிகள், மதவெறியர்கள், பாஸிஸ்ட்டுக்கள், யாவரும் உள்ளூர் வெளியூர் அரசியற் பூசாரிகளின் உடுக்கடிக்கு ஏற்றதாய் இணைந்து ஆடத் தொடங்கியுள்ளனர். ஏகாதிபத்திய யுத்த வெறியும், மூலதனப்பசியும் போராட்டங்களை நிர்ணயிக்கும் தலைமைச் சக்திகளாக ஆகிவிட்டன. அரைநூற்றாண்டு காலமாய் சிறுகச் சிறுக துகள்துகளாய் கட்டியெழுப்பப்பட்ட இனம், மதம், கடந்த உணர்வுகள், மனித நாகரீகம், பண்பாடுகள், அரசியல் நெருக்கடிகள் சமூகப் புயல்கள் முன்பு நின்று பிடிக்க முடியாமல் பொறிந்து கொட்டுகின்றன. இது மனித குலத்தின் வரலாற்று முன்னேற்றத்திற்கு தேசியம், இனம், மதம், பிரதேசம் கடந்த புரட்சிகர அரசியலைக்கட்ட முயன்றோருக்கு தொழிலாள வர்க்கத்தின் உயர் அரசியற் கலாச்சாரத்தை முன்மொழிவோருக்கு சந்தேகமின்றி துன்பத்துக்கும் பின்வாங்குதலுக்கும் உரியது தான். இந்த நூற்றாண்டின் புரட்சிகர அதிர்வை உழைக்கும் மக்களின் சர்வதேச அரசியற் பிரவேசத்தை மார்க்ஸிய இயக்கங்கள் தொடக்கிவைத்தன. சோவியத்யூனியனின் எழுச்சி மனித குலத்தை நம்பிக்கையோடு போராட அழைத்தது. அந்த மாபெரும் மனித எழுச்சியால் ஸ்டாலினிசத்தை தோற்கடிக்க முடியவில்லை. ஸ்டாலினிச சித்தாந்தச் சிதைவு இயக்கவியல் போக்கோடு ஒட்டாத முரட்டு தனிநாட்டு சோசலிசம் உயிர்ப்பற்ற ஒவ்வொரு அரசியற் போக்கையும் விமர்சித்து அதிரடி அரசியல் வைத்தியம் செய்து முன்னேறவல்ல போக்குப்போய் சேடமிழுக்கும் உயிரற்ற அரசியல் சுயதேடலற்ற பக்கப் பாட்டுப்பாடும் அரசியல் சொல்லப்படுபவைகளை வரிதப்பாமல் ஒப்புவிக்கும் மனனம் செய்யும் அரசியல் வந்தது. ஆனால் பல ஆயிரமாண்டு காலப்பிற்போக்குகளின் துணையோடும் சமூகப் பலத்தோடும் உள்ள மக்கள் விரோதக் கருத்துக்கள் அதுசார்ந்த சக்திகள் ஸ்டாலினிசத்தை தோற்கடிப்பதில் சுலபமாய் வெற்றிபெற்றன. ஸ்டாலினிசத்தை மாக்சிய மாக்குவதில் அவை பெரும்சிரமங்களை எதிர்கொள்ளவேண்டி இருக்கவில்லை. இயல்பில் மாக்சியத்துக்கு வலுசேர்க்கவல்ல மனிதாபிமான மற்றும் ஜனநாயக சக்திகள் கூட சீர்திருத்தவாதப் போக்கிலும் பல்வகைக் கதம்பவாதப் போக்குகளிலும் புகலிடம் பெற்றன.

இன்று மாக்சியமற்ற பலபத்துப் போக்குகள் சமூக இயக்கவியல் ஞானமற்று கூர்மையான, அரசியலற்று வெறும் அரசியல் பால்குடிகளாக சமூக உணர்வு குன்றிய் தவ்வல்களாக அட்டகாசம் செய்கின்றார்கள். இன்றைய உலகப் பொருளாதார ஒழுங்கில் வலதுசாரிப் போக்குகள் மற்றும் நம்பிக்கை



படிப்பகம்

www.padippakam.com

இழந்த சாண் ஏற முழம் சறுக்கும் குறைபாட்டுச் சிந்தனைக் கோளாறுகளின் வருத்தங்கட்கும் நோய்நொடிகளுக்கும் ஆட்பட்டுப் போனவர்கள் சோசலிசத்தின் தோல்வி மாக்சியத்தின் தோல்வி என்பதாய் உலக ஒப்பாரியிடுகின்றனர். அரசியல் சோம்பல் காலங்களில் முதலாளியச் சிந்தனைகள் சகலதையும் வெற்றிகொண்டு விட்டதாய்த் தோன்றும் சமூக பொருளாதார அடிப்படையற்ற நுனிப்புற்சித்தாந்தங்கள் வெறுமையாளர்களை புல்லரிக்கச் செய்யும். ஆகா இதுவன்றோ வாழ்விக்கவந்த சிந்தனை என்று மலைப்பூட்டும். இத்தகைய போக்குகள் இன்றைய கட்டத்தில் செழிப்பது ஒருவகையில் தவிர்க முடியாததே. அவை காலத்தின் செல்வாக்குச் செலுத்தும் போக்குகளின் அத்தாட்சியுமாகும். முதலாளியக் கருத்துக் களின் பராமரிப்பிலும் உணவூட்டலிலும் வாழ்பவர்கள்தாம் அவற்றோடு வெளிப் படையாய் முரண்படும் ஒருசில அம்சங்கட்கு எதிராய்தம் பழங்கால வாளைச் சுழற்று வதினூடாக தாம் அமைப்பையே எதிர்ப்பதாய் பிரமிப்படைவார்கள். இது கூரையேறி கோழி பிடிக்காதவன் வானமேறி வைகுண்டம் போகும் கதையே என்பதை விளங்க நீண்ட நெடுங்காலாதி காலங்கள் நாம் காத்திருக்க வேண்டியதில்லை.

இனி நாம் யூகோஸ்லாவிய வகைப்பட்ட சோசலிசத்தை ஸ்டாலினிசத்துக்கு மாற்று என்று சில சக்திகளால் பரிந்துரை செய் யப்பட்ட டிட்டோயிசத்தின் போக்கை விளங்க முயற்சிக்கலாம். பழைய யூகோஸ்லாவியா 24 மில்லியன் சனத்தொகை கொண்டதேசம், ஸ்லோவேனியர்கள், சேர்பியர்கள், குரோட்சி யர்கள், மொன்ர நீக்கிரோக்கள், ரோமா, சிந்தி மக்கள் கூட்டம், அரபுக்கள், எகிப்தியர், துருக்கியர்கள், அல்பானியர், கொசவோ அல்பானியர், பொஸ்னியர், கங்கேரியர், பல்கேரியர்கள், கிறீஸ்காரர்கள், மசிடோனியர் கள், யூதர்கள், கோரானர்கள், மலைவாழ் மக்கள், ருமேனியர்கள் போன்ற பல்வகை மக்கள் தொகுதியின் நாடாகும். கத் தோலிக்கம், மரபுவழிக்கிறிஸ்தவம், முஸ்லிம் கள், யூதநம்பிக்கையாளர்கள் போன்றவை இம்மக்களிடையே உண்டு. முழு யூகோஸ் லாவியாவிலும் 6 மில்லியன் முஸ்லிம் மக்கள் உள்ளனர். இவர்கள் பல்வேறு இனங்களைச் சார்ந்தவர்கள். அல்பானியர், துருக்கியர், ரோமா, சிந்தி, அரபுக்கள், எகிப்தியர், பொஸ்னியர், சேர்பியர்கள், மசிடோனியர்கள் முஸ்லிம் சமயம் சார்ந்தவர்களாயும் உள்ளனர். பெல்கிராட்டில் மட்டும் பல்லினங்களைச் சேர்ந்த 200,000 முஸ்லிம் மக்கள் வாழ்கின்றனர். யூகோஸ்லாவிய மக்களில் பெரும்பான்மையினரான சேர்பியர்களில் பெரும்பான்மையினர் மரபுவழிப்பட்ட கிறிஸ்தவ மதம் சார்ந்தவர்கள். 14ம் நூற்றாண்டுக்கு முதல் துருக்கிய ஆக்கிரமிப்புக்கு எதிராயும் பின்பு ஒஸ்ரியா, பல்கேரிய, ஜேர்மனிய, இத்தாலிப்படைகட்கும் 1ம்,2ம் யுத்தங்களில் போராடியவர்கள். ஒஸ்திரிய ஒடுக்கு முறையாளன் Thron Folger சரஜேவாவில் வைத்து 1914ல் சேர்பிய தேசபக்தனால் சுட்டுக்கொல்லப்பட்டதை சாட்டிக்கொண்டு முதலில் ஒஸ்த்ரிய, கங்கேரிய படைகளும் பின்பு ஜேர்மேனிய, பல்கேரியப் படைகளும் சேர்பிய மக்களுக்கு எதிரியாய் இறங்கின. அன்றைய ஜேர்மனிய கெய்சர் வில்கெம் (Kaiser wilhelm 11) மூர்க்கம் கலந்த நையாண்டியாய் சேர்பியன்கள் செத்துப்போக வேண்டியவர்கள் என்றான். (Serbien Muss Sterbien) எல்லா சேர்பியர்களும் செத்தொழிய வேண்டியவர்கள் (Alle Serben Mussen Sterven) எல்லா சேர்பியர்களும் யுத்தக் காட்டார்கள் (Alle Serben Sind Wildkrieger) என்று ஜேர்மனிய தேசிய வெறித்திமிர்க் கூச்சல்கள் அன்று எழுந்தன. இன்றும் சேர்பிய மக்களுக்கு எதிராக இக்குரல்கள் சற்று மாறுபட்ட வடிவங்களில் ஒலிக்கின்றன.

> **இந்த நூற்றாண்டின் புரட்சிகர அதிர்வை உழைக்கும் மக்களின் சர்வதேச அரசியற் பிரவேசத்தை மார்க்ஸிய இயக்கங்கள் தொடக்கி வைத்தன. சோவியத் யூனியனின் எழுச்சி மனித குலத்தை நம்பிக்கை யோடு போராட அழைத்தது. அந்த மாபெரும் மனித எழுச்சியால் ஸ்டாலினிசத்தை தோற்கடிக்க முடியவில்லை.**



படிப்பகம்

www.padippakam.com

1914இல் ஜேர்மனியப் பாசிசத் தின் மூலவேரான கெய்சருக்கு தேசிய வெறிக்கு உருவேற்றி விட்ட அன்றைய SPD இன்றைய SPD போலவே சேர்பியர்கட்கும் ரஸ்சியாவிற்கும் எதிரான யுத்தத்தை ஆதரித்தது. ரஸ்யாவின் இரத்தக் கறைபடிந்த கொடுங்கோன்மை பற்றிப் பேசியது. (Blutbef leckten Russis chen Despotismus) எனினும் நீண்ட யுத்தத்தின் பின்பு 1918 இல் சேர்பியர்கள் பெல்கிராட்டை மீட்டனர். சேர்பியர்கள், குரோசியர்கள், ஸ்லோவினியர்கள், கொசவோ இணைந்த யூகோஸ்லாவியா சேர்பிய மன்னன் அலெக் சாண்டர் தலைமையில் பிறந்தது.

முதலாம் உலக யுத்தம் ரஸ்சிய சார் மன்னனின் ஒடுக்குமுறையிலிருந்து மக்களை விடுவிக்க நடத்தப்படுவதாய் அன்றைய ஜெர்மனி பிரச்சாரம் செய்தது. இரண்டாம் உலக யுத்தத்தில் போலந்திலுள்ள ஜெர்மனிய மக்களை காப்பாற்ற என்ற கோசத்தோடு தொடங்கியது. 1939 செப்டம்பர் 1ம் திகதி கிட்லர், போலந்தில் ஜெர்மனியர்கள் இரத்தப் பயங்கரவாதத்தினால் வீடுகளிலும், முற்றங்களிலும் இருந்து துரத்தப்படுவதாய் ஒப்பாரியிட்டான். (Die Deutschen in polen werden mit Blutigen Tarror verfolgt von Haus und Hof Vertrieben) போலந்தைத் தாக்கத் தொடங்கினான். "முழுமையான யுத்தம்" (Totalen Krieg) என்ற பிரகடனம் பிறந்தது. 1941 இல் பாசிசம் யூகோஸ்லாவியாவில் காலடி வைத்தபோது டிட்டோ தலைமையிலான கொம்யூனிஸ்டுக்களும் பாசிச எதிர்ப்புப் போராளிகளும் போராட்டத்தைத் தொடங்கினர். அது 80,000 பேரைக் கொண்ட படையாய் வளர்ந்தது. டிட்டோ தலைக்கு 100,000 Reichmark விலையிட்டுத் தேடப்பட்டார். அவர் பயங்கரவாத, கொலைஞன் என்று பிரகடனப்படுத்தப்பட்டார். 2ம் உலக யுத்தத்தில் 2 மில்லியன் யூகோஸ்லாவிய மக்கள் வெளிநாடுகட்கு குடிபெயர்ந்தனர். 1,7 மில்லியன் மக்கள் கொல்லப்பட்டனர். 1 மில்லியன் மக்கள் நாசிகளின் வேலையூடாக அழித்தல் என்ற கட்டாய உழைப்பு முகாம்களில் மடிந்தனர். டிட்டோவின் பாசிச எதிர்ப்புப் படையினர் 450,000 ஜெர்மனிய இத்தாலிய பாசிஸ்ட்டுக்களைக் கொன்றனர். யூகோஸ்லாவிய நகரங்கள் ஜெர்மனிய விமான மற்றும் தரைப் படைகளால் அழிக்கப்பட்டன. சிறுபான்மை இனமான குரோட்சிய இனத்தைத் சேர்ந்தவரான டிட்டோவின் பாசிச எதிர்ப்புப் படை மூன்றில் ஒரு பங்கு சேர்பியர்களைக் கொண்டதாகும். இவர்கள் சேர்பிய முடியாட்சியின் மிச்சசொச்சமான மில்கயில்லோ விக் (Mikhailovic) கையும் குரோட்டிய பாசிஸ்டுகளின் தலைவரான அன்ர பவுலொவிக் (Ante Pavlovic) கையும் நிர்மூலம் செய்து புதிய யூகோஸ்லாவியாவை உருவாக்கினர்.

இது குரோட்சியா, மாசிடோனியா, மொண்ட நீக்ரோ, சேர்பியா, சிலவேனியா, பொஸ்னியா போன்ற ஆறு குடியரசுகளையும் கொசவோ, வொஜ்லோடினா போன்ற இரு சமஸ்டி அரசுகளையும் உள்ளடக்கியது. 1948 இல் டிட்டோயிசம் ஸ்டாலினிச சோவியத் யூனியனோடு உறவுகளை முறித்தது. ஆனால் ஸ்ராலினிச வகைப்பட்ட தனிநாட்டில் சோசலிசம், உலகசமாதானம், வர்க்க ஒத்துழைப்பு போன்ற போக்குகளில் தன்னை இறக்கிவிட்டது. ஸ்ராலினிச அடக்குமுறை வடிவத்தைக்கண்டு அதைவிட மாறுபாடான சோசலிசம் படைக்கப் போவதாய் சொன்னவர்கள் மேற்கின் முதலாளிய நாடுகளோடும் அமெரிக்காவோடும் இறுதியாக உலகவங்கி சர்வதேசநாணய வங்கியோடும் உறவுக்குப் போய்ச் சேர்ந்தமையின் மூலம் டிட்டோயிசமானது இன்றைய சீர்கேடுகட்கு தொடக்கவிழா நடத்தி வைத்தது.

1970 களில் மேற்கு நாடுகள் தம் 1960 களின் சமூக நெருக்கடிகளில் இருந்து ஓரளவு மீளத்தொடங்கின. யூகோஸ்லாவியாதன் பல்நூற்றாண்டுகாலப் பிற்போக்கான சமூக நிலைமைகளினாலும் முதலாளிய நாடுகளின் தொடர்பாலும் இடறுப்பட்டுக் கொண்டிருந்தது. அது உலக வங்கியிடம் தொடர்ந்து கடன் பட்டுவந்தது. 1980 களில் ஊசலாட்டம் வெளிப்படையாய்த் தொடங்கியது. பணவீக்கம் அதிகரித்து வட்டிவிகிதம் ஏறியது. வெளிநாட்டுக்கடன் மென்மேலும் அதிகரித்தது. 1980களில் 2% வளர்ச்சி காட்டிய பொருளாதாரம் 1987-1988களில் வீழ்ச்சியடையத் தொடங்கியது. 1990இல் வீழ்ச்சி 10,6% ஆகியது. உள்நாட்டு நெருக்கடிகள் முன்னுக்கு வருவது வெளிப்பட்டது. இனம், குடியரசு, பிரதேசம், மதம் சார்ந்த ஆரம்பகட்ட மோதல்கள் முளைவிடத் தொடங்கின. 1989இல் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் முதலாளிய வழியில் மேற்கொள்ளப்பட்டன. மார்க்கோவிக் (Markovic) நேரடியாகவே அமெரிக்க உதவிக்குப் போனார். அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஸ்சுடன் சந்திப்புகள், ஒப்பந்தங்கள், அறிக்கைகள் வழக்கம்போல் வெளியாயின, பொருளாதார மறுசீரமைப்புப் பற்றிய செய்திகள்



படிப்பகம்

www.padippakam.com

வந்தன. இறுதியாக யூகோஸ்லாவிய அரசு இதுவரை உருவாக்கி மக்களுக்கு வழங்கிய சமூகப் பாதுகாப்புக்களும் வாழ்வும் பல்லினமக்களின் ஐக்கிய வாழ்வும் சவக்கிடங்குக்கு அனுப்பப்படும் நாழும் இனிதே வந்துற்றது. அமெரிக்கா, மற்றும் உலகவங்கி, சர்வதேச நாணயவங்கி என்பன யூகோஸ்லாவியாவின் நோய்கொண்ட சோசலிசப் பொருளாதாரத்தை மாற்றி சுதந்திரமான இயல்பான பொருளாதார வளர்ச்சிக்கு அடுக்குப் பண்ணப்போவதாய் அறிவித்தன. இப்படியாக சகல அரசுடமைகளையும் தனியார் மயப்படுத்தும் முதலாளியக் கருமங்கள் தொடங்கின.

1989 இல் அன்னிய மூலதன நுழைவுக்கும் முதலாளிய அமைப்புக்கு பரிபூரணமாய் ஒப்புக்கொடுத்தலுக்கும் வாய்ப்பாக தனிச் சொத்துடமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அரசுடமைகள் தனியார் மயமாக்கம் தொடங்கியது. மக்களின் சொத்துக்கள் பலபத்தாண்டுகளாக கட்டியெழுப்பப்பட்ட உழைப்பின் விளை பயன்கள்யாவும் தனியாருக்கு பலிதரப்பட்டன. உருக்கு, இரசாயணம், இயந்திரத்துறை, துணி உற்பத்தி சகலதும் தனியாரைச் சென்றடைந்தன. சோசலிசம் உற்பத்திச் சக்தியை விரயம் செய்கிறது, குறைந்த தொழிலாளர்களுடன் புதிய நவீன உற்பத்தி முறை என்ற கோசத்தோடு தன் மூலதன உறிஞ்சலுக்கு உடனடியாக ஆட்குறைப்புச் செய்து பெருந்தொகைத் தொழிலாளர்களை வெளித்தள்ளியதோடு குறைந்த தொழிலாளர்களை வேலையில் ஈடுபடுத்திப் பிழிந்தெடுத்தனர். மறுபுறம் அரசு 1989இல் தொழிற்சாலைகளை மூடியதால் 89,4000 பேர் வேலையை இழந்தனர். 1990இல் பொருளாதார நாசம் மேலும் விசக்கிருமியாய்ப் பரவியது. யூகோஸ்லாவியாவின் மொத்த தொழிற்சாலைகளின் தொகையான 7531 இல் 2435 நிரந்தரமாய் மூடப்பட்டது. பல்வேறு இனங்களைச் சேர்ந்த 1,9 மில்லியன் தொழிலாளர்கள் வேலையிழந்தனர். (மொத்த தொழிற்சாலைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 2,7 மில்லியன் ஆகும்) நாட்டின் 49,7% தொழிற்துறைகள் வீழ்ச்சியடைந்தன. இந்த நிலைகளை எதிர்த்து இன, மத, பிரதேச வேறுபாடுகளைக் கடந்து 1990 இல் 650,000 தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்தினர். இதில் யூகோஸ்லாவியாவின் முக்கிய தொழிற்துறையைச் சேர்ந்த பல்லின மக்களும் கலந்து கொண்டனர். இவர்கள் தம் எழுச்சியால் நகரங்களை உலுக்கினர்.

புதிய வங்கிச் சட்டம் கொண்டு வரப்பட்டகையோடு நாட்டின் அரைவாசி வங்கிகள் மூடப்பட்டன. யூகோஸ்லாவியாவின் தேசிய வங்கி உட்பட மற்றய குடியரசுகளின் சமஸ்டிப் பிரதேசங்களின் வங்கிகள் யாவும் உலக வங்கியின் நடவடிக்கைக்கும் பரிந்துரைகட்கும் ஏற்றதாய் மாற்றியமைக்கப்பட்டன. உலக வங்கியின் கட்டளைக்கு ஏற்ப சமூக உதவிகளில் கிள்ளல் நுள்ளல் தொடங்கியது. கல்வி, சுகாதாரம், ஓய்வூதியம், விடுமுறைக்கான கொடுப்பனவுகள், உணவுப் பண்டங்களின் விலை சகலதும் தனியாருக்கு ஏற்றவகையில் உலக வங்கியின் பரிந்துரைகட்கு இணங்க மாற்றப்பட்டன. 1990களில் 1,5மில்லியன் தொழிலாளருக்கு சம்பளம் கொடுபடவில்லை, வேலையின்மை நாட்டின் தேசியச் சொத்தாகியது, நிதிநிலைகள் குடியரசுகளின் மூச்சைத் திணறவைத்தன. தொழிலாளர்கள் தேசம் தழுவிய அளவில் கிளர்ச்சி செய்யும் சாத்தியம் அங்கு இருந்தது. இந்நிலையிலேதான் இனங்கள் குடியரசுகளின் அரசியற் தலைமைகள் மக்களை தேசிய இனரீதியில் அணிதிரட்ட முயன்றன. சோசலிசம் பேசிய சக்திகளின் அரசியற் துரோகங்களுக்கு கெதிராய் தொழிலாளர்களின் கலகத்தை சோசலிசத்திசையில் அணிவகுக்க வல்ல பற்றுறுதியும், அரசியல் வீராப்பும் உடைய அமைப்புகள் எதுவும் இருக்கவில்லை. எனவே அனைத்து மக்களும் சமூக பொருளியல் நிலைமைகள் சீர்கெட்ட போது சுலபமாய் தேசியவாத உணர்வுகட்கும் மூர்க்கத்திற்கும் பலியிடப்பட்டனர். மார்க்கோவிக்கின் சீர்திருத்தங்கள் நாடுதழுவிய அளவில் முரண்பாடுகளை வளர்த்தது. சேர்பியர்கட்கு முன்னுரிமை வழங்கல் எழுதப்படாத நடை

**அமைதியிழந்த யூக்கோஸ்லாவிய தேசம் தேசிய இனங்களிடையே நல்லெண்ணம் சமாதானம் நிலவிய காலம்போய் இனங்களிடையே குரோதமும் தேசிய வெறியும் பாசிசப் போக்குகளும் குடிபுக ஏகாதிபத்தியங்கள் பின்புறம் இருந்து ஊதிவிட்டன.**



படிப்பகம்

முறையாயிற்று. சிறுசிறு சலுகைகள் பரந்த மக்களினங்கள் மத்தியில் முறைகேடாகவும் தவறாகவும் பங்கிடப்பட்டன. பொருளாதார சமமின்மையும், வறுமையும் பெருகியபோது அதைத் தீர்க்கும் அருமருந்து எதையும் யூகோஸ்லாவிய அரசு கொண்டிருக்கவில்லை. ஏற்றுமதிகள் குறைந்தன, இறக்குமதி அதிகரித்தது. இவ்வாறாக அதன் குடியரசுகளும் சமஸ்டியரசுகளும் தாமே உடைந்து சிதறவும் இனங்கள் ஒன்றின் கழுத்தை அடுத்தது அறுத்தள்ளவுமான அடிப்படைகள் பூர்த்தி செய்யப்பட்டன. நாட்டை பாழ்படுத்திய ஏகாதிபத்தியங்கள் அடுத்து உள்நாட்டு யுத்தம் இனப்படு கொலைப் போர்கள் என்ப வற்றுக்கான சக்திகளை வேகமாகத் தயாரிக்கத் தொடங்கின.

1979களிலேயே ஜெர்மனியின் உளவுத்துறையான BND யூகோஸ்லாவியாவின் இரண்டும் கெட்டான் அரசியலையும் பொருளாதார நிலைகளையும் பயன்படுத்திக் கொண்டு உள்நுழைந்து விட்டது. ஜெர்மனிய உளவுத்துறையின் (BND) வளர்ப்புத் தந்தையான பாசிஸ்ட் Reinhard Gehlemக்கும் பின்பு பதவிக்கு (Klaus Kingel) வந்த கிளவுஸ்கிங்கல் 1979இல் அன்றைய FDPயின் வெளிநாட்டமைச்சர் (Genscher) கென்சரின் அனுசரணையோடு பதவிக்கு வந்தான். இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்ட சோசலிச விரோதிகளாவர். பாலஸ்தீன மக்களின் போராட்டம், தென் ஆபிரிக்க மக்களின் விடுதலைப் போராட்டம் போன்றவைகட்கு மூர்க்கமான எதிர்ப்பாளிகளாய் இருந்ததோடு துருக்கியின் இராணுவச் சதிக்கு 1980இல் உதவி, துருக்கிய கொம்யுனிஸ்ட்டுக்களை ஜெர்மனியில் அழிக்க துருக்கிய உளவு நிறுவனமான MIT க்கு உதவி, இஸ்ரேலின் மொசாட்டுடன் ஐரோப்பா முழுவதும் கிட்டத்தட்ட இணைந்து வேலை செய்தனர். BND முதலில் குரோட்டிய பாசிச (Ustasche) உஸ்டாகா மற்றும் தேசியவாத அமைப்புக்களோடும் பின்பு படிப்படியாக சேர்பிய பாசிசச் சக்திகள் சோசலிச விரோதச்சக்திகளோடும் உறவு பூண்டது. அமைதியிழந்த யூக்கோஸ்லாவிய தேசம் தேசிய இனங்களிடையே நல்லெண்ணம் சமாதானம் நிலவிய காலம்போய் இனங்களிடையே குரோதமும் தேசிய வெறியும் பாசிசப் போக்குகளும் குடிபுக ஏகாதிபத்தியங்கள் பின்புறம் இருந்து ஊதிவிட்டன. தம் சமூகவாழ்வை இழந்த மக்கள் இனமதம் சார்ந்த போக்குகளுள் தம் பொருளாதாரத் துயரங்கட்கு மறைவிடம் தேடமுயன்றனர். சகல மனிதகாட்டுமிராண்டித் தனங்களும் அங்கு புகுந்தன. முதலாளியத்தைவிட முன்னேறிய மனித உறவுகளைப் பேணிய ஒருதேசம் அங்கு நிலவியது என்ற கடைசி அடையாளங்களும் அங்கிருந்து அழிக்கப்பட்டுவிட்டன. அமைதி நிறைந்த யூகோஸ்லாவியாவின் பல்லின நகரங்கள் தொழிற்சாலைகள், தெருக்கள் ஒரு இனப்படுகொலை யுத்தத்துக்கு தம்மைத் தயாரித்து வந்தன. சிலவேனியன், குரோட்டியன், போஸ்னியா, மசிடோனியா, கொசவோ தேசிய எழிச்சிகள், பிரிவினைப்போராட்டங்கள் எழுந்தன. 1990 குரோட்டியாவும் 1991 இல் சிலவெனியாவும் தேர்தலின் பின்பு தம்மைச் சுதந்திர நாடுகளாகப் பிரகடனம் செய்து கொண்டன. ஜெர்மனி உட்பட மேற்கு ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் இவைகளை உடனடியாக அங்கீகரித்தன. குரோட்டியா தன் சுதந்திரப் பிரகடனத்தோடு அங்கு மக்கள் தொகையில் மூன்றில் ஒருபகுதியாக இருந்த 600,000 சேர்பியர்களை வன்முறைமூலம் வெளியேற்றியது. குரோட்டியா குரோட்டியருக்கே என்று அறிவிக்கப்பட்டது. தன் மனைவி ஒருசேர்பிய இனத்தவளாகவோ அல்லது யூதப்பெண்ணாகவோ இல்லாமலிருப்பதையிட்டு தான் பெருமைப்படுவதாக குராட்டியத் தலைவனும் இன்றைய கடைகெட்ட ஊழல் அரசியல்வாதியுமான ருஜ்மான் அப்போது அறிவித்தான். ஒருபுறம் சேர்பிய இராணுவ அட்டூழியங்கள் சாதாரணமான குரோட்டிய பொதுமக்கள் மேலான கொலை, பாலியல் வன்முறை, தீவைப்பு, குடியெழுப்பிக் கலைத்தல் மறுபுறம் குரோட்டிய பாசிஸ்டுகள் தேசிய வெறியர்கள், சேர்பியர்கள், யூதமக்கள் உட்பட மற்றய இனங்களை துரத்தினர். அரசியல் பயங்கரவாதத்தையும் இராணுவ வன்முறையையும் ஏவினர். இவைகள் சேர்பிய இராணுவப் பயங்கரவாதத்துக்கு எவ்வித்திலும் குறையாதவை. யூதர்கள் சேர்பியர்களைப் போன்று முக்கியமாய்த் தேடித்தேடி கொலைக்கும் வன்முறைக்கும் இலக்காக்கப்பட்டனர்.

குரோட்டிய பாசிஸ்டுகளான உஸ்ராக (Ustasche) இரண்டாம் உலக யுத்தத்தில் நாசிகளோடு இணைந்து நின்றவர்களாகும். இது ஜெர்மனிய உளவுத்துறையின் உதவியோடு மீண்டும் உயிர் பெற்றது. இந்த அமைப்பு 2ம் உலகயுத்த முடிவில் வெளிநாடுகட்கு குடி பெயர்ந்தது. பல பழைய குரோட்டிய பாசிஸ்ட்டுகள் வெளிநாடுகளில் இதை நிறுவிப்பலமாக்கினர். ருஜ்மானின் குரோட்டிய

www.padippakam.com

ஜனநாயகக்கட்சி (HDZ) நிறுவப்பட்டபோது அதற்கு மேற்கின் உளவுத்துறையின் பிரச்சாரம் நிதிவசதிகளோடு உஸ்ராகா பாசிஸ்டுகளின் ஆதரவும் நிதியுதவியும் கிடைத்தன. ருக்மான் அதன் நன்றிக்கடனாக உஸ்ராகாவின் நாசிகாலச்சின்னமாக U ஐ தன்கட்சியின் சின்னமாக்கினான். அத்தோடு குரோட்டியாவில் பாசிஸ்டுக்கள் நாசிகளின் உதவியோடு அதிகாரத்தில் இருந்தபோது வழக்கிலிருந்த நாணயமான குணாவை மீண்டும் நடைமுறைக்கு கொண்டுவந்தான். ஜெர்மனியின் புதிய நாசிகள் தம் பழைய விட்டகுறை தொட்டகுறையைத் தீர்க்க குரோட்டியா சென்று சேர்பியர்கட்கெதிராக குரோட்டியர்களுடன் இணைந்து போராடினர். (இவர்களில் பலர் பிற்காலத்தில் ஜெர்மனியத் தொலைக்காட்சியில் தம் பாசிசத்தின் புதிய அனுபவங்களை பெருமையோடு விபரித்தனர்.) அத்தோடு பல மேற்குலகின் கூலிப்படைகளும் இங்கு சேர்பியர்கட்கு எதிராய் போரிட அமர்த்தப்பட்டனர். இவைகள் பெரும்பகுதியாய் மேற்கின் உளவுத்துறையின் ஏற்பாடுகளாகும். இவர்கள் தனியே சேர்பியர்களையும் அவர்களின் மரபுவழி கிறிஸ்தவ தேவாலயங்களையும் கலாச்சார நிறுவனங்களையும் மட்டுமல்ல 2ம் உலக யுத்தத்தில் அழிபடாமல் தப்பிய யூதர்களின் மதநிறுவனங்களையும் அழித்தனர். ஆயிரக்கணக்கான யூதர்கள் சேர்பியர்கள் வாழும் பிரதேசங்கட்கும் பகுதியாய் பின்பு இஸ்ரேலுக்கும் தப்பியோடினர். 1941ல் குரோட்டியாவை நாசிகளோடு இணைந்து குரோட்டிய பாசிஸ்டுக்களான உஸ்ராகா கட்டுப்படுத்திய சமயம் 750,000 சேர்பியர்களையும் 60,000 யூதர்களையும் 26,000 சிந்தி ரோமா இனமக்களையும் கொலைசெய்தனர். 300 மேற்பட்ட மரபுவழிப்பட்ட கிறிஸ்தவ தேவாலயங்களை அழித்தனர், கொள்ளையிட்டனர், பொதுக்களஞ்சியமாய்ப் பாவித்தனர். பொதுக்கக்கூசாகப் பாவித்தனர், 240,000 சேர்பியர்கள் வலுக்கட்டாயமாக கத்தோலிக்க மதத்துக்கு சேர்க்கப்பட்டனர். அப்போது குரோட்டிய கத்தோலிக்க தலைமைக்குருவாய் இருந்தவனான அலோசிஸ் ஸ்டெபினாக் (Kardinal-Alois Stepinac) குரோட்டிய, ஜெர்மனிய பாசிஸ்ட்டுக்களுடன் ஒத்துழைத்தான். அண்மையில் போப்பாண்டவரால் இவன் குரோட்டியாவின் முக்கிய மானவனாக புனிதனாக அங்கீகரிக்கப்பட்டுள்ளான். வத்திக்கானும் சேர்பியர்களுக்கு எதிரான யுத்தத்திற்காக குரோட்டியர்களுக்கு இரகசியமாய் நிதி வழங்கியதோடு ஏகாதிபத்திய உளவு நிறுவனங்களோடு இணைந்து அரசியற் சதிகளில் ஈடுபட்டதின் மூலம் அது மென்மேலும் புனிதமடைந்தது. யேசுபிரானின் கருணையையும், மனித நேயத்தையும் மீண்டும் நிருபித்தது.

குரோட்டியாவில் உள்ள சேர்பியர்களிடையே தேசியவெறியர்களும் பாசிஸ்டுக்களுமான செட்னிக்ஸ் (Chetniks) 1990களில் மீண்டும் தலையெடுத்தனர். இவர்கள் சாதாரணமான குரோட்டியர்களையும், முஸ்லிம் மக்களையும் அழித்தனர். பலநூறு கிராமங்களை கொள்ளையிட்டு தீவைத்தனர். இந்த சேர்பிய இனவெறிக் கும்பலான செட்னிக்ஸ் 2ம் உலகயுத்தகாலத்தில் பிரிட்டிஸ் பிரான்ஸ் அரசுகளால் ஆதரித்து வளர்க்கப்பட்ட சேர்பிய அரசவம்சத்தின் இராணுவத்தைச் சேர்ந்தவர்களால் உருவாக்கப்பட்டதாகும். இந்தச் செட்னிக்ஸ் மீண்டும் யூகோஸ்லாவிய உள்நாட்டு யுத்தத்தில் சேர்பியமக்களைக் காப்பாற்றப்போவதாய் சொல்லிக் கொண்டு அவதாரம் எடுத்தது. பொஸ்னியா-குரோட்டிய எல்லைப்பகுதியான கிரஜீனா (Krajina) சிலோவெனியன் பகுதியான பனிச்சா (Banija) பகுதிகளில் உள்ள சேர்பியமக்களின் மத்தியில் தம்மை நிறுத்திக் கொள்ள முயன்றனர்.

பொஸ்னியாவின் 1991இல் மொத்தச் சனத்தொகை 43,65,000 பேராகும். இதில் 43,7% முஸ்லிம்கள் 31,4% சேர்பியர்கள் 17,3% குரோட்டியர்கள். 1991 இல் முஸ்லிம்களின் ஜனநாயகத்துக்கான கட்சி, சேர்பியர்களின் கட்சியான SAD குரோட்டியர்களின் CDS

**1929இல் கொசவோ யூகோஸ்லாவிய அரசின் ஒருபகுதியாக இணைக்கப்பட்டது. 1970இல் டிட்டோ காலத்தில் கொசவோ அல்பானிய மக்களுக்கு சமஸ்டிஆட்சிமுறை வழங்கப்பட்டது. இது 1989இல் இன்றைய மிலசவிக் ஆட்சியால் பறிக்கப்பட்டது**



படிப்பகம்

www.padippakam.com

கூட்டணி பங்குபற்றின. மக்கள் இனமத அடிப்படையில் பிளவுபட்டு நின்றனர். 1992-1993 களில் பொஸ்னியாவில் பொஸ்னியருக்கும் அங்கு சிறுபான்மையான சேர்பியர்கட்கும் இடையே யுத்தமும் பின்பு 1993-1994 இல் முஸ்லிம்களுக்கும் குரோட்டியருக்கும் இடையேயான யுத்தமும் நடந்தன. இங்கு பொஸ்னியா முஸ்லிம் மக்கட்கு உதவவென்று பத்துக்கு மேற்பட்ட முஸ்லிம் நாடுகள் நிதியுதவி செய்ததோடு புனிதயுத்தம் நடத்த கூலிப் படைகளையும் அனுப்பின. அரபுநாடுகள் முதல் ஆப்கானிஸ்தான் வரை பங்கேற்ற 3000 பேர்வரையிலான இஸ்லாமிய கூலிப்படைகள் இங்கு சேர்பியர்கட்கும் பின்பு குரோட்டியர் கட்கும் எதிராய் யுத்தம் புரிந்தன. அமெரிக்கா அவர்களை ஆதரித்தது. மறுபுறம் துருக்கி போன்ற நாடுகளும் பொஸ்னியாவில் தலையிட்டன. சேர்பியர்கட்கு பொஸ்னியாவில் ஒரு தனி குடியரசு உருவாக்கும் போராட்டமும் குரோட்சியர்கட்கு (Hercey Bosna) தனிக் குடியரசு பிரிக்கவும் போராட்டங்கள் நடந்தன.1995இல் பொஸ்னியாவின் சனத் தொகை மதிப்பீட்டின்படி 37,15,000 ஆக மட்டுமே இருந்தது. இதில் 13,2500 அகதிகள், இறந்தவர் கள் தொகை 200,000 என மதிப்பிடப்பட்டது. 200,000 சேர்பியர்கள் முழுமையாய் வெளியேற்றப்பட்டனர். யூகோஸ்லாவியாவின் தொழிற்துறை அபிவிருத்தி கூடிய பிரதேசங் களான சிலவேனியா, குரோட்டியா, பொஸ்னியா, மேற்கைரோப்பிய நாடுகளது முக்கியமாய் ஜெர்மனியினதும் அமெரிக்காவினதும் கட்டுக்குள் வந்தன. பலவருடங்கள்வரை பொஸ்னிய நாணயமான டிணாரையும் குரோட்டிய நாணயமான குணாவையும் விடவும் ஜெர்மனிய நாணயமான மாற்கே அங்கு புழக்கத்தில் இருந்தது. ஏகாதிபத்தியங்கள் யூகோஸ்லாவின் ஏனைய பகுதிகளையும் உடைத்து தனியே எடுக்கும் சதி முயற்சிகள் பிரச்சாரங்கள் நாசவேலைகளில் இறங்கின. மக்களிடையேயான வித்தியாசங்கள், சிறப்பியல்புகள் முரண்பாடுகளாய்த் திரித்துக் காட்டப்பட்டன. ஊதிப் பெருக்கவைக்கப்பட்டன. ஏகாதிபத்தியங்களுடன் சமாதானம், சக வாழ்வுக்குப் போன யூகோஸ்லாவியா அதற்கு விலையாக தன் சொந்த தேசத்தின் சமாதானத்தையும் சகவாழ்வையும் கொடுக்க வேண்டிய வரலாற்றுப்படிப்பினைக்கு விடப் பட்டது.

இன்று விஸ்வரூபம் உலகரூபம் எடுத் துள்ள கொசவோ போலவே எதிர்காலத்தில் மொன்ரநீக்ரோவையும் உடைத்தெடுப்பதும் இறுதியாக சேர்பியாவை மிகுதி யூகோஸ்லா வியாவை உடைப்பதுமே ஏகாதிபத்தியங்களின் எண்ணமாகும். பல்தேசிய இனங்கள் வாழும் மசிடோனியாவை கிரீஸ் தன்பக்கம் இழுக்க முயல்கிறது. கிரீஸில் ஒருபகுதியில் வாழும் மசிடோனிய சிறுபான்மையோடு இணைக்க முயல்கிறது. மறுபக்கம் மசிடொனியாவில் வாழும் பல்கேரிய சிறுபான்மையினத்தைக் சாட்டிக்கொண்டு பல்கேரிய மசிடோனியாவின் ஒருபகுதியை அபகரிக்கமுயல்கிறது. சேர்பியாவில் 400,000கங்கேரியர்கள் வாழும் பகுதிக்கு (வொய்வோடினா) கங்கேரி உரிமைகோரும் நிலை. பல்வகைத் தேசிய இனங்கள் பரவிக்கலந்து வாழ்ந்த யூகோஸ்லாவியாவை ஒருதேசியத்துக்காக மட்டுமே பிளந்தெடுப்பது என்பது நடைமுறையில் தீராத பிரச்சனைக்கு வித்திடும் இனமோதல் களால் இவைதிண்றும் பொருளாதார ரீதியாக தோல்வியடையும் என்பதே யூகோஸ்லாவி யாவில் இருந்து பிரிந்த நாடுகளின் அனுபவமாக உள்ளது. வலுவற்ற பலதேசிய இனங்களைக் கொண்ட குட்டிக்குட்டி நாடுகள் ஏகாதிபத்திய சுரண்டலுக்கும் இராணுவமேலாதிக்க நலன் களுக்கும் வாய்ப்பானதாகும். கிழக்குலகின் வீழ்ச்சி அந்த நாடுகளின் சுயசார்புப் பொருளா தார அமைப்பைக் குலைத்து அவைகளின் பலன்களை அழித்து தேசிய இனங்களின் யுத்தக்களமாய் ஆக்கியுள்ளது. மேற்கு நாடுகளை அண்டிப்பிழைப்பு நடத்தும் அவர் களின் அரசியலை கேள்விநியாயம் இன்றிப் பின்தொடரும் நாடுகளாகிவிட்டுள்ளது. இன்று பிரச்சனைக்குரிய பகுதியாய் விளங்கும் யூகோஸ்லாவியாவின் கொசவோ பகுதியானது 10887 சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்ட பிரதேசமாகும். இதுஜெர்மனியின் மாநிலமான Macklenburg - Vorpommern விடச் சிறிய பிரதேசமாகும். கொசவோவாவில் 90% அல்பேனியர்கள் வாழ்வதாய் முதலாளியப் பிரச்சாரங்கள் பூச்சிகாட்டினாலும் அதன் மொத்த சனத்தொகையான 2மில்லியனில் அரைவாசிக்கும் சற்றுக் குறைவான தொகை யினரே கொசவோ அல்பானிய மக்களாவர். இவர்களின் தொகை 800,000 முதல் 900,000 க்கு இடைப்பட்டதாகும். சேர்பியர்கள் 250,000பேர், மொண்டநீக்ரோ 150,000பெர், சிந்திரோமா இனங்கள் 50,000பேர், கொசவொ அல்பானியர் அல்லாத முஸ்லிம்மக்கள் 150,000பேர், யூதர்கள்,எகிப்தியர், அரபுக்கள் 60,000பேர் என்று கொசவோ பலமக்களின் வாழ்விடமாகும். வரலாற்றுரீதியாக கி.பி 1019 முதல் மரபுவழிக்கிறிஸ்தவம் சார்ந்த



படிப்பகம்

www.padippakam.com

சேர்பியர்கள் இங்கு வாழ்கின்றனர். 1389இல் முதன்முறையாக துருக்கிய ஒஸ்மானிய ஆக்கிரமிப்பாளர்கள் கொசவோவைத் தாக்கினர். 1445 கொசவோ துருக்கியின் கட்டுள் வந்தது. சேர்பியர்கள் துரத்தப்படல் கட்டாய மதமாற்றம் என்பன நடைபெற்றன. 1690இல் சேர்பிய மரபுவழிக்கிறிஸ்தவ விசப்பான Arsenig 11 Cerno jevic 90,000 சேர்பியர்களுடன் வடக்குக்கு துரத்தப்பட்டனர். துருக்கிய ஒஸ்மானிய அரசு 1912 வரை கொசவோவில் ஆதிக்கம் செலுத்தினர் இந்த இடைக்காலத்தில் பெரும் பகுதியான அல்பானியர்கள் கொசவோவில் குடியேறினர்.

1929இல் கொசவோ யூகோஸ்லாவிய அரசின் ஒருபகுதியாக இணைக்கப்பட்டது. 1970களில் டிட்டோ காலத்தில் கொசவோ அல்பானிய மக்களுக்கு சமஸ்டிஆட்சிமுறை வழங்கப்பட்டது. இது 1989இல் இன்றைய மிலசவிக் ஆட்சியால் பறிக்கப்பட்டது. 1989யூன் 28, துருக்கிய ஆக்கிரமிப்புக்கு எதிரான சேர்பிய மக்களின் 600 வருட நினைவுக்கொண்டாட்டத்தின் போதே இது நடைபெற்றது. மிலசவிக்கின் சோசலிச நாமம் பூண்டகட்சி நடைமுறையில் சேர்பிய தேசியவாததைப் பிரதிபலித்தது. மரபுவழிக் கிறிஸ்தவத்தையும் தன்னுடன் இணைத்துக்கொள்ள முயன்றது. மிலசவிக் கொசவோ சேர்பியர்களின் இருதயம் போன்றது என்று அறிவித்தார். மரபுவழிக் கிறிஸ்தவர்கள் அதை “சேர்பியர்களின் ஜெருசலம்” என்று பிரகடனப்படுத்தினார்கள். சேர்பிய இனமேலாதிக்கம் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலைமை கொசவோ அல்பானியர்களை யுத்தத்தை நோக்கித்தள்ளியது. அதிருப்தியாய் கலவரங்களாய் அரச எதிர்ப்பு நடவடிக்கையாய் இவைவளர்ந்தன. யூகோஸ்லாவிய அரசு இவைகளை அரச அடக்குமுறையால் எதிர் கொண்டது. 1991 தேர்தல் கொசவோ அல்பானியர்களின் தலைவராக இப்ராகிம் ருகோவா கொண்டுவந்தது 1991-1996 வரைகொசவொ அல்பானியர் கொசவோ சேர்பியர்கள் இணைந்த பாராளுமன்றம் அரசியல் பேச்சுவார்த்தைகள் என்று இழுபறிகள் நடந்தன. அல்பானியர்கள் சேர்பியர்களிடையே எந்த உடன்பாடும் வராமல் பார்த்துக் கொள்ளும் புனிதக்கடமையை ஏகாதிபத்தியங்கள் ஏற்றுக் கொண்டன. 1990களில் இன்று UCK (Ustria Clirimtare e Kosoves) அழைக்கப்படும் அமைப்புத் தொடங்கியது. அதன் முக்கியஸ்தர்களாக ஜெர்மனியிலிருந்த கொசவோ அல்பானியர்களும் அல்பானியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட அல்பானியர்களுமே இருந்தனர். ஆரம்பம் முதலே UCKவின் அரசியல் பரமபிதாவாக ஜெர்மனிய உளவுப்பிரிவான BND, ஜெர்மானிய இராணுவ உளவுப்பிரிவான MAD என்பவற்றோடு அல்பானியஉளவுத்துறையும் விளங்கின. அன்றைய ஜெர்மனியன் CDU-CSU-FDP அரசு இவர்கட்கு அல்பானியாவின் வடபகுதியில் பயிற்சி முகாம்கள் மற்றும் ஆயுத நிதியுதவிகளை வழங்கின. அன்றைய அல்பானியாவின் மாபியா அரசியல்வாதியான சாலிபெரிசா துருக்கி பிரிட்டன் என்பனவும் UCKயின் பின்புலத்தில் இருந்தனர் ஏகாதிபத்தியங்களின் நேரடி வளர்ப்புப்பிள்ளை என்பதோடு இத்தாலிய துருக்கிய மாபியா உலகங்களோடு நேரடி உறவு கொண்டவனாகும். இவன் அல்பானியாவில் பெரும் அல்பானியக் கனவை விதைத்தான். இன்றைய கிறீஸ்நாட்டின் Epirus, மொண்ட நீக்ரோவின் நாலில் ஒரு பகுதி, மூன்று சேர்பியப் பகுதிகள் கொசவோ, மசிடொனியப் பகுதிகளை உள்ளடக்கிய பெரும் அல்பானியாவை அடைவது பற்றிய குரல் எழுந்தது.

1993-1997வரை UCK வின் அங்கத்தவர்கள் தொகை 500 மட்டுமே, 1998இல் இத்தொகை 8,000முதல் 10,000வரை பெருகியது. 1997இல் ஏகாதிபத்தியக் கூலி

**ஒருநூற்றாண்டாய் தென்ஆபிரிக்காவின் நிற இனப்படுகொலைகளைச் சகித்துக்கொண்டு நிறஇனவெறியர்களோடு கூடித்திரிந்தவர்கள் அரைநூற்றாண்டுகாலம் பாலஸ்தீன மக்களின் அழிவுக்கு பயங்கர வாதத்தின் பலன் என்று சொன்னவர்கள் பல பத்தாண்டுகால சகிப்புக் காட்டியோர் கொசவோப் பிரச்சனையில் சில வாரங்கள் கூடப் பொறுக்கோம் என்று மனிதாபிமானத்தின் பெயரால் பதறியடித்தார்கள்.**



படிப்பகம்

www.padippakam.com

மாபியா அரசியல் வாதியுமான சாலி பெரிசாவுக்கு எதிராக கலகங்கள் மூண்டபோது மக்களால் கைப்பற்றப்பட்ட 700,000 மேற்பட்ட ரஸ்யதயாரிப்பான AK47, சீனத்தயாரிப்பான M48 போன்ற இராணுவத்தினது ஆயுதங்களின் பெரும்பகுதியான 500,000 வரை UCK வுக்குப் போய்ச் சேர்ந்தது. 1997இல் அல்பானியாவின் மாபெரும் பாசிசஎதிர்ப்புப் போராளியும் கொம்யுனிஸ்டுமான Shefqet Peci தமது 90 முதியவயதிலும் மற்றொரு பாசிச எதிர்ப்புத் தலைவரான Hakhi Lleshi 80 வயதிலும் சாரிபெரிசாவினால் சிறையில் அடைக்கப் பட்டனர். இத்தகைய மக்கள் விரோதியான சாரிபெரிசா இன்றளவும் UCK வின் முக்கிய வழிகாட்டியாவான். அமெரிக்கா 1998வரை UCK வை உலகில் உள்ள தடைசெய்யப்பட்ட 30க்கும் மேற்பட்ட பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் வைத்திருந்தது. பின்பு C.I.A. இன் தொடர்பின் பின்பு UCK ஆனது பயங்கரவாதக் கறைகள் நீங்கிப் புனிதமடைந்தது. விடுதலை வீரர்களாய் கொசவோ அல்பானிமக்களுக்கு போராட உரிமை கொண்டதாய் தகுதி கொண்டது. 1998இல் CIAயும் ஜெர்மனிய உளவுத்துறை BNDயும் UCKவைக் கையாள்வதிலும் தம்தமக்கு சாதகமாய் கையாள்வதிலும் ஒன்றோடு ஒன்று பிணக்குப் பட்ட செய்திகள் ஜெர்மன் பத்திரிகைகளில் வெளியாகுமளவு போட்டி நிலவியது UCKவின் தற்போதைய தொகை 15,000 முதல் 17,000வரையிலாகும். இதில் 5000 பேர் கொசோவாவில் இருந்தனர்.UCK சீருடைகள், அமெரிக்கா, ஜெர்மனி, அல்பானியா போன்ற நாடுகளில் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டன. UCK வின் வளர்ச்சியானது கொசவோ அல்பானியமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இப்ராகிம் ருகோவாவை அரசியல் மூலை முடுக்குகளில் தள்ளியது. பதிலாக UCK தலைவர் காசிம் தாகி (Hashim Thagi) யை பிரச்சாரப்படுத்தும் செயல்கள் நடந்தன. அல்பானியாவின் 2ம் உலகயுத்தப் பாசிச சக்தியான பலிஸ்டன் (Balisten) மீண்டும் உயிர் வாழ்வதற்கான தடயங்கள் தென்படத் தொடங்கியுள்ளன.

கொசவோவை தம் பொருளாதார ஆளுகையின் கீழ் கொண்டுவருவதன் மூலம் அங்குள்ள கனிப்பொருள் வளங்கள் கொசவோவாவின் கிழக்குப் பகுதியில் உள்ள எண்ணைவளம், இயற்கை வாயு என்பன மேற்கு நாடுகளினதும் அமெரிக்காவினதும் குறியாகும். கஸ்பியன் கடலினை கிழக்கு எல்லையாய் கொண்ட கொசவோ கஸ்பியன் கடலை அண்மித்துள்ள எண்ணைவளம் கொண்ட நாடுகளான கஜகஸ்தான், துருக்மேனிஸ்தான் ஆகிய நாடுகளைக் கொண்டுள்ளது. சோவியத்யூனியன் காலத்தில் தொடங்கி இது ரஸ்சியாவுக்கு எண்ணை வழங்கும் பிரதேசமாக உள்ளது. இப்பகுதிகளை இப்போ அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் படிப்படியாய் தம் செல்வாக்கின் கீழ் கொண்டு வருகின்றன. எனவே கொசவோவாவும் அதன் எண்ணை வளத்தோடு வருவது அதிகப்பயனுடையது என்பதோடு பால்கன் பிரதேசத்தைக் கட்டுப்படுத்தவும் எண்ணைவளம் கொண்ட மத்திய ஆசிய மற்றும் மேற்கு ஆசியப் பிரதேசங்களையும் கண்காணிக்கமுடியும். அதற்காகவும் உலகப் பயங்கரவாதிகள் யூகோஸ்லாவியாவில் நேரடியாகத் தலை கொடுத்தனர்.

ஈராக்கிய மக்களுக்கு எதிராகவும் ஈராக்கிய குவைத்திய எண்ணை வளங்களை ஆக்கிரமிக்கவும் சதாமின் பெயரைச் சாட்டிக்கொண்டு நாட்டோ பயங்கரவாதிகள் யுத்தத்தில் இறங்கினர். யுத்தத்தில் இறங்க முன்பு உலக அபிப்பிராயத்தை தமக்கு சாதகமாய்க் கட்டியெழுப்ப CNN உட்பட ஏகாதிபத்திய பொய், புழுகு சாதனங்கள்,திரிப்புகள் அபாண்டங்களை ஈராக்கின் மேல் சுமத்தின. மத்திய கிழக்கின் தெருச் சண்டியனான சதாம் உலகச் சண்டியனாக சோடித்து விடப்பட்டான். உலகப் பயங்கரவாதியாய் உலக சமாதானத்தின் பகைவனாய் உருப்பெருப்பிக்கப்பட்டான். யூகோஸ்லாவிய யுத்தத்திலும் இதே உத்தி கையாளப்பட்டது. மிலசவிக் இரத்தவெறியனாய் சமாதானத்தின் எதிரியாய் சிருஸ்டிக்கப்பட்டான். கொசவோ உலகின் ஒவ்வொரு தொலைக்காட்சியையும் கைப்பற்றிக் கொண்டது. கொசவோ அகதிகள் பற்றி மேற்குலகின் ஒவ்வொரு பத்திரிகையும் கண்ணீர்க் காவியங்களைத் தீட்டின. சர்வதேச ரீதியாக யூகோஸ்லாவியா முகம் கொடுக்க முடியாத நிலைமை உருவாக்கி விட்டு யூகோஸ்லாவியாவினால் ஏற்கமுடியாத அடிமைத் தனமான நிபந்தனைகளை யூகோஸ்லாவியா மேல்விதித்தனர். உள்நாட்டு யுத்தத்தால் நொந்து கெட்டுப்போயிருந்த யூகோஸ்லாவிய பேச்சு வார்த்தைகளில் பலபடிகள் இறங்கி வந்தது. கொசவோவாவில் ஐ. நா.வின் சமாதானப்படையை அழைக்க சம்மதித்த சமயம் தான் உறுப்பினராக இல்லாத ஏற்கனவே யூகோஸ்லாவியாவை துண்டாடிய நாட்டோ படைகளை கொசவோவாவில் இறக்க ஒப்ப மறுத்தது. 1998 ஒக்டோபரில் ஒப்புக்



படிப்பகம்

www.padippakam.com

கொள்ளப்பட்டபடி, OSZE யின் 2000பேர் கொண்ட கண்காணிப்புக் குழுவுக்குப் பதிலாய் ஐரோப்பியநாடுகள் 1200 பேரை மட்டுமே கொசவோவுக்கு அனுப்பின. கொசவோவில் யூகோஸ்லாவிய இராணுவத்துக்கும் UCK வுக்கும் இடையேயான யுத்தத்தில் தாம் தலையிடத்தேவையான அபிப்பிராயத்தை உருவாக்குவதில் மேற்கின் மக்கள் தொடர்புச் சாதனங்கள் படுவேகமாய் இயங்கின. கொசவோ அல்பானிய மக்கள் மேலான இனப்படுகொலை எரியூட்டல், பாலியல் வன்முறை, கிராமம் கிராமமாக வெளியேற்றல் போன்ற செய்திகள் இடைவேளையின்றி வெளியிடப்பட்டன. சேர்பியர்கள் கொசவொ அல்பானிய ஆண்களையும் பெண்களையும் குழந்தைகளையும் கொண்ட கட்டாய முகாம்கள், கொலை முகாம்கள் உருவாக்கியுள்ளதாய் செய்திகள் வந்தன. சேர்பியக் கொலைக்காரர்கட்கு எதிராயும் அப்பாவியான உதவியற்ற கொசவோ அல்பானியர்கள் பற்றியும் கட்டுரைகள், படங்கள்,செய்திகள், ஆவணங்கள், ஆய்வுகள் நூற்றுக்கணக்கில் பல்கிப்பெருகின. இராணுவத் தலையீடு ஒன்று செய்வதற்கு ஏற்றதான மக்கள் உளவியல் தயாரிக்கப்பட்டது. BOAT People, Asylanten-Fluchtlings welle என்று அகதிகளைப் பழித்தெழுதிய நூற்றாண்டாய் தென்ஆபிரிக்காவின் நிற இனப்படு கொலைகளைச் சகித்துக்கொண்டு நிறஇனவெறியர்களோடு கூடித்திரிந்தவர்கள் அரை நூற்றாண்டுகாலம் பாலஸ்தீன மக்களின் அழிவுக்கு பயங்கரவாதத்தின் பலன் என்று சொன்னவர்கள் பல பத்தாண்டுகால சகிப்புக் காட்டியோர் கொசவோப் பிரச்சனையில் சிலவாரங்கள் கூடப்பொறுக்கோம் என்று மனிதாபிமானத்தின் பெயரால் பதறியடித் தார்கள். 20.3.99 ல் திடீரென OSZE பார்வையாளர்கள் கொசவோவில் தமக்குப் பாதுகாப்பில்லை என்று மாயம் செய்துகொண்டு சொல்லாமல்க் கொள்ளாமல் வெளியேறினார்கள். அவர்கள் வெளியேறிய கையோடு Racak நகரில் கொல்லப்பட்ட 45 ஆயுதமற்ற அப்பாவியர்கள் கொல்லப்பட்ட செய்தி உலகச் செய்திச் சேவைகளை நிரப்பியது. யூகோஸ்லாவிய இராணுவத்தால் கிராமமக்கள் சுற்றிப்பிடிக்கப்பட்டு அருகருகே நிற்கவைத்து சுட்டுக்கொல்லப் பட்டதாய் சகல செய்தியறிக்கைகளும் வரிசைவரிசையாக செய்தி சொல்லிப் போயின. ஆனால் அங்கு இறந்தவர்களின் உடலைச் சோதித்த பின்லாந்து மற்றும் போலோ ரஸ்யா மருத்துவக்குழு நடாத்திய ஆய்வில் அவர்கள் சண்டைகளில் வித்தியாசமான தூரத்தில் வைத்து சுடப்பட்டுள்

**ஐரோப்பியத் தமிழ் மக்களுக்கு செய்தி, பாட்டு, அப்பன்ராசா, குஞ்சு, மோனை சொல்லித் தரும் IBC தமிழ்ச் சேவையும் அவலை நினைத்து உரலை இடித்தகதையாக புலிகளுக்கு சப்போட் பண்ண வெளிக்கிட்ட வேகத்தில் கொசவோ மக்களுக்காகவும் உலக ஏகாதிபத்தியப் பிரச்சாரங்களுடன் இணைந்து தம் விசுவாசத்தை காட்டினார்கள்.**

பத்திரிகைகள் எல்லாம் அல்பானிய அகதிகட்காக கசிந்து கண்ணீர்மல்க ஆரம்பித்தன. நாம் ஏதாவது செய்தாகவேண்டும் என்ற மனோநிலைக்கு மக்களைக் கொண்டுவர முயன்றன. ஜெர்மனி கலந்துகொள்ளும் ஒரு நாட்டோ இராணுவத் தலையீட்டை மக்களுக்கு இவை பரிந்துரை செய்தன. எந்தவகையிலும் உடன்பாடு காணமுடியாத யூகோஸ்லாவியாவின் சர்வாதிகாரி மிலசவிச் புரிந்து கொள்ளக்கூடிய ஒரே மொழி இராணுவமொழி மட்டுமே என்று மேற்குலகின் அத்தனை அரசியல்வாதிகளும் பாராளுமன்ற ஜனநாயகத்தின் முதுபெரும் அரசியற் கிழவர்களும் கிழவிகளும் ஒரே குரலில் தீர்ப்புச் சொன்னார்கள். ஒரு

ளனர் என்று தெரிவித்தனர். இறுதியில் அது யூகோஸ்லாவிய இராணுவத்துடனான சண்டையில் இறந்த UCK நபர்களின் உடல்கள் என்ற உண்மை தெரியவந்தது. ஆனால் எந்த மருத்துவ ஆய்வும் உண்மையும் ஏகாதிபத்தியப் பிரச்சாரக் கூச்சல் முன்பு பலமற்று மௌனித்துப் போயின.

நாட்டோ யுத்தம் தொடங்கு முன்பே உண்மையான யுத்தம் பிரகடனப் படுத்தப்படும் முன்பே பிரச்சாரச் சாதனங்கள் யூகோஸ்லாவியாவுக்கு எதிரான பிரச்சாரயுத்தத்தை பொய்புழுகுகளின் துணையோடு சிறப்பாய் நடத்திக் கொண்டிருந்தன. மனிதாபிமான அவலம் (Humanitaren Katastrophe)



படிப்பகம்

www.padippakam.com

வதைமுகாம் (Konzentrationslager), நாடுகடத்தல் (Deporta tioen), இனத்துய்மைப் படுத்தல் (Ethnische Sauberung), இனப்படுகொலை (Genozid), வெகுஜனக் கொலை (Mas sen Mord), மக்கள் கொலை (Volks Mord) போன்ற செய்திகள் தினசரிச் செய்திகளில் தவறாமல் இடம் பெற்றன. இது ஜெர்மனி தன் கடந்தகாலத்திய நாசி வரலாற்றில் இருந்து தப்பிக்கும் ஏனைய மக்கள் மேல் பெரும்பழி சுமத்தும் உத்தியுமாகும். கொசவோ அல்பானியர்கட்கு உதவும் அமைப்புக்கள் மனிதாபிமானத் தொண்டர் நிறுவனங்கள் பலபத்துக்கணக்கில் எங்கும் முளைத்தன. மக்களுக்கு உதவிகோரும் வேண்டுகோள்கள் விடப்பட்டன. கிறிஸ்தவ மதப் பிரார்த்தனைக் கூட்டம் முதல் பாராளுமன்றம் வரை கொசவோ அல்பானியர்களின் உயிர் பாதுகாப்பு உதவிகள் பற்றி பேசப்பட்டன.

அடுத்து சேர்பிய மக்களுக்கு எதிரான இனவாதப் பிரச்சாரங்கள் ஆரம்பிக்கப்பட்டன. சேர்பியர்கள் கடுமையாக உள்ளனர் (Serben blieben Hart) சேர்பியர்கள் கொலை யாளிகள் அல்பானியர்களை தடுப்புமுகாம் பகுதிகட்கு குடியகற்றுகின்றார்கள். (Serben killer Treiben Albaner in KZ-zZonen) சேர்பியர்கள் கொசவோவில் கொடூரமாக நடந்து கொள்கிறார்கள் (Serben gehen in Kosovo immer brutaler vor) விசர்கொண்ட சேர்பியர்கள் எம்மை யுத்தத்தை நோக்கித் தள்ளுகிறார்கள்.(Irrer Serben sturzt Uns in den Krieg). சர்வ தேசப் பாசிஸ்டுகளான ஏகாதிபத்தியங்கள் அதன் கூலித்தனமான மாரடிக்கும்பிரச்சாரச் சேவைகள் பாசிசத்துக்கு எதிராய்ப் போராடிய வரலாறு கொண்ட சேர்பியமக்களை பாசிசத்தை முறியடித்த பெருமைக்குரிய மக்களை பாசிஸ்டுகளை ஒத்தவர்களாகப் பிரச்சாரம் செய்தமையும் ஏகாதிபத்தியங்கள் பாசிச எதிர்ப்புச் சக்தியாக வேடம் பூண்டமையும் வரலாற்றின் முரண்நகையாகும் பாசிச உத்தி யாகும். அசாத், நாசர், கொமெய்னி, கடாபி, சதாம், கொணேக்கர் வரிசையில் இப்போ மிலசவிச் நிறுத்தப்பட்டார். குடிகாரன், நீரழிவு வியாதிக்காரன், கிறிஸ்தவத்துக்கு எதிரான வன்,படிக்கும் காலத்திலேயே மார்க்ஸின் மூலதனம் பற்றி மாணவர்களுக்கு வகுப் பெடுத்தவன். 49 வருடமாய் கொம்யூனிஸ்டாய் இருப்பவன் என்று மிலசவிக் தூற்றப்பட்டார். மிலசவிக்கின் மனைவியும் ஓடுசாரிச் சிந்த னையாளருமான மீரா மிலசவிக் சிவப்புச் சூனியக்காரி (Rote Hexe) என்று தாக்கப்பட்டார். ஒவ்வொரு செய்திப் பத்திரிகையும், செய்திச்சேவையும் யூகோஸ் லாவியாவையும், சேர்பியர்களையும் குற்றவா ளிகளாக நாசி ஜெர்மனியை ஒத்த தண்டிக்கப் பட வேண்டியவர்களாக நிறுத்தியுள்ளன. சேர்பியர்களின் 1000 ஆண்டுகால இரத்தம் தோய்ந்த வரலாறு (Serben 1000 Jahre blutiger Geschiste) வெகுஜனக் கொலையாளி மிலசவிக் (Massen Morder Milosevic) சேர்பியர்களின் ஆக்கிரமிப்பாளர்கட்கு எதிரான போராட்டங்கள் காட்டுமிராண்டித்தனமான யுத்தங்களாக கட்டுக் கடங்காத எந்த மனித நியாயத்துக்கும் ஒழுங்குக்கும் கட்டுப்படாதவர்களின் அநாகரீ கர்களின் செயலாக உருவகப்படுத்தப்பட்டன. இதை ஏதோ மூன்றாம் தர குப்பைப் பத்திரிகைகள் மட்டும் எழுதியதில்லை, தம்மை சமூக உணர்வுள்ளவர்களாக காட்டிக் கொண்ட முதலாளியப் புத்திஜீவிகள் முதல் சகல அரசியற் கட்சித் தலைவர்களும் மனிதப் பண்பாடற்ற வெளிப்படையான மூர்க்கமும் காட்டினார்கள். வெறும் மனித இங்கிதமற்ற வெறித்தனமும் காட்டினார்கள். வரலாறு ஏகாதிபத்திய ஆர்வங்கட்கும் தற்கால அரசியற் புரட்டல்களுக்கும் ஏற்றதாய் புதிதாகப் புனையப்பட்டது. ஆனால் ஜெர்மனியக்கல்வி கற்று நீண்டகாலம் இங்கு இருந்தவனும் பின்பு ஜெர்மனியின் கைக்கூலிகளில் ஒருவனாகியுள்ள சேர்பிய எதிர்க்கட்சியைச் சேர்ந்தவனாகிய டிஜின்ஜித் தலைசிறந்த ஜனநாயக வாதியெனவும் சேர்பியாவில் ஜனநாயகத்தை மீட்க வந்தவனென்றும் கொண்டாடப்பட்டான். ஜெர்மனிய பிரச்சார சாதனங்கள் அவனுக்கு அதிமுக்கியத்துவம் வழங்கின.

யுத்தம் தொடங்கிய பின்பு நாட்டோ வின் இராணுவப் பயங்கரவாதத்துக்கு ஏற்றதாய் மக்கள்வசப்படுத்தப்பட்டனர். மிலசவிக்கின் இருப்பிடத்துக்கு குண்டுபோடுவதற்கு முன்பாக Bild, BZ போன்ற பத்திரிகைகள் நீங்கள் ஏன் அவனுடைய மாளிகைக்கு குண்டு போடக்கூடாது? (Warum Bomben sie Nicht Seinem palast?) என்று கேள்வி கேட்டன. மிலசவிக்கை எவ்வாறு கொல்வது என்பது பற்றி BZ பத்திரிகை ஒரு கருத்து மதிப்பீட்டை பிரதான கட்சிகளான CDU-CSU-Crune-SPD-FDP போன்ற வைகளிலும் நடத்தியது. சகல கட்சிகளும் மிலசவிக்கைக் கொல்லவேண்டும் என்று ஒத்துக்கொண்டார்கள். ஜெர்மனியன் அதி அதி



படிப்பகம்

www.padippakam.com

கௌரவமானது, நடுநிலமையானது என்று பெயர் வேண்டிய ARD தொலைக் காட்சியும் மிலசவிக்கைக் கொலைமூலமாக அகற்றுவது பற்றிய விவாதமொன்றை நடாத்தி ஜன நாயகத்தை மெய்சிலிர்க்க வைத்தது. கொசவோவில் இழைக்கப்படுவது மனித குலத்துக்கு எதிரான குற்றம் (Verbrechens gegen die mensvhlichkeit) என்று உலகப் பயங்கரவாதத்தின் மூலகர்த்தாக்களே நியாயம் கற்பித்தார்கள். CNN> BBC> Reuters> Associated Press (AP) Agence France Presse (AFP), சகலதும் கூட்டிணைந்து தம் பாசிசக் கடமைகளை நிறைவேற்றின. ஜெர்மானிய நாசிப் பத்திரிகையான Nation & Europa நாம் திரும்பவும் அங்கே (Wir Sind Wieder da) என்றும் Germans to the Front என்று ஆரவாரம் செய்தது.

ஐரோப்பியத் தமிழ் மக்களுக்கு செய்தி, பாட்டு, அப்பன்ராசா, குஞ்சு, மோனை சொல்லித் தரும் IBC தமிழ்ச் சேவையும் அவலை நினைத்து உரலை இடித்த கதையாக புலிகளுக்கு சப்போட் பண்ண வெளிக்கிட்ட வேகத்தில் கொசவோ மக்களுக்காகவும் உலக ஏகாதிபத்தியப் பிரச்சாரங்களுடன் இணைந்து தம் விசுவாசத்தை காட்டினார்கள். இலங்கை அரசாங்கத்தினதும் தமிழ் கூலிக்குழுக்களதும் அட்டுழியங்களுக்கு எதிராய் பூமிக்கும் வானத்துக்குமாக தாவிக்குதிக்கும் IBC தமிழின் சேவையானது புலிகளின் ஜனநாயக விரோதம் அரசியல் அட்டுழியங்களையிட்டு சிறுமூச்சு, பெருமூச்சு கூட எதுவும் காட்டாத தமிழினக் கற்புக்கவச குண்டலங்கள் பூண்டவர்கள் புலிகளுக்கு குழையடிப்பதையே தம் கடனாய்க் கொண்ட IBC போன்ற தமிழ்த் தேசியத் தாட்டான்களை அவர்களின் ஏகாதிபத்திய மற்றும் புலிப் பந்தபாசங்கட்கு எதிராய் விசாரணை செய்ய வேண்டிய கடமை ஐரோப்பியத் தமிழ் மக்களுக்குண்டு. மனிதாபிமான அவலம், மனிதாபிமான ஆக்கிரமிப்பு பற்றி முதலாளிய அரசியல்வாதிகள் நிறையப் பேசினார்கள். அறிக்கைகள் விட்டார்கள் உலகப் பாசிஸ்டுகள் மனிதாபிமானம் பற்றி உண்மையான மனிதாபிமானிகளும் கொம்யூனிஸ்டுகளும் கூசிப்போகும் அளவு பேசினார்கள். உணர்ச்சி அலைகளைக் கிளப்பினார்கள், அனலக்கினார்கள், சகல முதலாளியக் கழிசறைகளும் தாம் உலகின் துயரங்களைச் சுமப்பது போலவும் தீமைகளை வேரறுக்க அவதரித்தவர்கள் போலவும் மக்கள் முன்பு குத்தி முறிந்தார்கள். அரசியல் மாபியாக்கள் சகலரையும் விட ஒழுங்குகள் மனித நேர்மை, கருணைபற்றிப் பிரசங்கங்கள் செய்தார்கள். பைபிளின் வழிவந்த நல்லது தீயதுகளை ஒத்த விளக்கங்கள் இடம்பெற்றன. கோபமும் வெறுப்பும் ஆக்கிரோசமும் தீமையும் கொண்ட எதிரியை எதிர்க்கும் பணி மனித குலத்தின் நலன்களின் பேரால் தமக்கு வழங்கப்பட்டுள்ளதாய் நாடகங்கள் ஒப்பேற்றினார்கள். அநாகரீகர்கட்கு சாத்தானின் விசுவாசிகட்கு எதிரான யுத்தமாய் இவர்கள் அரசியற்சோடனைகள் நடத்தினார்கள். ஐரோப்பியாவுள் அகதிகளை நுழையவிடாமல் சட்டங்கள் போட்டவர்கள் இரவுபகலாய் எல்லைகளில் வேவுபார்த்துத் திரிபவர்கள் கொசவோ அல்பானியமக்களின் அகதிவாழ்வின் அவலத்துக்காக கண்ணீர் சிந்த முழுஉலகையும் கூவி அழைத்தனர். அகதிகளின் தொகை வேண்டுமென்றே திரித்து மிகைபடச் சொல்லப்பட்டது. தம்யுத்த நடவடிக்கைகளை தொடங்குவதற்கான நியாயத்தை மக்கள் அபிப்பிராயங்களாக உருவாக்க முனைந்தனர். யுத்தம் தொடங்கு முன்பாகவும் கொசவோ அல்பானிய அகதிகளை மையமாய்க் கொண்டே பிரச்சாரங்கள் நடந்தன. யுத்தம் தொடங்கிய 6வது நாள் செய்தித் தொடர்புச் சாதனங்கள் 500,000 அகதிகள் பற்றிப்பேசின. அகதிகள் நிறுவனங்கள் 100,000 அகதிகள் என்றன. மே மாதம் 3ம்திகதி பிரிட்டிஸ் வெளிநாட்டமைச்சர் George Robertson கொசவோ அகதிகள் தொகை 600,000 என்றான். மே 4ல் புருசல் நகரில் கூட்டப்பட்ட நாட்டோவின் பத்திரிகையாளர் மகாநாட்டில் ஜெனரல் மேஜர் Walter Jertz 800,000 அகதிகள் என்றான், மே.6இல் கிளின்டன் 1மில்லியன் அகதிகள் என்கிறான். மே.8 நாட்டோ பேச்சாளி Jamie Sheq இன் கூற்றின்படி 1,5மில்லியன் கொசவோ அல்பானிய அகதிகள், அதே தினம் பிரிட்டிஸ் படைகட்கு பொறுப்பான மந்திரி 1,5மில்லியன் அகதிகள் 100,000 கொசவொ அல்பானிய ஆண்களைக் காணவில்லை என்கின்றான். மே.10 அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சு அறிக்கை 700,000 அகதிகள் பற்றி முறையிட்டது.

தகவல்கள் வாய்க்கு வந்தபடி பிரச்சாரப்படுத்தப்பட்டன. உண்மையில் நாட்டோ யுத்தம் தொடங்கு முன்பு இருந்த கொசவோ அல்பானிய அகதிகளின் மொத்தத் தொகை 180,000 ஆகும் இதில் அல்பானியாவில் 30,000 மொண்டநீக்ரோவில் 50,000 பேரும் மற்றய இடங்களில் எஞ்சிய தொகையினரும் இருந்தனர். “நாட்டோ கொசவோவில் குண்டுபோடத் தொடங்கும் முன்பாக UCK, மற்றும் கொசவோ



படிப்பகம்

www.padippakam.com

தலைவர் இப்ராகிம் றுகோவா இருவராலும் கையெழுத்திடப்பட்ட அனைத்து கொசவோ அல்பானியமக்களையும் கொசவோவைவிட்டு வெளியேறக் கோரும் துண்டுப்பிரசுரங்கள் நாட்டோ விமானங்கள் மூலமும் UCK ஆட்கள் மூலமும் கொசவோ அல்பானிய மக்கள் மத்தியில் வினியோகிக்கப்பட்டன. இந்தத் துண்டுப்பிரசுரங்கள் மற்றய கொசவோ சிறுபான்மைமக்களுக்கு வினியோகிக்கப் படவில்லை. கிராமங்களைவிட்டு வெளியேற மறுத்த பல கொசவோ அல்பானியர்கள் UCK ஆயுததாரிகளினால் பலவந்தமாய் வெளியேற் றப்பட்டனர். இப்போ நாட்டோ குண்டு வீச்சுத் தொடங்கிய பின்னர் அகதிகளின் தொகை UNCHR மதிப்பீட்டில் அல்பானியாவில் 313,500 மசிடோனியாவில் 132,000 மொண்டநீக்ரோ 68,200 பொஸ்னியா 32,200 மொத்தத் தொகை 600,000க்கும் உட்பட்டதாகும். நாட்டோ குண்டு வீச்சுத் தொடங்கிய பின்னரே தினமும் 20,000 பேர் என்ற அளவில் அகதிகள் வரத் தொடங்கினர்.

1999 மார்ச் 24ம் திகதிவரை ஜெர் மனியின் உத்தியோக பூர்வமான அரச அறிக்கை. ஜெர்மனியின் பிரச்சாரசண்ட மாருதங்களை விட முற்றிலும் வேறுபட்ட தாயிருந்தது. கொசவோ பகுதியில் யூகோஸ்லாவியப் படைகளுக்கும் UCKவுக்கும் யுத்தம் நடைபெறுவதாயும் UCK கட்டுப்படுத்தும் 40% பகுதிகளை மீட்க யுத்தம் நடைபெறுகிறது என்றே தெரிவித்தது. அங்கு சாதாரண பொதுமக்கள் தாக்கப்படுவது படுகொலையாவது பற்றிய செய்திகள் எதுவும் கிடையாது. மேலும் ஜெர்மனியின் அகதிகட்கான நீதிமன்றங்களும் உயர்நீதிமன்றங்களும் கொசவொ அல்பானிய அகதிகளின் அகதி விண்ணப்பங்களை நிராகரித்ததோடு அங்கு அகதிகள் தாக்கப்படு வதற்கான ஆதாரம் எதுவும் இல்லை. யூகோஸ்லாவிய இராணுவமும் UCK வுமே போரிடுவதாய் தீர்ப்புச் சொன்னது. அகதிகளை திருப்பி அனுப்பிக்கொண்டே இருந்தது. நாட்டோ யுத்தம் தொடங்கிய பின்பே அகதிகளை திருப்பி அனுப்புவது நிறுத்தப்பட்டது. மேற்கு நாடுகள் எவ்வாறு ஈராக்குக்கு எதிரான யுத்தத்தில் ஈராக்கிய குர்திஸ் அகதியைக் காட்டி தன் பயங்கரவாதத்திற்கு நியாயம் தேடிக் கொண்டனவோ அம்மக்களின் இரத்தத்திலும் கண்ணீரிலும் அரசியல் பொருளாதார இராணுவ நலன்களை ஈட்டிக் கொண்டனவோ அக்கதையே மீண்டும் யூகோஸ்லாவியாவிலும் அரங்கேறியது. கொசவோ அல்பானிய மக்களின் துன்ப துயரங்களில் இருந்து தம்நலன்களை நாட்டோ பயங்கரவாதிகள் அறுவடை செய்து கொண்ட னர். எவ்வாறு தம் இலக்குகள் பூர்த்தி யடைந்ததும் ஈராக்கிய குர்திஸ்மக்கள் கைவிடப்பட்டனரோ அவ்வாறே கொசவோ அல்பானியரும் கைவிடப்படுவர்.மறக்கப்படுவர், தொலைதூர அழுகையாகப் புறக்கணிக் கப்படுவர்.

தொடரும்...


நன்றி



"சிறுகதைத் தொகுப்பு"
ஆசிரியர்: சாரு நிவேதிதா

கிரணம்,
63, பி.திரு.வி.க.தெரு,
போஸ்டல் ஆடிட்காலணி,
சின்மயா நகர்,
சாலி கிராமம்,
சென்னை-600093.




படிப்பகம்

www.padippakam.com

# காகம் அழைக்கும் பக்கங்கள்

அந்தக் காகம் வரும் என்று சொல்லி
நீ எதிர்பார்த்திருப்பாய்
அந்தக் காலம்போல் அரசன் தெருவினிலே
இறங்கி நடந்து வந்து
ஊர்ப் பொதுக் கிணற்றில் நீர் குடித்த
பொற்கால நினைவினிலே

காகமெல்லாம் காகமாய் இல்லையே
இந்தக் காலத்தில்
கழுத்திலே சால்வை
நடையிலே பவிசு
மிகவும் யோக்கியனாய் போயின
காகங்கள்
நீ எப்படி இன்னும் மனிதனாய் வாழுவாய்

தெருவில் நீ சோடனை செய்தாயா
பொய்யாகவேனும் சில விளம்பரங்கள் எழுதி
பன்னீர் தெளித்தாயா நிலத்தில்
கையில் பாற்குடத்தை வைத்தபடி காத்துக் கிடந்தாயா
இல்லையென்றால்
காகம் வருமா பறந்து
இது நீயும் நானும் வாழும் உலகமா
காகம் வர
காகமும் நாமும் வாழும் உலகமே

காகம் காகம் எங்கும் காகம்
உனக்கு
காகம் அழைக்கத் தெரியாது
ஆனால் உணவில் மாற்றமில்லை

03.11.1998



படிப்பகம்

www.padippakam.com

# தேவகாந்தன்'இன் "கனவுச் சிறை"





1981ல் அக்கினிப் பொறி போன்ற மையச் சம்பவமொன்றின் உந்திப்புடன் ஆரம்பிக்கும் நாவலில் 1983 கறுப்பு யூலை, தேசம் தாண்டுதல்கள், அகதிமுகாம் அவலங்கள், மேற்குலகின் அடையாள சிக்கல்கள், சமூகநிலைமாற்றங்களும் தேசமளாவிய கருத்துருவாக்கமும் என்று வியாபிக்கும் சரித்திர வெளியில் இன்னொரு சரித்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு சின்னத்தீவான ஈழத்தோடு இணைந்த ஒரு மிக மிக சின்னத்தீவான நயினாதீவின் வடகரையில் இருந்து துவங்குகிறது கதை.

"கையெழுத்தில் இரண்டாயிரம் பக்கங்கள் வரை விரிந்தது இந்நாவல். 1981ல் நின்று கொண்டு எறிவளையத்தை வீசியிருக்கிறேன் அது 2001 ம் ஆண்டு படிமகுறியில் அமைவாக விழுந்திருக்கிறது. இருபதாண்டு காலம் காலப்பெருவெளியில் மிகச்சிறிய ஒரு துணிக்கைதான்.1997ல் எழுதி முடிக்கப்பட்டபோது அது 2001 வரை வளர்ந்திருந்தது. நான்காண்டு அரசியல் நிலைமையை தீர்க்க தரிசனம் செய்து அதன் பின்னணியில் கதையை நகர்த்தியிருக்கிறேன். சரியான அளவுகோல் கைவசம் இருந்தால் வருங்காலம் உரைத்தலும் தானாக வந்து சரியாக கவியும்."

எனச்சொல்லும் நாவலாசிரியரின் நம்பிக்கை இப்படித்தொனிப்பதோடு நாவல் முடிகிறது. "அந்த இருபதாண்டு காலத்தின் அவலம், அழிவு, துக்கம், சிதைவு, மரணம், துரோகம், சந்தர்ப்பவாதம் ஆகியவற்றின் முடிவுறுதலுக்கான ஒரு நம்பிக்கை இலங்கைத் தீவெங்கிலும் வியாபிக்கிறது."
அது கைகூடுமா?...

ஏற்கனவே வெளிவந்த "திருப்படையாட்சி", "வினாக்காலம்" தொடர்ச்சியில் மூன்றாம் பாகமான "அக்கினி திரவம்" இவ்வாண்டு டிசம்பரில் வெளிவருகிறது. இறுதி பாகங்களான "சில நியாயங்கள்", "ஒரு புதிய ஏற்பாடு" போன்றவை விரைவில் வெளிவருவது... உங்கள் கைகளில்.

கனவுச்சிறை (பாகம்-1) பக்.258. விலை ரூபா.75.00
வினாக்காலம் (பாகம்-2) பக்.288 விலை ரூபா.75.00
நேரில் விலை ரூபா.120.00
பதிவஞ்சலில் பெற (உள்நாட்டில் மட்டும்)
ரூபா.150 M.O./D.D. அனுப்பவேண்டும்.



தொடர்புகட்கு:

ப.அமர்நாத்
இலக்கு வெளியீடு
737, 95-வது தெரு,15-ஆம் பகுதி
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை-600 078



படிப்பகம்

# மனுசங்கடா...
# நாங்க மனுசங்கடா...

"தமிழ் நாட்டின் முன்னணித் தலித் போராளிகளுள் ஒருவரான முனைவர் கே.ஏ குணசேகரன்(K.A.G.) அவர்கள் பாண்டிச்சேரி பல்கலைக் கழகத்தின் நாடகத்துறைக்கான தலைமைப்பீடத்தில் இருப்பவர். நீண்டகாலங்களாக "தன்னானே" எனும் கலைக்குழுவினை நடத்தி வரும் இவர் "தலித் அரங்கியல்", "நகர் சார் நாட்டுப்புற கதைப்பாடல்கள்" எனும் நூல்களை எழுதியுள்ளதுடன் நாட்டுப்புற, தலித் கலை இலக்கிய ஆய்வு முயற்சிகளில் பெருங்கவனம் செலுத்தி வருகின்றார்."



கண்காணிப்பிற்கு அப்பாற்பட்ட வலயத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட ஒளிபர்களுடன் K.A.G.

*அண்மையில் பிரான்ஸ் வந்திருந்த அவருடன் இலக்கிய நண்பர்களினால் ஓர் கலந்துரையாடல்12.09.1999 அன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அக்கலந்துரையாடலில்...*

**K.A.G:**கலை இலக்கியம் என்றாலே பூணூல் போட்டமனிதர்களாலேயே உருவாக்கப்பட்டு அவர்களின்வாழ்வையே கலையாக்கி அரங் கேறுகின்ற சூழல்தான் இன்றுவரை இருந்து வருகின்றது.அதனுடன் மேல்நாட்டுத்தாக்கமும் சேர்ந்துகொள்கிறது. இந்தப் பார்ப்பனர்களின் கலையை/நாடகத்தை மீறி தலித்துக்களின் வாழ்வை கலையாக்க வேண்டும் என்ற நோக்கில் தான்"தலித் அரங்கியல்" எழுதப்பட்டது. இப்போது தன்னார்வக் குழுக்கள் பலியாடுகள் போன்ற நாடகங்களை கவனத்திற்கு எடுத்துள்ளார்கள். ஆரம்பத்தில் தலித்துக்களின் இலக்கியச் செயற்பாடுகள் தன் வரலாறு கூறுதலாகவே இருந்தது. உதாரணமாக பாமாவின்"கருக்கு"- ஒரு பெண்ணாகவும் தலித்தாகவும் இருப்பதை இரண்டு பக்கமுள் என்ற கருத்தமைய "கருக்கு" எழுதப்பட்டிருக்கிறது. இந்த மக்களை இவர்களின் மொழியிலேயே பேசவிடல் என்ற நோக்கோடும் தான்"தலித் அரங்கியல்" என்னால் எழுதப்பட்டது. நாட்டுப்புறப்பாட்டுக்களை/ கதைகளை இப்போது மறுவாசிப்புச் செய்துகொண்டிருக்கிறேன். வள்ளி திருமணம் அரிச்சந்தின் வரலாறு- காத்தவராயன். இவற்றின் மீதான மறு வாசிப்பு நான் என்னளவில் செய்துகொண்டிருக்கிறேன். காத்த வராயனை எவ்வாறு தெய்வமாக்கினாங்கள்?, அரிச்சந்திரன் தான் பொய் சொல்லக் கூடாது தன்னுடைய ஒழுங்கிலிருந்து மீறக்கூடாது என்ற சொந்த நலன்களுக்காக எப்படி ஒரு பெண்ணை விற்கமுடியும்? போன்ற கருத்துக்களை முன்வைத் துச் செய்துகொண்டிருக்கிறேன்.

தில்லை நடேசன்: இதைப்போல் நீங்கள் இன்னும் நிறையவே மறுவாசிப்புச் செய்யவேண்டும். மதுரை வீரன், திருவள்ளுவர் திருமூலர் போன்றவர் களையும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.திருவள்ளுவர் பறையர் சாதியைச் சேர்ந்தவர். திருமூலர் இடையர் சாதியைச் சேர்ந்தவர். இவர்களின் மீதான மறுவாசிப்புப்



படிப்பகம்

பற்றியும் நீங்கள் யோசிக்க வேண்டும்.

**K.A.G:** இல்லை. இடையர்களை ஒத்துக்க முடியாது. தமிழ் குடிமகனும் இடையர்தான். கோனார் என்றழைப்பார்கள் இவர்கள் தான் எனது கிராமத்தில் பிராமணச் சிந்தனை உடையவர்களாக இருக்கிறார்கள். எங்கள் சாதிக்காரர்கள் செருப்புப் போட்டுக்கொண்டு போனால் காலை வெட்டுபவர்கள். அந்த வகையில் என்னால் திருமூலரை மறுவாசிப்புச் செய்ய முடியாது.

தில்லை: உங்கள் நாடகங்கள் எல்லாம் ஏன் வசன நாடகங்களாகவே உள்ளன?

**K.A.G:** இல்லை. எதுவுமே அப்படி இல்லை. எனது எல்லா நாடகங்களிலும் இசையும் பாட்டும் கலந்தே இருக்கும்.

அருந்ததி: தமிழ் நாட்டுத் தலித் நாடக அரங்கின் எதிர் வினை எவ்வாறு உள்ளது?

**K.A.G:** நாடகச் சூழலை சுற்றி எங்கும் பிராமணர்களாகவே இருக்கின்றது. அதற்குள் நமது கலையை வெளிப்படுத்த நிறையவே சிரமப்பட வேண்டியுள்ளது. முயற்சி செய்கிறோம். இதற்கு தன்னார்வக் குழுக்களின் உதவியுடன் நமது கலைகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்கிறோம்.

அருந்ததி: இந்தத் தலித் அரங்கியலுக்கு உங்களுக்கு முன் யாராவது முன்னோடிகள் உள்ளனரா?

**K.A.G:**இல்லை- யாரும் முன்வைக்கவில்லை.

தில்லை: நாட்டுப் புறக் கதைகள் கிராமிய ஆட்டங்கள் குறிப்பாக ராசா ராணி ஆட்டம் அழிந்துகொண்டு போகிறது. அதற்கான உங்கள் முயற்சிகள் எவ்வாறு உள்ளது?

**K.A.G:**ஆம் அழிந்துகொண்டுதான் போகிறது. 150 வருடங்களுக்கு முந்திய ஆட்டமது. பறையர்கள் மட்டுமே ஆடக்கூடிய ஆட்டம். கள்ளர் சமூகத்தை கிண்டல் பண்ணி ஆடும் ஆட்டம். அண்மையில் ஒரு திரைப்படத்தில் நான் ஆடியுமிருக்கிறேன். அதை அழிய விடலாகாது.

ஷோபா சக்தி: நீங்கள் எங்களுக்கு 15வருடமான அறிமுகம். "தன்னானே" பாடல்கள் மூலமும் "மனுசங்கடா" பாட்டுமூலமும் இன்னும் நெருக்க மானீர்கள். ஆனால் சென்ற கிழமை ஈழமுரசு பத்திரிகையோ "தேவதை புகழ் குணசேகரன் பேசுகிறார்" என அறிவித்திருந்தது. இதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்? கவலை இல்லையா?

**K.A.G:** அவர்கள் பிரசுரித்தால் நான் என்ன செய்வது? அந்தப் படத்தில் நான் எழுதிய பாடலுக்கு நானே நடித்தேன், நானே பாடினேன். அது நாசருடைய படம். அது பற்றி நான் கவலைப்படவில்லை. அந்தப் படம் வெளிவருவதற்கு இருந்த நெருக்கடியை நீங்கள் உணர்ந்து கொள்வீர்களோ தெரியாது.

ஷோபா: "இந்தக் கொடுமையைச் செய்தது இந்துமதம். இதைக் குழிதோண்டிப் புதைப்பது அவசியம்". இந்தப் பாடலை பாடியது தலித் சுப்பையா. ஒரு இலட்சம் முஸ்லிம் மக்களை வெளியேற்றிய அனுபவம் போன்று இந்து மதத்தினால் ஏற்படக்கூடிய மிகக் கொடிய துன்பங்கள் அத்தனையையும் அனுபவித்து வந்திருப்பவர்கள் நாங்கள். "நாங்க எரியும் போது எவன் மசிர புடுங்கப் போனீங்க" என்று நீங்கள் பாடியுள்ளீர்கள். இதையே நாங்கள் திருப்பிக் கேட்கிறோம். நாங்கள் இங்கு எரியும் போது பாரீஸ் முத்துமாரி அம்மன் கோயிலுக்கு யாருடைய மசிரப் புடுங்கப் போனிங்கள்?

**K.A.G:** கோயில் விசயத்தில் - கோவில் திரு விழாக்களில் தான் நான் பாடுகிறேன். பல்லாயிரம் மக்கள் கூடும் இடம் அது. அங்குதான் நான் தலித் என்று பாடுகிறேன். சாமி இல்லை என்று பாடுகிறேன். சிவன் கோவிலுக்கு என்னைக் கூப்பிட மாட்டான்கள். சிறு தெய்வங்களின் கோயில்களில் தான் தலித் கூடுவார்கள். அங்குதான் நான் பாடுகிறேன். அங்குள்ள சூழல் வேறு. ஆனால் இங்குள்ள சூழல் எனக்குத் தெரியாது.

ஷோபா: இந்த புகலிட தேசங்களில் இந்துத்துவத்தைக் காப்பாற்றுவதற்காக அமைக்கப்பட்டிருக்கின்ற இந்தக் கோயில்களின் மூலம் உயர் சாதிப் பண்பாடுகளும், வர்ணாசிரமமும் புகலிடத்திலும் தொடரப்படுகின்றன. இந்துத்துவ மகாநாடுகள் கூட்டப்படுகின்றன. இப்படியான இடத்திற்குத்தான் தோழர் குணசேகரன் சென்று உரையாற்றியிருக்கின்றார். இது பற்றி தோழர்கள் நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்?

அருந்ததி: அது ஒரு மண்டபம். அங்கு நாடகப்பட்டறை செய்வதற்கு என்று தான் கூட்டிப் போனார்கள்.

ஷோபா: ஆனால்அது ஒரு நிறைந்த வெள்ளிக் கிழமை என்பதைக் கவனியுங்கள்..

www.padippakam.com

**K.A.G:** இந்த விபரங்கள் பற்றி எனக்குத் தெரியாது.

ஷோபா: பொன்னியின் செல்வன் நாடகத்தில் எவ்வாறு நீங்கள் பங்குபற்றினீர்கள்? கிருஷ்ண மூர்த்தி எழுதிய நாடகம். ஒரு பார்ப்பான் கல்கியின் நாடகமது. அதில் நடித்துள்ளீர்கள். நாங்களோ குணசேகரன் குணசேகரன் தலித் போராளி எனக் கதைத்துக் கொண்டிருக்கின்றோம். எங்கள் மீது கேள்வி வரும். தோழர் நீங்கள் இதற்குப் பதில் தரவேண்டும். இதற்கு முன் பொன்னியின் செல்வன் பிரதியை தோழர் படிக்கவும் இல்லையாமே?

**K.A.G:** சொன்னேன். கல்கியின் பிரதி, அதன் சூழல், யார் பண்ணியது, எல்லாம் எனக்குத் தெரியும். ஆனால் என்னிடம் இரண்டு படிமங்கள் இருக்கின்றது. ஒன்று பல்கலைக்கழக வளாகத் திற்கு தாண்டிய படிவம். இரண்டாவது பல்கலைக் கழகவளாகத்தின் முறைமைகளுக்குள் செயற் பாடுகள் செய்யவேண்டியிருக்கின்ற படிவம். வேறு வழியில்லை. அரச சம்பளத்தை வாங்கிக் கொண்டுதான் அரசிற்கெதிராக குரல் கொடுக்க வேண்டியிருக்கிறது. நடைமுறைப் போராளிகள் இவ்வாறு தான் இருக்கிறார்கள். அ.மார்க்ஸ், கோ.கேசவன் எல்லோரது நிலையும் இதுதான். பல்கலைக்கழக பேராசிரியர் என்ற முறையிலே நான் பாட்டெழுத வேண்டியிருந்தது. பேராசிரியர் என்ற அடிப்படையிலேயே என் பங்கு இருந்தது. என்னுடைய மாணவர்கள் நடித்தார்கள். என்னுடைய மாணவன் தான் அதற்கு "ஸ்கிரிப்ட்" பண்ணியவன். ஆனால் எங்களுக்குள் பேசிக்கி றோம். நாடகத்திற்கான பார்வையாளன் இங்கு செத்துப் போய்க்கொண்டிருக்கிறான். ஊடகங்கள் கடுமையாகத் தாக்கிக்கொண்டிருக்கிறது. நாடக ரசிகன்- நாடகம் என்பது இங்கு வேறாக இருக்கிறது. எஸ்.வி. சேகர், மனோரமா ஆகியவர்கள் நாடகமென்ற போர்வையில் கூத்தாடிக் கொண்டிருக்கிறார்கள். நாடக ரசிகர்களை காணாமல் ஆக்கிக் கொண்டிருக்கிறது. நாடகத்திற்கான பார்வை யாளர்களை சேர்ப்பது என்ற அடிப்படையில் பல்கலைக்கழக பேராசிரியர் என்ற முறையில் செய்யவேண்டியிருந்தது.

ஷோபா: பொன்னியின் செல்வன் நாடகம் மக்களை சினிமாவில் இருந்து விடுவிக்க செய்ததாக சொல்கிறார்.பொன்னியின் செல்வனைவிட வாத்தியாரின் நாடோடி மன்னன் எவ்விதத்தில் குறைந்தது? மக்களை சினிமாவில் இருந்து மீட்க வேண்டியது என்றால் இன்னோர் பிரதியை உருவாக்க வேண்டியது தானே. இலட்சக் கணக்கான பணச்செலவில்...T.V.S.ஐயங்காரின் ஆதரவில்... அதுவும் தோழர் பங்குபற்றியது தான் தவறு. "மனுசங்கடா" பாட்டும் "பலியாடுகள்" நாடகமும் தான் எங்களை இங்கு கூடிப் பேசவைத் துள்ளது.

றயா: உங்கள் தனித்துவம் என்ன? உங்களுக்கென ஓர் இசை வடிவை உருவாக்கி மக்கள் மத்தியில் கொண்டு சென்று மக்களிடம் செல்வாக்குப் பெற்று வருகிறீர்கள். தன்னார்வக் குழுக்களுடன் சேர்ந்து வேலை செய்வது பற்றிக் குறிப்பிட்டீர்கள். இதற்குள் உங்கள் தனித்துவம் என்ன? உங்களுடைய தனித்தவத்திற்குப் பின்னால் அவர்களை வென்றெடுப்பதா? அவர்களுடனே சேர்ந்து அழிந்து போவதா? உங்களது நிலைப்பாடு கூறாதவரைக்கும் எதிரியும் கூட உங்களை வென்றெடுத்தல்/கடவுளாக்குதல் இடம் பெற வைக்கும். நீங்கள் யார்? தலித் மக்களது பிரச்சனைகளை எடுக்கிறீர்கள் என்பது உண்மை. ஆனால் உங்கள் தனித்துவம் பற்றி சரியான ஓர் பார்வையை முன்வைக்க வேண்டும். இல்லாது விடில் அனைத்துடனும் சமரசப்போக்கே காணப்படும்.

**K.A.G:** உண்மைதான். பல்கலைக்கழகத்தில் நிறைய சமரசப் போக்கு இருக்கிறது. இந்தப் பிழைப்புத்தான் இந்த நிலைப்பாட்டிற்கு காரணம்.

றயா: நான் அதைக் கேட்கவில்லை. பல்கலைக் கழகத்திற்கு வெளியில் தன்னார்வக் குழுக் களுடான உறவு? அவர்கள் யார்? மேற்கத்திய முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின் நிதிப் பணத்தில் கட்டமைக்கப்படுகிறது. இந்துத்துவப் பார்ப்பனிய அரச அமைப்பைக் கட்டியமைக்க/ பாதுகாக்க நிதிவளத்தால் கட்டமைக்கப்படுகிறது. தலித்துக்கு பார்ப்பனர்களைப் போலவேதான் ஏகாதிபத்தியமும். அதனால் இவர்களுடன் சேர்ந்து வேலை செய்து உங்கள் தனித்துவத்தின் மூலம் இவர்களை வென்றெடுக்கப்போகிறீர்களா? அவர்கள் உங்களை வென்றெடுக்க போகிறார் களா? அல்லது இரண்டுபேரும் சமரசம் செய்து சமரசவாதியாக போகிறீர்களா?

**K.A.G:** அவர்களுடன் முரண்பாடுதான். அவர்களை வைத்து செயற்படுத்த முடியுமானவற்றை செய்கிறேன். அவர்கள் எனது பலியாடுகள் நாடகத்தை போடுவதாகக் கேட்டு கறாராக மறுத்துள்ளேன். நான் பல்கலைக்கழக பேராசிரியர் என்ற விசயத்தைவிட ஓர் தலித் போராளி என்பதில் கறாராக இருக்கிறேன். எந்த இடத்திலும் அதைத்தான் பிரகடனப்படுத்துகிறேன். இதில் குறைந்த பட்ச சமரசம் கூட வைப்பதில்லை. தன்னார்வக்குழுக்களுக்கும் எனக்கும் சம்பந்தமே கிடையாது.



படிப்பகம்

www.padippakam.com

அருந்ததி: இங்கு நாங்கள் கூடிக் கதைப்பது சும்மாபொழுதுபோக்கிற்காகவில்லை இலங்கையின் இயக்கக் "களை" எடுப்புக்கள் தலித்துக்களைஒடுக்குகியது - தெரிந்தெடுத்து அழித்தது.இன்று மேல்சாதியையிரகடனப்படுத்துகிறது. இங்கு இன்றுவெள்ளிக் கிழமை வானொலி ஒன்றுசைவப்பெருங்குடிமக்களுக்கு என்று நிகழ்ச்சி நடக்கிறது. இன்று ஒரு சண்டை நடந்தால் நாம்வெல்ல முடி யாது.கள்ளன் காடையன் என்று அனைவரையும் சமூகவிரோதி என்ற பெயரில் கொன்றுவிட்டார்கள். இறந்தவர்கள் முழுக்கத் தலித்துக்கள். இந்திய சாதியமைப்பைவிட இலங்கையில் சாதியமைப்பு கொடூரமானது.

றயா: நிறைய வேலைத்திட்டங்கள் செய்கிறீர்கள். நல்லவிடயங்கள் செய்கிறீர்கள். அதைநீங்கள் முன்னெடுக்கும் அதேகட்டம், உங்கள் தனித்துவத்தை வெளிப்படுத்துங்கள். உங்கள் தோழர்களுடன் சேர்ந்து உங்கள் வேலைத்திட்டத்தை வெளிக்காட்ட வேண்டும்.

**K.A.G:** நான் அவ்வாறுதான் நடந்து வருகிறேன். ஆனால் அண்மையில் பொன்னியின் செல்வன் தான் இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறது என்பதை கவனத்தில் கொள்கிறேன்.

மனோ: உங்கள் இசைகள் எல்லாம் ஏற்கனவே இருந்த நாட்டுப்புற பாடல்களிலிருந்து தோன்றியதா? அல்லது நீங்களாகவே புதிதாகவே மெட்டமைக்கின்றீர்களா?

**K.A.G:** பலது ஏற்கனவே இருந்த நாட்டுப்புற இசை வடிவங்கள் தான். ஆனாலும் மனுசங்கடா... போன்றசில இசை வடிவங்கள் என்னோடதுதான்

(இந்தக் கலந்துரையாடலில் நிகழ்த்தப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க உரையாடல்கள் மட்டுமே சுருக்கி தரப்பட்டுள்ளது.)

-எக்ஸில்-

# ஓர் பன்முக வாசிப்பு.

* இந்துத்துவம் ஓர் பன்முக ஆய்வு
* புது உலகம் எமை நோக்கி
* ஸீரோ டிகிரி

03.10.1999 அன்று பாரிஸில்...

மேற்படி நூல்கள் பற்றிய கலந்துரையாடல் ஒன்றினை "பாரிஸ் இலக்கிய நண்பர்கள்" ஒழுங்கு செய்திருந்தனர். கூட்டத்தின் ஆரம்பத்தில் சுகன் தனது கருத்தை தெரிவித்துக்கொண்டிருக்கையில் சுகன்மீது அசோக் தாக்குதல் தொடுக்க அதனை ஆதரித்து சில குரல்களும் எழுந்தமையால் ஏற்பட்ட வன்முறைச் சூழ்நிலை காரணமாக கூட்டத்திலிருந்து பலர் வெளியேறினர். இருந்தும் நிகழ்வு ஒருங்கமைப்பாளர்களினால் கடமைக்கேனும் கூட்டம் நடத்தப்படவேணும் என்ற நோக்கில் ஏதோ நடாத்தப்பட்டது.

* பாரிஸில் 6 வெவ்வேறு வகையான கண்டன பிரசுரங்கள் மேற்படி சம்பவத்தையொட்டி சுமார் 14 நபர்களின் கையெழுத்துடன் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

* மேற்படி வன்முறை சூழலை ஏற்படுத்தும் நடவடிக்கைகளையிட்டு "எக்ஸில்" கவலையுறுவதுடன் கண்டனத்தையும் தெரிவிக்கின்றது.



படிப்பகம்

www.padippakam.com

கரும் புகையும்
புழுதியும் திண்டு
காக்காய் குருவி எச்சமிடும்
கழிப்பறையாய்...
இலையுதிர்த்தி
காற்றில் தலையசைக்கவியலா
பெருந்துயரில் மீளும்
தெருவோர மரங்களைப்போல்

எதையும் பின்பற்றமுடியா
உள்ளூடகங்களின்
வெறுப்புற்ற மனவெளிகளில்
பராய் பிரவாகமெடுத்து
பாம்பாய் நெளிந்து
பாய்ந்தோடுகிறது
பழைய நினைவுகளின்
விஷமுட்கள்

ஒரு வெற்றிக்கான
எல்லாமே தோல்விகளாய்ப்போன
வாழ்வின் முகங்களைத் தேடியழும்
விசும்பல்களிடம்
நம்பிவிடாதீர்கள்
தோற்கடிக்கப்பட்ட
ஒரு பெருவாழ்வின்
துயரம் இதுவென...

உருகி வழியும்
நெடுமையிலும்
நினைவழியா நெருடல்களின்
கணங்கள் அதிர்ந்து எழும்
கரையும் குரல்களிலும்
தத்திப்பறக்கும் மனங்குருவி

# விஷமுட்கள்

பிரவிவர்மன்
1999/04/20



படிப்பகம்

www.padippakam.com

# கிடைக்கப்பெற்றவை

- சக்தி – ஜன-மார்ச், ஏப்ரல்-யூன், Box 99, Oppsal, 0619 Oslo-6, Norway
- அம்மா – இதழ் 10 (ஆனி-1999), S.Manoharan, ESE.E.13,210 Ave du 8 mai 1945,93150-Le Blanc Mesnil,France.
- சமர் – 87 Rue de colombes, 92600 Asnieres sur seine,France
- புதிய அலைகள் – இதழ்கள் 4,5 (ஏப்ரல், யூலை-1999), Nawa Rella ,Sri Lanka Freundeskreis e.v Daiserstr.09 81371 Munchen, Germany
- Tamil times – vol-xviii, No 7,8- July, August 1999, P.O.Box - 121 Sutton, Surrey SMI 3TD U.K
- NAIVEMENT – Poèmes, Amokrané Kaddour - Eaddour - Edition Ciel et terre - Paris.
- பனிபாறைகளும் சுடுகின்றன – (புகலிட சிறுகதைத் தொகுதி "கல்லாறு சதீஸ்") மணிமேகலைப்பிரசுரம், த.பெ. எண்-1447, 4, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், சென்னை-600017
- செம்பருத்தி – இதழ்-06, ஆனி-ஆடி-1999, PETI SURAT 10915, Pejabat pos Besar,50728 Kualalumbur, Malaisia
- புதிய சமதர்மம் – இதழ் 22, 23, 142/ 3 கியூ வீதி, கொழும்பு - 02
- சரிநிகர் – இதழ்கள் 175, 176, 177, 178, 179, 180, 181 இல 19/04,01/01 நாவலவீதிஇ நுகேகொடை, இலங்கை.
- தமிழீழம் – இதழ் 4, 5, 6 ஆடி 1999, BM. Box 6769 London-wc1, 3xx England
- புதிய கண்ணோட்டம் – வெளியீடு -49, புரட்டாதி-1999 த.பெ. இல-122 Colombo, Srilanka.
- நான்-சாத்தான்-ஞானம்-அவன் (சிறுகதைதொகுப்பு) – S.Sivapalan 55/1 Sriwicrama Mawatha, Wattala, Srilanka
- வெட்கம் தொலைந்தது – (நா.விஸ்வநாதன் கவிதைகள்) ரிஷபம் பதிப்பகம், இரண்டாவது தளம், 31/45 இராணி அண்ணாநகர், பி.டி.. ராஜன்சாலை, கே.கே.நகர், சென்னை-78
- பை சைக்கிள் தீவ்ஸ், (திரைகதை மொழிபெயர்ப்பு)
- எப்போதாவது ஒருநாள். (கவிதைதொகுப்பு, நட்சத்திரன் செவ்விந்தியன்)
  } தாமரைசெல்வி, பிளக் 31/48 இராணிஅண்ணாநகர், கலைஞர் கருணாநிதிநகர், சென்னை-600078
- மனதில் பிறந்த எழுத்துக்கள் – (கவிதை தொகுப்பு) ஆ.கல்யாணிகுமார், 1/33 கிழக்கு வீதி, பண்டாரம்பட்டி தூத்துக்குடி 628002 தமிழ்நாடு.
- காலச்சுவடு – இதழ் 26, 151 கே.பி. சாலை, நாகர்கோயில் 629001, தமிழ்நாடு.
- புனர் – (இதழ்-1,2,3,4) 39A, Dr. சுப்பராவ் நகர், சூளைமேடு, சென்னை 600094
- கதவு – (இதழ்-6) மதிக்கண்ணன், 5-36-4 B, பாரதிநகர், மின்சாரவாரியக் குடியிருப்பு கிழக்கு, அருப்புக்கோட்டை 626101, தமிழ்நாடு.
- சிற்றிதழ் செய்தி – இதழ் 33, பொள்ளாச்சிநசன், சம்பத் நகர், சூளேஸ்வரன்பட்டி பொள்ளாச்சி - 6 தமிழ்நாடு.
- உறவு – இதழ் - 7 (மாக்சியதத்துவ இதழ்) – 6/5 கீழக் கொரட்டியார் வீதி, காரைக்குடி 630001
- புதியதடம் – இதழ்-5 யூன்-யூலை 99, மேகவண்ணன், 28 டீ. லெட்சுமணதீர்த்தம் தெரு, இராமேஸ்வரம்623526
- ஏழைதாஸன் – இதழ் - 70, 26 Adappanvayal, 8th street, Pudukkottai -622002 Tamilnadu
- கனவு – இதழ்-32 யூன் 1999 Subra bharathimaniyam, 8/707-c-Pandiannagar, Tirupur- 6416002



படிப்பகம்

www.padippakam.com

# கேசவனின் நினைவில்

## சில குறிப்புகள்

எம்.ஆர்.ஸ்ராலின்

இந்திய பொதுவுடமை இயக்கங்களினால் இறுதிக் காலகட்டங்கள் வரையில் முக்கிய கவனம் பெறாமல் போன விடயங்களான சாதியம், தேசிய இனச்சிக்கல்கள் போன்றவற்றின் முக்கியத்துவத்தை வெளிக் கொணர முன்நின்றுழைத்த பெருமைக்குரியவர் கோ. கேசவனாகும்.

1979ல் வெளிவந்த கேசவனின் முதலாவது நூலான "மண்ணும் மனித உறவுகளும்"* தொடங்கி வைத்த அவரின் எழுத்துப் பணி சுமார் 32 நூல்களை நமக்குத் தந்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் அவர் திருச்சியில் பேராசிரியராகப் பணியாற்றிய போதும் தம் வருவாயினை வைத்து சொந்த வாழ்வை மேம்படுத்திக் கொள்வதை விடுத்து ஆய்வுப் பணிக்காக அதனைச் செலவிட்டதோடு கடின உழைப்புக்கும் அயராத முயற்சிக்கும் அவர் சொந்தக்காரனாய் இருந்தமையே ஆகும்.

மண்ணும் மனிதஉறவுகளும் என்ற நூல் கைலாசபதியின் முன்னுரையைத் தாங்கி வந்திருந்தது. சங்ககால இலக்கியங்களையும் அதைத் தொடர்ந்த சமூக அமைப்பினையும் வரலாற்றுப்பொருள்முதல்வாத நோக்கில் நின்று ஆய்வுசெய்த அவரது எழுத்துக்கள் அதுவரை காலமும் சங்ககால இலக்கியங்கள் மீது இருந்த புனிதத் தன்மையை போட்டுடைத்தது. தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் உறுப்பின ராய் இருந்தபோது அவர் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாக வெளிவந்த மண்ணும் மனித உறவுகளும் பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள், மற்றும் முற்போக்கு, இடதுசாரி புத்திஜீவிகள் மட்டத்தில் மிகவும் பரபரப்பை ஏற்படுத்தியது.

80 களின் முற்கூற்றில் புரட்சி பண்பாட்டு இயக்கத்தில் சேர்ந்து இயங்கத்தொடங்கிய கேசவன் அவ்வியக்கத்தில் ஆற்றிய பணிகள் மிகவும் பெறுமதி மிக்கவை. கலை இலக்கிய ரீதியாக அவரது செயற்பாடுகள் தமிழ் நாடெங்குமே பரந்த தாக்கத்தை ஏற்படுத்தியி ருந்தன. வெகுசன அமைப்பு வடிவங்கள் ஊடாகவும் இத்தகைய விழிப்பினை ஏற்படுத்த புரட்சி பண்பாட்டு இயக்கத்துக்கு முதுகெலும்பாக இருந்தவர் கோ.கேசவனேயாகும். இவ்வேளை களில் குறிப்பாக 1984ம் ஆண்டில் "இலக்கிய விமர்சனம் ஓர் மார்க்சிசப் பார்வை"* என்ற நூலை வெளியிட்டார். இந்நூல்மீது நிறைந்த விமர்சனங்களை அவர் எதிர்கொள்ளவேண்டிய நிலையும் ஏற்பட்டது. எஸ்.வி.ராஜதுரை, கோவைஞானி, எம்.ஏ.நுஃமான் என்று பலரும் விமர்சனங்களை முன்வைத்தனர். புறப்பாடு, நிகழ்,பரிமாணம், அன்னம்விடு தூது, செந்தாரகை, மனஓசை, புதிய கலாச்சாரம் என்று பல இதழ்களிலும் வந்த விமர்சனங்களை பொறுப் புணர்வுடன் உள்வாங்கி அவ்விமர்சனங்கள் மீதான ஆரோக்கியமான விவாதத்தையும் தம்மீதான சுயவிமர்சனத்தையும் முன்வைத்தே "மார்க்சியத் திறனாய்வுச் சிக்கல்கள்"* என்னும் நூலினை வெளியிட்டார். 1986ல் இந்நூல் வெளிவந்தது.

"பள்ளு இலக்கியம் ஓர் சமூக பார்வை"* என்கின்ற அவரின் அடுத்த ஆய்வுநூல் அறிவுலக நண்பர்களிடம் மட்டுமல்ல இயக்கத்தின் அடிமட்டத் தோழர்களிடமும் பரவலாகப் பேசப்பட்டது. "பள்ளர்" எனப்படுகின்ற சாதியின் தோற்றப்பாடு, அக்குறிப்பிட்ட சமூகத்தின் நிலை போன்றவற்றையிட்டு பல்வகை ஆய்வுகளை மேற்கொண்ட பின் எழுதிய இந்நூல் பள்ளுப் பாடல் களுக்கு ஓர் மறுவாசிப்பாய் அமைந்திருந் தது குறிப்பிடத் தக்கது.கூடவே இந்நூல் மிக வும் வித்தியாச மானது காரணம் சக





படிப்பகம்

www.padippakam.com

தோழர்களின் வேண்டு கோளுக்கிணங்கஅன்றைய யதார்த்த நிலையினையும் பாராளுமன்ற அரசியல் பாதையினையும் விமர்சிக்கும் அதே வேளை இவ் வகை தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்கு அவர்கள் ஆயுதம் தாங்கிப் போராடுவதே மாற்றுவழி என்று இறுதிப் பகுதியில் முடித்திருந்த கேசவனின் துணிவு அவ்வேளைகளில் அதிதீவிர வாதியாகவும், பயங்கரவாதியாகவும் அவர் இந்திய உளவுத்துறையினரால் கருதப்படக் காரணமாயிற்று. தொடர்ந்து மக்கள் யுத்தக் குழுவின் (இந்திய கம்யுனிஸ்ட் கட்சி மா.லெ) அரசியல் ஏடுகளான சமரன், செந்தாரகை போன்ற இதழ்களின் ஆசிரியர் குழுக்களில் முக்கிய பங்கும் வகித்தார். அவ்வேளையில்தான் "சோசலிசக் கருத்துக்களும் பாரதியாரும்"* என்ற நூலும் வெளிவந்தது.

சோவியத் யூனியனின் உடைவினைத் தொடர்ந்து உலகெங்கிலுமுள்ள இடதுசாரி அமைப்புக்களும் சரியத் தொடங்கின. இந்தியாவிலும் புரட்சிப் பண்பாட்டு இயக்கமும் செயலற்றுப்போனது. 1988ல் கேசவனுக்கும் இயக்கத்துக்கும் இடையேயான தொடர்பு குறைந்தபோதும் அவர் தனித்து நின்று தன் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கத் தவற வில்லை.

1988னைத் தொடர்ந்து வந்த காலங்களில் "சோசலிசமும் முதலாளிய மீட்சியும், பொதுவுடமை இயக்கமும் சிங்காரவேலனும், திராவிட இயக்கமும் மொழிக்கொள்கையும், பாரதியும் அரசியலும், இந்திய தேசியத்தின் தோற்றம்" போன்ற நூல்களைக் கொண்டு வருவதற்காக இரவு பகலாக உழைத்தார்.

இடதுசாரிக் கட்சிகளில் எதுவுமே தனித்தியங்க முடியாமலும் தலித் மக்களின் சமூக விடுதலையை நோக்கிய பாதைக்கு வழிகாட்ட முடியாமலும் போனபின்னர் தலித்தியக் கங்களின் தேவை ஒன்றும் இந்தியச்சூழலில் அவசியமானது. மா.லெனிலிச இயக்கங்களில் நம்பிக்கையிழந்த பல முன்னாள் தோழர்கள் இந்திய சாதியம் குறித்து நிறைய அறிந்திருக்க வேண்டியதின் அவசியத்தை உணர்ந்து "சமூக விடுதலையும் தாழ்த்தப்பட்டோரும்", "சாதியம்", "கோயில் நுழைவுப் போராட்டங்கள்" போன்ற நூல்களை எழுதினார். ஒடுக்கப்படும் மக்களின் வாழ்க்கை முறையினை பதிவு செய்வதோடு நிற்காமல் சமூக எழுச்சி கொண்ட இயக்கங்களின் தேவையை ஒட்டியும் அதற்கவசியமான சோசலிச யதார்த்தவாத படைப்புகள் பற்றியும் "இலக்கியமும் இயங்கியற் போக்குகளும்" என்ற நூலினூடு பல கருத்துக்களை முன்வைத்தார்.

தமிழ்த் தேசியச் சூழலில் "திராவிடத் தால் வீழ்ந்தோம்" என்ற குணாவின் நூல் பெரும் விவாதங்களைக் கிளப்பிவிட்டிருந்தது. இவ் வேளையில் குணாவின் எழுத்துக்கள் பற்றிய ஓர் கருத்தரங்குக்காக தயாரிக்கப்பட்ட கட்டுரை களின் தொகுப்பாக கோ. கேசவன், அ.மார்க்ஸ் போன்றோரின் கட்டுரைகள் நூல்வடிவம் பெற்று "குணா: பாசிசத்தின் தமிழ் வடிவம்"* வெளியாயிற்று. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை தமிழ்த்தேசியச் சக்திகளின் வீழ்ச்சிக்கு ஒரே காரணம் திராவிட இயக்கங்களின் செயற்பாடே என்ற ஒற்றைப் பரிணாமத்தில் காரணத்தைத் தேடிக்கொண்டிருக்கும் குணா தமிழ்ச் சமூகமானது தனக்குள் பகைமை கொண்டுள்ள சாதிகளாகவும் வர்க்கங்களாகவும் பிளவு பட்டுள்ளதைக் காணமறுக்கிறார் எனப் பதிலிறுக்கும் கேசவன் இத்தகைய சூழ்நிலையில் எல்லாச் சாதிகளின், எல்லா வர்க்கங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட தமிழ்த் தேசிய இன ஓர்மை என்பதை ஓர் வரலாற்று முரணாகக் காண்கின்றார். கூடவே இவ்வகை வரலாற்று முரண்கொண்ட பார்வையானது உயர்த்தப்பட்ட சாதியினரும் ஒடுக்கும் வர்க்கத்தினரும் தமக்கான அரசியலை தமிழ்த் தேசிய அரசியலாக்கி தாழ்த்தப்பட்ட சாதியினரையும் விளிம்புநிலை மாந்தர்களையும் அடிப்படை வர்க்கங்களையும் தமது அரசியல் வலைப்பின்னலுக்குள் இறுக்கிக் கொள்ள முடியும் என்பதையும் எடுத்து வைக்கிறார். தமிழ்த் தேச விடுதலைக்கு பின்னர் இன்னுமோர் போராட்டத்தை ஒடுக்கப்பட்ட சாதி/வர்க்கத்தினருக்காக நடத்திக்கொள்ளலாம் என்ற குணாவின் நிலைப்பாட்டை இட்டு ஐயம் தெரிவித்து அதற்கான அரசியல் உத்தரவாதமும் அமைப்பு உறுதிப்பாடும் முன்தேவைகளாக கோரிய கேசவன் சமூகத்தின் ஒட்டுமொத்த விடுதலைக்கான நீண்ட நோக்கிலான பார்வை கொண்ட சிறந்த சிந்தனையாளராவார்.

மற்றும் குணாவின் "தேசிய விடுதலைப் புரட்சியில் ஜனநாயக சாராம்சத்தை ஏற்றல்" பற்றிய கோட்பாட்டு முரண்பாட்டை சுட்டிக் காட்டுகிறார். ஆரம்ப காலத்தில் இவ்வகை ஜனநாயக சாராம்சத்தை ஏற்றுக்கொண்டிருந்த குணா பின்னாளில் (தமிழின மீட்சி, செப்ரம்பர்-1986) தேசிய சிறுபான்மையினருக்கு சாதாரண வாழ்வுரிமையைக் கூட குணா வழங்க மறுப்பதை யிட்டு அச்சம் தெரிவிக்கிறார். அதாவது ஒரு தேசிய இனப்பகுதியில் சிறுபான்மைத் தேசிய இனத்தவரின் வாழ்வுரிமையை மறுத்தல் என்பது ஜனநாயக விரோதம் என்றும் சிறுபான்மைத் தேசிய இனத்தவரில் ஒடுக்கப்பட்ட சாதி/ வர்க்கத்தை அதன் ஒடுக்கும் சாதி/வர்க்கத்தோடு



படிப்பகம்

www.padippakam.com

இணைத்துக்காண்பதானது அடிப்படைச் சக்திகளின் கண்ணோட்டத்தில் தேசிய இனச் சிக்கலை காணமறுக்கும் போக்காகும். எனவே தேசிய விடுதலைப் போராட்டத்திலோ அல்லது தேசிய இனச்சிக்கலிலோ ஜனநாயக சாராம் சத்தை வலியுறுத்தாமல் இருந்தால் அது தேசிய இனவாதத்துக்கும் பெரும்தேசிய இனவெறிக்கும் இட்டுச் செல்லும் என்பதனை எடுத்து விளக்கியுள்ளார். இது போன்ற ஆய்வுகளும் விமர்சனங்களும் இலங்கைத் தமிழ்த் தேசியம் முளைவிட்ட காலத்திலேயே மேற்கொள்ளப் பட்டிருந்தால் இலங்கையில் இன்று நாம் எதிர் நோக்கியுள்ள தமிழ் முஸ்லிம் சிக்கல்களோ, அன்றி யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் துரத்தியடிக்கப்பட வேண்டிய கொடூர நிகழ்வுகளோ தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

கடந்த ஆண்டு வெளிவந்த கேசவனின் மற்றுமோர் நூல் "தலித்திலக்கியம்" என்பதாகும். இது "புதியன" இதழ்களில் கேசவன் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாகும். இதில் தலித்திலக்கியம் பற்றிய தனித்தன்மைகளை எடுத்தியம்பும் கேசவன் தலித்திலக்கியத்தில் கலையாக்க முறையாக யதார்த்த வாதம் குடிகொண்டுள்ள முறைமை பற்றியும் விவாதிக்கிறார். தலித்துகளின் மோசமான அவல உணர்வுகள் வெடித்துச் சிதறுதலுக்கு ஏற்றாற் போன்று கோபதாபங்கள் மலிந்த, மேற்பூச்சுப் பெறாத மொழி பின்பற்றப்பட வேண்டும் என (மராட்டி) "அர்ச்சுன்-டாங்களே கூறுவதோடும் அதே போல் தலித்திலக்கியம் ஒன்றும் சுகமான வாசிப்புக்குரியதல்ல படிப்பவர்கள் சூடாக வேண்டும், முகம் சுழிக்க வேண்டும் என்று ராஜ்கௌதமன் கூறுவதையும் ஒத்துக் கொள்ளும் கேசவன் "ஒரு புல்லாங்குழலில் காற்று வெளிவருவதற்கும் ஒரு பலூன் வெடித்துச் சிதறும் போது காற்று வெளியேறுவதற்கும் வேறுபாடு உண்டு. இரண்டாயிரம் ஆண்டுகால தீண்டா மைக்கெதிராக குரல் கொடுக்கும் போது தலித்துகளின் எதிர்ப்புக் குரலானது மேற்பூச்சோடு நளினமாக வெளிப்படல் இயலாது அது பலூன் வெடிக்கும்பொழுது வெளியேறும் காற்றைப் போன்றே அதிர்வுகளுட னேயே வெளிவரும். அது மேல்சாதிய மனோபாவ வாசகர்களை நிச்சயமாக முகம் சுழிக்க வைக்க வேண்டும் அதுவே அதன் முதல் வெற்றி". என்று மேற்கண்ட கருத்துரை கட்கு விளக்கமளித்தார்.



தொடர்ந்து இவ் வகைத் தலித்திலக்கிய மானது ஜனநாயக புரட்சிகர இயக்கத்தோடும் ஒட்டுமொத்த சமூகத்தின் புரட்சிகர நடைமுறை யோடும் தொடர்புடையதே என்று தனது இடதுசாரி நிலைப்பாட்டில் நின்று மேலும் விளக்கிச் செல்கிறார்.

அவர் இறப்பதற்கு சிலமாதங்கட்கு முன்பதாக வெளிவந்த கேசவனின் நூல் "தமிழ்- மொழி, இனம், நாடு"* என்பதாகும். சங்ககால தமிழ் இலக்கியங்களை மறு வாசிப்புக்குட்படுத்தியதில் தொடங்கிய அவரது ஆய்வுப் பணி சுமார் 20 வருடங்களாக அவர் மேற்கொண்ட கடின உழைப்பின் பயனாய், ஆய்வு முயற்சிகளின் பயனாய் அவர் உருவாக்கிய ஆய்வு நூல் இதுவெனலாம். "தமிழ்" என்ற சொற்பதம் எங்கும் எதிலும் அடிபட்டுக் கொண்டிருக்கும் இச்சூழலில் மொழிபற்றிய ஒரு ஆழமான நூலாக இது எமக்குக் கிடைத்தி ருக்கிறது. தமிழ் நாட்டில் தமிழ்மொழியின் செயலாக்கம், அதன்மீதான சிக்கல்களும் தீர்வுகளும், தமிழ்த்தேசிய இன அடையாளம், தேசிய இனச்சிக்கலில் தமிழர் அல்லாதோரின் பங்கு, தமிழ் நாட்டில் பல்லவர் சோழகால சமூக நிலையும் சாதிய- சமயக் கருத்துருவாக்கமும் என்பன பற்றி மிக நுண்ணிய பார்வைகளினூடு அலசியிருக்கிறார்.

16.09.98ல் கேசவனின் உயிர் பிரிவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பதாகக் கூட காரைக்குடியில் நடைபெற்ற தலித் உரிமை மகா நாட்டில் அவர் ஆற்றிய உரை முக்கியத்துவம் மிக்கது. அதுவே அவரது இறுதியுரையாகவும் இருந்தது சோகமான செய்திதான்.

கோ.கேசவன் பன்முகத் திறமை கொண்டவர். ஓர் சமூகஆய்வாளனாக, பொது வுடமைவாதியாக, வெகுசன மட்ட ஊழியனாக செயற்பட்ட அவரின் இழப்பு ஒடுக்கப்பட்ட, உழைக்கும் மக்களின் விடுதலை நோக்கிய பயணத்தில் ஓர் பாரிய இடைவெளியை விட்டுச்சென்றுள்ளது.

துணைநூல்கள்:

* அடையாளமிடப்பட்டுள்ளன

தேடல்மிகு வாசகர்களின் வசதி கருதி கட்டுரையில் குறிப்பிடப்படாத கோ.கேசவன் அவர்களின் ஏனைய நூல் விபரங்கள் கீழே:

- கதைப்பாடலும் சமூகமும்
- கதைப்பாடல்களில் ஆண்-பெண் உறவு நிலை.



படிப்பகம்

www.padippakam.com

- சுயமரியாதை இயக்கமும் பொதுவுடமையும்.
- திராவிட இயக்கத்தின் பிளவுகள்.
- தமிழ் சிறுகதைகளின் உருவம்.
- பாரதி முதல் கைலாசபதி வரை.
- மனித சமூக சாரம் - ஜோர்ஜ் தோம்சன். (மொழிபெயர்ப்பு)
- இயக்கவியல் பொருள்முதல்வாதம் - மாரிஸ் கரன்போத் (மொழி பெயர்ப்பு)
- அம்பேத்காரிசம் ஆளும்வர்க்க சிததாந்தமா? (சிறு வெளியீடு)
- ரஸ்சியப் புரட்சி ஒரு மாயையா? (சிறுவெளியீடு)
- பொற்கிளி வரலாறு (முருகு இராசாங்கத்துடன்.)
- Documents of Indian-communism (ஆங்கிலம்)
- Ducuments of Bharathi - (ஆங்கிலம்)

**வருந்துகிறோம்:-**

கடந்த வருடம் கோ.கேசவன் அவர்களின் இறப்புச் செய்தி கேட்டு எக்ஸில்-4 வது இதழில் நாம் வெளியிட்ட அஞ்சலிக்குறிப்பில் "நகர்சார் நாட்டுப்புற கதைப்பாடல்கள்" எனும் நூல் கோ.கேசவனுடையது என தவறுதலாக இடம் பெற்றுவிட்டது. இந்நூல் தலித் போராளி கே.ஏ.குணசேகரன் அவர்களுடையதாகும்.

(எக்ஸில்)

# இரா. சிவலிங்கம் ஞாபகார்த்த மலர்.

*"என் உள்ளத்தாலும் உணர்வாலும் வாழ்வு முழுமையும் மலையக மக்களின் உரிமைப் போராட்டங்களில் ஒன்றிவிட்ட என்னை விண்வெளியில் வீசி எறிந்தாலும் என் உணர்வுகளும் உறவுகளும் நமது மக்களையே வட்டமிடும். சேர்க்கைக்கோளாக மாறுவேனே அல்லாமல் செயலிழந்து போகேன்."*



என்று முழக்கமிட்ட இர. சிவலிங்கம் அவர்களின் இழப்பினை ஒட்டி வெளியிடப்பட்டுள்ள இம்மலர் H.H விக்கிரமசிங்க அவர்களினால் தொகுக்கப்பட்டுள்ளது. மலரில் சிவலிங்கம் அவர்களின் ஆளுமை பற்றியும் அன்றைய காலகட்டத்தில் மலையக மக்களுக்காக அவர் ஆற்றிய பணிகள் பற்றியும் அவரை அறிந்தவர்களும் நண்பர்களும் அவருடன் சேர்ந்து தீவிரமாக செயற்பட்டவர்களுமாக தங்கள் பெறுமதி மிகு நினைவுகளை பகிர்ந்து கொண்டுள்ளனர். ஆர்.சிவகுருநாதன், ஆ.சிவநேசச்செல்வன், ஆ.வாமதேவன், தெளிவத்தை ஜோசப், ராஜசிறிகாந்தன், சோ.சந்திரசேகரம், மு.நித்தியானந்தன் அ.முகமது சமீம், சு. திருச்செந்தூரன், பீ.முத்தையா போன்றவர்களுடன் இன்னும் பலரது நினைவுகளும் மீட்கப்பட்டுள்ளன.

பேராசிரியர் மு.நித்தியானந்தம் அவர்களிடமிருந்து(லண்டன்) எக்ஸிலின் பிரசுரத்திற்காக கிடைக்கப் பெற்ற இரா. சிவலிங்கம் நினைவுக்கட்டுரை இம்மலரில் ஏற்கனவே பிரசுரமாகியிருப்பதால் எக்ஸில் தனது பிரசுரத்தை நன்றியுடன் தவிர்த்துக் கொள்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

# சிறுகதைத் தொகுதி கலந்துரையாடல்



புகலிடத்தின் மூத்த எழுத்தாளர் க.கலாமோகனின் நிஷ்டை சிறுகதைத் தொகுப்பு எக்ஸில் வெளியீடாக வெளிவந்துள்ளது. இத்தொகுப்புக்கான விமர்சன அரங்கு 01.08.99இல் பாரிஸில் நடைபெற்றது.

கூட்டத்தை ஆரம்பித்து வைத்த 'எக்ஸில்' நிறுவனத் தலைமையிலுள்ள ஜெபா நிலவும் சமூக விதிகளால் மறுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட எழுத்துக்களை தூக்கிநிறுத்துவதே எங்களின் தொடர்ந்த பணியாக இருக்கும் என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து தனது கருத்துக்களை ஷோபாசக்தி சொல்கையில் ஒருவரின் வர்க்கச், சாதிய, பாலிய, அரசியல் சாய்வுகளைப் பொறுத்தே பிரதியின் மீது தன்னளவில் வாசிப்பு சாத்தியப்படுகிறது. இந்தவகையில் இத்தொகுப்பின் உருக்கம், மூன்று நகரங்களின் கதை என்ற இரண்டு கதைகளை தவிர மற்றய கதைகள் என்னை சலனப்படுத்தவில்லை. நமது விமர்சன சூழலில் துரதிஷ்டவசமாக இன்னும் யதார்த்தவாத எழுத்து, தீர்வைக் கோரும் எழுத்து என்றெல்லாம் பேசப்பட்டு வருகிறது. இந்த அளவுகோல்களை கலாமோகனுக்கு பொருத்தி அவரின் பிரதிகளை அளவிடுவது கவலைக்குரியது எனத் தெரிவித்தார்.

தில்லைநடேசன் பேசுகையில், கலாமோகன் எழுத்து தவம் செய்பவர். மிகவும் கவனமாக எழுதிவருபவர். கலாமோகன் "தேள்" போன்ற நல்ல கதைகளையும் எழுதியிருக்கிறார் "கனி" போல் மோசமான கதைகளையும் எழுதியிருக்கிறார். கலாமோகனின் எழுத்துக்கள் மிகவும் எளிமையான முறையில் சாதாரணர்களாலும் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் எழுதபடுபவை என்றார்.

சுகன் பேசுகையில் கனி கதை குறித்து தன்னோடு பேசிய ஒரு தலித் கிறிஸ்தவப் பெண் கலாமோகன் ஒரு இந்துவா என்று கேட்டதாகவும் இப்போது ஒரு இந்துவாக தில்லை அக்கதையை எதிர்ப்பதும் ஒரு தலித் கிறிஸ்தவனாக ஸ்டாலின் இக்கதையை ஆதரித்துப் பேசுவதும் ஓர் முரண்சுவையாக உள்ளது என்றார்.

அம்மா ஆசிரியர் மனோகரன் பேசுகையில் இத்தொகுப்பு ஊடாக கலாமோனைப் பார்க்கையில் இச்சமூகத்துக்கு ஏதாவது போதனைகளை இடித்துரைக்க அவர் முயலவில்லை. அது பிழையும் இல்லை. கலாமோகனின் கதைகள் பெரும்பாலும் பாலியல் சம்பந்தப்பட்டவை. இவை வெளி வந்த காலத்தில் இவை கலகக்குரல்களாகவே என்னால் கணிக்கப்பட்டன. கலாமோகன் விமர்சனங்களை பொருட்படுத்துவதாய் தெரியவில்லை. அவர் அந்த நிலையை கடந்து இருக்கிறார் என்றே நினைக்கிறேன். கலாமோகன் உபயோகிக்கும் சொற்கள் சந்தேகத்துக்கு எம்மைத் தள்ளி விடுகின்றன. நிஷ்டை, ரிசி போன்று நிறைய வடமொழிச் சொற்களில் உள்ள காதலை எம்மால் விளங்கமுடியவில்லை என்றார்.

"சமர்" ஆசிரியர் நயாகரன் பேசுகையில் யதார்த்தத்துக்கு அப்பாற்பட்ட எதுவுமே கருத்து முதல் வாதம். புகலிடத்தில் நிறைய பாலியல் சிக்கல்கள் குறித்து எழுதுகிறார்கள். இதை நாங்கள் எப்படி புரிந்து கொள்கிறோம் என்பதுதான் கேள்வி. முதலாளிய சமூகத்தில் பாலியல் நுகர்வுப்பண்டமாய் ஆகிவிட்டது. நிலப்பிரபுத்துவ சமூகத்தில் ஆண் நுகர்வை கோருகிறார், பெண் கூட்டுப்பாலியலைக் கோருகிறாள். இவற்றைத் தவிர்த்து நாங்கள் மூன்றாவது தளத்தில் பாலியல் குறித்து எழுதவேண்டும் என்றார்.

நீண்டகாலமாக எழுதுகிறீர்கள் வாசகர் தளத்தில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டுள்ளதாக நினைக்கிறீர்களா என்று மனோகரன் கேட்ட கேள்வியொன்றிற்கு கலாமோகன் பதில் அளிக்கையில் "இது ஒரு ஆய்வுக்குரிய விசயம். எதைப்பற்றி எழுதுகிறார்கள் எந்தப் புத்தகம் அதிகமாக படிக்கப்படுகிறது என்ற தரவுகளை வைத்துத்தான் வாசகர் தரத்தைக் கணிப்பிடவேண்டும் எனத்தெரிவித்தார்.

தொடர்ந்த கலந்துரையாடல்களில் விஜி, சுதர்சன், கற்சுறா, கிருபன், புஸ்பராசா, அழகிரி, இன்னும் பலர் கலந்து கொண்டனர். விமர்சன அரங்கின் முடிவில் மறைந்த மலையக சிந்தனையாளர் இர. சிவலிங்கம் குறித்து சில குறிப்புக்களை கூறிய 'எக்ஸில்' செயற்பாட்டாளர் ஸ்டாலின் மலையக இலக்கியங்களை நோக்கியும் எக்ஸிலின் பரப்புகள் விரிய வேண்டியதின் அவசியத்தை கவனத்திற்கெடுப்பதாகத் தெரிவித்தார். ●



படிப்பகம்

www.padippakam.com

விடப்பட்ட ஒரு துவாரத்தின் வழியே
பயணம்.

கடன் மாறி
கூர் முனையில்
இடப்பட்ட முட்டை
கருக்கட்டத் தொடங்கிய பொழுதே
தடைப்பட்டது
பயணம்.

நானும் அவனுமாய்
ஐந்தாறுமுறை
குறைசொல்லி
கோள் மூட்டி
துப்பி எச்சிலால் அழித்து
காயவைக்க
பயமாய் இருந்தது.

கரு பனையளவு பெரிதாய்.

எனது கனவு முட்டை
இப்படி பெரிதாய் வளர
யார் இன்னும்
கனாக் கண்டு கொண்டிருப்பது?

அவனை இழுத்து
கன்னங்களில் வழியும் கேள்விகளுக்கு
நீயா?
பதில்.
என்று கேட்டால்,

ஆள் மாறி மாறி மீளவும் பொய் தான் சொல்லுவோம்.

உடைக்காது
முட்டையை வளர விடோனும்.
குறை சொல்லி
கோள்மூட்டி.



படிப்பகம்

www.padippakam.com

-NOTE: BY. MITHILA-

**1988** இல் நோபல் பரிசினைப் பெற்றவரான நஹீப் மஹ்பூஷ் (Naguib Mahfouz) 1994இல் இருந்து எழுத முடியாத நிலையில் உள்ளார். அரபு இலக்கிய உலகின் மிகவும் முக்கியமான எழுத்தாளர்களில் ஒருவராகக் கருதப்படும் இவர் இந்த நிலைக்கு வந்ததின் காரணம் 1994 இல் இஸ்லாமியத் தீவிரவாதிகள் இவரது கையை அடித்து உடைத்ததுதான். "மெடீனாவின் மகன்" எனும் நாவலின் இரண்டாவது வெளியீட்டைத் தடை செய்யும் நோக்குடனேயே இவர்மீதான தாக்குதல் நடத்தப்பட்டது. எகிப்தில் பிறந்த இவர் இப்போது அங்கே நைல் நதி வீதியில் அமைந்துள்ள தனது இருப்பிடத்தில் கண் பார்வை இழந்து வாழ்கின்றார். அரபு தேசங்களின் ஐக்கியத்துக்காக குரல் கொடுத்து வரும் மஹ்பூஷ் இற்கு இப்போது 86 வயது. இவரது படைப்புகள் உலகின் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதோடு, அரபுதேசக் கல்லூரிகள், பல்கலைக் கழகங்களில் பாடநூல்களாக உள்ளன. "அரபுத் தேசங்களை இணைக்கும் ஒரேயொரு தொடர்பு ஊடகமாக உள்ளது அரபு மொழியே, இதனைத் தவிர்த்து உள்ளவை எதிர்பார்ப்புகளே" என மிகவும் அண்மையில் குறிப்பிட்ட இவர் "அரசியல் வாழ்வைப் பிரதிபிம்பம் செய்து காட்டுகின்றது. வாழ்வின் ஒரு பகுதியை மட்டுமே" என்கின்றார். அத்தோடு "ஒவ்வொருவருக்கும் உள்ளதைப்போல எனக்கும் ஒரே வாழ்வுதான். அதாவது காலத்தால் கட்டுப்படுத்தப்பட்ட வாழ்வு. ஆனால் இலக்கியத்தால் எனக்கு எண்ணுக்கணக்கற்ற வாழ்வுகளைத் தரமுடியும், இவை அனுமதி செய்யாதிருக்கப்படினும்" எனச் சொல்கின்றார் மஹ்பூஷ்.



**Naguib Mohfouz**
(நோபல் பரிசு- 1988)

************

**23** வயதில் (1963இல்) Renaudot பரிசைப் பெற்ற லூக்கிளேஸியோ (J.M.G.le Clézio) பிரான்ஸில் தனிப்பட்ட கௌரவத்துக்குரிய ஓர் எழுத்தாளன். இவர் தனிமையை விரும்புகின்றவர். "முகங்களைப் பார்க்க எனக்குப் பயமாக உள்ளது" என்பவர். கிராமங்களை விரும்புகின்றவர். பிரான்சின் NICE நகரில் பிறந்தாலும் அமெரிக்காவின் புதிய-மெக்ஸிக்கோவில் உள்ள Alburquerque கிராமத்தில் வாழ்பவர். பேட்டிகள் என்றால் தூர ஒதுங்குபவர். தன்னால் பலர் முன்னிலையில் பேசத்தெரியாதென்றும் எழுத்தால் மட்டுமே பேசமுடியும் என்றும் அடக்கமாகச் சொல்பவர். முதலாவது நாவலான "PROCÉS-VERBAL" (வாக்குமூலம்) 1963இல் வெளிவந்ததில் இருந்து எழுத்தே இவரது வாழ்வாகிவிட்டது. இவரது எந்த நாவலும் சோடை போவதில்லை. இவருக்குள்ள வாசகர் தொகை அதிகம். இவரது எழுத்து நடை மிகவும் இதமானது.

**J.M.G.LE CLÉZIO**
(1963 இல் RENAUDOT பரிசு)



படிப்பகம்

www.padippakam.com




1977 ஆம் ஆண்டு மிகவும் அபூர்வமாகக் கொடுத்த பேட்டியொன்றில் "ஏழைகள் என்னைக் கவருகின்றனர், ஏனெனில் இவர்களுக்குக் கொடுக்கத் தெரியும்" என்கின்றார். "ஏன் முகங்களைப் பார்க்க உங்களுக்கு பயமாக உள்ளது?" எனும் கேள்விக்கு இப்படிப் பதிலளிக்கின்றார்: "இதனைப் பயம் என்று சொல்லமுடியாது. ஆனால்... எப்படிச் சொல்வது? வித்தியாசமான மனிதர்களைப் பார்த்து எனக்குப் பழக்கமில்லை, ஒரு தடவை பார்த்தால் அவர்களை மறப்பது எனக்கு சிரமாக உள்ளது." இது உடல் ரீதியாக நெருக்கடியை ஏற்படுத்துவது. பலரைப் பார்த்தால் விழிகள் பல விஷயங்களாலும், பல முகங்களாலும் நிரம்பியிருப்பதான பிரமைதான் ஏற்படுகின்றது, தலைக்குள் கூட நிறைய முகங்கள் இருப்பதாக..." 77இன் பின்னர் 95இல் லூக்கிளஸியோ வழங்கிய பேட்டி "எங்கோ" எனும் தலைப்பில் புத்தகமாக வெளிவந்துள்ளது. இதில் "வரலாறு என்பது ஓர் மோசமான சுமையாக இருக்கலாம். இது ஓர் பாரமான கலாச்சாரச் சுமை, இதனால் நாளாந்த வாழ்விற்கு எந்தப் பலனுமே இல்லை" எனச் சொல்லியுள்ளார்.

************



JORGE LUIS BORGES

"நான் எனது வாழ்க்கையை இலக்கியத்துக்காக அர்ப்பணித்துள்ளேன். ஆனால் அதனைத் தெரிந்து கொண்டேனா என்பதைத் திடமாகச் சொல்லமுடியாது. அதற்கு ஓர் வரைவிலக்கணத்தைத் தரும் தீங்கினைச் செய்யமாட்டேன். ஏனெனில் என்னைப் பொறுத்தமட்டில் அது மர்மமானதாகவும் மாறுவதாகவும் உள்ளது. அதனை நான் கற்பனை மீதானதும், மொழியின் மீதானதுமான முடிவற்ற தொடர் ஆச்சரியமாகவே காண்கின்றேன்" எனக் குறிப்பிடுகின்றார் இந்த நூற்றாண்டின் மிகப் பெரும் ஆர்ஜென்ரின எழுத்தாளரான ஜோர்ஜ் லூயி போர்ஜெஸ் (JORGE Luis BORGES) இந்த வாக்கியங்களை 14 ஜூன் 1986 இல் காலமாவதற்கு மூன்று கிழமைகளின் முன்னர் சொல்லியுள்ளார். "படைப்பு" எனும் பதத்தை அதீத மயப்படுத்தப்பட்ட பதமாகப் பார்க்கும் போர்ஜெஸ் பற்றி இந்த வருடம் இலக்கிய சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் கூடுதல் அக்கறை காட்டியுள்ளன. இதற்குக் காரணம் இவரது படைப்புகளின் இரண்டாவது தொகுப்பினை பிரான்ஸின் மிகப்பெரும் வெளியீட்டு நிறுவனமான GALLIMARD தனது வரலாற்று முக்கியத்துவம் கொண்ட பகுதியான "Bibliothèque de la Pléiade" இற்குள்ளால் இவரது எழுத்துக்களின் இரண்டாவது தொகுப்பைக் (1524 பக்கம், 445 பிராங்) கொண்டு வந்ததுதான் எனலாம்.

************

1929 இல் முதலாவது இருத்தலியல் நாவலை (வித்தியாசங்கள்) இத்தாலிய எழுத்தாளர் ஆல்பேர்த்தோ மோறாவிய (Alberto Moravia) எழுதினார். இது சார்த்தரின் NAUSÉE (குமைச்சல்) காமுவின் L'Etranger (அந்நியன்) இவைகள் வெளிவருவதற்குப் பத்துவருடங்களின் முன்னர் வெளிவந்ததென்பது குறிப்பிடத்தக்கது. சமகால



படிப்பகம்

www.padippakam.com



ALBERTO MORAVIA

எழுத்தாளர்களுள் பரவலான உலக வாசிப்புப் பெருமையை பெற்ற எழுத்தாளர்களில் ஒருவர். நோயுடன் பிறந்து நோயுடன் இறந்த இவர் நிறையச் சிறுகதைகளையும் நாவல்களையும் எழுதியுள்ளார். இத்தாலியின் குறிப்பிடத்தக்க நாவலாசிரியையான ELSA MORATE உடன் இருபது வருடங்கள் வாழ்ந்தவர். பின்னர் இத்தாலியின் மிக முக்கியமான பெண்ணிலைவாதியான DACIA MARAINI உடன் சாகும்வரை வாழ்ந்தவர். "நான் எப்போதுமே இடதுசாரியாக இருந்தேன், பாஸிஸ எதிரியாக, பூர்ஜுவா எதிரியாக இருந்தேன், இப்போதும் நான் இப்படியே உள்ளேன். ஆனால் நான் ஒருபோதும் ஓர் கட்சியின் உறுப்பினனாக இருந்ததில்லை." எனும் மோறாவியா மூன்றாம் உலக நாடுகள்மீது மிகவும் அக்கறை கொண்டிருந்தார். VANIA LUKSIC இற்கு மோறாவியா வழங்கிய பேட்டி "மன்னன் நிர்வாணமாக உள்ளான்" என்ற தலைப்பில் புத்தகமாக வெளிவந்துள்ளது. இதிலே "உங்களது நாவல்கள் முப்பது மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்தச் சர்வதேச வெற்றியைப் பற்றி உங்களால் எப்படி விளக்கமுடியும்?' எனும் கேள்விக்கு பின்வருமாறு பதில் தருகின்றார்: "என்னை இவர்கள் வாசிப்பதற்கு இப்படிப்பட்ட காரணங்கள் இருக்கலாம். அதாவது அவர்களது சிக்கலான நிலைமைகளைக் குழப்பாமலும், விஷயங்களை தெளிவாகச் சொல்கின்ற ஓர் குறிப்பிட்ட திறமை என்னிடம் இருக்கின்றது எனக் கொள்ளலாம். இது முக்கியமானது, ஆனால் இதைவிட முக்கியமானது எதுவெனில் எந்தச் சந்தேகமும் இல்லாமல் நான் இருத்தலியல் எழுத்தாளனாக உள்ளேன். அத்தோடு, ஞாயம் போல இருத்தலியல் சர்வதேசமயமானது, எல்லைகளைக் கடந்தும் இது விளங்கிக் கொள்ளக்கூடியது"

---

## கிடைக்கப்பெற்றோம்.




- சட்டமும் பெண்களின் பாலியல் உரிமைகளும் (மூலம்: பிளேவியா அக்னீஸ், தமிழில்:வெ. கோவிந்தசாமி)
- உடைபடும் புனிதங்கள் (அ.மார்க்ஸ்)
- கவர்ன்மெண்ட் பிராமணன் (அரவிந்த மாளகத்தி)
- ஆகஸ்ட் 15 பெரியார்/ அண்ணா/ கேசரி (எஸ்.வி.ராஜதுரை)
- ஆர்.எஸ்.எஸ்..ஓர் அபாயம் (விடுதலை ராஜேந்திரன்)
- தான் பிரீன் தொடரும் பயணம் (மா.ராமஸ்வாமி)

தொடர்புகட்கு:

விடியல் பதிப்பகம்
3, மாரியம்மன் கோவில் வீதி
உப்பிலிப்பாளையம்
கோவை - 641015
தொலைபேசி:570778



படிப்பகம்

www.padippakam.com

கூட்டிக்கழித்தாயிற்றொருமுறை
மின் விசிறிச் சத்தத்தினூடே மெதுவாய்
மிக மெதுவாய்...
தகரத்தில் ஒலியெழுப்பி மிகப் பலமாய்
பெய்திட்ட மழை இன்றில்லை.
நானில்லா நாட்களில் ஓயாப் பேரிரைச்சலோடு
விரகிக்க வைத்த மழை இன்றும் உதவியிருக்கலாம்
சத்தம் போட்டு.

இருந்தும்,
மோகித்து, முக்கியெழ,
அசலென்ன, உறவென்னவென
மின்விசிறிச் சத்தத்தையும் சில்போது மேவி
என் அணுக்கள் அவளெங்கும்
ஏகிற்று நூற்றுக்கும் பல.

இன்று –
பனி மட்டும் ஒழுகுகிறது கூரையில்
சத்தமற்று
உள்ளேயும் தான்!

இனி, அவளில் நான் வளர்வேன்.



படிப்பகம்

www.padippakam.com




# இலங்கையில் ஓர் ஓவியக் கண்காட்சி

-முகன்-

"இருபதாம் நூற்றாண்டுக் கலை" எனும் புத்தகத்தைத் தமிழில் எழுதிய கோட்வின் கொன்ஸ்ரன்ரைன் இலங்கையில் பரவலாக அறியப்பட்ட குறிப்பிடக்கூடிய ஓர் வித்தியாசமான ஓவியக் கலைஞர். சமகால பின்நவீனத்துவ ஓவியர்களில் ஒருவராக மதிப்பிடப்படுகின்றார். இவரது கலை இயக்கத்தின் அணுகுமுறைகள் வித்தியாசமானவை. இவரது படைப்புகள் அரசியல் கேள்விகளை ஒதுக்கிக் கலை கலைக்காகவே எனும் திசையில் கால்கொள்வனவல்ல. கலைஞனுக்கும் கலை அரங்கிற்குமிடையே ஓர் வெடிப்பை ஏற்படுத்த வேண்டும் என்கின்ற அக்கறையோடு தனது தூரிகையை பயன்படுத்தும் ஆற்றல் கொண்ட இவரது ஓவியக் கண்காட்சிகள் இலங்கையில் பல இடங்களில் நடைபெற்றுள்ளன. "இருத்தல்" எனும் தலைப்பின் கீழ் இவரது கடைசிக் கண்காட்சி கடந்த ஜூன் 24 ல் இருந்து ஜூலை 4 வரை Vibhavi இல் இடம் பெற்றது. பலரது பாராட்டையும், விமர்சகரது அக்கறையையும் ஈர்த்துக் கொண்டது.

"தொழில் ரீதியாக டாக்டராகவும் ஆன்ம ரீதியாகக் கலைஞராகவும் உள்ளார்" என THE SUNDAY LEADER இல் வைதேகி பெரேரா இவரைப்பற்றி எழுதியுள்ளார்.

1978ஆம் ஆண்டு கண்டியில் ஏற்பட்ட கலவரத்தினால் இடம் மாறிய இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பட்டம் பெற்றவர். திடீரென மூன்று வருடங்களுக்கு பல்கலைக்கழகம் மூடப்பட்டபோது - கலை சார்ந்த எழுத்துக்களை வாசிக்கத் தொடங்கியதுடன், கொழும்பிலுள்ள புகழ்பெற்ற கலைஞர்களுடன் தொடர்புகளையும் ஏற்படுத்தினார். தமிழில் கலை தொடர்பான சஞ்சிகைகளை இந்தியாவிலும், இலங்கையிலும் வெளியிட்டுள்ளார். ஓவியத்திறக்பால் இலக்கியத்திலும் நாடகத்திலும் ஈடுபாடுகொண்ட இவர் "சரிநிகர்" (கொழும்பு) "திசை" (யாழ்ப்பாணம்) இவைகளில் எழுதி வருகின்றார். கலையை ஓர் வணிகப் பொருளாகப் பார்க்க மறுக்கும் கொன்ஸ்ரன்ரைன் இதனைச் சந்தையில் இருந்து வெளியால் எடுக்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். இவர் ஓவியத்தைப் பார்வையாளனுக்கு வழங்கும் விதம் வித்தியாசமானது, கண்காட்சிகளை நடாத்தும் பாணி புதியது. நவீன ஓவிய வழங்கல் (PRESENTION) உத்திகளில் இவருக்குப் பரீட்சயம் உள்ளது என்பதையே இது காட்டுகின்றது. எம்பிலிப்பிட்டியாவிலிருந்து செம்மணி வரை அண்மையிலே கண்டுபிடிக்கப்பட்ட அடையாளம் காணப்படாத உடல்களை வெளிப்படுத்தும் ஓவியத்தின் மீதான அக்கறையை பார்வையாளன் பக்கம் திருப்ப இவர் எலும்புக் கூடுகள், இசை, விளக்குகள் என்பனவற்றை பயன்படுத்





படிப்பகம்

தியுள்ளார்.

சர்வதேசப் புகழ்பெற்ற ஓவிய ஆவணங்களை தேசசூழலுக்கு ஏற்ப தனதுதனிப்பட்ட ஓவியத் திறமையோடு இணைத்து பார்வையாளனுக்கு வழங்கியுள்ளார். பிக்காஸோவின் புகழ்பெற்ற "GUERRNICA" ஓவியத்தைக் குறிப்பிடலாம். இது KORISA வில் NATO நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலால் கொல்லப்பட்ட அல்பேனிய அகதிகளை மையப்படுத்திக் கீறப்பட்டது. இந்த ஓவியத்தைக் கிழித்து எமது தேச சூழலுக்கு ஏற்பத்தனது பாணியில் ஓர் ஓவியத்தைக் கீறியுள்ளார் கொன்ஸ்ரன்ரைன். "பார்வையாளனுக்கு ஒருமைத்தனம் கொண்ட வரலாற்றுத் தொடர்ச்சியை அறிவிக்கின்றது" என இந்த ஓவியம் பற்றி அனோலி பெரேரா எழுதியுள்ளார்.

"ராஜினி திரணகமவுக்கு ஓர் அஞ்சலி" எனும் தலைப்பில் ஓர் நிகழ்வைக் காணிக்கை செய்துள்ளார். "முறிந்த பனை" எனும் தலைப்பைக் கொண்ட இந்த ஓவியம் -நிகழ்வு முடிவில் தீயிட்டு கொழுத்தப்படுவதாக அமைவது தமிழ் ஓவிய உலகத்திற்குப் புதிய விஷயமே.

நிகழ்வையும்(Performance) நிர்மாணத்தையும் (Installation) இணைத்துத் தனது ஓவிய இயக்கத்தை நடத்தும் கொன்ஸ்ரன்ரைனின் கண்காட்சிகள் இலங்கையைத் தாண்டியுள்ள பார்வையாளர் கவனத்திற்கு வருதல் குறிப்பிடத்தக்கது.

●


## அ.முத்துலிங்கம்

எழுதிய

## "வடக்கு வீதி"

சிறுகதைத் தொகுப்பு (விலை ரு 40.00)

The Hindu பத்திரிகையில் (1.12.98) வெளிவந்த விமர்சனத்தின் ஒரு பகுதி.

The author has a unique, inimitable style. He has a gestalt sense of humour that is not often seen in Tamil Writers. He describes events with a leisure and a ritual shows such passion for details that one does not find anywhere in Tamil writing. He manipulates the language that is at once arresting and capable of creating envy in other practitioners. His observations are breathtaking.

கிடைக்குமிடங்கள்:


மணிமேகலைப் பிரசுரம்
த.பெ. எண் 1447
4, தணிகாசலம் சாலை
தி. நகர்
சென்னை 600017
தொலைபேசி 4342926



D. திலிப்குமார்
216/10, R.K மத் ரோடு,
மைலாப்பூர்
சென்னை 600004
தொலைபேசி 4952217

www.padippakam.com

# பத்தியம்...



மனிதம் நாகரீகம் அடையத் துவங்கி விட்டதாக நம்பத் துவங்கிய காலகட்டம். இக்கால கட்டத்தில்தான் இருட்டடிப்பு செய்யப்பட்ட ஒட்டகச் சித்தர் (19ம் சித்தர்) விஜநகரத்தில் இருந்து படகேறி நல்லூர் இராசதானி வந்து தனதுஒட்டக இலேகியத்தை அறிமுகம் செய்தார். இலேகியத்தை மூன்று பொழுதும் உண்ட இராசர் அரிபுஜ பல பராக்கிரமம் பெற்று அதி உன்னத வீரமும் அடைந்து -அதனால் மகிழ்வுற்ற இராசர் ஒட்டகச் சித்தருக்காக வடமறவர் பிரதேசத்தில் ஒட்ட கப்புலம் என்று ஓர் கிராமத்தை உண்டாக்கி இலேகிய உற்பத் திக்கு ஆவன செய்து கொடுக் கப்பட்ட அதே காலகட்டத்தில் எனக்கு நல்லூர் இராசதானி யில் போர்ப்பணி செய்யப் பணிக்கப்பட்டது.

நான் ஒன்றும் போர் செய்யப் பிறந்த சத்திரியனோ அன்றி முக்குல வீரனோ கிடை யாது வைரவன் கோயில் பூசாரியின் மகன்.

வைரவர் சாமி காட்டுச் சாமியாம். “காட்டுமிராண்டிகளும் பள்ளரும் பறையரும் பிணம் காவிகளும்தான் அதை கும்பிட வேண்டும். இராசாக்களும் அவரை அண்டி வாழ்வோரும் மற்றும் உயர்குல வேளாளரும் வணங்குவதற்கு வேறு கடவுள் கள் உள்ளன” என்று காஞ்சி புரத்தில் இருந்து நல்லூர் இராச தானிக்கு சமூகம் தந்த பங்கரச்சாரிய பெரியவர் வாய் மொழிய என் ஐயனுக்கு தொழில் இல்லாமல் போயிற்று. இருந்தாலும் இராசருக்கு அகன்ற பிரபஞ்சம் போல்பரந்த மனம். அப்பாவுக்கு ஆறுதல் சொல்லி என்னைப் படையில் சேர்த்துக்கொண்டார். படை என்றதும் உடலெங்கும் வியர்த்து- கிண்ணென்றோர் பீதி பற்றிக் கொண்டது மனதுக்குள்.



“அட மட மண்டு மகனே! நம் இராசன் எந்த நாட்டின் மீதுடா படை எடுத்தான். அல்லது நம் இராசன் மீதுதான் எவன் போர் தொடுத்தான். படை என்பது நம் தேசத்தைப் பொறுத்தவரை சும்மா ஒரு சம்பிரதாயத்துக் குத்தான். சும்மா ஒரு பாசாங் குக்காக இராசாவின் தோட்டத் தை காவல் இருக்கவும்- பருத்தித்துறையிலும்- பூநகரி முனையிலும் காவல் இருக் கவும்தான் போர் வீரன் என்ப வன். நீ எதற்கும் கவலை கொள்ள வேண்டியதில்லை.”

ஐயன் சொல்ல கொஞ்சம் தெம்பு வந்தது. நான் கூட சிறிது சிந்தித்துப் பார்த்தேன். ஐயன் சொல்வது நிரம்பச் சரி. பரம்பரை பரம்பரையாய் முப்பாட்டன்-பாட்டன்-மகன்- பேரன் என்று இவர்கள்தான் ஆண்டு கொண்டு இருக்கின் றார்கள். சோம்பேறி இராசாக்



படிப்பகம்

www.padippakam.com

கள். எந்த நாட்டின் மீதும் போர் தொடுபபதில்லை.

வன்னி இராசன்கூட அநுராத புரம் சென்று அவ்வப் போது சிங்கள இராசாக்கள் மீது போர் தொடுப்பது உண்டு என்று வன்னி நாட்டில் இருந்து நெல் வியாபாரம் செய்யவரும் வணிகர்கள் சம யங்களில் சொல்ல கேட்ப துண்டு. வேற்று தேசத்து இராசாக்கள்கூட, ஏன் எம் இராசன் மீது போர் தொடுப் பதில்லை என தெரியாது. பனை மரக்காட்டையும் சுண்ணப்பாறைகளையும் ஏன் கட்டியாள வேண்டும் என நினைத்தார்களோ என்னவோ.

இராசாக்கள் என்றால் மண்ணாசையும் பெண்ணாசை யும் தலைக்கேறிவெறிகொண்டு அலையவேண்டும் என்பது நியதியல்லவா? பெண்ணா சையில் எப்படியோ தெரியாது. மண்ணாசை என்பது எம் மன்னருக்கு சிறு மண் அளவு கூடக் கிடையாது என்பது உண்மைதான்.

எங்கள் இராசன் மீது எவரும் போர் தொடுக்கப் போவ தில்லை. எங்கள் இராசனும் எவர் மீதும் போர் தொடுக்கப் போவதில்லை. பயம் அற்று படையில் சேர்ந்து கொள்ளலாம் மனம் முடிவு எடுத்து விட்டது. எடுத்த எடுப்பில் இராசாவின் தோப்பிலதான் பணிசெய்யப் பணிக்கப்பட்டது. கையில் ஒரு ஈட்டியைக் கொடுத்து தோப்பின் பின்வாயிலில் - பதின்மூன்று காவலாளிகளில் நானும் ஒருவனாய் நிற்கவைக்கப் பட்டேன்.
நின்றேன்...
நிற்கும் போதுதான் சிந்தனை வந்தது... போர் வீரன் என்றால் அவனுக்கு போர் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் அல் லவா. எனக்கு மட்டுமேன் போர்ப்பயிற்சி வழங்கப்பட வில்லை.
பக்கத்தில் நின்ற பிற காவ லாளியிடம் கேட்டேன். என்னை ஒரு காட்டெருமை பார்ப்பது போன்று வெறுப்பாய்ப் பார்த்து விட்டு விறைப்பாய் நின்றான். மாலை நேரம் சுற்றுப் பார்த்து மாற்றுவதறகாக தளபதி வர வேண்டும் அல்லவா அவரிடம் கேட்டால் தெரிந்து போகிறது. நாம்தான் போர் செய்யப் போவ தில்லையே. போர் என்பதுதான் நம் சரித்திரத்தில் கிடையாதே. பின் எதற்கு போர்ப் பயிற்சி. அதுதானே... பயிற்சி அற்ற போர் வீரனும் எதற்காக? அதுதானே... அதுதான் ஐயர் சொன்னாரே, சும்மா ஒரு சம்பிர தாயத்துக்காக என்று...
சும்மா சும்மா எதற்காக மண் டையை போட்டு உடைக் கின்றேன் என்று புரியவில்லை. உச்சி வெயில் மண்டையை பிளந்தது. உச்சிவெயிலில் ஆடாமல் அசையாமல் நிற்பது எப்படி என்றாவது பயிற்சி அளித்திருக்கலாம். தலைக் கவசம் என்னும் போர்வையில் தலையில் கவிழ்த்து விட்ட முண்டாசுக்குள் இருக்கும் மண்டைக்குள் கிண் கிண் என்று வலி எடுத்தது.
என்ன நாசமாய்ப் போன உத்தி யோகமடா இது. வேண்டாம் என்று விட்டு வேறு உத்தி யோகமும் பார்க்க முடியாது. இராச குற்றமாகிவிடும். தலை யைக் கிலையைக் கொய்து வீசி விடுவார்களோ என்னவோ. தோப்பின் உட்புறம் அரண் மனைக்குள் இராசர் இன்நேரம் எது செய்து கொண்டிருப்பார். மனைவிகளுடன் தாயக்கட்டை உருட்டி விளையாடிக் கொண்டிருப்பாரோ?
இராசர் என்றால் அவருக்கு எத்தனை பெரிய பொறுப்புகள் இருக்கும். நாட்டின் முன்னேற் றம் பற்றி மந்திரிகளுடன் விவாதிக்கக் கூடும். இராச தந்திரிகளுடன் தந்திரம் பேசக்கூடும். தளபதிகளுடன் வியூகம் வகுக்கக்கூடும். அவருக்கு எங்கே தாயக்கட்டை உருட்ட நேரம் இருக்கப் போகின்றது.
தோப்பின் பின் வாயிலின் எதிர்த்திசையில் வண்டிநிறைய நெல் மூட்டைகளை நிரப்பிக் கொண்டு- வியாபாரம் செய்து கொண்டு நின்றார்கள் வன்னி வணிகர்கள். ஒன்றிரண்டுபேர் வாங்கிக் கொண்டு போனார்கள். மற்றய நேரம் எல்லாம் தோப்பை நோக்கிக் கொண்டும் தங்களுக்குள் ஏதோ பேசிக் கொண்டும் நின்றார்கள். தலைக்கு முண்டாசும் முறுக் கிய மீசையுமாய் இருக்கும் வன்னியர்களை பார்க்க அழகாய் இருந்தார்கள். பாவம் எத்தனை காததூரம் கடந்து வந்து உத்தி யோகம் செய்து சம்பாதித்து மனைவி பிள்ளை களைக்காக்க வேண்டி யிருக்கிறது.
அவர்களை வேடிக்கை பார்ப் பதில் என் நேரம் ஓடிக்கொண்டி ருந்தது. வன்னி வணிகர்க ளைத் தவிர வேறு எதையும் என்னால் கவனிக்க முடிய வில்லை... மாடுகள் இரண்டை யும் நிழல் வாகை மரத்தின் அடியில் மேயவிட்டு இருந்தார் கள். அவைகள் கூட கம்பீர மாகவும் அழகாகவும் இருந்தன. வைக்கோல்கூட வன்னியில் இருந்துதான் கொண்டுவந்திருக் கிறார்கள் போலும். சட்டி பானைகள், குடம், விளக்கு போன்றன வண்டியின் அடிப் பாகத்தில் தொங்கிக் கொண்டு இருந்தது. வியாபாரம் முடிய வீதி ஓரத்திலேயே உணவு சமைத்து உண்பார்கள் போலும். இரவில் ஏதேனும் சத்திரத்தில்தான் தூக்கமாக்கும். இவர்கள் வணிகர்கள் இல்லையோ என்கின்ற எண் ணம் திடீரெனத் தோன்றிற்று... ஏன் அப்படி தோன்றியது என

யுத்தமும்...



படிப்பகம்

www.padippakam.com

சட்டென புரியவில்லை. நெடு நேரமாய் அவர்களையே கவனித்துக்கொண்டிருப்பதால் ஏற்படுகின்ற மன அதிர்வின் வெளிப்பாடோ என்னவோ. காலையில் இருந்து மதியம் வரைக்கும் எங்கள் தளபதியார் மூன்று தடவைகள் அவர் களிடம் போய் சம்பாஷித்து விட்டு வேக வேகமாய் தோப் புக்குள் பதட்டப்பட்டுக்கொண்டு போனார். நல்லூர் இராசதானி யின் தளபதிக்கும் அன்னிய நாட்டு வணிகர்களுக்கும் என்ன சம்பந்தம்? இவர்கள் வணிகர் கள் இல்லை. அவர்களை இன்னும் உற்று நோக்கினேன். வாய் பேசிக் கொண்டே இருந் தது. ஆயினும் அவர்கள் பார்வை தோப்பை நோக்கிய தாகவே இருக்கின்றது. வியாபாரத்தைக் காட்டிலும் தோப்பையும் சுற்றுப்புறங் களையும் நோட்டம் விடுவ திலையே நாட்டமாக இருக்கின் றார்கள். இடுப்பை வேறு அடிக்கடி தொட்டுப் பார்த்துக் கொண்டார்கள்.

இல்லை...இல்லை... இல்ல வேயில்லை...இவர்கள் வணி கர்களே இல்லை... வேறுயாரோ இவர்கள்...வணிக வேடமணிந்த வேறுயாரோ. யார் இவர்கள்..? இவர்களுக்கும் தளபதிக்கும் என்ன சம்பந்தம்?

மனசுக்குள் திகில் பற்றிக் கொண்டது.

இங்கு ஏதோ சதி நடக்கப் போகின்றதுவன்னியர் களுடன் சேர்ந்து நல்லூர் இராசதானி யின் தளபதியுமாக சேர்ந்து, ஏதோ திட்டம் போடுகிறார்கள். .எங்கள் இராசர்க்கு எதிராகவோ அல்லது எங்கள் இராசதானிக்கு எதிராகவோ கெடுதல் ஏதோ செய்துவிடப்போகின்றார்கள்.



என்பது தெளிந்து போனது எனக்கு.

எது செய்வேன் நான்... என் தேசத்தை எப்படிக் காப்பேன்... தெய்வமே எனக்கு வீரத்தைக் கொடு... எதிரிகளை அழிக்கும் பலத்தைக் கொடு... வீரம் கொடு..! பலம் கொடு..!

உடல் எங்கும் வீர இரத்தம் கொதித்து பாய்ந்தது.. கண்ணி மைப் பொழுதில் அபாய மணியை ஓங்கி அடிஅடியென அடித்தேன்...

முதன் முதலாய் இப்போதுதான் இம்மணி ஒலிக்கின்றது போலும். துருவேறி கனத்து ஒலித்தது மணிதிசையெங்கும்.. வணிக வேடதாரிகள் அபாயம் புரிந்து உசார் ஆகத் தொடங்கு முன் பாய்ந்து சென்று - ஈட்டி கொண்டு இருவரையும் பல மாய்த் தாக்கினேன்... உடல் எங்கும் வீர இரத்தம் தொடர்ந்து கொதித்துப் பாய்ந்து கொண்டு இருந்தது..பிறகாவலாளிகளுக்கு எதுவும் புரியவில்லை.

இராசர்: மந்திரிகள்: படைவீரர் கள் என எல்லோரும் அவ் விடத்தே கூடிவிட்டனர். தளபதியாருக்கு சம்பவம் தெளிந்து விட்டது. போலும். படைவீரர்களின் முன்னால் நிற்பதற்கு பதிலாய்-மந்திரி களின் பின் பதுங்கிக் கொண்டு நின்றிருந்தார்- என்நேரமும் ஓடித்தப்புவதற்கு வசதியாய்...

"இராசரே... இராசரே... இவர்கள் சதிகாரர்கள். இந்த வன்னியர் களும் நம் தளபதியாரும் சேர்ந்து நம் நாட்டுக்கு எதிராய் சதி செய்யப்போகின்றார்கள்..."

ஆவேசமாய்ச் சொல்லி இராசரை வணங்கி நின்றேன். இராசரின் கண்கள் கோப ஆவேசத்தால் சிவந்துபழுத்தது. "சிறை பிடியுங்கள் இவர்களை" கட்டளை கொல்லன் பட்டறை நெருப்பாய் தெறித்தது.

"உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்த துரோகத் தளபதி எங்கே..."

உறுமிக் கொண்டே இராசர் மந்திரிகளைப் பார்த்தார். பார்க்கும் போதே... 'அவுக்' என்றோர் வினோதச் சத்தம் கேட்டது. தளபதியார் முட்டுக் கால் இட்டு மெதுவாய் தரை யில் சரிந்து கொண்டு இருந் தார்.. தலை ஒருபக்கம் சரிந்து தொங்கியது.. கண்கள் மேற் திசையாய் செருகிக் கொண்டு போனது. வலதுகை குறுவாளை இறுகப் பற்றி இருந்தது.. குரல் வளையில் இருந்து குபுக்குபுக் என இரத்தம் பாய்ந்து கொண்டு இருந்தது.. தளபதியார் தற் கொலை செய்து கொண்டார்.

சிறை பிடிக்கப்பட்டவர்களின் நெல்முட்டைகளை பரிசீலனை செய்த போது முழு உண்மை களும் தெரியவந்தன: ஓலை கள் மூலம். வன்னியர்களுடன் எங்கள் தளபதியாரும் சேர்ந்து கொண்டு பெரும் திட்டம் தீட்டியிருக்கின்றார்கள். எங்கள் இராசரைக் கொன்றுவிட்டு வன்னியர் பிரதேசத்தை விஸ்தரிக்கப்போவதாகவும்- அகன்ற இவ்வன்னியர் பிரதேசத்தின் முழுப்படைப் பொறுப்பும் - முக்கிய முதன் மந்திரிப் பொறுப்பும் எங்கள் தளபதியாருக்கு - எங்கள் நாட்டைக் காட்டிக் கொடுப் பதற்காக வழங்க இருப்பதாக வும் சொன்னார்கள் பிடிபட்ட ஒற்றர்கள்: பழுக்கக் காச்சிய இரும்பு மலவாயுள் புகுத்தும் போது. இத்திட்டத்தை செய லாக்க பூநகரிமுனை ஊடாக வும் யானைஇறங்கு துறை ஊடாகவும் நெல் வணிகம் செய்பவர்கள் போல் எழுபத்தி ஒன்பது ஒற்றர்களும்- நெல் மூட்டைக்குள் பதுக்கப் பட்ட வேல்: ஈட்டி: வீச்சரிவாள்: நான் முனை நீள் கூர்வாள் போன்ற



யுத்தமும்...

படிப்பகம்

www.padippakam.com

அதிபயங்கர போர் ஆயுதங்களு டன் முன்னூறு போர் வீரர் களும் நாட்டுக்குள் ஊடுருவி யிருக்கின்றார்கள் என்கின்ற சேதி தளபதியாரின் இடுப்பில் பதுக்கப்பட்ட ஓலையில் படித்ததும் இராசா் கதிகலங்கிப் போனார். எங்கும் ஒரே கொந் தளிப்பு. நாடு முழுவதும் பதட்டம்..
தளபதி இல்லாப் படையால் எது செய்வது என்று தெரிய வில்லை. இராசர் என்னை அர்த்தமாய்ப் பார்த்தார்.. செய் ஏதாவது செய்... எம் தாய் மண்ணை வன்னியரிடம் இருந்து காப்பாற்று... என்பதாய் இருந்தது அப்பார்வையின் அர்த்தம். அந்நிய எதிரிகள் நாட்டுக்குள் ஊடுருவியிருக்கும் சேதி நாலாதிக்கும் தண்டோரா போட இராசர் முன் நான் கட்டளை இட்டேன். தண்டோரா போட மக்கள் உசாரானார்கள். மக்களும் போர்வீரர்களுமாய் சேர்ந்து பூநகரி முனையையும் யானை இறங்கு துறையையும் மறித்துக் கொண்டு தேசம் முழுக்கத் தேட அத்தனை வன்னியர்களும் சிறை பிடிக்கப் பட்டனர்...
யானை வந்து மாலை போடாம லேயே இராசர்க்கு நிகராய் ஆனேன் நான். நாட்டைக்காத்த புலி என்றும் மாவீரன் என்றும் நாடுமுழுக்க நான்பேசப்பட்டேன். தோப்புக்கு உடனே வரும்படி இராசர் எனக்கு சேதி அனுப் பினார். ஓய்வு நாளில் இருக்கும் எனக்கு எதற்காக இராசர் அழைப்பு விடுகின்றார் என தெளிவாகவில்லை. போர் வீரனுக்கு எதற்கு ஓய்வு? ஓடிச் சென்று இராசர் முன் நின்றேன். சபை கூடியிருந்தது. அர்த்தமில் லாத சமயத்தில் எதற்காக இராசர் சபையைக் கூட்டியிருக் கின்றார்? பிடிபட்ட வன்னி தேசத்து எதிரிகளுக்கு மரண தண்டனை கொடுப்பதைப்பற்றி விவாதித்துக் கொண்டு இருக் கின்றார்களோ என்னவோ?
"வாரும் தளபதியாரே.."
இராசர் அரியாசனம் விட்டு எழுந்து நின்று எனை வரவேற் பது எனக்கு அந்நியமாகத் தோன்றியது.அருசையாகவும் இருந்தது. நான் தளபதியா? இராசர் என்னை அழைத்தாரா? திக்கித்திணறி: உமிழ்நீர் விழுங்கி தடுமாறி நின்றேன்.
"வாரும் தளபதியாரே."
இராசர் மீண்டும் அழைத்தார். இராசரையும் சபையோரையும் வணங்கி நின்றேன்.
"என்னை நீங்கள் தளபதி என விழித்து கேலிபேசுகின் றீர்கள்." சபையோரையும் இராசரையும் பார்த்துப் பேசி வெட்கப்பட்டேன்.

"இல்லை நீங்கள்தான் இனி எம் நல்லூர் இராசதானியின் தளபதி."
இராசர் உறுதியாய்தான் சொன் னார். ஆனாலும் முதன் மந்திரி மட்டும் முகத்தை வேறுதிசை திருப்பிக்கொண்டு இருந்தார். எனக்குக் கூட தளபதியாவதில் சற்றேனும் ஒப்புதல் இல்லை. தளபதி என்பது பெரும் பொறு ப்பு. ஹிருதயம் படபடத்து துரிதமாய் துடித்தது.

"நான் பயிற்சி அற்றவன். யுத்த தந்திரங்கள் கற்றறியாதவன். நான் எப்படி படையை முன் எடுத்துச் செல்வது? வெறும் படை வீரனாகவே இருந்து விடு கின்றேனே... இராசர் என்னை தயவு கூறவேண்டும்." என்ன பயம் எனக்கு. பௌவியமாகச் சொல்லி கைகட்டி நின்றேன். இராசர் புன்னகைத்துக் கொண்டே அரியாசனத்தில் அமர்ந்தார். பின், இடிபோல சிரித்தார். தோப்பே ஆடி அதிர்ந் தது. சிரித்தார். சிரித்தார். நெடு நேரமாய் தோப்பதிர சிரித்தார். நெடுவினாடி கடந்து சிரிப்படங்க அரியாசனம் விட்டு எழுந்து வந்து என் தோள்களை தட்டிக் கொடுத்தார்.

"இதுதான்.. இந்த அடக்கம் தான் தேவை மாவீரனுக்கு. தளபதியாரே நீர் எந்த பயிற்சி பெற்று வன்னிநாட்டு எதிரி களை சிறைபிடித்து வன்னி யனின் நயவஞ்சக சூழ்சியை முறியடித்தீர்? எவ்விடத்தில் யுத்த தந்திரம் கற்று-கூட இருந்து குழிபறித்த எம் கூட இருந்த வஞ்சக நரியிடம் இருந்து எம் நாட்டைக் காத்தீர்? புத்தி...புத்திதான் தேவை. உடல் பலத்தைக் காட்டிலும் மூளை விவேகம்தான் முக்கி யம். உம்மிடம் வீரமும் உண்டு விவேகமும் உண்டு. நீர்தான் இனி இவ் அகன்ற நல்லூர் இராசதானியின் முதன்மைத் தளபதி. இது இராச கட்டளை" இறுதியாய் இராசர் உறுதியாய் குரலுயர்த்திச் சொன்னார். ராசரின் கட்டளையை எப்படி மீறுவது. நான் தளபதி யானேன்.

தளபதியான நான் முதற்கட்ட மாய் யானை இறங்கு துறைக் கும் பூநகரி முனைக்கும் படை களை கொண்டு குவித்து- எங்கள் தேசத்தின் நுழை வாயில் எல்லையை பலப்படுத் தினேன். சூட்டோடு சூடாய் ஒற்றர்களை வன்னியர் பிர தேசம் எங்கும் அனுப்பினேன்- ஊரில் உழாத மாடுகளை வன்னிக்கு கொண்டு செல்லும் உழவன் போர்வையில்.இராசர் புளகாங்கிதம் கொண்டு எனை வாழ்த்தி பாடல் பாட புலவர் களுக்கு கூட பொன்முடி வழங்கினார். நாட்கள் செல்ல.. செல்ல ஒற்றர்களின் இரகசிய ஓலைகள் வர ஆரம்பித்தன...

* வன்னியன் அடிபட்ட புலியாக இருக்கின்றான். எந்நேரமும் எம்மீது யுத்த தர்மத்தை மீறிய பேடி யுத்தம் நடத்தலாம்.
* இப்போதும் அவர்கள்



யுத்தம்...

படிப்பகம்

www.padippakam.com

நாகரீகம் அடையாமலேயே இருக்கின்றார்கள். காட்டு மிராண்டிகளாகவும்-

உடல்கறுத்தும்-காட்டில் வாழ்வதால் யானை பலம் கொண்டும் இருக்கின்றார்கள். சில சமயம் ஒட்டகச் சித்தர் நல்லூர் இராசதானி வரும் முன்பு இங்கு இருந்திருக் கலாம்.

* இப்போதும் நாகபாம்பு, வைரவன், ஐயனார் போன்ற இழிசாதி தெய்வங்களைத்தான் தொழுகின்றனர். 'சாதிவேறுபாடு தெரியாதும்- உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்கின்ற வேறுபாடு தெரியாதும் அறிவிலிகளாக இருக்கிறார்கள்.

* நம் இராசரால் விரட்டியடிக் கப்பட்ட இழிகுல சனக்கூட்டம் வன்னியின் மேற்கு கரையோர மாய் செம்படவ தொழில் புரிந்து பிழைப்பு நடத்து கின்றார்கள்.

* சில ஆண்டுகளுக்கு முன்பு போர்த்துக்கல்லில் இருந்து மத வியாபாரம் செய்ய வந்த வென்நிற தோல்காரர்கள். நம் இராசர் கூட எம் தேசத்துக்குள் நடமாடக்கூடாது என தடை விதித்தாரே... அதே போர்த்துக் கேயர்கள் அவ் இழிகுல மக்களை கத்தோலிக்கர்களாக மதம் மாற்றிவிட்டார்கள்.

* நம் மதத்தை போல் அல் லாது அவர்கள் மதம்: எக்குல மக்களாயினும் ஆலயத்துக்குள் அனுமதிக்கப்படுகின்ற ன.கத்தோலிக்கர்களின் தெய்வ மான யேசு சாமியை இழிகுல மக்களும் தொட்டு தடவி வணங்குவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். இராசரின் கண்கள் கோபத்தால் சிவந்து பழுத்ததாம். நான் ஒதுக்கி விரட்டியடித்த இழிகுல நாய்களும்-தடை செய்த வெண் நிற மாடுண்ணும் பறங்கியனும் கூட்டுச் சேர்ந்திருக்கின்றார் களா? இழிகுலத்தான் உயர் நிலை கொள்கின்றானா? இராசர் கர்ஜித்தாராம் வெறி கொண்ட காட்டு இராசாபோல்... பூநகரிமுனையில் வன்னியர் களின் ஊடுருவலை கண்டறிய வும் படையணியின் உசார் நிலையை பரிசீலிக்கவும் எல்லையில் முகாமிட்டிருந்த எனக்கு அவசர ஓலை வந்தது. காலம் தாமதியாது துரித கதியில் தோப்புக்கு வரும்படி. இராசர் தன் கைப்பட எழுதியி ருந்தார். என்ன அவசரமோ என எண்ணிக்கொண்டே அன்றைய தினமே தலை நகரம்போனேன். இராசர் கோபமாய் வாயிலை விறைத்துப் பார்த்துக்கொண்டு- கால்மேல் கால் போட்டுக் கொண்டு அரியாசனத்தில் அமர்ந்திருந்தார். காஞ்சிபுரத்தில் இருந்து விஜயம் செய்த பங்கரச்சாரிய பெரியவரும் ஒட்டகச் சித்தரும் இராசருக்கு அருகருகே சரியாசனத்தில் அமர்ந்திருந்தனர்.

இடது புறமாய் மந்திரிகளும் பிரதானிகளும் அமர்ந்திருக்க- வலது பக்கமாய் பூணூல் பூண்ட பிராமணர்களும் பிரமை பிடித்தது போல் அமர்ந்திருப்பது வினோதமாய்த் தோன்றியது. எங்கள் இராசரின் சபையில் பிராமணர்களுக்கு இடம் இல்லையே. பாரத கண்டத்தில் தானே பிராமணர்களும் இராசசபைக்குள் அனுமதிக் கப்படுவதும் இராசரால் மதிக்கப் படுவதும். காஞ்சிபுரப் பெரியவர் இராசருக்கு எதையும் புதிதாய் புகட்டினானோ! இராசருக்கு மரியாதை செய்து வணங்கி காத்து நின்றேன். இராசர் கோபமாய் எனைப் பார்த்துக் கொண்டே இருந்தார்.



மந்திரி களும்கூட இறுக்கமாய் மௌனித்திருந்தனர். எனக் கேதும் புரியவில்லை. என் மீதுதான் ஏதேனும் தவறோ? நெடுவினாடிகள் கரைந் தோடியது. நான் அசையாது நின்றிருந்தேன்.

"வன்னியின் மேற்குக்கரையோர மாய் என்ன நடக்கிறது...?" இராசர் உறுமினார்?

"இனச்சுத்தம் கருதி தங்களால் விரட்டியடிக்கப்பட்ட தாழ்த்தப் பட்ட சனக்கூட்டம் அங்கு மீன் பிடித்து வாழ்வதாக ஒற்றர்கள் சொன்னார்கள்."

"அது மட்டும்தான் ஓலையில் உள்ளதா?"

"அவர்கள்: பறங்கியர்கள் சொல்கேட்டு கத்தோலிக்க மதத்தைத் தழுவி விட்ட தாகவும் சமூக நிலை உயர் வடைந்து விட்டதாகவும்..." முழுதாய் முடிக்காது பொரு ளுரை மட்டும் உரைத்து முடித்தேன்.

"அங்கு பாரும் தளபதியாரே..." இராசர் அரியாசனத்தில் இருந்து எழுந்து நின்று சுட்டிக்காட்டிய திசையில் பிராமணர்கள் திருதிருவென விழித்துக் கொண்டு இருந்தார்கள். நான் பார்த்ததும் இராசர் மறுபடியும் அரியாசனத்தில் அமர்ந்து கொண்டார்.

"போர்த்துக்கேயரின்- கத்தோலிக்கர்களின் கொட்டம் தாங்கமுடியாமல் மனம் நொந்து போய் இப்பிராமணர்கள் எம்மிடம் வந்திருக்கின்றார்கள். நாம் இவர்களுக்காக என்ன செய்யப்போகின்றோம். எம் மதத்தை எப்படிக் காப்போம்?" இராசர் என்னிடம் கேட்டார்.

"தனக்கு அமைதியும் நிம்மதி யும் தரும் மதத்தை ஒருவன் தேர்ந்தெடுப்பது மனித உரிமை களில் ஒன்று"

நான் சொல்ல இராசர் எனை வெறித்துப்பார்த்தார்.



படிப்பகம்

www.padippakam.com

ஒட்டகச் சித்தர் சடைபற்றிய தலைமுடியை ஒருகையால் உருட்டிக்கொண்டும் மறுகையால் சாடியில் இருந்து கருநிற வஸ்த்துவை சிறிது கிள்ளி எடுத்து சிறு உருண்டையாய் உருட்டி இராசரின் கையில் கொடுக்க அதை வாங்கி கடைவாயுள் குதப்பிக் கொண்டு இன்னும் கோபமாய் இராசர் எனைப் பார்த்தார். காஞ்சிபுர பெரியவர் இராசரின் காதில் ஏதோ குசுகுசுத்தார். இராசர் தலைய யாட்டினார். குசுகுசுப்பை ஆமோதிப்பதாய் இருந்தது இராசரின் உடல் மொழி.

“இழிகுலத்தான் உயர்குலத்துக் கான அந்தஸ்துப் பெறுவதும்-சமூகநிலை உயர்வடைவதும் மகாபாவம். கீதை ஒருபோதும் இதை அனுமதிக்காது என பெரியவர் கவலைப் படுகின்றார்.”

எனைப் பார்த்தும்மந்திரிகளைப் பார்த்தும் இராசர் சொல்ல அத்தனை பிராமணர் களும் தலையசைத்து ஆமாம் என்றனர். மந்திரிகளின் அர்த்த மான மௌனமும் இராசரின் பேச்சுத் தோரணையும் விபரீத மாய் எதையோ உறுதியது. சபை ஏற்கனவே அசம்பாவி தத்துக்கான விடயத்தை தீர்மானித்து விட்டது என்பது புரியலானது.

“தாழ்ந்திருப்பவன் உயர்வது பாவம் அல்ல வணக்கத்துக் குரிய இராசரே. கோபுரம் கட்டி வாழ்பவன் குப்பை மேட்டு ஆண்டியாவதும் ஆண்டி அரசாட்சி புரிவதும் காலத்தின் தீர்ப்பு. இதில் நாம் ஆத்திரப்படு வதில் அர்த்தம் இல்லை.”

“தளபதிவாள்: மனுவின் நீதி தெரியாமல் பேசுறேள்”

காஞ்சிபுர பெரியவர் முதற் தடவையாய் வாய்திறந்தார்.

“தளபதியாரே...”

இறுக்கமாய்... மென்குரலாய் எனை விழித்தார் இராசர். நேரியபார்வையாய் அவரை நோக்கினேன்.

“இராசசபை முடிவெடுத்து விட்டது, கத்தோலிக்க மதத் தைத் தழுவிய சகலரும் கொல்லப்பட வேண்டும் என இராச சபை ஏற்கனவே முடி வெடுத்துவிட்டது தளபதியாரே.”

இராசர் சொல்லச் சொல்ல என்னில் திகில் பற்றி எரிந்தது. ஹிருதயம் அறுந்து போகின் றது போன்று துடிதுடித்துக் கொண்டது. என்ன நியாயம் இது. போக்கணம் கெட்ட நீதியை எழுதிய மனு என்பவன் யார்? எந்தப் பாதகி பெற்றுப் போட்டாள் இந்த மனு நீதியை எழுதிய கொடும் பாத கனை. தான் எந்த சாமியைத் தொழவேண்டும் என்பதுவும் - அவன் உயர் நிலையை அடைவதும் எப்படி பாவம் ஆகிடமுடியும். நேற்று முன் தினம் வந்த ஒற்றன் சொன்னானே. குழந்தைகள்: பெண்கள்: முதியவர்கள் என்று மூவாயிரத்துக்கும் மேல் யேசுசாமியை வணங்குபவர்கள் இருக்கின்றார்களாமே.அத்தனை ஆயிரம் கத்தோலிக்கர்களையும் அரிந்து அரிந்து குவிக்க வேண் டும் என்பது என்ன கொடுமை. குழந்தைகள் மட்டுமே ஆயிரம் எண்ணிக்கை தாண்டுமே. கிறிஸ்தவக் குழந்தைகளின் கழுத்தை அரியப்போகும் சங்கிலியனின் வாள்களால் இந்து சமுத்திரம் சிவந்து போகப் போகிறதே.

“இராசர் மன்னிக்க வேண்டும். நாம் அவர்களுக்கு எதுவித சமூக உயர்வு கொடுக்காததும்-இந்துக்கோயில்களுக்குள் அவர்களை அனுமதிக்காததும் நம்குற்றம். அது மட்டுமல்லாது அவர்களை விரட்டியடித்ததும் நம் குற்றமே. அவர்கள்மேல் கோபமோ தாபமோ கொள்ள நமக்கு உரிமையில்லை என் பது என்பணிவான கருத்து.”

“தளபதியாரே...”

நான் சொன்னதைக் கேட்டு இராசர் உறுமினார். ஒட்டகச் சித்தர் இன்னோர் உருண் டையை உருட்டி இராசரிடம் கொடுத்தார்.

“நான் அப்போதே சொன்னேன்: முட்டாள்கள்தான் போரிடத் தேவை என்று. இராசர் என் பேச்சைக் கேட்கவில்லை.”

முதன்மை மந்திரி முணு முணுத்தார்.

“நீர் யாரிடம் உரைக்கின்றீர் என்று தெரிந்துதான் உரைக் கின்றீரா?”

இன்னோர் மந்திரியார் உணர்ச்சி வசப்பட்டார்.

இனியும் நாம் வாதம் செய்தால் தப்பான காரியத்தில் வந்து முடிந்துவிடும். அதுமட்டுமன்றி இராச குற்றபட்டம் வேறு பரம் பரை பரம்பரையாய் வழிநெடுக வந்துவிடும்.

“மேன்மை பொருந்திய இராசரே. நான் ஒருபக்க நியாயத்தைச் சொன்னேன். அது தவறு என இராசரும் சபையோரும் பெரியோரும் உணர்ந்தால் மன்னிக்க வேண் டும். இராசரே... உங்கள் மைத்துனரான கனகராய முதலியார்தான் பிரான்ஸிஸ் சேவியர் என்கின்ற கத்தோலிக்க குருவுடன் சேர்ந்து இத்தனைபேர் மதம் மாறக் காரணம் என்று நேற்று வந்த ஒற்றன் வாய்வழியாய்ச் சொன்னான்..”

நான் சொல்ல மன்னர் சிறிது தடுமாறினார். இடது புறமாய் அமர்ந்திருந்த பிராமணர்களும் ஆமோதித்து தலையசைத்து விட்டு இராசரின் தடுமாற் றத்தைப் பார்த்து இலேசாய்ப் பயந்தது போன்று இருந்தனர். தன்வீட்டுக்குள்ளேயே பேடி இருக்கின்றான் என்பது சகல ருக்கும் தெரிந்துவிட்டது என்பதைத் தெரிந்த இராசர் சங்கடமாகித்தான் போனார்.

“அந்த பேடியை நான் இங்கு வைத்தே கொண்டிருக்க வேண்

www.padippakam.com

டும். பறங்கியர்களுடன் உற வாடித்திரிகின்றான் என்பதைக் கேள்வியுற்றதும் கழுவில் ஏற்றி யிருக்க வேண்டும். அவனுக்கு மன்னிப்பு வழங்கியது தவறென இப்போதுதான் புரிகிறது."

இராசர் உண்மையில் கவலைப் பட்டார்.

"மேன்மை பொருந்திய இராசரே... சொல்லுங்கள் எது செய்ய வேண்டும் கட்டளைக்கு காத்திருக்கின்றேன்."

மன்னர் புன்னகைத்தார். அவர் முகம் வியர்த்திருந்தது.

மதம் மாறிய - உயர்நிலைய டைந்த இழிகுலத்தோர் எல்லோரையும் சிறுபிள்ளை முதியவன் உட்பட சகலரையும் வாள் கொண்டும் ஈட்டி கொண் டும் கொன்றழிக்க வேண்டும். இது இராச கட்டளை"

இராசர் கட்டளை இட மந்திரி மார் எழுந்து நின்று உயரக்கை உயர்த்தி நின்றனர். இராச கட்டளை பிரஸ்தாபிக்கும்போது இப்படி செய்வது வழமை யாக்கும்.

"இராசருக்கு முதலில் ஓர் சேதி தெரிவிக்கவேண்டும். போர்த்துக் கேயர்கள் துப்பாக்கி என்கின்ற- நெருப்பும் ஈயமும் துப்புகின்ற ஒருவித போர்க்கருவியை வைத்திருக்கின்றார்கள். போர்த் துக்கேயரின் காவல் இருக்கும் வரை நாம் அவர்களைநெருங்க முடியாது. அது போன்ற ஆயுதம் எமக்கு இல்லாத பட்சத்தில் நாம் அங்கு சென்று போரிடமுடியாது."


நான் என் கவலையைச் சொல்ல இராசர் அர்த்தமாய்ப் புன்னகைத்தார்.

"ஒற்றனின் கடைசி சேதி உமக்கு கிட்டவில்லையா தளபதியாரே?"

கேட்டுவிட்டு வினோதமாய் இராசர் எனைப் பார்த்தார். சொற்ப வினாடி மௌனத்தின் பின் தொடர்ந்தார்.

"யேசுவின் பிறந்தநாள் மார் கழியில் வருவதால் எல்லா பறங்கியரும் அந்தநாளை கொண்டாட கோவா நகருக்கும் போர்த்துக்கல் தேசத்துக்கும் சென்று விடுவார்கள்" இராசர் சொல்லி முடிக்கும் முன் பாகவே மனம் வியூகம் வகுக்கத் தொடங்கி விட்டது.

அர்த்த நடு நிசி...யேசு சாமி கோயில்... யேசு சாமியின் பிறப்பை வேண்டி எல்லோரும் கண்மூடி பிரார்த்தனையில் இருப்பார்கள்... மெழுகுவர்த்தி தவிர வேறு வெளிச்சம் இருக் காது... மார்கழி மாத கும்மி ருட்டு... அந்நேரம் வாள் கொண்டும் ஈட்டி கொண்டும்... இராச கட்டளையை நிறை வேற்ற நடு நிசியும் வணக்கஸ் தலமும் உகந்தது.



# அதன் இரண்டாம் பாகம்

மனிதம் முற்று முழுதாய் நாகரீகம் அடைந்து விட்ட தாக ஐயம் திரிபுற நம்பப்பட்ட காலகட்டம். இக்காலகட்டத்தில் தான் தலைவன் துரோகியான தும் - எதிரி ஸ்நேகிக்கப் பட்டதும் இக்கால்கட்டத்தில் தான்.அரசியல் காய் நகர்வுகளினால் மனிதம் சில சமயம் காயம் பட்டாலும் பார தூரமாய் எதுவும் ஆகிவிட வில்லை. மனித உரிமை அமைப்புகள் ஆங்காங்கே தோன்றியதைத் தவிர.

அசுரர்கள் ரகமாய் மலிந்து மனி தத்தை நசுக்க முற்படும் பொழு துக்ளில் மனித உரிமை அமைப்புகள் நசியும் மனிதத் தைக் காக்கத் தவறும் பட்சத் தில் கடவுள்கள் ஆயுதங்களு டன் அவதரிப்பர். அங்கும் இங்கும்-மூக்கிலும் மூலையிலும் - சந்திலும் பொந்திலும் - தூணிலும் துரும்பிலும் - குடிசையிலும் கூரையிலும் - எங்கும் எங்கும் ஆயுதம் தரித்த கடவுள்கள் ஏகமாய் அவதரித்தனர்.


இக்காலகட்டத்தில்தான் சித் தாந்திகளின் ஆசீர்வாதம் பெற்ற நான் நசியும் மனி தத்தை மீட்க ஆயுதம் அணிந்து அவதரித்தேன்.

அண்டம் கிடுகிடுங்க - ஆகாசம் நடுநடுங்க ஆயுத தாண்டவம் ஆர்ப்பரித்தது. ஒன்றாகி பல வாகி நூறாகி ஆயிரமாயிரமாகி அழிந்தொழிந்தனர். அரக்கர் கள்... ஆயினும் மானுடம் நசி



படிப்பகம்

www.padippakam.com



வதை தடுத்திட முடியவில்லை. ஆயுதம் மானுடத்தின் விரோதி - அது ஒருபோதும் மானுடத் துக்கு மீட்சி கொடுப்பதன்று. ஆயுதமும் மானுடமும் முரண் பாடானவை. தொடர்பு நிலை யற்றவை. ஆயிரம் தாண்டிய உயிர்கள் அழிந்த பிற்பாடு தெளிவு நிலை அடைகிறது புத்தி. ஆயுதம் மானிடத்தை மீட்கும் என்பது முட்டாள்தனம்.

'துப்பாக்கி முனையில்தான் சுபீட்சம் பிறக்கும்' என்னும் அர்த்தத்தில் சித்தாந்திகள் சொன்னார்களே. சித்தாந்திகள் புத்திசாலிகள் அல்லவா. மேதாவிகளிடம்தானே சித்தாந்தமே பிறக்கிறது. என னவோ துப்பாக்கி முனையில் உயிர் பறிக்கும் ரவைகள்தான் பிறக்கும் உயிர்களை கொல் வதைத் தவிர வேறு என்ன தெரியும் துப்பாக்கிக்கு? மானுடம் மீட்க துப்பாக்கி என்பது எத்தனை பெரிய முட்டாள்தனம். அப்படியாயின் சித்தாந்திகள் புத்தியற்ற வர்களா? அவர்கள் எப்படியோ போகட்டும். மானுடம் மீட்க ஆயுதம் அணிந்த நான் முட்டாளா புத்திசாலியா? சித்தாந்தி என உணர்கின்ற நேரத்தில் முட்டாளாகவும் - முட்டாள் என உணர்கின்ற நேரத்தில் மனிதனாகவும் தெளிவுறும் தத்துவார்த்தமா? எது எப்படியோ முட்டாளாக இருப்பதில் நிறையவும் சௌக ரியம் இருக்கிறது. கேள்விகள் ஒரு போதும் இல்லை.

காத்தான்குடியைக் கொழுத்து -
சரி
எல்லா சோனகனையும் துரத்து
- சரி
மக்காவுக்கு போறவனை ஒரேய டியாய் மக்காவுக்கு அனுப்பு
- சரி
தொழும் நேரம் வெட்டிக் கொல்
- சரி
எல்லா பதில்களும் திருப்தி கொடுக்கும்.

நம் மொழி தமிழ், நாம் தமிழர் கள் - ஆமாம்!
அவன் மொழி தமிழ், ஆனால் சோனகன் - ஆமாம்!
நம்சாமி பிள்ளையார், அவன் சாமி அல்லாஹ் - ஆமாம்!
சோனகன் காட்டிக்கொடுக்கி றான். - ஆமாம்!

உண்மைதான் முட்டாளாக இருப்பதில் நிறைய சௌக ரியம் இருக்கத்தான் செய்கிறது.

கொல் என்றால் கொல்லலாம். கொழுத்தென்றால் கொழுத்தலாம்.

ரம்பாவின் தொடைகளையும் மந்தாராவின் முலைகளையும் மணிக்கணக்காய் விவாதிக் கலாம். ஐஸ்வரியாராய் முலை கள் சிலிக்கோன் ஜெல்லால் நிரப்பி செதுக்கப்பட்டதா, இல் லையா என்பதை அறிய வாராந்திரிகளை வாரம் தவ றாமல் படிக்கலாம்.



அதிர் கோண்டாம் பருவம்

www.padippakam.com

டில்லிக்கு அந்தப் பக்கம்
பஞ்சாப்பு
அங்க நான் பறிச்சன்
றோசாப்பூ
துருவி வச்ச தேங்காய்ப் பூ
நெஞ்சில முளைக்கிது
வாழைப்பூ
அக்கா பொண்ணு குஸ்பு
இரண்டுபேருமா பண்ணினம்
தப்பு-அவ
திங்கிறா இப்போ மாங்காயோட
உப்பு
ஜலக்கு ஜக்கா ஜலக்கு ஜக்கா
அடங் கொக்க மக்கா கொக்க
மக்கா...

பாடல்களைக் காது குளிரக் கேட்டு ரசிக்கலாம். கோபம் வராமல் குமுதம் குட்டிக் கதைகளைப் படிக்கலாம். அதிகம் ஏன் மூன்றெழுத்து பூ நடிகையுடன் இத்தனை காலமாய் சரசம் புரிந்த நான்கெழுத்து சுந்தர இயக்குனர்: பூ நடிகையை கைகழுவிவிட்டு மூன்றெழுத்து தொடையழகியான ரம்ப நடிகையுடன் உல்லா விடுதிகளில் கதை (!) டிஸ்கஸ் செய்கிறார்! என்கிற தினமுரசின் கிசுகிசுக்களில் சம்பந்தப்பட்ட நடிகைகளை கண்டு பிடிப்பதற்காய் மண்டையைப் போட்டு உடைத்துக் கொள்ளலாம்.

முட்டாளாக இருப்பதில் நிறையவும் சௌகரியம் இருக்கத்தான் செய்கிறது. சே... இப்போதெல்லாம் அனாவசியமெனபிறர்க்கு படுகின்ற கேள்விகள் என்னுள் எழுவதும் - அதைக் கேட்பதுவும் பிறர்க்கு பிழையெனப்படுகின்றதோ என்னவோ. நான் தனித்து விடப்படுவது போன்றும் - தப்பித்து ஓடுவது போன்றும் - இருள்சூழ்ந்த நிலத்தடியில் அடைக்கப்படுவது போன்றும் - என் மூளையை நாய் நக்குவது போன்றும் உண்டாகும் உணர்வலைகளை கட்டுப்படுத்திட முடியாது போகிறது. கொலைகள் அற்ற ஒரு வாரம் சுகமாய் இருந்தது.

'ஆயுதத்தோட ஆளக்காணல்லயே..' என்று கவலைப்பட்டு தேடிக்கொண்டிருப்பானுகள். தேடட்டும். 'குடல வெள்ளாமைக்கு இல்லாட்டிக்கூட பரவாயில்ல எண்டு போட்டு சக்க கட்டுறத்துக்கு எண்டு கேட்ட ஒடனே மூட்ட மூட்டயா யூரியாவ தூக்கித் தரல்லயா தம்பி நாங்க? காத்தான்குடியில ஊடு பிள்ளயல் இருந்தாலும் வயவாய்க்கால் எல்லாம் ஆத்துக்கு இஞ்சால தானே.. நாங்க ஆருமெனேய்? காசு கேட்டு நாங்க எப்ப இல்ல எண்டு செல்லிரிக்கம் செல்லுபாப்பம். அறுத்துப் போட்ட வெள்ளாமைய எரக்கமில்லாம கொழுத்திப் போட்டயே... வகித்துப் புள்ளத் தாச்சிய உயிரோட போட்டு பத்தவக்கிர மாதிரி எலவா நீ இந்த சூட்டக் கொழுத்தினது. நீ இப்படி செய்யலாமா?'

பிசிறு தட்டிய குரலில் அழுகின்ற கண்களுடன் பேசும் சின்னலெவ்வ காக்காவின் வெண்ணிற ஆடைகளில் எல்லாம் திட்டுத்திட்டாய் சாம்பல் அப்பியிருந்தது. 'எனக்கு இந்த விஷயம் தெரியாது காக்கா. நான் ஒரு கிழமையா...' மனது உறுத்த தயங்கித் தயங்கிச் சொன்னேன். 'நீ யாழ்பாணத்தில இருந்து எங்கட இனசனத்த தொரத்தி உட்டுத்தாய் அப்ப நான் அவ்வளவா கவலப்படல தம்பி. எண்பத்திநாலாம் ஆண்டு எங்கட ஆடுமாடு எல்லாத்தையும் பத்தாயிரத்துக்கு மேல பளூகாமப் பக்கம் சாச்சித்துப் போய் ஒரு கிலோ ஆட்டுறைச்சி ஒரு ரூபாக்கும் மாட்டுறச்சி அம்பது சதத்துக்கும் நீ விக்கெக்க நாங்க என்னமும் கதைச்சமா தம்பி. ஏன் நீ இப்பிடி செஞ்சி போட்டாய்? விளைஞ்ச வெள்ளாமய சாம்பலாக்கிப் போட்டாயே'

காக்கா கேட்கக் கேட்க மனது பாரமாய்ப் போகிறது எனக்கு. கண்கள் சிவந்தும் வீங்கியும் இருந்தது. நெடுநேரமாய் அழுதிருப்பார் போலும். எனக்கும் கூட மனது பாரமானதால் வெளிக்காட்டிக் கொள்ளாது அழுது கொள்கிறேன். கருகி சாம்பலாகிப் போன சூடுகளில் இருந்து புகை புகைந்து கொண்டு இருந்தது. காற்று சுழன்றடிக்க சாம்பலுடன் சேர்ந்து நெருப்புத் துகழ்களும் மேலெழுந்து பறந்து போயின. இந்தக் கொடுங்காரியத்துக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை எப்படிப் புரியவைப்பேன் சின்னலெவ்வைக் காக்காவுக்கு? காக்கா விறுவிறுவென எங்கோ வேகமாய்ப் போகிறார். இதுகளிடம் பேசி என்ன ஆகப்போகிறது என நினைத்திருப்பாரோ என்னவோ.

“வெள்ளாம போனாப் போகிது உசிரயாவது காப்பத்துவம்” என நினைத்துக் கொண்டாரோ என்னவோ. “இப்பல்லாம் நான் அப்படி இல்ல காக்கா” என மனது சொல்லச் சொல்லியது. நான் சொன்னால் காக்கா என்ன நம்பவா போகின்றார். வலது தோளில் இயமன் தொங்குகின்றானே. தோளில் தொங்குவதைக் கழற்றி இருகைகளாலும் பிடித்து முகத்துக்கு நேராக கொண்டுவந்து பார்க்கிறேன். ஜடம்! பாவம் இதற்கு என்ன தெரியும்?

விடியல் சூரியன் கொழுத்த ஆரம்பிக்கும் முன்னதாகவே பிரதேசம் எங்கும் வெகிர் அடித்துக் கொண்டிருந்தது. எத்தனை சூடுகள் எரிந்து சாம்பல் ஆகின என்று கணக்கெடுக்க முடியாதபடி கண் எட்டும்திசையெங்கும் புகைந்து கொண்டு இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

எத்தனை தொழிலாளிகளின்
உழைப்பு எத்தனை ஆயிரம்
வயிறை நிரப்பப் போகும் நெல்
மணிகள் எத்தனையோ
இலட்சம் மனங்கள் எல்லாமும்
ஒரு இரவுக்குள் சாம்பலாகிக்
கிடக்கிறது களத்து இருட்டில்.

ஏன்? நெஞ்செரியும் இந்தத் தீ
ஏன்?
எந்த சாமியை எந்த பகவானை
குளிர்விக்க இந்த வேள்வி?

“இந்த பொட்டணிக்காக்கா
எங்க பொயித்தான் ஒரு கிழ
மையா? வரிச காலமும் அது
வுமா? ஆத்தவள் பள்ளிக்கு
போட்டுப்போற சட்டைக்கு
ரெண்டு யார் வெள்ளைப்
பப்பிளின் வாங்கி..லாம் என்
டால் இவனைக் காணல்
லயே.. எண்ட கைச்சட்டயும்
முதுகால பிரிஞ்சி பொயித்து.
புளியந்தீவுக்கு போய் சீத்த
வாங்கிறது எண்டால் லேசிப்
பட்ட வேலயா?” பொட்டணிக்
காக்காவை காணாது அம்மா
சலித்துக் கொள்வாள்.
முன்னர் எல்லாம் காத்தான்
குடியில் இருந்து பொட்டணி
யில் துணிபுடவைகளை
கட்டிக்கொண்டு இருபத்தி
ஐந்து மைல்கள் சைக்கிளை
ஓட்டிக்கொண்டு அவர்கள்
வந்தால்தான் ஏழை அம்மாக்
களுக்கு உடுதுணிகள். உடுபுட
வைகளுக்காய் அம்மாக்கள்
காத்திருக்க-எங்கே
போனார்கள் இந்த
பொட்டணிக்காக்காக்கள்?
துணிகளையும்
சைக்கிளையும்
கொன்றவர்கள் எடுத்துக்
கொள்ள - மூளை
சிதறிய காக்கா
அரைகுறையாய் கிரான்
குளக் காட்டுக்குள்
புதைக்கப் பட்டது
எப்படித் தெரியும்?
காத்திருந்து விட்டு அம்மா
துணிவாங்க புளியந்தீவு போய்

இருப்பாள். உம்மா இப்போதும்
காத்திருப்பாளே.
மூணு போகம் வெளஞ்ச
ஒடன... ஒண்ட
மூத்த மாமன் கொண்டோடி
வருவான்
முன்னூறு சாக்கு நெல்லு
ஆராரோ ஆரிரரோ...
சித்தாண்டி சின்ன மாமன்
ஆண்டி முருகன் தீர்த்தம்
கொண்டு
ஓடோடி வருவான்
ஆராரோ ஆரிரரோ...
பாழப்போன பழுகாமத்தானோட
ஓடிப்போன உன்னோட மாமி
மூத்த மகன உனக்கு
கட்டித்தர பாலையடி வட்
டைக்க கிடக்க வயலோட
உறுதிய
கொண்டோடி வருவான்
ஆராரோ ஆரிவரோ...
....
.வட்டானையாரு
வயலையெல்லாம் பாப்பாரு
கூத்தாடப் போன உன்னோட
அண்ணார அண்ணாவியாரு
பாப்பாரு
பால நீ குடிச்சித்து படுத்துறங்
காயோ என்னோட சோனகத்து
முட்டாசே...

சோனகத்து முட்டாசைத்தவிர
என்னை உவமிக்க வேறு
பொருள் கிடைக்கவில்லை
அம்மாவுக்கு.
முன்னூறு சாக்கு
நெல்மூட்டையைக் காட்டிலும்



சித்தாண்டி
முருகன் தீர்த்தத்
தைக் காட்டிலும்
பாலையடி
வெட்டை
வயலைக்காட்டிலும்
மாமி வீட்டு
மகளைக்காட்டிலும்
கவர்ந்தது
என்னவோ
சோனத்து
முட்டாசிதானே...

சோனகரும் நாங்களும் ஸ்நேக

மாகத்தானே இருந்தோம்.
ஒன்றோட்டு ஒன்றாய்தானே
இருந்தோம். ஒரு மொழிதானே
பேசினோம். அவர்கள் அரபும்
நாங்கள் சமஸ்கிருதமுமா
பேசினோம். இல்லையே... ஒரே
பள்ளியில்தானே படித்தோம்.
சரஸ்வதி பூசைக்கு, இக்பால்
வேஸ்டி கட்டி... திருநீறு பூசி
கைகூப்பி நின்று
“ஆயகலைகள் அறுபத்தி
நான்கினையும் ஏய
உணர்விக்கும் என் அம்மை”
என்று நெஞ்சுருகத்தானே
பாடுவான்.

என் புறம் கையில் அருவருப்
பாய்த் தோன்றிய- உண்ணிகள்
உதிர்ந்து போக வேண்டி
கல்முனைக் கடற்கரைப் பள்ளி
வாசலுக்கு உப்பு தருவதாக
நேர்த்திக் கடன் வைத்தாளே
அம்மா.

நான் கூட நம்மான் நோன்பின்
இறுதி மாலையில்இக்பால்
வீட்டு முற்றத்தில் இருக்கும்
கடற்கரையில் நின்று தலை
யில் துணிகட்டி பிறை நிலா
பார்த்திருக்கின்றேனே...

என்ன ஆயிற்று எங்களுக்கு?
கண்கள் கலங்கி வழிந்தன...
அடித்த காற்றில் கண்களுக்
குள் சாம்பல் அப்பிக்கொள்ள
கசக்கி எரிகிறது கண்கள்.
சாம்பலாகிப் போன கூடுகள்
புகைந்து கொண்டிருக்க பற்றி
எரிகிறது நெஞ்சம்.

யார்..,யார்? யார் இட்ட தீ இது?
இதற்கோர் முற்றுப்புள்ளி
வேண்டாமா?
இதுவே கடைசியாக இருக்கட்
டுமே. இந்த துவக்கும் வேண்
டாம். சித்தாந்திகளின்
சித்தாந்தமும் வேண்டாம்.
சாந்தி வேண்டும். எரியும்
தேசத்தில் புற்கள் முளைவிட
வேண்டும். பூக்கள் பூத்திட
வேண்டும். சாம்பல் மேடெல்



படிப்பகம்

www.padippakam.com

லாம் மீண்டும் களத்து மேடாக வேண்டும்.
துவக்கையும் மூன்று மகசினை யும் மேசையில் வைத்தேன். அவர்கள் எல்லோரும் விநோத மாய் என்னைப் பார்த்தார்கள். நான் இறுக்கமாய் நின்றிருந் தேன்.
“வாரும்... ஒரு கிழமையாய் எங்க போன நீர்?”
சுந்தர அம்மானின் கேள்விக்கு பதில் சொல்ல வேண்டும் போல் எனக்குத் தோன்றவில்லை.

“இயக்க கட்டுக்கோப்பை மீறுறதால என்ன விளைவு ஏற்படும் என்று உனக்குத் தெரியும்தானே..?”
சுந்தர அம்மானை வெறுப்பாய்ப் பார்த்தேன். ஒன்றரை வருடம் தான் யாழ்பாணத்தில் இருந் தார். ஒட்டிக்கொண்ட பிறதேச தமிழை அவரால் கழற்ற முடியவில்லை.

“முஸ்லிம் சனத்தின்ர சூட்டுக்கு ஆரு நெருப்பு வச்சது?”
கோபமாய்க் கேட்ட என்னை... விழிகளை மட்டும் உயர்த்தி மேற்பார்வை பார்த்து, இதமாய் ஒருவித வீரக்களிப்பாய் புன்னகைத்தார். பின் உடல் முழுவதும் அசைய தலையை மேலும் கீழுமாய் ஆட்டி உடல் மொழி பேசினார். அவரது உடல்மொழி எனக்குப் புரிய வில்லை என நினைத்தாரோ என்னவோ
“நான்தான்! நேற்று இரவு. மொத்தம் ஐம்பத்திமூணு. எல்லாம் சாம்பல். அது சரி ஒரு கிழமையா எங்க போன நீர்?”
என்றார் வாய் மொழியாய்.
.....
சிறு வினாடி இடைவெளிக்குள் மௌனமாகி எனைப் பார்த்தார். பின்
“எத்தனை தரம் அவையளுக்கு கடிதம் அனுப்பினாங்கள். இந்தப் பக்கம் தொழில் செய்யப்போடாது எண்டு. இனி வரமாட்டாங்கள்.”
சொல்லி முடிக்கும்போது நிதானமாகி இருந்தார்.
“அதுக்கு நெல்லுச் சூட்டுக்கா நெருப்பு வைக்கிறது? நமக்கு மாதிரி அவனுகளுக்கும் இதுதான் பாரம்பரிய மண்.”
என்னில் ஆத்திரம் தணிய வில்லை.
“போராட்டம் எண்டு வந்த பிறகு நெல் என்ன சோனி என்ன? நம்மளின்ர பாதைக்க குறுக்க வந்தால்...? அது என்ன ஒரு மாதிரியா கதைக் கிறீர். மேலிடத்தில் இருந்து இரண்டுபேர் வந்திருக்கினம்.. தெரியுமா உமக்கு”
சுந்தர அம்மான் சொல்ல நெஞ்சுக்குள் திக்கென்றது.
“எதுக்கு இப்ப. இஞ்ச... மேலிடத்தில இருந்து..”
..... சுருக்கிக் கொண்டேன்.
“நம்மளோட வேகம் காணாமல் இருக்குதாம். வடக்கு மாதிரி கிழக்கில நடவடிக்கை அவ்வ எவு திருப்தியா இல்லையாம். சோனிமாரோட நடவடிக்கை களை கட்டுப்படுத்தி சில ஒப்புரேசன் செய்ய வேணு மாம்.”
சுந்தர அம்மான் சொல்லச் சொல்ல திகில் பற்றி எரிந்தது இதயத் துக்குள்.
சிங்களவன்: சிறுபான்மையான எம்மை இம்சிக்க - நமக்கு சிறுபான்மையான சோனகரை நாம் இம்சிப்பதா?
சிங்களவன் மோடன் எனில்: நாம் யார்?
யுத்தத்தை நாம் விரும்ப வில்லை. யுத்தம் எம்மீது திணிக்கப்படும் போது... நாம் ஆயுதம் ஏந்தி அதற்கு எதிராய் போராடாமல் இருப்போமாயின் அது எம் இனத்துக்கு செய் கின்ற துரோகமாகிவிடும். என நாளை ஒரு இஸ்லாமியர் குழந்தைகளின் கவச அரண் களுக்குள் இருந்து கொண்டு அறிக்கை விட ஆரம்பித்து விட்டால்..?
தாங்குமா தாய் மண்?
சாம்பலுக்குத்தான் தேசமா?
“முஸ்லீம் சனத்தோட இன்னும் இன்னும் பிரச்சனையை வளர்க்க நான் விரும்பவில்லை...
எண்பத்திமூணுக்கு முதல் ஒழுங்காத்தானே இருந்தம். இப்ப என்ன வந்திட்டுது நமக்கு?”

“அப்ப நாமள் மடையரா இருந்திட்டம்.”
எட்டத்தில் சத்தம் கேட்டது. புதிய குரல். வடதிசையில் இருந்து கிழக்கை துரிதப்படுத் தவும் முஸ்லீம்களுக்கு ஒப்புரேசன் செய்வதற்காகவும் வந்தவர்களில் ஒருவர் போலும். சத்தம் கேட்டு ஒரு மௌன இடைவெளியின் பின் இருவர் வந்து என் முன் நின்றனர். தலையை ஆட்டி: கண்களில் குரோதமும் உதட்டில் புன்ன கையுமாய் அறிமுகமாக்கிக் கொண்டனர். அதே பாசையில் நானும் அறிமுகத்தை ஏற்றுக் கொண்டேன். பலத்த காற்று அடித்துக்கொண்டிருந்தது. தென்னை தலைவிரித்து ஆடு கின்ற சத்தம் பேயோசையாய்க் கேட்டது. இந்நேரம் எரிந்த சூடு களின் சாம்பல் திசை கெட்டு பரவிப் பரந்து கொண்டிருக்கும் பிரதேசம் எங்கும்.
“மன்னார் பள்ளிவாசல் ஞாபகம் இருக்குத்தானே.. இவர்தான்!”
சுந்தர அம்மான் ஒருவரை காட்டி பெருமைப் பட்டுக் கொண்டார்.
அந்த ஒருவர்.
“நீங்கள்தானாமே அம்பிளாந் துறை சந்தியில வச்சி மக்கா வுக்குப் போன மௌலவி மாரை...”
என்றார். நான் தலைகுனிந்து கொண்டேன். வேறு எதுவும்



படிப்பகம்

www.padippakam.com

எனக்குத் தோன்றவில்லை அதைத்தவிர.

"யாழ்பாணத்தில இருந்து சோனகச் சனத்த துரத்தின நாளான வார வெள்ளிக்கிழமை இஷாத் தொழுகை முடிய கண்டனம் கலந்த அனுதாபக் கூட்டம் நடத்தப் போறாங்க ளாம். உங்களுக்கு காத்தான் குடியில இருக்கிற மூலை முடுக்கெல்லாம் நல்லாத் தெரியுமாமே..?"

அந்த ஒருவர் பேசிக்கொண்டே இருக்க தலை சுற்றுவது போன்றும் இதயம் எகிறிக் குதிப்பது போலும் இருந்தது. நெடுநேரம் மௌனித்திருந்தேன். என் மௌனம் அவர்களை எதுவேனும் செய்திருக்க வேண்டும்.

"ஏன் ஒண்டும் சொல்லாமல் இருக்கிறீர்?"

"முஸ்லிம் சனத்தோட இனியும் பிரச்சனை பட்டுக்கொண்டிருக்க எனக்கு விருப்பம் இல்ல. அதுகள் நமக்கு என்ன செய்யுதுகள்?"

அவர் என்னை ஒரு மாதிரியாய்ப் பார்த்தார். என்மேல் வெறுப்பாரோ என்னவோ..

"நீர் விஷயம் எதுவும் தெரியாத ஆளா? அவங்களாலதானே யாழ்ப்பாணத்துக் குள்ள... தமிழன காட்டிக் குடுக்கிறவன் பாடம் படிக்க வேணும்."



சற்று கோபமாகத்தான் இருந்தார்.

"ஏன், சோனகன் மட்டும்தான் காட்டிக் கொடுத்தானா? யாழ்ப்பாணத்தான் காட்டிக் குடுக்கல்லயா?"

நான் கூட கோபமானேன். விழி விரித்தார்... புருவம் உயர்த்தினார்.

"யாழ்ப்பாணத்தான் காட்டிக் குடுக்கிறானா? ஆதாரம் இல்லாமல் கதைக்காதேயும்"

அவர் கேட்க வேறுதிசையில் நான் முகத்தை திருப்பிக் கொண்டேன்.

அவருக்கு புரையேறியது- கனநேரம் ஆடிப்போய் நிதான மானார்.

"அதுதான் அவங்களயெல்லாம் தட்டியாச்சே.."

சமாதானம் ஆனார். ஆனாலும் வியர்த்திருந்தார்.

சுந்தரத்தாருக்கு என்ன பேசு வது என்றோ எது செய்வது என்றோ எதுவும் தோன்றாது திணறிக் கொண்டிருந்தார்.

நான் நிதானமாய் சுவாசித்துக் கொண்டிருந்தேன். காலம் நல்லதாய் போயிற்று த.செல்வாவிற்கு. நாங்கள் பிறந்த உடனே அவர் செத்துப்போனார். யார் கண்டது இன்றவர் இருந்திருப்பின் அவர் கூட துரோகியாக இருப்பார்...

"அதுமாதிரி காட்டி குடுக்கிற முஸ்லீம் சனத்த புடிச்சி வச்சி மண்டையில போட வேண்டியது தானே. அத விட்டுப்போட்டு ஊரைவிட்டுத் துரத்தினதும், பள்ளிவாசலுக்குள் பூந்து வெட்டிக் கொல்லுறதும் என்ன வேலை? தமிழனுக்கு ஒரு நியாயம் சோனகருக்கு ஒரு நியாயமா? அல்பிரட் துரையப்பா காட்டிக் கொடுத்தான் எண்டு தானே கொண்டம். எல்லாக் கத்தோலிக்கரையும் ஏன் அப்பவே யாழ்ப்பாணத்த விட் டுத் துரத்தயில்ல? எனக்கு உங்களோடை இந்த யாழ்பாணமயம் என்ன எண்டு விளங்கயில்லை.எவ்வளவோ அறியாயம் நடந்தும் ஒரு சோனகரும் நாட்ட விட்டு ஓட யில்ல. ஏன் சிங்கள ஊருக்க கூட போகயில்ல. சுத்தி சுத்தி இந்த தமிழ் மண்ணுக்கதான் திரியுதுகள். ஆனா யாழ்பாண ஆக்கள் அப்படியா? அந்தக் காலத்திலேயே எரிச்சுப் போட்டான்கள் நூலகத்த எரிச் சுப்போட்டான்கள் என்று சொல்லி சொல்லி யாழ்ப் பாணத்த விட்டு ஓடிப்போய் எத்தினை பேர் யூரோப்பில பணக்காரர் ஆயிட்டாங்கள். இவ்வளவு பிரச்சனை நடந்தும் இன்னும் ஒரு சோனகனும் நாட்ட விட்டு ஓடயில்ல. நம்மள விட சோனகச்சனத்துக்குத் தான் தமிழ் மண்ணுல பற்று மாதிரி தெரியிது"

சொல்லி முடிக்கும் போது உடல் எங்கும் எனக்குக் கூட வியர்த்திருந்தது. அவர்கள் நான் சொல்வதை மிக நிதானமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். நெடு வினாடி மௌனத்தின் பின் கொடுப்புக்குள் புன்னகைத்துக் கொண்டார்.

"நீர் வெளிநாட்டில இருக்கிற சனத்த குற்றம் சொல்லா தேயும். அவங்கள் தாற காசில தான் இண்டைக்கு சண்டையே நடக்கிறது.."

என்றார். பெருவிடயம் ஒன்றை எனக்கு புரியவைத்து விட்டோம் என பெருமிதப்பட்டுக்கொள்கின்றார் என்பது அவர்களில் தெரிந்தது.

எனக்கு பலமாய் சிரிக்க வேண்டும் போல் இருந்தது. இருந்தாலும் புன்னகைத்துக் கொண்டேன்.

"வெளிநாட்டில இருக்கிறவன் காசு தரத்தானே வேணும், சண்டை நடத்துறதுக்கு. இலங்கையில சண்டை நடந்தால்தானே வெளிநாட்டில அவங்கள் பிழைப்பு நடத்த முடியும். இங்க சமாதானம் வந் திட்டால் அவயலோட சொகுசு வாழ்க்கை அங்க நாறிடுமே.



படிப்பகம்

ஒட்டுமொத்தமா எல்லாரையும் கப்பல் ஏத்தி விட்டுருவாங்கள் வெள்ளக்காரனுகள். இலங் கையில சண்டை முடிய வெளிநாட்டுத் தமிழன் விரும்ப மாட்டான். சண்டை நடத்த கட்டாயம் காசு தருவான் கள்தான்."

என்பேச்சு அவங்களை கோபப்படுத்தி விட்டதுபோலும். இதுவரையும் எதுவும் பேசாமல் நின்றிருந்த மற்ற ஒருவர் என்னை விரோதியாவும் வினோ தமாயும் பார்த்தார்.

"நீர் என்ன எடுத்ததுக்கெல்லாம் விதண்டாவாதம் பேசிக் கொண்டு. நீர் சத்தியபிரமாணம் எடுத்தது ஞாபகம் இருக்கோ..." அந்த ஆள் சொல்ல.. மண்டை விறைத்தது. மூளை பழயபடி கழுவப்பட்டு நிர்மலமாயிற்று. சத்தியப்பிரமாணம் ஞாபகம் இருக்கிறது. ஞாபகம் இருக்கிறது இருக்கிறது.

என் ஈ........

தேசத்துக்காகவும்..........

.................தேசிய

....உயிரையும்...........

...விடுதலை


வேள்வியில்...

....என்னை நானே...

...உயிராயுதம்...

....தாகம்... தாயகம்!

விட்டுவிட்டு மண்டைக்குள் ஓங்காரம் ஒலித்தது. பிற சிந்தனைகள் எதுவும் என் மூளைக்குள் புகக்கூடாது. நான் என் தேசத்துக்காகவும் அதன் விடுதலைக்காகவும் படைக்கப் பட்டேன். என் உடல், உயிர் சகலமும் சகலமும் என் தேசத்துக்கே தேசத்துக்கே.. மூளை வியூகம் வகுக்கத் தொடங்கியது...



www.padippakam.com

# சிறை

நான் ஒரு பழைய சிறையின்
புதிய கைதி.
இளம் வயதுக் கைதி.
சிறையிலிருக்கிறோம் என்றுணர்ந்த
சில கைதிகளில் ஒரு கைதி.
கூடவே நிறைய கைதிகள்.
சுதந்திரமாய் இருப்பதாய்ச் சொல்லிக்கொண்டே
துள்ளி நடந்தவர்கள்
காலில் பிணைத்த விலங்குகள்
சுண்டியிழுக்க
கூடு வந்து சேர்ந்துவிட்டார்கள்.
நாங்கள் கைதிகளே அல்ல என்று
கையிலடித்துச் சத்தியம் செய்ய
அனேக அனேக கைதிகள்.
பொத்தி அடித்த கைகளுக்குள்
விவாத ஜுவாலைகள் காணாமல் போயின.
கைதிகள் குடும்பமாய் வாழ
அனுமதிக்கப்படுகிறார்கள்.
குடும்பங்களுக்குள்
அவர்கள் மேலுஞ் சில குறுஞ்
சிறைகளைச் செய்தார்கள்
குறுஞ்சிறைகளுள் அடைபட்டு
கதறும் பெண்களின்
காது கிழிக்கும் ஓலங்களை
சில குக்கர் விசில்கள்
மறைத்து விடுகின்றன.
'நாங்கள் கைதிகள் தான்,
ஆனாலும் இப்போது தேவை
விடுதலையல்ல
சிறைச்சாலைக்கு ஒரு
செம்மையான நிர்வாகம் தான்'
என்று சில. கைதிகள் கூடி
முடிவொன்றெடுத்தார்கள்.
அதைச் சிலரும் ஆமோதித்தார்கள்.
வருடங்களைத்தின்று கழிகிறது வாழ்வு.
சிறையிலிருந்து வெளியேறிய சிலரும்
மாற்றுச் சிறைகளுக்கே
விற்கப்பட்டிருப்பதாக
தகவல்கள் வந்து சேர்ந்தன,
சற்று விளிம்புக்கு வந்து
வெளியில் பார்த்தால்
பூமியெங்கும் சிறைச்சாலைகள்,
பல்வேறு வடிவக் கொட்டடிகள்.

கைதிகள் இலக்கியம் படைத்தார்கள்.
கைதிகள் புதிய சரித்திரம் படைப்பார்கள்
நெரிபடும் குரல்வளையிலிருந்து
வருகிறது இப்போது
ஒரு நெறி மிகுந்த குரல்.
உரக்க ஒலிக்கிறது
ஒரு அறைகூவல்
'மதிப்புக்குரிய கைதிகளே!
புதிய விலங்குகளைச் சூடிக்
கொண்டவர்களே!!
இப்போது சொல்லுங்கள்
இது சிறையா? இல்லையா?'

*-மேகவண்ணன்-*
30.05.1999



படிப்பகம்

www.padippakam.com

# பின் நவீனத்துவ நிலை : அறிவின் மீது ஓர் அறிக்கை

ஜோன் - ஃபிரான்ஸுவா லியோதார்

**Jean -François Lyotard உடைய "The Postmodern Condition : A Report on Knowledge" எனும் நூலில் மொழிபெயர்ப்பு, ஆங்கில வழி தமிழில் தரப்படுகிறது. முழுமையாக மொழிபெயர்க்கப்பட்டபின் பிரஞ்சு மூலநூலுடன் ஒப்புநோக்கி நூல்வடிவில் "எக்ஸில்" வெளியீடாக வெளிவரும்.**

## விஞ்ஞான அறிவினுடைய பயன்வழியியல்

விஞ்ஞான அறிவினுடைய பயன்வழியியல் பற்றிய செவ்வியல் கருத்துநிலையை, பட்டியலிடுவதுபோன்ற பாணியில் வகைப்படுத்த நாம் முயற்சிக்கலாம். இந்தப்படிமுறைச்செயலில் நாம் ஆய்வு விளையாட்டையும் கற்பித்தல் விளையாட்டையும் வேறுபடுத்திப் பார்க்கமுடியும்.

கோள்களினுடைய பாதை வளையமானது என்று கொப்பர்நிக்கசு சொல்லியிருந்தார்.86 இந்தவகை ஆய்வு எடுநிலை உண்மையோ பொய்யோ அது இழுவைநிலையிலுள்ள கணங்களைக் காவிக்கொண்டுதானுள்ளது. இவையெல்லாம் அது தனது விளையாட்டுக்குள் இழுத்துக்கொள்ளும் அனுப்புனர் ,பெறுனர்,விளக்கமளிப்பு நிலை முதலிய அனைத்துப் பயன்வழியியல் நிலைகளையும் பாதிக்கும். ஓர் அறிக்கை "விஞ்ஞான' ரீதியிலானது என்ற ஏற்றுக்கொள்ளும் தன்மை உண்டாவதற்கு சீரமைத்துக் கொடுக்கின்ற இந்த இழுவைநிலைகள் பரிந்துரைகளின் தொகுப்புக்களாக உள்ளன.

முதலாவதாக, அனுப்புனர் விளக்கமளிப்பு நிலையின் உண்மைகுறித்து, அதாவது கோள்களின் வழிகுறித்து, பேசியாகவேண்டும். இது எதைக்குறிக்கிறது? ஒருபக்கம் அவர் என்ன சொல்ல வருகிறார் என்பது குறித்ததற்கான ஆதாரங்களைக் கொடுப்பதாய் இருக்கும். மறுபக்கத்தில் அதே விளக்கமளிப்பு நிலையைக்குறித்து எதிர்ப்பாகவோ முரண்பட்டதாகவோ வரும் அறிக்கைகளினை மறுத்துரைப்பதும் அவரின் வேலையாக இருக்கும்.

இரண்டாவதாக பெறுநருக்கும் தான் பெற்றுக்கொள்ளும் அறிக்கையின் நம்பகத்தன்மை குறித்து ஆதரவு (அல்லது மறுப்பு ) வழங்குதலும் சாத்தியமாயிருக்கும். இது அனுப்புநரை ஓர் திறன்மிக்க அனுப்புனராகக் காண்பிக்கின்றது. ஏனெனில் அவர் தனது விளக்கமளிப்புப் பொருளிற்கான ஆதாரங்களைக் காண்பிப்பதையும், மறுத்துரைப்பதையும் செய்யும்போது அவர் தான் மேற்கொண்டாக வேண்டிய இரட்டைத்தேவை நிலைக்கு ஆளாககிறார். இந்நிலை கொப்பர்நிக்கசுக்கும் இருந்தது. அதனால்தான் அவர் அவருக்கேயான சிறப்பான திறன்களைக் கொண்டிருந்தார் என்கின்றோம்: அவர்தான் அவருக்கு ஈடு. ஆனால் இது எப்போது தெரிய வருமென்றால் மேற்சொன்ன நிபந்தனைகளின்கீழ் அவர் பேசும்போது மட்டுமேயாகும். அதற்கு முன்பாக அவர் ஓர் அறிவியல் அறிஞரா இல்லையா என்பதைச் சொல்வது சாத்தியமில்லாதது.

மூன்றாவதாக, கொப்பர்நிக்கசு பேசுகின்ற விளக்கமளிப்பு நிலை (கோள்களினுடைய பாதை ) உறுதிப்படுநிலையில் அவரின் அறிக்கையின் வழியாக அது ஒருவேளை வெளிப்படுத்தப்பட



படிப்பகம்

www.padippakam.com

வேண்டியதாயிருக்கும். ஆனால் கொப்பர்நிக்கசினுடையதுபோன்ற ஒரேவகையினமாயிருக்கின்ற அறிக்கைகளினால் மட்டுமே இது அறியப்படுமாயிருக்குமாயிருப்பதனால் ஏற்கனவே போதுமானதாயிருக்கிற விதிகளே இங்கு ஆய்வுச்சிக்கலாகிவிடுகின்றது. நான்சொல்வதெல்லாம் உண்மை ஏனென்றால் நான் அதை நிருபிக்கிறேன்- ஆனால் அங்கு சொல்லப்படும் ஆதாரங்கள் என்னவென்றால் அது எனது ஆதாரங்கள் உண்மையானவையா என்பதுதான்?

இந்தச் சிக்கலின் விஞ்ஞானத்தீர்வு இருவிதமான விதிகளின் வழிப்படுத்தலினைக் கொண்டுள்ளது. இதில் முதலாவது இயங்கியல்ரீதியிலானது அல்லது வீச்சுத்தன்மையுடையது என்று தடயவியல்போக்கில் சொல்லலாம்:87 விளக்கமளிப்புநிலை ஓர்விவாதத்தில் சான்றாகப் பயன்படுத்தப்படுவதற்கும் நிருபிக்கப்படுவதற்கும் வாய்ப்பானது. அது இது அல்லை: நான் சிலவற்றை நிருபிக்கமுடியும் ஏனெனில் இயல்பாகவே அவை நான் சொல்லும்வாறே உள்ளன. ஆனால்: நான் சான்றுகளை உருவாக்கிக்கொண்டிருக்கும் வரைக்கும் நான் சொல்கின்ற வகையில்தான் இயல்பு இருக்கிறது என்று எண்ணிக்கொள்வதற்கு இடமுண்டு.88 இரண்டாவது விதி மெய்யியல் வகையானது: இந்த அதே விளக்கமளிப்புநிலை முரண்பாட்டுநிலைகளின் பல்வகைத்தன்மையையோ அல்லது சான்றுகளின்குறைவுபட்ட தன்மையையோ தரப்போவதில்லை. அல்லது வேறுவகையாகச் சொல்லப்படுகிறது:, கடவுள், மாயையானவ(ன)ரல்ல.89

இவ்விரண்டு விதிகளும் பத்தொன்பதாம் நூற்றாண்டு விஞ்ஞானம் சரிபார்த்தல் என்றும் இருபதாம் நூற்றாண்டு விஞ்ஞானம் பிழைபார்த்தல் என்றும் அழைத்துக்கொள்ளும் ஓர் ஓட்டத்தைக் கொண்டிருக்கின்றன.90 இவை ஓர் ஒருங்கிணைந்த கருத்தின் பார்வைப்புலத்தை கூட்டாளிகளிடையே(அனுப்புனர், பெறுனர்) விவாதம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக விட்டுவைத்திருக்கின்றன. ஒவ்வொரு ஒருங்கிணைந்த கருத்தும் உண்மையின் அறிகுறியல்ல: ஆனால் ஓர் அறிக்கையின் உண்மைக்கு அவசியமாக ஓர் ஒருங்கிணைந்த கருத்து அவசியம் என்று கருதலாம்.

இதுவே ஆய்வை நிழலிடுகிறது.கற்பித்தலை ஆய்வு தனது அவசியமான பதிலீடாக இருக்கக் கோருகின்றது என்பது ஆதாராமாக இருக்கிறது: விஞ்ஞானிகளிற்கு ஓர்பெறுவோனும் அதேவேளை ஓர் அனுப்புனருமாயிருக்கின்ற ஓர் கூட்டாளி தேவை. அல்லது ,அவர்களது அறிக்கைகளைச் சரிபார்த்தல் சாத்தியமில்லாதது. வேறுவகையில் பார்த்தால் தேவையான திறன்கள் புதிதாக்கப்படாமல் இருக்கும்போது தானாகவே அவசியமான, முரண்படுகின்ற விவாதங்களுக்கு இவை தானாகவே முடிவுகட்டிவிடும். இதனால் இவர்களுடைய அறிக்கைகளைச் சரிபார்ப்பது சாத்தியமில்லாது போய்விடும். விஞ்ஞானிகளின் அறிக்கைகளினுடைய உண்மைத்தன்மை மட்டுமல்லாது, அவர்களுடைய திறன்களும்கூட இந்த விவாதத்தில் MJ STAKE இல் உள்ளது. ஒருவருடையதிறன் ஒருபோதும் முழுமையடைந்துவிட்ட மெய்மையல்ல. இவர்களால் முன்வைக்கப்படும் அறிக்கைகள் அவர்களிற்குச் சமமான தரத்திலுள்ளவர்களால், அதாவது ஓர் விவாதத்தின்போதோ ஓர் மறுத்துரைக்கின்ற முயற்சியின்போதோ பயன்மிக்க வகையில் அந்நிகழ்வை எடுத்துச்செல்லக்கூடியவர்களால், அது கருத்தில் கொள்ளப்படுகின்றதா என்பதிலேயே தங்கியிருக்கிறது. ஓர் அறிக்கையின் உண்மை அல்லது அதை அனுப்புபவரின் திறன், அவர்களிற்குச் சமதளத்தில் திறனுள்ளவர்களாலான ஓர் குழுவினரின் கூட்டுஅனுமதிக்கு உள்ளாகவேண்டியிருக்கும். சமனிகள் அவசியமாயுள்ளதுபோலவே உருவாக்கப் படவும் வேண்டும்.

இந்தவகையான மறுஉற்பத்தி நிகழ்வதை கல்விப்புலம் உறுதிசெய்கிறது. ஆய்வினுடைய இயங்கியல் விளையாட்டிலிருந்து இது வேறுபட்டது. சுருக்கமாய்ப்பார்த்தால், அனுப்புனர் என்ன அறிந்து வைத்திருக்கிறாரோ அதைப் பெறுபவர் , மாணவர் அறிந்துவைத்திருக்கவில்லை என்பதே இதன் முதல் முன்முடிபு: உண்மையாக அதனால்தான் அவர் கற்றுக்கொள்ள வந்திருக்கிறார். அதன் இரண்டாவது முன்முடிபு அனுப்புனர் என்ன அறிந்து வைத்திருக்கிறாரோ அதைத்தான் ஓர் மாணவர் கற்றுக்கொள்ளமுடியும்., மேலும் அம்மாணவர் தனது ஆசானுக்குச் சமதையான திறனுடையவராகத்தான் வரமுடியும்.91 இந்த இரட்டைத்தேவை மூன்றாவது ஒன்றைக் கருதிக்கொள்கிறது: ஆய்வினுடைய பயன்வழியியலை நிறுவமைக்கின்ற ஆதாரங்களின் உருவாக்கமும் விவாதங்களின் பரிமாற்றமும் போதுமானளவானவையாக கருதப்படுகின்றன, மேலும் இவை இதனால் கற்பித்தலின் மூலமாக தங்களது நோக்குகளை ஆணித்தரமான உண்மைகள் என்ற வகையில் வழிவழியாகத் தருவித்துக் கொள்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

வேறுவகையாகச் சொன்னால் உங்களுக்குத்தெரிந்ததையே நீங்கள் கற்பிக்கிறீர்கள்: இதுவே சிறப்பாளர்களின் நிலை. ஆனால் ஓர் மாணவன் என்ற வகையில் (கற்பித்தல் படிமுறைச்செயலிலுள்ள பெறுனர்) தனது திறமைகளை வளர்த்துக்கொள்கிறார். ஓர் விசேட திறன்வாய்ந்தவர் மாணவருக்குத் தெரியாதவைகளைப் பற்றியல்ல மாறாக அவருக்குக் கற்றுக்கொள்வதற்கென்றே ( குறைந்தபட்சம் அந்த விசேட திறன்வாய்த்தவர் ஓர் ஆராச்சியில் ஈடுபட்டிருப்பினும்கூட) நம்பிக்கையளிக்கமுடியும். இந்தவகையில், மாணவர் ஆராச்சியின் இயங்கியலுக்குள் அல்லது, விஞ்ஞான அறிவை உற்பத்தி செய்யும் விளையாட்டுக்குள் அறிமுகப்படுத்தப்படுகிறார்.

நாம் விஞ்ஞானத்தின் பயன்வழியிலை எடுத்துரைப்பறிவுடன் ஒப்பிட்டால் பின்வரும் : கூறுகளை அவதானிக்கமுடியும்:

1. விஞ்ஞான அறிவு ஓர் மொழிவிளையாட்டை வேண்டிநிற்கின்றது: குறிப்பான வெளிப்பாடு, அது மட்டுமே தக்கவைக்கப்படும், மீதியெல்லாம் வெளியேற்றப்படும். ஓர் அறிக்கையின் உண்மை - விழுமியம் அதனை ஏற்றுக்கொள்வதற்கான தரநிர்ணயமாக இருக்கும். உண்மையில் நாம் பிறவகையான கேள்வி ("எப்படி நாம் அதை விளக்கமளிப்போம்...? "), பார்வைகளை வழங்குகின்றனவானவை ("finite தொடரான மூலங்களை எடுக்கலாம்....,) முதலிய அறிக்கைகளையும் நாம் கண்டுகொள்ள முடியும். ஆனால் இயங்கியல் விவாதத்தன்மையின் திருப்புமுனைகளாக மட்டும்தான் இருக்கின்றன, இவை குறிப்பறிக்கைகளாக வந்து முடிந்துவிடுகின்றன.92 பின்னர் இந்தச் சூழலில் விளக்கமளிப்பு நிலை குறித்து ஒருவர் உண்மையான அறிக்கையை உருவாக்கக்கூடுமாயிருந்தால் ஒருவர் கற்க்முடியும். மேலும் சிறப்பாளர்களுக்கு வாய்ப்பாகவுள்ள விளக்கமளிப்புநிலைகளாலான, சரிபார்க்கவோ அல்லது பிழைபார்க்கவோகூடியதான ஓர் அறிக்கையை ஒருவரால் உருவாக்கமுடியுமானால் அவர் விஞ்ஞானியாக முடியும்.

2.இந்தவகையில் விஞ்ஞான அறிவு ஒன்றாகச்சேர்ந்து சமுகப்பிணைப்புககளை உருவாக்குகின்ற மொழிவிளையாட்டுக்களிலிருந்து விலகியே இருக்கிறது. எடுத்துரைப்பறிவுபோலல்லாமல் அது நீண்டகாலத்துக்கு நேரடியானதாகவும் மேற்படி பிணைப்பின் பகிர்ந்துகொள்ளப்பட்ட கூறுகளாகவும் இருந்துகொள்ளவும்முடியாது. ஆனால் அது மறைமுகமாக சமூகப்பிணைப்பின் கூறாகத்தான் உள்ளது. ஏனெனில் அது ஓர் தொழில்புலத்திலிருந்து அது உருவாகின்றதுடன் ஓர் நிறுவனத்துக்குள் போயும் சேர்ந்துகொள்கின்றது. மேலும் நவீன சமூகங்களில் மொழிவிளையாட்டுக்கள் தகுதிவாய்ந்த பங்காளர்களால் நடத்தப்படும் ( சிறப்புத்தொழில் வகுப்பினர்) தங்களையே ஓர் நிறுவன வடிவமாகக் கட்டியமைத்துக் கொள்கின்றன. சமூகத்துக்கும் அறிவுக்குமிடையிலான உறவு ( அதாவது தங்களது தொழிற்தகவுடன் உள்ள விஞ்ஞானிகள் தவிர்ந்த பொதுவான AGONISTICS உள்ள பங்காளர்களின் மொத்தக்கூட்டும்) ஒருவகையான சார்நிலையிலுள்ள exteriority ஆகவருகின்றது. ஓர் புதிய பிரச்சனை தோன்றுகின்றது - அதாவது சமூகத்துக்கும் விஞ்ஞான நிறுவனங்களுக்குமிடையிலான உறவு. இந்தப்பிரச்சனை கல்விப்புலத்தினால் தீர்க்கப்படக்கூடுமா? உதாரணமாக, எந்தவொரு சம அணுவும் விஞ்ஞான திறனினால் ஆட்கொள்ளப்படலாம் என்பதுபோன்ற எடுகோள்களினால் இது சாத்தியமா?

3. ஆராய்ச்சி விளையாட்டின் எல்லைகளிற்குள் தனியே அனுப்புனர் பதவிக்குமட்டுமே திறன் தேவையாயிருக்கிறது. குறிப்பான எந்த திறனும் பெறுவோருக்குத் தேவையாயிருப்ப தில்லை.(கல்விப்புலத்தில்மட்டும் மாணவர்கள் புத்திசாலிகளாயிருக்கவேண்டும் என்ற தேவை முன்வைக்கப்படுகின்றது. மேலும் விளக்கமளிப்பு நிலைக்கும்கூட எந்தத்திறனும் கோரப்படுவதில்லை. மனிதர்களைப்பற்றிய விஞ்ஞானப் படிப்புக்களிலும் கூட, அங்கே மனிதர்களுடனான நேரடித்தொடர்பு தேவையிருக்குமிடமாயிருந்தும்கூட, அந்த விஞ்ஞான இயங்குதலில் ஈடுபடும் பங்காளிகளிற்கு அதன் விளக்கமளிப்பு நிலை கொள்கையளவில் புறவயமானது. இங்கு எடுத்துரைப்பு விளையாட்டிற்கு முரண்பட்டவகையில், அறிவு ஒரு ஆளை அவர் எப்படி என்று சொல்கிறதோ, அதே போல எப்படியிருக்கவேண்டுமென்பது ஒரு ஆளுக்குத்தெரியாது.

4.விஞ்ஞான அறிக்கையொன்று பதிவுசெய்யப்பட்டுவிடுவதனால்மட்டும் அதற்கு எதுவும் கிட்டிவிடுவதில்லை.பாடத்திட்ட விடயத்தில்கூட அவ்வக்காலங்களில் விஞ்ஞானமானது விவாதங்களினூடாகவும் ஆதாரங்களினூடாகவும் சரிபார்க்கப்படக்கூடுமாயிருக்கும் பட்சத்திலேயே அது



படிப்பகம்

கற்பிக்கப்படும். அது தன்னளவிலே பிழையாக்கப்படுவதினின்று தப்பித்ததாக இல்லை.93 ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கைகளிலிருந்து திரட்டிப் பெறப்பட்ட அறிவும் எப்போதும் சவால்களை எதிர்கொள்ளலாம். ஆனால் இதற்கு மாறுபட்டவகையில் ஒரே விளக்கமளிப்புநிலை தொடர்பாக முந்தியே அங்கீகரிக்கப்பட்ட அறிக்கையொன்றை முரண்படுகின்ற இன்னுமொரு புதிய அறிக்கை அந்த முந்தைய அறிக்கையை விவாதங்களாலும் ஆதாரங்களின்துணையுடனும் மறுத்து நிரூபித்தால் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படலாம்.

5. ஆகவே விஞ்ஞானத்தின் விளையாட்டு ஓர் குத்தான குறுக்கான (diachronic) காலத்தன்மையை (temporality) அதாவது நினைவையும் வேலைத்திட்டத்தையும் தருவிக்கின்றன. தற்போதைய விஞ்ஞானத்தின் அனுப்புனர் அவருக்கான விளக்கமளிப்பு நிலையுடைய முந்தைய அனைத்து அறிக்கைகளுடனும் (துணைநூற்பட்டியல்) பரிச்சயம் கொண்டிருக்கவேண்டியவராகிறார். மேலும் ஓர் விடயத்தைப் பொறுத்தவரை முந்தைய அறிக்கைகளிலிருந்து மாறுபட்டிருந்தாலேயே அவர் ஓர் புதிய அறிக்கையை முன்வைக்கமுடியும். இங்கு ஒவ்வோர் நிகழ்த்துதல்களினதும் ,,சந்தம்,, (accent) என்று நான் இங்கு அழைப்பது, மேலும் இந்த காட்டியினால் விளையாட்டினுடைய விவாதச் செயல்பாடு, லயத்தை (meter) மீறி வந்துவிடும். நினைவையும் புதியதற்கான தேடலையும் தரும் இந்த குத்தான தன்மை கொள்கையளவில் ஓர் கூட்டுத்தன்மையையே வெளிப்படுத்துகிறது.94

இந்த கூறுகள் வெகுவாக அறியப்பட்டவை. இவை திருப்பியும் பார்க்கப்படுவதற்குரிய இரு காரணங்கள் உள்ளன.முதலாவது விஞ்ஞானத்துக்கும் விஞ்ஞானமல்லாததற்கும் இடையே ஓர் இணையை ஏற்படுத்துவது, நாம் முந்தையதன் இருப்பு பிந்தையதன்விடக் குறைவான - அல்லது கூடுதலான தேவையை கொண்டது என்பதை நாம் புரிந்துகொள்ள உதவும் அல்லது உணர்ந்துகொள்ள உதவும். இரண்டுமே அறிக்கைகளினுடைய கணங்களால் கோர்வையாக்கப்பட்டுள்ளது : பொதுவாக பிரயோகிக்கப்படக்கூடிய விதிகளின் சட்டகத்தினுள் அந்த விளையாட்டுக்காரர்களா ப் ஏற்படுத்தப்படும் 'நகர்வுகளால்' இவ் அறிக்கைகள் ஆனவை. ஒவ்வொரு குறிப்பான வகை அறிவுக்கும் இவ்விதிகள் குறிப்பானவை, அத்துடன் ஓரிடத்தில் 'நல்லவை' என கணிக்கப்படும் 'அந்நகர்வுகள்' இன்னொரு இடத்தில் 'நல்லவை' என கணிக்கப்படுவனவற்றுள், இவை தற்செயலாக நிகழ்ந்தாலன்றி, ஒரே வகையானவையாக இருக்கப்போவதில்லை.

ஆகவே விஞ்ஞான அறிவின் அடிப்படையில் எடுத்துரைப்பறிக்கைகளின் இருப்பையோ அதன் தார்மீகநிலையையோ (validity) கணித்துக்கொள்வது சாத்தியமில்லாதது மற்றும் இதன் மறுதலையும் அப்படியேதான்: பொருத்தப்பாடுடைய தீர்ப்பீடுகள்வித்தியாசமானவை. (criteria). (discursive) - வகைகளின் திரிபுவேறுபாட்டு நிலையின்போது, விலங்குகளின் தாவரங்களின் திரிபுவேறுபாட்டு நிலைகள்குறித்து நாங்கள் செய்வதுபோல, நிகழும் ஆச்சரியங்களை நோட்டம்விட்டுக்கொண்டிருப்பதே நாங்கள் செய்யக்கூடியது. பின்நவீனத்துவம்தரும் "அர்த்த இழப்பின்" துக்கநிலையானது அடிப்படையாக எடுத்துரைப்புச் சார்ந்து அறிவு இனியும்கூட இருக்கமுடியாது என்னும் மெய்மைச்சோகநிலையைத் தெளிவாக்குகிறது. இத்தகைய மீள்வினை தொடர்ந்தும் தொடரவேண்டும் என்பதற்கில்லை. எடுத்துரைப்பறிவிலிருந்து விஞ்ஞான அறிவை - விஞ்ஞான` அறிவு கருநிலையில் தன்னகத்தே எடுத்துரைப்பறிவைக் கொண்டிருக்கின்ற நிலையில் - வெளிக்கொணரவோ (அபிவிருத்திபோன்ற நிலைகளைப்பயன்படுத்தி) தருவிக்கவோ வேண்டிய முயற்சியுமில்லை.

-தொடரும்...-

**— வின்சன்ட்.ச —**

அடிக்குறிப்புகள்:

86- இந்த உதாரணம் Ftege இனிடமிருந்து எடுக்கப்பட்டது. "uber sinn unio Bedeutung" (1892 (Eng. trans. Max Black and peter Geach> "on sense and Reference", in Translations from the philosophical writings of Goltlob Frege (oxfodo: Blackwell, 1960)
87.88,89

www.padippakam.com

# தில்லையாற்றங்கரை - ஒரு கோடை விடுமுறை

## விமர்சன அரங்கு



29.08.99 அன்று பாரிஸில் "இலக்கிய நண்பர்கள்" சார்பில் நடைபெற்ற இக்கருத்தரங்கை நெறிப்படுத்திப்பேசிய அருந்ததி: புலம்பெயர் இலக்கியம் யுத்தநெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து உக்கிரம் கொள்கிறது. புகலிடத்தில் வானொலி, தொலைக்காட்சி போன்ற வெகுசன ஊடகங்கள் சிற்றிதழ்களுக்கு சவாலாய் விளங்குகின்றன. வெகுசனப் பத்திரிகைகளோ மரண அறிவித்தல்கள், கலியாண அழைப்பிதழ்கள் ஆகிய வற்றுடன் தம்மைக் குறுக்கிவிடுகின்றன. தொலைபேசியில் பேசி, வானொலியில் பாடல் கேட்டே காலங்கள் கழிகின்றன. இந்த வெகுசன ஊடகங்களை மோதித் தகர்க்க வேண்டிய நிலையில் நாங்கள் இருக்கிறோம் என்று கூறினார்.

தில்லையாற்றங்கரை நாவலை ச.தில்லைநடேசன் அவர்களும் எம்.ஆர் ஸ்ராலின் அவர்களும் ஒரு கோடைவிடுமுறை நாவலை லக்ஷ்மி அவர்களும் விமர்சனம் செய்தார்கள். மற்றும் விஜி,அசோக், றயாகரன், திவ்வியநாதன்,மனோகரன், உதயகுமார், கற்சுறா, ஷோபாசக்தி, அர்விந் அப்பாத்துரை மற்றும் பலரும் கலந்துரையாடலில் பங்குபற்றினார்கள்.

இறுதியில் இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் ஏற்புரை வழங்கினார்.

90- உதாரணத்திற்குப் பார்க்க,
இவ் இரட்டை முன்முடிபினால் உருவான சிக்கலை விபரிக்க இங்கு இடமில்லை. பார்க்க,
92- இந்தக்குறிப்பு ஓர் பெரிய சிக்கலைத் தவிர்க்கிறது. எடுத்துரைப்பைப் பரிசீலனை செய்யும்போது இது எழக்கூடிய ஒன்றே. அவையாவன மொழிவிளையாட்டுக்களும்; discursive விளையாட்டுக்களும், அவற்றை நான் இங்கு விவாதிக்கவில்லை.
93- 90இல் குறிப்பிடப்பட்டவகையில்,
94-
95- cf தங்களுடைய முதல் விஞ்ஞானப் பாடங்கள் குறித்த குழந்தைகளின் பார்வை, அல்லது இனவியலாளரின் விளக்கங்களை, பண்பாட்டினர் விளக்கமளிக்கும் வகையில், (பார்க்க, lévi- strans, The savage mino (குறிப்பு 72), அத்தி1
96- "ஓர் ஆதி நிலைச்சமூகம் ஆய்வு செய்யப்படுவதற்கு அது முன்னரேயே கொஞ்சம் சிதிலமடைந்திருக்கவேண்டும்." என்று இதனால்தான் clstres க்கு Métran சொன்னார். இதன் விளைவு என்னவென்றால் பண்பாட்டுத் தகவலாளி இனவியலாளரின் கண்களினூடு தன் சமூகத்தைப் பார்க்கத் தொடங்கியிருக்கவேண்டும். அவர் தனது சமூகநிறுவனங்களின் செயல்பாட்டைக் கேள்விக்குள்ளாக்க வேண்டும். அதன்மூலம் அவைகளின் முறைமைத் தன்மையையும் கேள்விக்குள்ளாக்க வேண்டும். Aché பழங்குடியினரிடம் தனது தோல்வியடைந்த ஆய்வு தொடர்பாக clostres பின்வருமாறு சொல்லி முடிக்கிறார்"
"அவர்களை கேள்விக்குள்ளாக்க முடியாது என்பதையும் அதேவேளை உரையாடலுக்கான முயற்சிகளை மறுத்துரையும் அவர்கள் இவை தேவையில்லாதவை என்றளவுக்கு உறுதியானவர்கள்: அவர்கள் சமூகம் நலிவடையும் போது நாம் நமது உரையாடலைத் தொடங்கலாம். "(M. Caytry என்பதால்'' 'Pierre clastres', என்ற ஆக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. Liber 4 (1978),
97- விஞ்ஞானக் கருத்தியலுக்கு பார்க்க survivre 9(1971), மறுபதிப்பாக Janbert மற்றும் Lévy- Leblono இன் (Auto) critique (குறிப்பு 26),
பக்.5 H பார்க்க, அவர்களின் தொகுப்பின் இறுதியில் இதழ்களினதும் ஒழுங்கமைவிற்கு விஞ்ஞானம் கீழ்ப்படிந்ததன் பல்வேறு வடிவங்களின் எதிராக கிளர்ந்த குழுக்கள் பற்றியதுமான ஓர் பட்டியல் இருக்கிறது.
98-
99- இச்சொற்கள் Genette இடமிருந்து பெறப்பட்டவை Figures III



படிப்பகம்

www.padippakam.com

முற்றிலும் சிதைந்து
ஸ்தூலமற்ற இருப்பு
காத்திருக்கும் கனமற்று
எங்கும் எதுவுமற்று
அறுந்து தொங்கும்
இருப்பற்ற இருப்பு

அர்த்தங்களற்று
வந்து போகும் காற்று
பிராணப் புத்தகத்தில்
படபடக்கும் வெற்றுத்தாள்கள்
ஒன்றுமில்லை
சும்மா இருக்கும் இருப்பு

மூடிய விழிச் சாளரம்
ஒளித் தூறல்கள்
கடந்து போகும் நிழல்கள்
கண்ணாடி பதியாது போகும்
துருப்பிடித்த நிறங்கள்
அழிய அழிய
தோன்றும் பிம்பங்கள்
நிழல்களின் நிஜம்
அசையாதொரு நிஜக் கண்ணாடி

பொழுது கூவ
கண்ணாடி தசைகளை
ஊடுருவும் ஒளி உலோகம்
ஒளிரும் உலோகத் துகள்கள்
விழி திறக்கும்
காணாது போகும் கண்ணாடி
ஏதுமில்லை நிஜம்.



15 07 1999



படிப்பகம்

www.padippakam.com





நல்ல தமிழ் பேச வேண்டிய கட்டாயம் எப்படியோ நல்ல சிவத்துக்கு வந்துவிட்டது. ஓர் கன்னியால் இவர் எப்படியோ அக்செப்ற் பண்ணப் பட்டதுதான் இதற்குக் காரணம். ' கன்னி ராதிகாவிற்கு முதலில் இவர் பற்றிப் பெரிதாக எதுவுமே தெரியாது. ஆம், நல்ல சிவம் புகழ் பெற்ற சண்டியன். ஓர் அடியில் ஒன்பது பேரை விழுத்தும் வலிமை கொண்டவன் என்பதற்கு அவனது புஜங்களும், முகத்தில் உள்ள விழுப் புண்களுமே சாட்சியங்கள். போனைத்தூக்கி யார் பேசினாலும் பு.சு.வே அவனது வாயிலிருந்து லாவகமாக வரும். இந்த பாஷையை இவர் ராதிகாவுடன் காதல் சரசம் செய்தபோதும் பேச வெளிக்கிட்டதால் அவளது மனம் உடைந்தது. இதனால் நேரடியாகவே ஒரு நாள் "ஐ போண்ட் லவ் யூ" என்று சொல்லிவிட்டாள். யாருக்கும் பயப்படாத நல்லசிவம் இந்த சொற்களால் நடுங்கிக் கோமாவில் விழுந்தான். கோமா மயக்கம் தெளிந்து விழித்த போது கன்னி ராதிகா அதே சொற்களையே திரும்பவும் சொன்னாள். தாழ் பணியாத் தமிழன் நல்ல சிவம் அவளது காலில் விழுந்து காதல் பிச்சை கேட்டான். "ராதிகா! இனி நீ என்ன சொன்னாலும் அதுக்கு நான் கட்டுப்பட்டு நடப்பன்" என்று தனது தலையில் அடித்துச் சத்தியம் செய்தான்.

"நீர் இலக்கியவாதியாக வேண்டும்" என்று கட்டளை போட்டாள் ராதிகா. இதனைக் கேட்டதும் அவனுக்கு மீண்டும் கோமா வரும் போலப் பட்டது, ஆனால் வரவில்லை.

"எனக்குத்தான் எழுத வாசிக்கத் தெரியாதே!" என்றபடி இரங்கும் விழிகளால் பார்த்தான்.

"உமக்குப் பேசத் தெரியும். அதுவே போதும். ஆனால் நீர் நல்ல தமிழ் பேச வேண்டும். இதற்காகத்தான் இலக்கியவாதியாக நீர் மாற வேண்டும்" என்றாள்.

"நல்ல தமிழ் கற்கப் பள்ளிகள் ஏதாவது உள்ளதா?" என்று கலக்கத்துடன் கேட்டான்.

"நல்ல தமிழ் கற்கப் பள்ளிகளுக்குப் போனால் நட்டம்."

"பள்ளிக்குப் போகாமல் எங்கே நல்ல தமிழ் கற்பது?"

"அது சின்ன விஷயம். இலக்கியக் கூட்டங்களுக்குப் போனால் அது தானாக வரும்."

"இலக்கியக் கூட்டங்களுக்குப் போவதா?" என்றபடி எவருக்கும் பயப்படாத நல்ல சிவம் ஆவென வாயைப் பிளந்தான்.

"நல்ல தமிழ் பேசுவதென்றால் பயப்படக்கூடாது. நீர் கட்டாயம் இலக்கியக் கூட்டங்களுக்குப் போகவேண்டும்" என்றபடி அவனது சொக்கையில் ஒரு முத்தம் வைத்தாள்.

***

நல்ல சிவம் நல்ல தமிழ் கற்பதற்கான முதலாவது இலக்கியக் கூட்டம் நடக்க மூன்று தினங்களே இருந்தன. ஆனால் அவனுக்கோ வியர்த்துக் கொட்டியது. ராதிகா துணிச்சலானவள். அவனைத் தேற்றி துணிச்சல் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

"ராதிகா! நீரும் என்னோட கூட்டத்துக்கு வருவீர்தானே!"

"எனக்கு பேர்த்டே புறோக்கிராம் ஒண்டு இருக்கு. பயப்பிடாதையும். அங்கை ஆரும் உம்மைப் பிடிச்சுத் தின்னமாட்டினம்."

"நானும் உம்மோடை பேர்த்டேக்கு வரப்போறன்" என்று சிறுபிள்ளைபோல அடம்பிடித்தான்.

"நீர் பேர்த்டேக்கு வாறது முக்கியமில்லை. நீர் நல்லதமிழ் பேசுறதுதான் எனக்கு





படிப்பகம்

www.padippakam.com

முக்கியம். கூட்டத்துக்கு நீர் போகாட்டி என்ரை கழுத்திலை உம்மடை தாலி ஏறாது'' என்று மிரட்டியதும் பயந்து சம்மதித்துக் கொண்டான்.

***

நாள் வந்தது. ஆம் நல்ல சிவம் நல்ல தமிழ் கற்கும் நாள் தான் அது. கூட்டமோ ஐந்து மணிக்கு. நான்கு மணிக்கெல்லாம் அவன் ரெடியாகிவிட்டான். “உங்கடை வாழ்க்கையிலை இண்டையிலை இருந்து ஓர் திருப்புமுனை ஏற்படும்.'' என்று உற்சாகித்து அவனை மெத்ரோ வரை கொண்டு போய் விட்டபின் ராதிகா வீடு திரும்பினாள்.

நல்ல சிவம் மண்டபத்துக்கு வந்தபோது அது பூட்டப்பட்டுக்கிடந்தது. ஒரு சிகரட்டை எடுத்துப் பற்றிக்கொண்டான். $5\frac{1}{4}$ போல ஒருவர் தலை தென்பட்டது. அவர் நல்லசிவம் அருகில் வந்து “ஹலோ! சவா (சுகமா)'' எனக் கேட்டார். பின் கூட்டத்தில் பிரதம உரை செய்யப்போகின்றவர் தனது குட் பிறண்ட் என்றபடி “நீரும் எழுதுகின்றனீரோ?'' எனக் கேட்டார். நல்ல சிவம் சங்கோஜத்துடன் “நான் நல்ல தமிழ் படிக்க வந்திருக்கிறன்'' என்றான். “நல்ல விஷயம், நீர் தேடி வந்த இடமும் நல்ல இடம்தான்'' என்று அவர் சொல்லிக் கொண்டிருக்க இலக்கியவாதிகள், ரசிகர்கள் எல்லோரும் வந்து சேர்ந்தனர். கூட்டம் களைகட்டியது. நல்ல சிவம் ஓர் மூலையில் போய் நடுக்கத்துடன் இருந்தான். முதலில் பேச இருந்தவர் ஓர் பிரபல இலக்கிய மேதை. அவர் மீது எல்லோருக்கும் ஓர் நடுக்கம் உள்ளதென்பதாகக் கதை.

“இண்டைக்கு அவர் கலக்கப்போறார்'' என்று நல்ல சிவம் அருகில் இருந்த சிலர் முணுமுணுத்துக் கொண்டனர். “எங்களுக்கு எதிரா எழுதிறவங்கள் ஆரா இருந்தாலும் அவங்களுக்கு உதை போடுறதைத் தவிர வேறை வழியில்லை'' என்று தொடங்கினார். ஏன் அவர் மௌன அஞ்சலிக்கு முன் பேசத் தொடங்கினார் எனக் கேட்கும் திராணி கூட்டத்தில் ஒருவருக்குமே வரவில்லை. அவர் பேசினார். நல்ல சிவம் வழமையில் பேசும் தமிழுக்கும் அதற்குமிடையில் எந்த வித்தியாசமும் இல்லை. பு.சு.க்கள் புட்டுப் புட்டுக் கொண்டு வந்தன. நல்ல சிவத்தின் பயம் தெளியத்தொடங்கியது. “அட இதுதானா நல்ல தமிழ். ராதிகாவுக்கு ஏன் இது தெரியாமல் போயிட்டுது. உவனுக்கு தெரிஞ்சிருக்கிறதை விட எனக்கு இன்னும் கூடச்சொற்கள் தெரியுமே. முறைப்படி பார்த்தால் நான் அல்லவோ இலக்கிய மேதை'' எனத் தனக்குள் எண்ணினான் நல்ல சிவம். அவர் பேசினார். அதே பு.சு க்கள்தான். நல்ல சிவம் பொறுமையை இழந்தான். ஆம் அவனுக்குக் கோபம் வந்துவிட்டது. “டேய் நிப்பாட்டடா!'' என்றபடி மேடைக்குப் பாய்ந்து “நான் பேசிக் காட்டிறன்'' என்றபடி பேசத்தொடங்கினான். கேட்டோர் மனம் குளிர்ந்தது. அவர்களது உணர்ச்சி அணையை உடைத்துப் பாய்ந்ததால் இலக்கிய மேதையைத் தூக்கி வெளியால் போட்டுவிட்டு நல்ல சிவத்தை இலக்கிய மேதையாக வரித்துக் கொண்டனர்.

●



எம்.பௌசர் ஐ ஆசிரியராகக் கொண்ட “மூன்றாவது மனிதன்''

(06)

“நமது ஈழத்து தமிழ்ச் சூழலில் படைப்பு, விமர்சனம், சிந்தனை என்பவற்றுடன் ஒரு தத்துவத் தளத்தையும் உருவாக்கிய யாரும் மு.தளையசிங்கத்திற்கு முன்போ, தளையசிங்கத்திற்குப் பிறகோ இன்னும் வெளிவரவில்லை என்ற உண்மையை யாரும் நிராகரிக்க முடியுமா?'' என்ற பௌசரின் கேள்வியுடனான தளையசிங்கத்தின் நினைவுக் கட்டுரையும்,

இலக்கியம், இலங்கை வடகிழக்கு அரசியல், தத்துவார்த்த சிந்தனைகள் என்று பல்வகைத் தளங்களில் நின்று பேசியிருக்கும் கவிஞர் சேரனுடனான பேட்டியும், காமம் ஆற்றலாக, அதிகாரமாக என்கின்ற மொழிபெயர்ப்பு மறுபிரசுரக் கட்டுரையும் இதழுக்கு வலுச்சேர்க்கின்றன.

பிரதிகட்கு:

**53, Vauxhall Lane,**
**Colombo - 02**
**Srilanka.**



படிப்பகம்

www.padippakam.com

# மரணத்தூது

என் வாசலுக்கு
இன்றிரவு மரணம் வந்தது.
எந்த தேவதையும்
மதித்திரா
என்முற்றத்து முதுகில்
உயிரின் அந்திமத்தை
குறித்துவிட்டுப் போனது.

என் புத்தக அலுமாரிக்குள்
அதன் கோரக்கரங்கள்
நடந்தன.
என் தாய் மொழியில்
தலைப்பிட்ட,
நூற்களைப் புரட்டி,
ஆயுதம் தேடிற்று.

என்படுக்கையறை மெத்தையின்கீழ்
அதன் நகங்களால் கிறிப்பார்த்தது.

சமையலறையில்
எலிகளைப்போல்,
இந்த மரணம் உருட்டித்திரிந்தது.
எதுவுமற்ற வெஞ்சினத்தில்
என் தொழுகையறையில்
மலம் கழித்தது.

உண்மைதான்
என் கவிதைகளால்
மரணம் சினமுற்றுள்ளது.

தெருப்பாடல்களின்
நாடோடிப்பாட்டினைப் போல்
என் கீதங்களைப் பாடச் சொன்னது.

என் கீதமோ
மரணத்தை அச்சுறுத்தப் பிறந்தது
என் குடிகளின் காதில்
இது வீரத்தைச் சொட்டும்.
மிக பராக்கிரமர்களின்
கோட்டைபல தாண்டி,
என் பாடல்கள் நுழையும்.

எனினும்
எனக்கு மரணம்
தேதி குறித்து விட்டது.
சிறகு முளைத்த
என் பாடல்கள் பற்றித்தான்
இப்போது–
அதன் கவலையெல்லாம்.

ஓட்டமாவடி – அறபாத்
98/06/30



படிப்பகம்

www.padippakam.com

பகுதி-2

"உடலரசியல்" எனும் இக்கட்டுரையின் 1ம் பகுதியான "மொழி எந்திரங்கள்" "இனியும் சூல்கொள்" (23வது இலக்கியச் சந்திப்பு மலர்) தொகுப்பில் பிரசுரமாகியிருந்தது அதன் தொடர் பகுதிகள் எக்ஸிலில் தொடர்ந்து வெளிவரும்.

# "உடல் உருவாக்க எந்திரங்கள்"

மொழி எந்திரம் பற்றி சொல்லத் துவங்கிய போது, இருந்த உனது புரிதல், கொஞ்சமேனும் மாறியிருக்கும் என்கிற என் நம்பிக்கையின் விளைவாக, மொழி ஒரு உடலுக்குள் என்னவாக செயல்படுகிறது? அல்லது பல்வேறு மொழி எந்திரங்கள் உடல்களை மொழியுடல்களாக மாற்றும் கதையை பேச முயற்சிக்கிறேன் இங்கு. உடல் என்றவுடன், அதை நீ ஒரு தசைக்கோளமாக மட்டுமே கற்பிதம் செய்து கொள்கிறாய். உண்மையும்கூட அதுதான். உடல் என்பது ஒரு தசைக்கோளம் தான். ஆனால், அது சமூக இயக்கம் கொள்ளும் போது புலன்களின் செயலால் அமைந்த ஒன்றாக மாறுகிறது. அல்லது, இத்தசைக்கோளம் பல்வேறு புலன் எந்திரங்களின் செயல்பாட்டை உள்ளடக்கிய தாக இருக்கிறது. புலன் என்று வந்தவுடன், புலனாகும் மற்றும் புலப்படும் என்கிற செயல்களாக, இது பிரிவதை உணரலாம். ஆக, உடலைப் படிப்பது அதன் புலன்களின் செயலைப் படிப்பதுதான். புலன்செயலைப் படிப்பது, அச்- செயலாக அமையும் மொழியைப் படிப்பதுதான். ஆகவே, அலுப்பூட்டும் ஒன்றாக இருந்தபோதும் மீண்டும், மீண்டும் மொழி எனும் புதிர்வழிப் பாதையிலேயே பயணிக்க வேண்டியிருக்கிறது நாம்.

## குறிப்புரை 8. புலன் பதிவு எந்திரம்:

மொழியானது உடலின் புலன் செயல்களை வரையறுத்து, இயக்குவதன் மூலம் சக உடல்களுடனான பரிமாற்றத்தை உருவாக்கி தருகிறது.

'புலன் செயல்களை' மொழி எப்படி வரையறுக்க முடியும்? என்று உனக்கு குழப்பம் வரலாம். மொழியுடன் நேரடியாக தொடர்பற்றதாக கருதப்படும் 'தொடுதல்' என்கிற புலன் செயலை எடுத்துக்கொள்வோம். ஒரு பொருளை தொடு-வதால் உருவாகும் உணர்வு, நம்க்குள் அல்லது நமது 'மனதிற்குள்' ஒரு உருவகமாக அல்லது படிமமாக அல்லது பேச்சு-மொழியில் சொல்ல முடியாததாக இருக்கலாம். இவ்வுணர்வு செயலாக்கப்படும் (processing) உடலில், உருவாகும் நினைவு என்பது, ஒவ்வொரு மொழிக் கூட்டத்திற்கும் பிரத்யேகமானது (தனித்தன்மை வாய்ந்தது). இத்தனித்தன்மை அக்கூட்டத்தின் மொழியமைப்பின் வழியாகவே புரிந்தும், பகிர்ந்தும் கொள்ளப்படுகிறது. இன்னும், குறிப்பாக கூறினால், அக்கூட்டத்திற்குள்ளேயே ஒவ்வொரு தனித்த உடலும், தனக்கான பிரத்தியேக உள்-மொழியமைப்பை (Sub- lingustic structure or parole) உருவாக்கிக் கொண்டிருப்பதால் செயலாக்கப்படும், புரிந்துகொள்ளப்படும், பகிர்ந்து கொள்ளப்படும் உணர்வும் ஒரே மாதிரியாக அக்கூட்டத்திற்குள்ளேயே கூட இருப்பதில்லை என்பதை அதிகம் விளக்க வேண்டியதில்லை[அ]. இங்கு உனக்கு எழும் கேள்வி உணர்வு என்பது என்ன? என்பதுதானே. உணர்வு என்பது ஒவ்வொரு உடலுக்குள்ளும் பதிவுறுத்தப்பட்டிருக்கும், ஒரு வகை நினை- வால் வழிநடத்தப்படும் உடல் இயங்கியல் நிகழ்வாகும்.[ப]

# "உடலரசியல்"

— ஜமாலன் —



படிப்பகம்

www.padippakam.com

(அ)சான்றாக, தொல்காப்பியத்தின் பொருளதிகாரம்- ஒரு திணையின் நடைமுறையை, வழக்குகளை மற்றொரு திணைக்குரிய மக்களுக்கு எடுத்துச்சென்று ஒன்று கலப்பதற்கான ஒரு சிதைச்-சங்கேத (decoding) அமைப்பை உருவாக்கும் முயற்சியாகும். அதாவது, வேறுபட்ட நினைவுகளை ஊடுகலந்து, ஒற்றை நினைவிற்குள் கொண்டுவரும் செயலாக பார்க்கலாம். அதனால்தான், பொருள் கொள்தலில், முதல், கரு, உரி, என நிலம், காலம் மற்றும் பல்வேறு இயற்கை பொருட்கள், அவை குறிக்கும் உணர்வுகள் என, ஒரு நிலப்- பகுதிக்கு உரியதாக வேறுபட்ட இனக்குழுக்களின் உளவியல் வலைப்-பின்னலை(Psychological network) உருவாக்க முனைகிறது. அதாவது, 5 நிலப்பகுதிகளுக்கு முறையே புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல்என்பதாக 5 உணர்வுகளை பிரித்து, அதனை குறிநிலைப்படுத்தும் பொருட்களையும் வகைமைப்படுத்துகிறது. மற்ற நிலப்பகுதி பொருட்களுடன், ஒரு 'ஒப்புமைமீதியான அறிதலை உருவாக்க' முனைகிறது (இது, தமிழவனால் 'தமிழும் குறியியலும்' நூலில் விரிவாக விவாதிக்கப் பட்டுள்ளது). தொல்காப்பியம் காட்டும் ஐந்திணை வாழ்வு முறைகள் பற்றிய மொழி-உளவியல் ஆய்வுகள் நமக்கு தமிழ்ச் சமூகம் பற்றிய வேறுபல உண்மைகளைக் காட்டலாம். பழந்தமிழர்கள் நிலத்தினடிப்படையில், உணர்வுகளை பிரித்து உணர்ந்துள்ளனர். அல்லது நிலம்பற்றிய நினைவுகளுடன், இத்தகைய உணர்வுகள் ஏதோ ஒருவகை-யில் தொடர்பு படுத்தப்பட்டிருப்பதை அறிகிறோம்

(L) உணர்வு என்பது மூளையில் நடக்கும் வேதிவினைகளின் விளைவாக, ஏற்படும் மின் அதிர்வு கிளரலைகளால், நரம்புகளின் முடிச்சு, கூடியும், கலைந்தும் அமைவுறும் ஒருவகை வடிவியல் அமைப்பால் (Morphological structures) உருவாகும் உடலியங்கியல் மாற்றமே. உதாரணமாக, போதை ஏற்றப்பட்ட ஒரு உடலிற்குள் செயற்கையாக அதிகரிக்கும் ஆல்கஹால் என்கிற வேதிமத்தால் ஏற்படும் அதீத ஆற்றலின் விளைவால் உருவாகும், நரம்புகளின் வடிவம் ஏற்படுத்தும் இழுவிசையின் விளைவே, ஒருவித மயக்க நிலையாகும். ஆல்கஹாலின் ஆற்றல் மட்டம் குறையும்போது, இந்நரம்புகளின் வடிவநிலை மாறி பழைய நிலைக்கு திரும்புகிறது. இதுவே இயல்பு நிலை என்கிறோம். இந்த நரம்பு வடிவங்கள், ஒவ்வொருவரது, புலன் அனுபவத்தின் வழியாக, மூளையின் நினைவகத்தில், சேகரிக்கப் பட்டுள்ளதால், உணர்வுகள் என்பது ஒரு வித நினைவின் அடிப்படையாக இருக்கிறது. முற்றிலும் புதியவகை உணர்வுகள் என்பது, பழகிய புலன் தடம் மாற்றப்படும் போது உருவாகி, நினைவாக சேகரிக்கப்படுகிறது.

இதன் பொருள், ஒரு பொருளை எல்லோரும் ஒரே விதமாக தொடுதல் சாத்தியமில்லை. தொடப்படும் பொருளும், தொடும் உடலின் புலன்களிலும் எல்லோருக்கும் ஒரேவிதமாகப் புலப்படுவதுமில்லை. அதாகப் பட்டது, ஒரு பொருளும், அதனைத் தொடும் உடலுக்கும் இடையிலான உறவை அல்லது புலன்செயலை, தீர்மானிப்பதும், வரையறுப்பதும் மொழியாக இருக்கிறது, அல்லது மொழியாக சேகரிக்கப் பட்டுள்ள நினைவால் என்பதுதானே. ஆகவே ஒரு கூட்டத்திற்கான புலன் அமைப்பு களை (புலன் அமைப்பு என்பது புலன் உறுப்பு- புலன்செயல்-புலன்பதிவு ஆகியவற்றின் ஒருங்கிணைப்பாகும்.) உருவாக்கித்தருவதாக மொழியின் செயல் அமைந்திருக்கிறது. அல்லது ஒரு கூட்டத்தின் வரலாறாக சேகரிக்கப்பட்டுள்ள நினைவுகளினால், அக்கூட்டத்தின் புலன் செயல்கள் உருவாக்கப்படுகின்றன. இங்குதான் சாதியாக, தீண்டாமையாக, இனவெறியாக, மொழிவெறியாக, மதவெறியாக (ஈ) சேகரிக் கப்பட்ட வரலாற்று நினைவுகள் பற்றியும் அவற்றின் கதைகூறலால் உருவாக்கப்பட்ட புலன் உணர்வுகள் பற்றியுமான உடல் அரசியலின் (Body politics) முக்கியத்துவத்தை உணரவேண்டும். உனக்குத் தெரியாதது அல்ல வரலாறு என்பது தொடராக கொலை நிகழ்த்தப்பட்ட பல கூட்டங்களின் கதையாடல் என்பது. மேற்கண்ட வரலாற்று நினைவுகளால் மறக்கடிக்கப்பட்ட உடல்கள், சிதறடிக்கப்பட்ட உடல்கள் எத்தனை எத்தனையோ? அடுத்து உனக்குள் எழும் கேள்வி நினைவகம் எப்படி உருவாக்கப்படுகிறது. அதற்கும் மொழிக்கும் உள்ள உறவு என்ன? என்பதுதானே.

(ஈ) சாதி, தீண்டாமை, இனவெறி, மதவெறி, மொழி வெறி... எல்லாம் பன்னெடுங்காலமாக ஒவ்வொரு சமூக அமைப்பிலும் உடல்களை குழுக்களாக ஒழுங்கமைக்கும் கதையினங் களாக இருந்தவை. பல உடல்களை மூர்க்கமாக அதிகார சக்திகள் அழித்து, அதன் மூலம் ஒருவகை அச்சம், பாதுகாப்பின்மை ஆகிய வற்றால் உருவான பதற்றத்தின் கதைகூறலால், சமூகத் தன்னிலைகளுக்குள் இவ்வுணர்வுகள் ஆழமாக இறக்கிவைக்கப்பட்டுள்ளது. இவ் வகை வெறியாட்டங்கள், ஒரு குறிப்பிட்ட கதையானது, ஒரு முற்றுப்பெற்ற வாக்கியமாக சுருக்கப்பட்டு, வதந்தியாக பரப்பப்படுவதன் மூலம் உருவாக்கப்படுகிறது. இது சமூகத்தில்



படிப்பகம்

www.padippakam.com

ஏற்படுத்-தும் முதல் உணர்வு அச்சமும் அதனால் ஏற்படும் பதற்றமும். இவ்வுணர்வுகள் வரலாற்றின் கதைகூறலால், ஆழ்மனங்களுக்குள் புதையுண்டு இருப்பவை.

குறிப்புரை-9, நினைவுருவாக்க எந்திரம்.

மொழி மூளையின் நினைவகமாக பலவித உணர்வுகளையும், அதன் புலன் இயக்கங்களையும் பதிவுறுத்தி கட்டமைக் கிறது. ஒரு பொருளை முதன்முதலாக புலன்கள் மூலம் தொடர்பு கொள்ளும் போது, அதாவது தொடுவதாக வைத்துக்கொள்வோம், உரு வாகும் புலன் பதிவுகள், மூளையின் நினைவகத்தில், நினைவாகப் பதியப்படுகிறது. இதுவே, அசலான அனுபவமாக அல்லது உணர்வாக அமைகிறது. இந்த அனுபவம் கூட தொடும் உடலின் மொழிவழியாகவே அடையாளப்படுத்தப்படுகிறது. இந்த அடையாளம் ஒரு அனுபவத்திற்கான கட்டளைகளின் தொகுப்பினை எழுப்பும் 'வினை திறப்புச் சொல்லாக' (Functional key word) மூளையின் நினைவகத்தில் பதியப்படுகிறது. திரும்பவும், அதே உடல் அப்பொருளை தொடும்போது, புலன் பதிவு என்பது "வினைத் திறப்புச் சொல்லை" அடையாளப்படுத்துவதாக அல்லது எழுப்புதலாக (addressing) அமைகிறது[இ]. அதன் வழி அனுபவம் என்பது மீள்நிகழ்வாக அமைகிறது.

(இ) உடல்-இயங்கியல்படி (physiology) ஒரு உடலுக்குள் ஏதேனும், புதிதான அந்நிய நுண்-உயிரிகள், பக்டீரியா, வைரஸ் போன்றவை நுழைந்துவிட்டால் மூளையானது, உடனடியாக, அந்த உயிரை நுழைந்த இடத்திலேயே தடுத்து நிறுத்தி, அதனை ஆய்வு செய்கிறது (lock and check system). அவ்வுயிரியின் வடிவம், தன்மை, விளைவு ஆகியவற்றை தனது நினைவுக் கிடங்கில் முன்பே சேகரித்து வைக்கப்பட்டுள்ள உயிர்களின் தகவலுடன், வடிவத்துடன் ஒப்பிடுகிறது. வந்த உயிரி புதிதாக இருந்தால், அதனை தடுத்து நிறுத்துவதற்கான ஒரு உறை-வடிவத்தை, அதாவது அதனை lock செய்யக்கூடிய வடிவத்தை உருவாக்கி, அவ்வுயிரியை ஆய்வு செய்து, அதனை கொல்வதற்கான எதிர்-உயிரியை (anti- body) உருவாக்குகிறது. இவ்வாறாக, மூளையானது ஒரு முறை ஒரு உயிரிபற்றிய தகவலை சேகரித்து விட்டால், அதன்பின், அவ்வுயிர் எத்தனை வந்தாலும், எந்த சூழலில் வந்தாலும், எந்த காலத்தில் வந்தாலும், அதனை அழிப்பதற்கான எதிர் உயிரியை, தனது தகவல் கிடங்கில் ஒப்பிட்டு கண நேரத்தில் உருவாக்கி விடும். எனவே, மூளையில் சேகரிக்கப்படும் தகவல்கள் மூலம் உடனடியாக செயலாக்கி வினை படுவதற்கான கட்டளைகளைக் கொண்ட ஒரு திறப்புச் சொல்லை மட்டும் மூளை தனது செயலகத்தில் கொண்டிருந்தால் போதுமானது. இதனையே, நாம் "வினைத் திறப்புச்சொல்[இ-1] என்று கூறினோம். ஒரு பொருள் பற்றிய எண்ணற்ற தகவல்களை, ஒரேயொரு திறப்புச் சொல்லின் மூலம் அடையாளப்படுத்திக் கொள்ளமுடியும்.

இதனை மொழியியலில், 'மொழிக் கிடங்கு' (langue) மற்றும் 'பேச்சு' (parole) என்பதாக விளக்குவார்கள் (தமிழவன், ஸ்டரக்சுரலிஸம்). ஒவ்வொரு பேச்சும், இவ்வாறாக அந்த உடல் வாழும் சமூகத்தினால் கட்டமைக்கப்பட்ட மொழிக் கிடங்குடன் உறவுடையதாக இருக்கிறது. மொழிக் கிடங்கின்[இ-2] செயலே, ஒரு உடலின் பேச்சிற்கான மூலமாக இருக்கிறது. ஆனால், பேச்சு என்பது வாழும் காலத்தின், சமூகத்தின் இலக்கண, பொருள் கொள்ளும் விதிகளால் உருவாக்கப் படுகிறது[இ-3]. ஒரு உடலின் பேச்சு, எவ்வளவு நினைவுடன் (concious) திட்டமிட்டு பேசப்பட்டாலும், அதன் வரலாற்று நினைவு, புலன் பதிவு மற்றும் சமூக இயக்கத்தின் விளைவாக மொழி அமைப்பினால் பேச்சிற்கு இடையில் பேசப்படாததின் மிச்சம் (reminder) இருக்கும். அல்லது, மொழிக்- கிடங்கில் தேர்ந்தெடுத்தவை (selective), விலக்கப் பட்டவை (repressive)என பேச்சினூடாக அதன் தடங்கள் பதியப் பட்டிருக்கும். இம் மிச்சத்தை படிப்பதன் மூலம், பேசும் உடலின் வரலாற்று எந்திரவியலை படித்து விடலாம். ஆக, பேச்சு என்பது தனி உடலின் விளைவு அல்ல, அது ஒரு சமூக நடவடிக்கை, அல்லது ஒரு தனி உடலின் பேச்சு என்பது ஒரு குழுவினது பேச்சாகவே[இ-4] இருக்கிறது[இ-5].

(இ-1) பேச்சையே 'வினைத்திறப்புச்சொல்'-லாக விளங்கிக் கொள்ள முயற்சிக்கிறோம். அதாவது, பேச்சில் அமையும் ஒவ்வொரு வார்த்தையும் ஒரு (வரலாறு, அரசியல்...இப்படி) நினைவை திறந்துவிடும் வினையை செயல் படுத்தும் திறப்புச் சொற்களாக இருக்கிறது. எனவே, தனி உடலின் பேச்சு என்பது அந்த உடலுக்-கானது மட்டுமல்ல, அது உருவாகி வந்த, அல்லது அது இயங்கும் குழுவினது பேச்சாகும்.

(இ-2) மொழிக்கிடங்கு என்பது ஒரு உடலின் வாழும் காலம் மற்றுமின்றி வரலாற்றுக் காலத்தையும், ஆதிநிலை தொல்மனப் படிவுகளையும் கொண்டது. இது பேச்சின் வழியாக



படிப்பகம்

www.padippakam.com

விலக்கப்பட்டவை, பிரித்து ஒதுக்கப்பட்டவை ஆகியவற்றை பொதுமைப் படுத்தியும், அருபப்படுத்தியும் சேகரித்து வைக்கப்பட்டுள்ள ஒரு வடிவமற்ற அமைப்பாகும்.

(இ-3) பேச்சை பொருள்கொள்வதற்கான விதிமுறைகளை, நேர்கோட்டு மற்றும் கிடைக்கோட்டு (syntagmatic and paradigmatic) முறை, தளவரிசை (syncronic) மற்றும் காலவரிசை (diacronic) முறை என அமைப்பியலும், குறியியலும் விளக்குகின்றன. (விள்க்கத்திற்கு படிக்கவும், தமிழவனின் 'ஸ்டரக்சுரலிஸம்' (பாரிவேள் பதிப்பகம்).

(இ-4) பேச்சு ஒரு குழுவிற்கானதாக அமைவதால், அது ஒரு முழக்கமாக (slogan) இருக்கிறது. அது ஒரு குழுவின் வேட்கையை பிறர் உடல் மீது திணிக்கும் அல்லது பாய்ச்சுவதற்கானதாகத்தான் வெளிப்படுகிறது என்பதாக தெல்லஸ்-கொத்தாரியால் (Deleuze- guathari) விளக்கப்படுகிறது. (Violance of Language (VL) -பக்-44) பேச்சாக வருபவை அனைத்தும் ஒருவகை முழக்கமாக இருப்பதால் இரு குழு உடல்களுக்கிடையிலான கலவையையும், பிரிவையும் உருவாக்கும் மொழி உடல்களின் அரசியலைப் பேசுவதாக இருக்கிறது, அல்லது மொழி பற்றிய அரசியலே, உடல் அரசியலாக இருக்கிறது எனலாம்.

(இ-5) இதனையே நினைவுமனம், நினைவற்ற மனம் என்பதாக பிராய்டின் உளவியல் சொல்கிறது. லக்கானின் மொழி- உளவியல் ஆய்வுகள், இம்மன அமைப்பையே மொழியாக விரித்துச்சொல்கிறது. மொழிக்கு முந்தைய மன அமைப்பில், அதாவது குழந்தையாக இருக்கும்போது, அர்த்தங்களாக அல்லாமல் வெறும் ஒலிக்குறிப்பு- களால் ஆன மொழியால் (signifier- குறிப்பான்) அதாவது சப்தங்களால்[இ5.1] மன அமைப்பானது கட்டப்படு-கிறது. மொழியின் அடிப்படையான அறிதல் அதன் சப்த வேறுபாடே. அதுவே, தனது வித்தியாசமான ஒலிக் குறிப்புகள் மூலம் அர்த்தத்தை உருவாக்குகிறது. எனவே, சப்தங்கள் கூட ஒரு தீர்மானகரமான பங்கை மனஅமைப்பு உருவாக்கத்தில் செய்திருப்பதை லக்கான் விளக்குகிறார். (விரிவான விளக்கத்திற்கு பார்க்க- தமிழவனின் 'தமிழும் குறியியலும்'- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்)

(இ-5.1) அதனால் தான் ஒரு உடலானது தனது தாய் மொழியிலிருந்து ( maternal tongue) தப்ப முடியாததாக இருக்கிறது. அதன் நினைவுள் வெளி என்பது, தாயினது மற்றும் அவளது நிலத்தினது நினைவுகளுடன் பிணைக்கப் பட்டதாக உள்ளது. தாய்மொழி, தாய்நாடு குறித்த வேட்கையானது 'ஓடிபல்' (Oedipal)[இ-5.1.1] உறவால் கட்டமைக்கப்பட்டதாக இருக்கிறது. (ஏடு-பக்.39). ஒரு உடலானது, தனது தாய் மொழியை, அதன் இலக்கண விதிமுறைகளுக்கு உட்பட்டு பேசுவதற்கு எங்குமே கற்றுக் கொள்வதில்லை. ஒரு உடலின் அக வெளியானது, இந்த சப்தங்களினால் கட்டப்பட்டும் குறிப்பானின் விளைவாக, உள்ளீடற்ற சப்த வேறுபாட்டை, உள்ளீடான அர்த்தமாக புரியத் துவங்கும் போது, அறிவும், நினைவுமாக வளரத் துவங்குகிறது.

உடலின் புலன்களின் வழியாக பெறும் புற உலகத் தொடர்புகளே இந்த அர்த்த மாக்கலை உருவாக்குகின்றன. இந்த அர்த்தங்கள் நினைவுகளாக படிகிறது. பின் இந்நினைவுகள் வார்த்தைகளாக மாற்றப்பட்டு, எந்த ஒழுங்கில் பேசவேண்டும், எந்த ஒழுங்கில் அர்த்தம் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்பதாக, இலக்க-ணத்தை, விதிகளாக இன்றி, சமூக அனுபவமாக ஏற்கின்றன. இலக்கணம் என்று வந்தவுடன் மொழி பேச்சின் வழியாக, உடல்களின் இடத்தை, தரத்தை நிர்ணயிப் பதாக மாறிவிடுகிறது. இங்கு இலக்கண ஒழுங்க-மைப்பும், சமூக ஒழுங்கமைப்பும் ஒன்றாகவும், ஒன்றை ஒன்று சார்ந்தும் உருவாகுகின்றன. மொழியின் இலக்கண ஒழுங்கமைப்பின் வழியாக, ஒரு உடலானது சமூக ஒழுங்கமைப்பை ஏற்று அதற்கு தக இயங்கத் துவங்குகிறது. ஒரு சமூகம் புரிந்து கொள்ளக்கூடிய தெளிவான மொழி உற்பத்தி எந்திரங்களாக உடல்கள் உருவாக்கப் படுகின்றன. அல்லது, மொழி உற்பத்தி வழியாக, உடல்கள் அடையாளமிடப் படுகினறன. ஒவ்வொரு சமூகமும், ஒரே மொழி இலக்கணத்தை பின்பற்றுவதில்லை. ஒரு இலக்கணப்பிரதியை ஒவ்வொரு சமூகமும், தனக்கேற்ப உரை செய்து கொள்வதன் மூலம், தனது சமூக மொழிக்கான இலக்கணமாக அதனை மாற்றிவிடுகிறது. அதாவது, இலக்கண விதிகளும், அதே இலக்கணத்திற்கு உட்பட்ட மொழியால் எழுதப்-படுவதால், ஒரு இலக்கணப் பிரதி, ஒவ்வொரு சமூகத்தினாலும், ஊடுருவிச் செல்லக் கூடியதாக, மாறிக்-கொண்டே இருப்பதாக இருக்கிறது. அதாவது, இலக்கண விதிகளும், மொழியின் பொருள் கொள்ளும் முறைக்கு ஏற்பமாறக் கூடியதாக இருப்பதால், ஒவ்வொரு சமூகமும், அச்சமூக ஒழுங்கமைப்பிற்கு ஏற்ப இலக்கண விதிகளை பொருள் கொள்ளக் கூடியதாக இருக்கின்றன.[இ-5.1.2]



படிப்பகம்

www.padippakam.com

(இ-5.1.1) 'ஓடிபல்' உறவு என்பது, ஒரு உடலின் ஆழ்மனத்தில் (sub- concious) புதைந்துள்ள தாயுடல் குறித்த பாலியல் உணர்வாகும். ஒரு உடலின் அகவெளியானது உடல் பற்றிய நினைவாக மாற்றப்படும்போது, பாலின்பக் களமாக உருவாகுகிறது. ஆக, உடலின் பாலின்பக் களத்தை இரண்டாக பகுத்துக் கொள்ளலாம்.
1.பால்வெளி (sexual space) (இ-5.1.1.1)
2.காம-வெளி (erotic space) (இ-5.1.1.2)
பால்வெளியை உடலின் பால்வேதி - மங்களின் இயக்கத்தால் உருவமைக்கப்படும் இயல் புணர்ச்சி சார்ந்தவையாகவும், காமவெளியை பால் வேதி-மங்களை தூண்டக்கூடிய புற நிலைகளால் உருவமைக்கப்பட்டு ஒரு உடலில் கட்டமைப்பிற்குள் நுழைந்த பாலின்ப இயக்கங்களைச் சார்ந்ததாகவும் கொள்ளலாம். இதனை வேறு விதமாகக் கூறினால் பால்வெளி என்பது உயிர் மொழியாலும், காமவெளிஎன்பது இயல்மொழியாலும் ஒரு உடலுக்குள் எழுதப்படுவது.

(இ-5.1.1.1) மொழிக்கு முந்தைய அமைப்பில் பால்வெளி என்பதே இயக்க மடைகிறது. உதாரணமாக மொழி வளராத குழந்தை களுக்கான பாலியல் உணர்வு என்பது உடலின் இயல்புணர்ச்சி சார்ந்தே அமைகிறது. புலன்களின் வழி மட்டுமே அவை உணர்வு களையும், தூண்டுதல்களையும் பெறுகின்றன. தொடுதல், சுவைத்தல், பிறஉடலின் சூடு உணர்தல் ஆகியவற்றையும், தூக்கத்தில் அவை பெறும் இதம் ஆகியவற்றையும் கூறலாம். ஒரு குழந்தை தனது உடலை ஒரு ஒழுங்க மைக்கப்பட்ட வடிவரீதியானதாக புரியத் துவங்குவது- மொழி வளரத்துவங்கும் பிறரை பிரதிபலித்து, தன்னை அடையாளம் காணத்துவங்கும் கண்ணாடி நிலை (mirror stage) எனப்படும் நிலையில்தான். இன் நிலையில் குழந்தைக்கு, தனது உடலை, அதன் உறுப்பமைப்புகளை, தன்னைச் சுற்றியுள்ள உடல்களைப் பார்த்து அதன் வடிவ ரீதியான ஒழுங்கமைப்பு பதியத்துவங்குகிறது. இத்துடன் தன்னை பிறவற்றிடமிருந்து வித்தியாசப்படுத்திக் கொள்ளும் வடிவச்சமன்பாடுகளை பெறத் துவங்குகிறது. இச் சமன்பாட்டின் அடிப்படையில் உருவாகும் 'தான்' என்கிற தன்னுணர்வை உருவமைக்கத் துவங்குகிறது. இவ்வுருவமைவு மொழி வழியாக அதற்குள் 'நான் x நீ' என்கிற முரணியக்கமாக பதிவுறுத்தப்படுகிறது. இன்நிலையில்தான் மொழி ஒரு உடலிற்குள் விரியத் துவங்குகிறது.

(இ-5.1.1.2) மொழி வளரத்துவங்கிய பிறகு, சமூகத்தின் பாலுணர்வு பற்றிய மதிப் பீடுகள் அடிப்படையில், பாலின்பம் உருவமைக் கப்படுகிறது. அதாவது, பால்வெளியின் மேல் காமவெளியானது கட்டமைக்கப்படுகிறது. காம வெளியென்பது, பால் உணர்வு பற்றிய சமூகக் கதையாடல்களின் வழியாக அறிவியல் மதிப்பீடுகளைக் கொண்டு பாலின்பத்தை ஒடுக்குவதாகவும், அதற்கு பதிலியாகவும் செயற்படுகிறது. பாலியல் பற்றிய பெருக்கப்பட்ட சொல்லாடல்கள் மூலமும், எல்லாவற்றிலும், பாலின்ப வேட்கையை பதிவுறுத்தி, அதன் முத்திரை பதிந்ததாக அனைத்தையும் மாற்றியதன் மூலமும், பேச்சின் அனைத்து வெளிப்பாடுகளிலும் வேட்கைகளையும், பாலின்பத்தின் தடங்களையும் கொண்டும், இந்தக் காம வெளியென்பது கட்டமைக் கப்படகிறது. பல உடல்களின் பாலின்ப இடையீட்டுக் களமாக உள்ளது. பெண் உடலின் ஆற்றலை ஒடுக்கி, சமூக மறு உற்பத்திக்கான களமாக குடும்ப அமைப்பும், அதன் மையமாக பெண் உடலையும் உருமாற்றிய போது, ஆணாதிக்கத்துக்கான அதிகார ஒடுக்குமுறை கட்டமைகிறது. பாலின்பத்தை ஒடுக்குவதற்காக ஒவ்வொரு சமூக அதிகாரமும், நிறுவன அமைப்பும், பெண்உடல் பற்றிய பல கதையாடல்கள் மூலம், அவ்வுடலை பல்வேறு சமூக தளங்களிலும் , வைத்து தடம் அளித்து , காமவெளியின் மைய ஆற்றலாக பெண் உடல் - பாலியல் தளத்தை மாற்றி உள்ளன இவைகள், இக்காம - வெளியை சமூகத்திற்குள் பரவலாக்கி வைப்பதை தனது அடிப்படை உக்திகளில் ஒன்றாகக் கொண்டுள்ளன. பழந்தமிழ் சமூகத்தில், நாட்டியம் போன்ற அரங்கக்கலைகள் (performing arts), இந்தக் காமவெளியை உள்தளமாகக் கொண்ட வெளிப்பாடாகவே இருந்து வந்துள்ளது. இதுவே, 'அரசின் கண்காணிப்பில் தேவதாசி முறையாகவும், இம்முறை ஒழிக்கப்பட்டபின் , இக்காமவெளி, தமிழ்சினிமா அரங்காகவும் வடிவம் கொண்டுள்ளது' (நேர் பேச்சில் நாகார்ஜுனனால் சுட்டிக் காட்டப்பட்ட ஒரு கருத்தாகும்) எனக் கூறலாம்.

(இ-5.1.2) ஒரு சமூகத்தின் உற்பத்தி முறையுடன் மொழியும், அதன் இலக்கணமும் உறவு கொண்டதாக இருக்கிறது. ரஷ்யப் புரட்சியின் பின்னடைவிற்கு, மக்களிடம் நிலவிய மொழியியல் இறுக்கமும், மொழி கடுமையான கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டதன் மூலம், மக்களின் அனுபவமும், சிந்தனை முறையும், புரட்சிகரமான மாற்றத்திற்கு உள்ளாக்கப் படாதது ஒரு காரணம் எனலாம். அல்லது



படிப்பகம்

புரட்சிகர சமூகம் ஒரு மாற்றாக உணரப்பட்ட அளவிற்கு, புதிய சமூகமாக ஏற்கப்படவில்லை. குறிப்பாக, மகிழ்விற்கான நினைவுகள், உணர்வுகள் மாற்றி அமைக்கப்படவிலை. (குறிப்பான்கள் மாற்றப்பட்டன, குறிப்பீடு (அர்த்தம்) மாற்றப்பட- வில்லை.) மொழி குறித்து ரஷியாவில், ஸ்டாலினுக்கும், மார்ஸ் என்பவருக்கும் நடந்த விவாதம், இதனை உணர்த்தும். ஸ்டாலினுக்கு மொழி என்பது மேற்கட்டுமானம் அல்ல, அது ஒரு தொடர்பு கொள்வதற்கான நடுநிலைமையான கருவி, அது இயங்கும் சமூகத்தை அருபமாக்கும் எந்திரம். மாறாக, மார்ஸ் மொழி புரட்சிகர சமூகத்தின் ஒரு பகுதி [இ-5.1.2.1]. அது புரட்சியை பிரதிபலிக்க மட்டும் செய்யவில்லை, அதனுடன் உறவாடக் கூடியதாக உள்ளது என்றார். (VL-Page - 50). மொழியின் சமூகத் தன்மை மதிக்கப்படாமையே, புரட்சிகர சமூகத்தின் சோதனைக் களமாக மொழியில் மாற்றங்கள் நடத்தப்படுவது, தடைசெய்யப்பட்டும், அழிக்கப் - பட்டும், ஓரமைவாக்க அறிதல் முறை ஒன்று கட்டமைக்கப்பட்டது.

(இ-5.1.2.1) ஒரு குறிப்பிட்ட உற்பத்தி முறையானது, ஒரு குறிப்பிட்ட வகை வாழ் நிலைகளை நிர்ப்பந்திப்பதைப் - போல, ஓர் குறிப்பிட்ட நினைவுகளை மறு உருவாக்கம் செய்வதன் மூலம், ஒரு புதிய பொருள் கொள்ளும் முறையை உருவாக்குகிறது. அல்லது, புதிய சிந்திக்கும் செயலாக, சிந்தனை முறையாக வெளிப் - படுகிறது. ஆதிக்க உற்பத்திமுறை எப்படி, தனது பொருளியல் சுற்று வட்டத்திற்குள், சிறு,சிறு வளரவேண்டிய உற்பத்திமுறைகளை, ஒடுக்கியும், அதேசமயம், அதை இயங்கவும் விடுவது போல, மொழியானது ஆதிக்க வடிவிலான பேச்சு அமைப்புடன், புதிய சமூக மாற்றத்திற்கான விதிகளை தனது 'புறநடைகளாக', ஒடுக்கப் - பட்டதாக, மறைக்கப்பட்டதாக, அமுக்கப்பட்டதாக, விலக்கப்பட்டதாக கொண்டிருக்கும். இவை நுண்ணுணர்வான படைப்புகளில், மொழியின் தடங்களாக பதிவுற்றுவிடும். மறுவாசிப்பின் மூலம் படைப்பின் ஆழ் - தளத்தில் இருக்கும் எதிர்காலம் பற்றிய இந்த அரசியல் தடம் வெளிப்படும். இவ்வாறாக, படைப்புகள் காலம் தாண்டியதாக, மாறிக்கொண்டும், சமூகத்திற்குள் ஊடுருவிக் கொண்டும் இருக்கும்.

தொடரும்...

"இந்துத்துவம் -ஒரு பன்முக ஆய்வு"
-அ.மார்க்ஸ்-




தொடர்புகட்கு:
அடையாளம்
எச்-15/193, 2வது தளம்,
கருப்பூர் சாலை,
புத்தாநத்தம்-621310

"புதிய உலகம் எமை நோக்கி"
"புலம் பெயர் பெண்களின் சிறுகதைகள்"



தொடர்புகட்கு:
SAKTHI
Boks 99 Oppsal
0619 Oslo 6
NORWAY.

www.padippakam.com

அன்புடன் தோழியருக்கு!

உங்கள் ஆக்கங்கள் இன்னமும் வந்து சேராத காரணத்தால் ஆறாவது பெண்கள் சந்திப்பு மலர் இதுவரை வெளியிடமுடியாமற் போனது பற்றி அறிந்திருப்பீர்கள். அத்துடன் அடுதத வருடம் பெண்கள் சந்திப்பின் பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி ஆறாவது பெண்கள் சந்திப்பு மலரை சிறப்பிதழாக வெளியிடவுள்ளோம் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். ஆகவே தோழியர்களே உங்கள் ஆக்கங்களை இந்த வருட இறுதிக்குள் அனுப்பிவைக்குமாறு தோழமையுடன் வேண்டிக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு:
**Nirupa**
**Nagalingam**
**Adalbert str. 6**
**10999 Berlin**
**Germany**

நன்றி
பெண்கள் சந்திப்புக்குழு

## சூரிச்சில் ஓர் கலந்துரையாடல்

11.07.99 ஞாயிறு அன்று சுவிஸ் இல் "FLUCHT" நிறுவனத்தினரால் "தமிழ் சிறார்களின் தமிழ் மொழி கல்வி" என்ற தலையங்கத்தின் கலந்துரையாடல் ஒன்று கூட்டப்பட்டது.
இக்கலந்துரையாடலில் கூட்டத்தை தொடங்கி கைக்கும் முகமாக உரையாற்றிய குணசீலன் அவர்கள் தமிழ் மொழிக்கல்வி எமது சிறார்களுக்கு அவசியமானது என்பதில் எம்மிடையே ஒரு ஒருமைப்பாடு இருக்கிறது, ஆனால் இக்கல்வியை எப்படிப் புகட்டுவது என்பதுதான் இன்றைய எமது பிரச்சனை. இன்று அது பற்றி ஆராயவே கூடியிருக்கிறோம் என தொடங்கிவைத்தார்.

புகலிடத்தில் இன்று பரந்தளவில் வெகுசன அபிப்பிராயத்தை ஏற்படுத்தி வருகின்ற பத்திரிகைகள், வானொலிகள் போன்றவற்றின் செயற்பாடுகள் ஊடாக எம்சிறார்களின் தாய்மொழிக் கல்வியில் ஏற்படும் விளைவுகளையிட்டு ஓர் முன்மொழிவை வைத்து ரவீந்திரன் கலந்துரையாடலை ஆரம்பித்தார்.

தொடர்ந்து யோகராஜா அவர்கள் தமிழ் மொழியை கற்பிப்பதில் உள்ள பிரச்சனைகள் பற்றி பேசுகையில் இங்குள்ள தமிழர் பாடசாலைகளில் தமிழ் கற்பிக்கும் முறை இலங்கையின் சூழலுக்கேற்பவே இருக்கிறது புலம்பெயர் சூழலுக்கேற்ப தமிழ்மொழி கற்பிக்கப்படுவதில்லை என்றும், தமிழ் மொழியின் அவசியத்தின் வேறுபாட்டிற்கு ஏற்ப கற்பித்தல் முறை மாறுபடுகிறது என்றும், தமிழ் கற்பித்தலின் போது உள்ள கஸ்ரங்கள் என்பன பற்றியும் விளக்கியதைத் தொடர்ந்து பலர் தங்களது அனுபவங்களையும், ஆலோசனைகளையும் முன்வைத்தனர். இந்த இடத்தில் இக்கலந்துரையாடலில் தமிழ் கல்வியின் அவசியமானது பெற்றோர்களுக்கான தேவையை பூர்த்திசெய்வதற்காகவே என்ற நோக்கம் தொனித்தது குறிப்பிடத்தக்கது.

இக்கலந்துரையாடல் ஒருகட்டத்தில் புலம் பெயர் சந்ததியினருக்கு தமிழ் மொழியின் அவசியம் என்ன என்ற கேள்வியினால் திருப்பப்பட்டது. வீட்டு மொழி, சூழல்மொழி என்பன வெவ்வேறாய் இருக்கும் சூழலில் குழந்தைகளுக்கான தாய்மொழி என்பது எது என்ற கேள்வியும் முன்வைக்கப்பட்டது.

இன்று எமது தாய்மொழி எனும் பெயரில் தமிழ் புகட்டப்படுவதற்கான காரணங்கள் தேடப்பட்டன. அதாவது பாடசாலை நடாத்துபவர்களின் நோக்குகளை ஒட்டி வெவ்வேறான அதாவது அரசியல் நோக்கு, கலாச்சார நோக்கு என்று தொடரும் இந்த கல்வி புகட்டலில் குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய நோக்குகள் கோட்டைவிடப்படுவது பற்றியும் உரையாடல்கள் ஆழமாய்ச் சென்றன.

இக்கருத்தரங்கில் சுவிஸ், பிரான்ஸ், ஜேர்மன், அவுஸ்ரேலியா, நோர்வே போன்ற நாடுகளில் இருந்து வந்தவர்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.



படிப்பகம்

www.padippakam.com

# பூச்சி

ஒன்றோடொன்று ஒட்டி, பொருத்தி, பிணைத்து
விலகிவிடாமல் இறுக்கி வைத்திருப்பதில்
–அவதானம்.

திணிக்கப்பட்ட காலை.
திணிக்கப்பட்ட எழுத்து.
திணிக்கப்பட்ட ரசனை.
திணிக்கப்பட்ட குறி.

உடைத்து எறிந்து
நினைத்ததைச் செய்ய, தொலைத்ததைத் தேட
அடங்கியிருக்கும் தவிப்பு
வெடிப்பைத் தேடுகிறது மூலைகளுக்குள்.

இழவு மறந்த பூச்சிகள்.
இருட்டை வெருட்டி,
ஜன்னல் இடுக்கு, புகைக்கூடு ஊடாய்
பறக்கிறது வெளிச்சத்தில் நீந்த.




ஜெபா

05.09.1999



படிப்பகம்

www.padippakam.com

**பத்தாண்டின் நினைவாக...**



கலாநிதி. ராஜனி திராணகம
23.02.1954 - 21.09.1989
**(இலங்கைத் தமிழ்ச் சூழலில் எழுத்துக்காக கொல்லப்பட்ட முதல் அரசியல் விமர்சகி.)**

"என்றாவது ஒரு நாள் ஒரு துப்பாக்கி என்னை அமைதியாக்கிவிடும். ஆனால் அது வேற்று மனிதன் ஒருவனால் ஏந்தப்படுவதாக இருக்காது. மாறாக எனது வரலாற்றை பகிர்ந்து கொள்ளும் இச்சமூகத்தில் வாழும் ஒரு பெண்ணின் கருவறையில் இருந்து பிரசவிக்கப்பட்ட ஒரு புத்திரனால் ஏந்தப்படும் துப்பாக்கியாகவே அது இருக்கும்."

89.09.15ம் திகதி ராஜனி தன் நண்பர் ஒருவருக்கு இறுதியாக எழுதிய கடிதத்திலிருந்து...

நன்றி: முறிந்தபனை

EXIL- B.P-204, 92604 ASNIERES CEDEX, FRANCE

N° d'enreg: 13022670

படிப்பகம்